நமது தாய்நாடு

ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்

அருளியது

ரா. கிருஷ்ணமூர்த்தி

மொழிபெயர்த்தது

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

சென்னை.

1929

All Rights Reserved] [விலை அணா எட்டு.

முன்னுரை

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் திருவருள் மகிமையினால் ஜீவன் முக்தராகி, "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் உயர் நோக்கங்கொண்டு உலக முழுவதும் பிரயாணம் செய்து வேதாந்த சமயத்தின் பெருமையை நிலைநாட்டியவர் சுவாமி விவேகானந்தர். பாரமார்த்திகப்பெருஞ் செல்வரான அப்பெரியார் தேசபக்தியிலும் தலைசிறந்து விளங்கினார் என்பதைத் தமிழ் நாட்டார் நன்கறிவர். பாரதநாட்டினிடம் நமது சுவாமிகள் அளப்பரும் அன்புகொண்டிருந்தார். நமது தாய்நாட்டின் தற்கால நிலையை எண்ணி எண்ணி அவர் கண்ணீர் உகுத்தார்.

எனவே, சுவாமிகள் கடவுள் நெறிபற்றி உய்யும் மார்க்கத்தை உலகிற்கெல்லாம் பொதுவாக எடுத்துரைத்திருப்பது போல், தமது தாய்த் திருநாட்டின் முன்னேற்றத்துக்கான யோசனைகளும் சிறப்பாகச் சொல்லி யருளி யிருக்கிறார். இன்றைய தினம் பாரதமக்களின் உள்ளத்தை அலைத்துவரும் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் சுவாமிகள் பேசியோ, எழுதியோ உள்ளார். தேச முன்னேற்றத்துக்கு அவர் கூறியுள்ள யோசனைகள் எல்லாம் இன்றைக்கும், என்றைக்கும் பொருந்துவனவாகும். தீர்க்கதரிசனம் வாய்ந்த அவர் உபதேச மொழிகளைச் சிரமேற்கொண்டு நடந்தால், நம் தொல்லைகள் பலவும் நீங்கி விடுமென்பது நமது உறுதியான நம்பிக்கை.

சுவாமிகளின் உபந்நியாசங்கள், அவர் எழுதிய நூல்கள், கடிதங்கள் முதலியவை ஆங்கிலத்தில் ஏழு பெரிய புத்தகங்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து, பாரத நாட்டின் முன்னேற்றத்தைக் குறித்து சுவாமிகள் அருளியுள்ள சிற்சில நல்லுரைகளைப் பொறுக்கித் தனித்தனி விஷயத் தலைப்புகளின் கீழ்த் திரட்டிச் சேர்த்து, கல்கத்தா இராமகிருஷ்ண மாணவர் இல்லத்தார் ஒரு புத்தகமாக வெளியிட்டார்கள். அதன் மொழி பெயர்ப்பே இச்சிறு நூலாகும்.

சுவாமிகளின் உபதேசங்கள் முழுமையும் இன்னும் தமிழில் வெளியாகாமையால், இச்சிறு புத்தகம் தமிழ் நாட்டுக்குப் பெரிதும் பயன்படுமென்று கருதி இதனை வெளியிடலானோம்.

மேலெழுந்த வாரியாகப் படிப்பவர்களுக்குச் சிற்சில பகுதிகளில் சுவாமிகளின் உரைகள் முன்னுக்குப் பின் முரண்படுவனபோல் ஒருகால் தோன்றக்கூடும். ஆனால் சற்று ஆழ்ந்து நோக்கின் சுவாமிகளின் கருத்து நன்கு வெளியாகும். இது ஒரு தனி நூலாக சுவாமிகளால் எழுதப்படவில்லை யென்பதையும், பற்பல இடங்களிலிருந்தும் உபதேசங்களைத் திரட்டிப் புத்தகமாக்கப்பட்ட தென்பதையும் வாசகர்கள் நினைவு கூர்தல் வேண்டும். சில விடங்களில், உதாரணமாக மேலை நாடுகளில் பேசுங்கால், நமது சமூக ஏற்பாடுகளின் நல்ல அம்சங்களையும் அவற்றின் உயரிய நோக்கங்களையும் சுவாமிகள் வலியுறுத்துகிறார். பாரத நாட்டில் பேசும்போது, நாம் நம்முடைய குறைகளைக் களைந்து முன்னேற்றம் அடையவேண்டுமென்னும் கருணை காரணமாக, நம் குறைபாடுகளைப் பற்றியே சிறிது வலியுறுத்திக் கூறுகிறார். நமது வாழ்க்கையில் நாம் எத்தகைய சீர்திருத்தம் செய்யினும், பாரதநாட்டின் பண்டை நாகரிகத்துக்கு எவ்விதக் கேடும் சூழாத முறையில் நம் முன்னோர்களை வாழ்த்திக்கொண்டே செய்தல் வேண்டுமென்பது சுவாமிகளின் முக்கிய நோக்கமாகும்.

இச் சிறு நூலைத் தமிழ்நாட்டார் நன்கு படித்து, இதிலடங்கிய சுவாமிகளின் உபதேசங்களைத் தங்கள் வாழ்க்கையில் இயன்றவரை கொணர முயலுவார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர். } சுவாமி யதீசுவரானந்தர்

பொருளடக்கம்

விஷயம் பக்கம்

முதல் அத்தியாயம்

1. நமது தாய்நாடு—அதன் மகிமை ... 1
2. நமது தாய்நாடு—அதன் சிறப்பியல் ... 5
3. நமது தாய்நாடு—அதன் பெருநோக்கம் ... 9
4. நமது தாய்நாடு—அதன் வருங்காலம் ... 13

இரண்டாம் அத்தியாயம்

1. தேசத் தொண்டர் குறைபாடுகள் ... 16
2. தேசத் தொண்டர்க்கு வேண்டுவதென்ன ? ... 24

மூன்றும் அத்தியாயம்

1. தாயகத்தில் தொண்டு—உண்மைத் தொண்டர்களின் பயிற்சி ... 34
2. பாரமார்த்திக அடிப்படை ... 36
3. சமூக சீர்திருத்த முறை ... 44
4. கல்வி—எல்லா சமூகத் தீமைகளுக்கும் அருமருந்து ... 49
5. பாமரர் முன்னேற்றம் ... 55
6. பெண்மக்கள் முன்னேற்றம் ... 63
7. சாதிப் பிரச்னை ... 70
8. இந்திய நாகரிகம்—அதைப் பாதுகாத்து வளர்த்தல் ... 81

நான்காம் அத்தியாயம்

1. வெளிநாட்டில் ஊழியம் ... 87

ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்

பாரத நாட்டைப் புனருத்தாரணம் செய்ய அவதரித்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் புநித சரித்திரம் தமிழ் மொழியில் இப்போதே முதன் முதலாக வெளியாகி யிருக்கிறது. உடனே இப் புத்தகத்துக்கு எழுதி வாங்கிப்படித்துப் பிறவிப் பயன் எய்துங்கள்.

விலை அணு 10.

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

நமது தாய்நாடு

முதல் அத்தியாயம்

1. நமது தாய்நாடு — அதன் மகிமை

இப் பூவுலகிலே எந்த தேசமேனும் புண்ணிய பூமி என்னும் பெயருக்கு உரிமை புடையதானல் அது நமது பாரத நாடேயாகும். ஆன்மாக்கள் எல்லாம் கர்ம பலன் துய்ப்பதற்கு வந்து சேர வேண்டிய தேசமும், கடவுள் வழியில் செல்லும் ஒவ்வோர் ஆன்மாவும் கடைசியாக அடைதற்குரிய வீடும் நமது பாரத கண்டமேயாகும். மனித சமூகத்தின் பெருந்தன்மை, தயாளம், தூய்மை, சாந்தம் என்னும் குணங்கள் பரிபூரண மடைந்திருப்பதும், அகநோக்கிலும் பாரமார்த்திகத்திலும் தலை சிறந்ததுமான நாடு ஒன்று உண்டானல், அது நமது பாரத வர்ஷமேயாகும்.

***

உலகிலே உள்ள எந்தப் பெரு மலையையும்விட அதிக உறுதியுடன் நிலைத்து நிற்கும் தேசம் அதுவேயாம். அது அழியாத வலிமையுடையது. முடிவில்லாத வாழ்வுடையது. தோற்றம் ஒடுக்கமில்லாத ஆன்மாவைப் போல் அதுவும் அமரத்வம் பொருந்தியது. அத்தகைய தாய்நாட்டின் புதல்வர்கள் நாம்.

***

இப்புண்ணிய பூமியில் சமயமும் சாஸ்திரமும் தழைத்து வளர்ந்தன. மகாபுருஷர்களுக்குப் பிறப்

பனித்த தேசமும், தியாக பூமியும் நமது தாய்நாடே யாகும். பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை மனித வாழ்க்கையின் மகோன்னதமான இலட்சியம் விளங்கி வந்திருப்பது இந்நாட்டிலே தான்.

* * *

சாஸ்திரம், ஆத்மவித்தை, சன்மார்க்கம், சாந்தம், இனிமை, அன்பு என்னும் இவற்றிற்குத் தாய்நாடு பாரத தேசமாகும். அவை இன்றளவும் இங்கே நிலை பெற்றிருக்கின்றன. இவ்வுலகில் எனக்குள்ள அநுப வத்தை ஆதாரமாகக் கொண்டு, மேற்கூறிய துறை களில் இன்னமும் இந்தியாவே எல்லாத் தேசங்களி லும் முதன்மை பெற்றிருக்கிறதென்று நான் தைரிய மாகக் கூறமுடியும்.

* * *

மற்ற நாடுகளிலே கோடிக் கணக்கான மக்களின் இதயங்களை உலகாயதம் என்னும் தீ எரித்து வருகின் றது. அத்தீயை அணைப்பதற்கான ஜீவ நீர் இந்நாட் டிலே உண்டு.

* * *

நமது தாய் நாட்டிற்கு இவ்வுலகம் பட்டிருக்கும் கடன் மகத்தானதாகும். தேசந் தேசமாய் எடுத்துக் கொண்டு பார்த்தால், சாதுக்களான ஹிந்துக்களுக்கு இவ்வுலகம் கடமைப்பட்டிருப்பது போல் வேறெந்த ஜாதிக்கும் கடமைப்பட் டிருக்கவில்லையென்று சொல்ல லாம்.

* * *

கண்ணுக்குப் புலனாகாமலும், சத்தம் செய்யாம லும் வானின்றிறங்கும் இன்பப் பனித் துளியானது அழகிற் சிறந்த ரோஜா மொட்டுக்களை மலரச்செய்

கின்றது. உலகின் அறிவு வளர்ச்சிக்கு இந்தியா செய்திருக்கும் உதவியும் இத்தகையதே யாகும்.

* * *

பல்வேறு சமயங்களின் ஆராய்ச்சியினால் நாம் தெரிந்து கொள்வதென்ன? உலகிலே நல்ல தர்ம சாஸ்திரமுடைய தேசமெதுவும் நம்மிடமிருந்து சிறிதேனும் கடன் வாங்காமலில்லை யென்பதே. ஆன்மா அழிவற்றது என்னும் கொள்கையுடைய சமயங்கள் எல்லாம், அக்கொள்கையை நேர் முகமாகவோ, மறை முகமாகவோ நம்மிடமிருந்தே பெற்றிருக்கின்றன.

* * *

இந்த தேசத்தில் முடிதாங்கிய பெரு மன்னர்கள் தங்கள் மூதாதைகள் வனங்களில் அரை நிர்வாணமாய் வாசம் செய்த ரிஷிகள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை யடைந்தார்கள். வேறெந்த நாட்டிலேனும் அத்தகைய அரசர்கள் இருந்ததாக நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? ஏழை வழிப்போக்கர்களைக் கொள்ளை யடித்துக்கொண்டு பெரிய கோட்டைகளில் வசித்த கொள்ளைக்கார ஜமீன்தார்களின் வழித்தோன்றியவர்கள் தாங்களென்று (மேனாட்டார் போல) இந்நாட்டில் அரசர்கள் சொல்லிக்கொள்ள விரும்புவதில்லை.

* * *

"வாழ்க்கைப் போராட்டத்தில் பலசாலிகளே மிஞ்சுவார்கள்" என்னும் புதிய கொள்கையைப்பற்றி மேனாட்டார் அதிகம் பேசுகிறார்கள். உடல் பலமுடையவர்களே பிழைத்திருப்பதற் குரியவர்கள் என்று அவர்கள் கருதுகிறார்கள். இது உண்மையானால், பண்டைக்காலத்தில் மிக பலசாலிகளாய் வெற்றிக்

கொடி நாட்டி வாழ்ந்திருந்த தேசத்தார் எல்லாம் இன்று புகழுடன் நிலைத்திருக்கவேண்டும் ; உடல்வலி வற்றவர்களும், வேறு ஒரு சாதியையோ, தேசத்தையோ என்றும் ஜெயித்தறியாதவர்களுமான ஹிந்துக்கள் முன்னமே மாண்டு மறைந்து போயிருக்க வேண்டும். ஆனால் நாம் முப்பது கோடிமக்கள் இன்று வாழ்ந்து கொண்டுதா னிருக்கிறோம்!

***

இவ்வுலகிலுள்ள பற்பல ஜாதியார்களுக்குள்ளே, பிறநாட்டின் மீது எப்போதும் படையெடுத்துச் செல்லாதவர்கள் நாம்தான். அக்காரணத்தினால் ஆண்டவன் ஆசிர்வாதம் நமக்கு எப்போதும் இருந்துவருகிறது. அவனுடைய அருள் வலிமையினாலேயே நாம் உயிர் வாழ்ந்து வருகிறோம்.

***

இவ்வுலகில் மிகப் பெருமை கொண்ட மனிதர்களுக்குள்ளே நானும் ஒருவன். ஆனால் உங்களுக்கு உண்மையைச் சொல்லி விடுகிறேன் ; — அந்தப் பெருமை என் பொருட் டன்று ; என் மூதாதைகளின் பொருட்டேயாம். .... பண்டை ஆரியர்களின் சந்ததிகளே! இறைவன் அருளால் நீங்களும் அத்தகைய பெருமை கொள்வீர்களாக. உங்கள் இரத்தத்திலும் உங்கள் மூதாதைகளிடத்து நம்பிக்கை ஊறிப் போகுமாக. அது உங்கள் வாழ்க்கையில் ஒன்றிக் கலந்து விடுவதாக. அதன் மூலமாய் உலகிற்கும் கதி மோக்ஷம் கிட்டுமாக.

***

ஆயிரம் ஆயிரம் வருஷங்களாய் இந்தியா அமைதியுடன் வாழ்ந்து வருகிறது. .... இங்கிருந்து உயர்ந்த

கருத்துக்கள் அலைமேல் அலையாகக் கிளம்பிப் பரவி வந்திருக்கின்றன. இங்கே பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் உலகிற்கு அருளையும் சாந்தத்தையும் நல்கியிருக்கின்றன.

***

விஸ்தாரமான இவ்வுலகத்தின் சரித்திரம் முழுவதையும் ஆராய்ச்சி செய்து பாருங்கள். உன்னதமான இலட்சியம் ஒன்றை நீங்கள் எங்கே கண்டாலும் அதற்குப் பிறப்பிடம் இந்தியாவா யிருப்பதைக் காண்பீர்கள். மிகப் புராதன காலந்தொட்டு பாரதநாடு மக்கட் குலத்துக்கு உயர்ந்த கருத்துக்க ளளிக்கும் ஓர் அருஞ் சுரங்கமாயிருந்து வந்திருக்கிறது. உன்னதமான இலட்சியங்களுக்குப் பிறப்பளித்து அவற்றை உலக முழுவதும் விஸ்தாரமாகப் பரப்பியும் வந்திருக்கிறது.

2. நமது தாய்நாடு — அதன் சிறப்பியல்

சங்கீதத்தில் ஒவ்வொரு கீர்த்தனத்துக்கும் முக்கியமான மத்திம சுரம் ஒன்றிருப்பது போல், ஒவ்வொரு நாட்டிற்கும் பிரதான வாழ்வு நோக்கம் ஒன்று உண்டு. மற்றவை யெல்லாம் அதற்கிரண்டாவது ஸ்தானத்தையே அடையும். இந்தியாவிற்கு அத்தகைய பிரதான வாழ்க்கைஇலட்சியம் சமயமாகும். சமூக சீர்திருத்தம் முதலிய மற்றவை யெல்லாம் இந்தியாவைப் பொறுத்தவரை இரண்டாந்தர விஷயங்களேயாம்.

***

சங்கீதத்தில், மத்திம சுரமாயுள்ள சுருதியை யொட்டி மற்ற சுர வரிசைக ளெல்லாம் மேலும் கீழும்

தவழ்ந்து இன்னிசை எழுப்புகின்றன. இவ்வாறே ஒவ்வொரு தனி மனிதனுக்கும், ஒவ்வொரு தேசத்துக்கும் வாழ்க்கையின் தனிப் பெரும் நோக்கம் ஒன்றுண்டு. மற்ற நோக்கங்க ளெல்லாம் இதைச் சுற்றி நின்று வாழ்க்கையை இனிமை பயக்கச் செய்கின்றன.

* * *

ஒரு நாட்டிற்கு அரசியல் வலிமையே ஜீவதாதுவா யிருக்கலாம். இங்கிலாந்து இத்தகைய நாடாகும். மற்றொரு நாட்டுக்குக் கலை உணர்ச்சியே உயிர் நாடியா யிருக்கலாம். இவ்வாறு பற்பல நாடுகளுக்கும் பற்பல துறைகள் முதன்மையான வாழ்வு நோக்கங்களா யிருக்கின்றன. இந்தியாவிலோ சமயத் துறையே வாழ்வின் பற்பல துறைகளுள்ளும் மகோன்னதம் பெற்று விளங்குகிறது. தேசீய வாழ்க்கை யென்னும் சங்கீதத்துக்குச் சமயமே இங்கு சுருதியாக இயங்குகிறது. நூற்றுக்கணக்கான வருஷங்களாகத் தன் வாழ்க்கையின் முக்கியமான துறையாய் இருந்துவரும் தேசீய ஜீவதாதுவை எந்த நாடேனும் புறக்கணிக்க முற்பட்டு அதில் வெற்றியும் பெற்றால் அத்தேசம் அழிந்தே போகின்றது. ஆதலின் நீங்கள் சமயத்தை மட்டும் புறக்கணித்து விட்டு, அரசியல், சமூக இயல் முதலியவற்றுள் எதனை உங்கள் நடு நோக்கமாய், தேசீய வாழ்க்கையின் உயிர் நாடியாய் வைத்துக் கொண்டாலும், அதன் முடிவு நீங்கள் அடியோடு அழிந்து விடுதலேயாம்.

* * *

துறவும், தொண்டுமே இந்தியாவின் தேசீய இலட்சியங்களாகும். இந்த இலட்சியங்களை நீங்கள் பேணி வளர்த்தால் மற்றவை தமக்குத் தாமே வளரும். இங்

நாட்டில் பாரமார்த்திகக் கொடியை எவ்வளவுதான் உயர்த்தினாலும் அதிகம் என்று சொல்வதற்கில்லை. பாரமார்த்திகமே இந்தியாவின் கதி மோட்சமாகும்.

***

ஜீவரத்தம் தூயதாயும், வனமை பெற்றும் இருந்தால் நோய்க்கிருமி எதுவும் உயிர்வாழ முடியாது. நமது சமூகத்தின் ஜீவரத்தம் பாரமார்த்திக வாழ்வேயாகும். அது தெளிந்து, பலத்துடன் ஓடினால் மற்ற எல்லாம் சரியாயிருக்கும். அந்த இரத்தம் மட்டும் சுத்தமாயிருந்தால், அரசியல், சமூக இயல், பொருள் இயல் முதலியவற்றிலுள்ள குறைபாடுகள் எல்லாம் - நாட்டின் வறுமைகூட - நீங்கிவிடும்.

***

இந்தியாவின் உயிர் நாடி சமயம்; சமயமொன்றே யாகும். சமயமென்னும் உயிர் நாடி அற்றுப் போகும் போது பாரதநாடு நிச்சயம் இறந்துவிடும். அரசியல் திருத்தங்களும், சமூக சீர்திருத்தங்களும் அப்போது அதைக் காப்பாற்ற மாட்டா. இந்தியாவின் புதல்வர் ஒவ்வொருவருடைய தலையிலும் குபேரனுடைய செல்வமெல்லாம் பொழிந்தபோதிலும், அதன் உயிரைக் காக்க முடியாது.

***

அரசியல், வியாபாரப் பெருக்கினால் வரும் பெருமிதச் செல்வம், அதிகாரம், சரீர விடுதலை முதலியவைகளைப்பற்றி மற்றவர்கள் பேசட்டும். ஹிந்துக்களின் மனம் இவற்றை அறிந்து கொள்ளாது; அறிந்து கொள்ள விரும்பவும் விரும்பாது.

பாரமார்த்திகம், சமயம், ஆண்டவன், ஆன்மா, ஆன்ம விடுதலை என்னும் இவைகளைப்பற்றிப் பேசுங்கள். மற்ற நாடுகளில் தத்துவசாஸ்திரிகள் என்று சொல்லப்படுவோரைவிட இந்தியாவிலுள்ள மிகத் தாழ்ந்த குடியானவன் இவ்விஷயங்களைப்பற்றி அதிகம் தெரிந்தவனு யிருப்பதைக் காண்பீர்கள்.

* * *

இந்தியர்களிடம் அரசியலைப்பற்றியும், சமூக புனருத்தாரணத்தைப் பற்றியும், பணஞ் சேர்த்தலைப் பற்றியும், வியாபார வளர்ச்சியைப் பற்றியும் நீங்கள் பேசுவன வெல்லாம் குள்ளவாத்தின் முதுகில் விழுந்த நீர்த்துளி போல் தெறித் தோடிப்போகும்.

* * *

அரசியல், சமூக முன்னேற்றங்கள் எல்லாம் அவசியமல்ல வென்று நான் சொல்லவில்லை. ஆனால் அவையெல்லாம் இந்நாட்டிற்கு இரண்டாந்தரமான முக்கியமே யுடையன வென்றும், சமயமே இங்குத் தலை சிறந்ததாகும் என்றும் நான் கூறுகிறேன். இதை நீங்கள் சிந்தையில் பதித்து வைக்கவேண்டும்.

* * *

கங்கை நதியானது உறைந்த பனிக்கட்டிகள் நிறைந்த தன் மூலஸ்தானத்திற்குத் திரும்பிச்சென்று அங்கிருந்து வேறொரு புதிய திக்கில் ஓடவேண்டு மென்று நீங்கள் விரும்புகிறீர்களா? அது ஒரு கால் சாத்தியமானாலும், இத்தேசம் தன் சிறப்பியலான சமய வாழ்க்கையைத் துறந்து, புதிய அரசியல் வாழ்க்கையையோ வேறொன்றையோ ஏற்றுக்கொள்ளுதல் இயலாத காரியம்.

எதிர்ப்பின் வலிமை எங்கே குறைவாயிருக்கிறதோ அவ்வழியின் மூலமாகவே உங்களால் வேலை செய்யமுடியும். இந்தியாவில் அவ்வாறு எதிர்ப்பு மிகக் குறைவாயிருக்கும் வழி சமய வழியேயாகும்.

* * *

இப்புராதன நாடு இன்னமும் உயிர் வாழ்கிறதென்றால், அதற்குக் காரணம், இன்னமும் அது ஆண்டவனையும், சமயம், பாரமார்த்திகம் என்னும் நிதிக்களஞ்சியங்களையும் விடாமற் பற்றிக் கொண்டு நிற்பதேயாம்.

* * *

இந்தியாவை எவராலும் அழிக்க முடியாது; அது மரண பயமின்றி நிமிர்ந்து நிற்கின்றது. ஆன்மாவே அதன் பின்பலமாயிருக்கும் வரை, அதன் மக்கள் பாரமார்த்திக வாழ்வைக் கைவிடாதிருக்கும் வரை நமது தேசம் இங்ஙனமே நின்றொளிரா நிற்கும். இந்தியர்கள் பிச்சைக்காரர்களாகவே யிருக்கலாம்; என்றென்றைக்கும் வறுமையும், பட்டினியும், ஆபாசமும், அழுக்கும் சூழ்ந்தவர்களாய் வாழலாம். ஆனால் அவர்கள் தங்கள் இறைவனைக் கைவிட வேண்டாம். தாங்கள் முனிபுங்கவர்களின் வழித் தோன்றிய மக்கள் என்பதை மறக்க வேண்டாம்.

3. நமது தாய்நாடு — அதன் பெரு நோக்கம்

ஹிந்து சமூகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் எக்கருமத்தைத் தன் வாழ்வின் பெரு நோக்கமாகக் கொண்டு பிறக்கின்றது தெரியுமா? பிராம்மணனுடைய பிறவி நோக்கம் "சமயச் செல்வத்தைப் பாதுகாத்தலே" என்று மனு பெருமையுடன் புகன்

றிருப்பதை நீங்கள் படித்திருப்பீர்கள். ஆனால் அது பிராம்மணனுடைய பிறவி நோக்கம் மட்டு மன்று என நான் சொல்வேன். இப்புண்ணிய பூமியில் ஜனிக்கும் ஆண் பெண் குழந்தை ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ள பிறவிப் பெரு நோக்கம் "சமயச் செல்வத்தைப் பாது காத்தலே" யாகும்.

* * *

பரிபூரண உயர் நாகரிகத்துக்காக உலகம் காத்துக் கொண்டிருக்கிறது. பாரத நாட்டின் நாகரிக பொக்கிஷத்தை, ஹிந்து ஜாதியின் அதி ஆச்சரியமான பரம்பரை ஞானச் செல்வத்தை உலகம் எதிர் நோக்கி நிற்கிறது.

* * *

இந்தப் பாரத நாட்டில் நமது மூதாதைகள் சேகரித்து வைத்திருக்கும் அமிர்தத்தில் ஒரு துளிக்காக ஏந்திய கைகளுடன் வெளியே கோடிக்கணக்கான மக்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய இதய வேதனையை நமது நாட்டின் சுவர்களுக்குள் அடைந்து கிடக்கும் நாம் சிறிதும் அறிந்துகொண்டோமில்லை.

* * *

மேனாடு முழுவதும் ஓர் எரி மலையின் உச்சியின் மீது நின்று வருகின்றது. அவ்வெரிமலை எந்த நிமிஷமும் தீயைக் கக்க ஆரம்பித்து அந்நாட்டைப் பாழாக்குதல் கூடும். மேனாட்டார் மனச்சாந்தி வேண்டி உலகின் ஒவ்வொரு மூலையிலும் தேடிவிட்டார்கள்; ஆனால் அதை எங்கும் அவர்கள் காணவில்லை. இவ்வுலக இன்பத்தைப் பரிபூரணமாய் அவர்கள் அநுபவித்தார்கள்; ஆனால் அது வெறும் பிரமையே எனக் கண்டார்

கள். பாரத நாட்டின் ஞான அருவி மேனாட்டில் வேகமாகப் பாயுமாறு வேலை செய்வதற்கு இதுவே தக்க தருணமாகும்.

***

பாரதத் தாயின் புதல்வர்களுக்கு தர்ம மார்க்கத்தில் ஒரு மகத்தான கடமை ஏற்பட்டிருக்கிறது. மனித வாழ்க்கையின் இலட்சியங்களையும் கடமைகளையும் பற்றி உலகிற்கு அறிவு புகட்டும் ஊழியம் புரிய அவர்கள் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும்.

***

இந்நாட்டில் சமயமும், பாரமார்த்திகமுமே இன்னமும் ஜீவநீர் சுரக்கும் ஊற்றுக்களா யிருந்து வருகின்றன. இவ்வூற்றுக்களி லிருந்து சுரக்கும் நீர் பொங்கிப் பெருகி எங்கெங்கும் பாய்ந்தோடி உலகை மூழ்கடிக்க வேண்டும். அவ் வமுத வெள்ளம், அரசியல் ஆசைகளாலும், சமுதாய சூழ்ச்சிகளாலும் நசுக்கப்பட்டுத் தற்போது அரைப் பிராணனுடன் இருக்கும் மேனாடுகளுக்கும் பிற தேசங்களுக்கும் புத்துயிரையும், நவசக்தியையும் அளிக்க வல்லதாகும்.

***

மக்கட் குலத்தின் முன்னேற்றத்திற்கு ஹிந்துவின் சாந்தமுள்ள மூளையும் தன் பங்கு வேலையைச் செய்தே யாகவேண்டும். உலகிற்கு இந்தியா அளிக்கக் கூடிய நன்கொடை பாரமார்த்திக ஞான ஒளியே யாகும்.

***

உங்களில் ஒவ்வொருவரும் அரியதொரு பரம்பரைச் செல்வத்துடன் பிறந்திருக்கிறீர்கள். மகிமை

வாய்ந்த இத்தேசத்தின் மகத்தான பண்டை வாழ்வு அனைத்துமே அச்செல்வமாகும். உங்களுடைய மூதாதைகள் கோடிக் கணக்கானவர்கள் உங்களுடைய செயல் ஒவ்வொன்றையும் கவனித்து வருகிறார்கள். எனவே, எச்சரிக்கையுடன் ஒவ்வொன்றையும் எண்ணித் துணியுங்கள்.

***

ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு சிறப்பியல்பு உண்டு. ஒவ்வொரு ஜாதிக்கும் தனிப்பட்ட வாழ்வு நோக்கம் ஒன்று உண்டு. அவ்வாறே ஒவ்வொரு ஜாதியும் இவ்வுலகில் செய்து முடித்தற்குரிய தனிப் பெருங் காரியம் ஒன்று உண்டு. ஒவ்வொரு ஜாதியும் தத்தமக்குரிய காரியத்தைச் செய்து அதன் பயனைக் காட்ட வேண்டும். அரசியல் பெருமையோ, இராணுவ வலிமையோ நமது ஜாதியின் வாழ்வு நோக்கமன்று. அவ்வாறு எப்போது மிருந்ததில்லை; இனியும் இராது. நமது வாழ்க்கை இலட்சியம் முற்றும் வேறானதாகும். அது, நமது ஜாதியின் பாரமார்த்திக சக்தியை யெல்லாம் திரட்டிச் சேர்த்துப் பாதுகாத்தலே யாம். அவ்வாறு ஒன்று சேர்க்கப்பட்ட சக்தியானது, தக்க சமயம் நேரும்போது பெரு வெள்ளம் போல் பாய்ந்து உலக முழுவதையும் மூழ்கடிக்கும்.

***

இந்தியர்களாகிய நாம் எத்தனையோ துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாகியும், வறுமைக் குழியில் வீழ்ந்து கிடந்தும், உள் நாட்டுக் கொடுமைகளுக்கும், வெளி நாட்டாரின் கொடுமைகளுக்கும் உள்ளாகியும், இன்னமும் உயிர் வாழ்ந்திருப்பதின் காரணம் யாது? நம்மிடம் தனிப்பட்ட தேசிய இலட்சியம்

ஒன்று இருப்பது தான். இந்த இலட்சியம் உலகப் பாதுகாப்பிற்கு இன்னும் அவசியமா யிருக்கிறது.

***

ஓராயிரம் ஆண்டுகளாக எத்தனையோ கஷ்டங்களுக்கும், குழப்பங்களுக்கும் உள்ளாகியும் ஹிந்து ஜாதி அழிந்துபடாம லிருப்பதேன்? நமது பழக்க வழக்கங்கள் அவ்வளவு பொல்லாதவையா யிருப்பின், இதற்குள்ளாக நாம் இருந்த விடந்தெரியாமல் மாண்டு மறைந்து போகாததேன்? நம்மீது படையெடுத்து வந்த அன்னியர்கள் பற்பலரும் நம்மை நசுக்கிப் போடுவதற்கு எல்லாவித முயற்சிகளும் செய்து பார்க்கவில்லையா? அவ்வாறாக, மற்றும் பல அநாகரிக ஜாதிகளுக்கு நேர்ந்த கதி ஹிந்துக்களுக்கு நேராத காரணம் என்ன?

***

உலக நாகரிக மென்னும் பொதுக் களஞ்சியத்திற்கு இந்தியா தன்னுடைய பகுதியை இனியும் தர வேண்டி யிருக்கிறபடியாலேயே அது இன்னமும் உயிர் வாழ்ந்து வருகிறதென்று அறிந்து கொள்ளுங்கள்.

4. நமது தாய்நாடு — அதன் வருங்காலம்

நீளிரவு கழிந்து விட்டதாகக் காண்கிறது; நமது கொடிய துன்பத்துக்கும் கடைசியில் முடிவு வந்து விட்டதாகத் தோன்றுகிறது; உயிரற்ற பிணம்போல் காணப்பட்ட உடலும் உயிர் தழைத் தெழுந்திருக்கக் காண்கிறோம். எங்கேயோ வெகு தூரத்திலிருந்து ஒரு குரல் வருவதைக் கேட்கிறோம். .... ஹிமாலயத்திலிருந்து வரும் இனிய குளிர் பூங்காற்றைப்

போல் அக்குரல் குற்றுயிராயிருந்த எலும்புகளுக்கும் தசைகளுக்கும் புத்துயிரைக்கொண்டு வருகின்றது. நமது மயக்கமும் அகன்று வருகிறது. பாரதத்தாய் தன் நீண்ட உறக்கத்தினின்றும் விழித்து எழுவதைக் காணுதவர் குருடர்களே யாவர்; அல்லது கண்ணிருந் தும் காணுதவர்களாவர்.

***

இனி நமது தாயின் முன்னே எவரும் எதிர்த்து நிற்க இயலாது; இனிமேல் அவள் என்றும் உறங்கப் போவதில்லை. புற உலக சக்திகள் எவையும் அவள் முன்னேற்றத்தை இனித் தடுக்க முடியாது; அளவற்ற வலிவுடைய அத்தேவி விழித்தெழுந்து விட்டாள்.

***

பெரிய மரமொன்றில் அழகிய பழம் ஒன்று பழுத்துக் கனிகின்றது; அப்பழம் கீழே விழுந்து அழுகுகின்றது. அவ்வழுகிய கனியிலிருந்து தரையில் வேர் பாய்ந்து, அதினின்றும் முன்னதைவிடப் பெரிய விருக்ஷமொன்று தழைத்துக் கிளம்புவதைக் காண் கிறோம். இத்தகைய க்ஷீணதசையிலிருந்து நாம் தற் போது வெளி வந்திருக்கிறோம். அதுவும் அவசியமான ஒரு நிலையே யாகும். பாரதத்தாயின் வருங்கால உன்னதம் அந்த க்ஷீணதசையிலிருந்தே தோன்றப் போகின்றது. இதற்குள்ளாகவே முளை கிளம்பித் தளிர்களும் காணத் தொடங்கிவிட்டன. அம்முளை விரைவிலேயே ஒரு பெரிய மகாவிருக்ஷமாக வளர்ந்து காட்சியளிக்கும்.

***

வருங்காலத்தில் அதி ஆச்சரியமான, மகிமை வாய்ந்த இந்தியா தோன்றப் போகின்றது. இதற்கு

முன் எப்போதுமிருந்ததைவிட அது பெருமை பொருந்தி விளங்கும். பண்டைக்கால ரிஷிகளையும் விடப் பெரிய மகான்கள் தோன்றுவார்கள். உங்கள் மூதாதைகள், ஆவி உலகங்களில் தத்தம் இடங்களிலிருந்து, தங்கள் சந்ததிகள் இவ்வளவு மகோன்னதம் பொருந்தி விளங்குவதைக் கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைவார்களென்பதில் சந்தேகமில்லை.

* * *

கண்விழித்தெழுந்திருங்கள்; நமது பாரதத் தாய் புத்திளமை பெற்று, முன்னெப்போதையும் விட அதிக மகிமையுடன் தன் நித்திய சிம்மாசனத்தில் வீற்றிருப்பதைக் கண்டு மகிழுங்கள்.

* * *

நம்புங்கள்; உறுதியாக நம்புங்கள். இந்தியா கண் விழித்து எழுந்திருக்க வேண்டுமென்று ஆண்டவன் கட்டளை பிறந்துவிட்டது.

* * *

எழுங்கள்; எழுங்கள். நீளிரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது. கடல் புரண்டுவருகிறது. அதன் உத்வேகத்தைத் தடுக்க எதனாலும் ஆகாது.

இரண்டாம் அத்தியாயம்

1. தேசத்தொண்டர்கள் — அவர்களுடைய குறைபாடுகள்

இந்தியாவில் இரண்டு சாபக் கேடுகள் உண்டு. அவற்றில் ஒன்று நமது பலவீனம்; இரண்டாவது நமது பகைமை, ஈரமற்ற இதயம்.

* * *

உபநிஷதங்களின் மகிமையைப் பற்றிப் பேசுகிறோம். மகரிஷிகளின் சந்ததிகள் நாம் என்று பெருமை பேசிக் கொள்கிறோம். ஆயினும் மற்றும் பல ஜாதியாருடன் ஒப்பிடும்போது நாம் பெரிதும் பலவீனர்களாயுள்ளோம். உடல் பலவீனமே முதன்மையானது. குறைந்தபட்சம் நமது துன்பங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு அதுவே காரணமாகும். நமது இளைஞர்கள் முதலில் பலம் பெறவேண்டும். சமய வளர்ச்சி பின்னர் தானே ஏற்படும். என் வாலிப நண்பர்களே! நீங்கள் பலசாலிகளாகுங்கள். உங்களுக்கு என் புத்திமதி அதுவேயாகும். உங்களுக்கு, கீதையை விட விளையாட்டு சுவர்க்கத்துக்குச் சுருக்கு வழியாகும். உங்கள் தசை நார்களும், புஜங்களும் இன்னும் சிறிது வலிவு பெறுங்கால் கீதையை இன்னும் நன்றாய் அறிந்து கொள்வீர்கள். உங்கள் நரம்புக் குழாய்களில் இன்னும் சிறிது வலிவுள்ள இரத்தம் ஓடும்போது, கிருஷ்ண பரமாத்மாவின் மகத்தான ஞானத்தையும் மகத்தான பலத்தையும் இன்னும் நன்றாய் அறிந்து கொள்ளக் கூடும். உங்கள் முதுகு வளையாமல் உங்

கள் கால்கள் தளர்வுறாமல் நீங்கள் நிமிர்ந்து நிற்கும் போது, "நாம் ஆண்மக்கள்" என்னும் உணர்ச்சி உங்களுக்கு ஏற்படும்போது, உபநிஷதங்களின் நுட்பத்தையும், ஆன்மாவின் மகிமையையும் நன்குணர்ந்து கொள்வீர்கள்.

***

நாம் வேண்டுவதென்ன? இரத்தத்தில் பலம், நரம்புகளில் வலிவு, இரும்புபோன்ற தசைநார்கள், எஃகை யொத்த நரம்புகள்—இவையே நமக்கு வேண்டும். தளர்ச்சி தரும் கசிவுள்ள கொள்கைகள் நமக்குத் தேவையில்லை.

***

இந்தியாவில் தற்போதுள்ள பெரும் பாவம் நமது அடிமைத் தனமே யாகும். ஒவ்வொருவரும் கட்டளை யிடவே விரும்புகிறார்; கீழ்ப்படிவதற்கு எவரும் தயாராயில்லை. பண்டைக் காலத்து அதி ஆச்சரியமான பிரம்மசரிய முறை மறைந்ததே இந்நிலைமைக்குக் காரணம்.

***

முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள்; கட்டளையிடும் பதவி தானே வரும். முதலில் வேலைக்காரனாயிருந்து பழகு; எஜமானனாக நீ தகுதி பெறுவாய்.

***

உனக்கு மேலுள்ளவன் நதியில் குதித்து முதலையைப் பிடிக்கும்படி கட்டளையிட்டால் முதலில் அதன்படி செய். பிழைத்து வந்தால் அவனுடன் வாதாடு. உத்திரவு தவறாயிருந்த போதிலும் முதலில் நிறைவேற்றிவிட்டுப் பின்னர் அதை மறுத்துக் கூறு.

பொறாமையை யொழியுங்கள்; இன்னும் செய்ய வேண்டி யிருக்கும் பெரிய வேலைகளை யெல்லாம் செய்யும் ஆற்றல் பெறுவீர்கள்.

* * *

அடிமைகள் எல்லாருக்கும் பெரிய சனியனாயிருப்பது பொறாமையே யாகும். நமது நாட்டைப் பிடித்த சனியனும் அதுதான். எப்போதும் பொறாமையை நீக்குங்கள்.

* * *

✓ நமது நாட்டாரில் ஒருவர் முன்னேறிப் பெருமை யடைய முயன்றால் நாம் எல்லாரும் அவரைக் கீழே இழுத்தவே முயல்கிறோம். ஆனால் வெளி நாட்டான் ஒருவன் வந்து நம்மை உதைக்கும்போது பேசாம விருக்கிறோம்.

* * *

நாம் முதலில் ஆராதிக்க வேண்டிய தெய்வங்கள் நமது தேசமக்களே யாவர். ஒருவரிடம் ஒருவர் பொறாமை கொண்டு, ஒருவரோடொருவர் சண்டையிடுவதற்குப் பதிலாக ஒருவரையொருவர் நாம் பூசிப் போமாக.

* * *

✓ நாம் நம்பிக்கை யிழந்துவிட்டோம். நான் சொன்னால் நம்புவீர்களா? இங்கிலீஷ்காரனை விட நமக்கு நம்பிக்கை குறைவு. ஆயிரம் மடங்கு குறைவு!

* * *

முப்பத்து மூன்று கோடி ஜனங்களாகிய நாம் சென்ற ஆயிரம் ஆண்டுகளாக, நம்மை மிதித்துக் கொண்டுவரும் எந்த அன்னியக் கூட்டத்தாராலும்,

அவர்கள் எவ்வளவு சிறு தொகையினரா யிருப்பினும், ஆளப்பட்டு வருவதேன்? ஏனெனில், அவர்களுக்குத் தங்களிடம் நம்பிக்கை இருந்தது; நமக்கு அது இல்லை. உங்களிடம் நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். அந்த நம்பிக்கையின்மேல் வலிமையுடன் நில்லுங்கள். அதுவே நாம் வேண்டுவதாகும்.

* * *

நமக்கு சிரத்தை வேண்டும்; தன்னம்பிக்கை வேண்டும். பலமே உயிர்; பலவீனமே மரணம். நாம் மரணமற்ற, சுதந்திரமுள்ள, தூய்மையே இயல்பாகக் கொண்ட ஆத்மா அல்லோமா? நாம் பாவம் எவ்வாறு செய்யமுடியும்? முடியவே முடியாது. இத்தகைய நம்பிக்கை வேண்டும். இந்நம்பிக்கை நம்மை மனிதர்களாக்கும்; தேவர்களாக்கும். நாம் சிரத்தையை இழந்து விட்டபடியால்தான் இந்நாடு நாசமடைந்திருக்கிறது.

* * *

நாம் பல விஷயங்களைப் பற்றி எண்ணுகிறோம். ஆனால் அவற்றைச் செய்வதில்லை. நாம் கிளிப்பிள்ளைகள் ஆய்விட்டோம். பேசுதலே நமது வழக்கமாய்ப் போய்விட்டது. செயலில் ஒன்றும் நடத்துவதில்லை. இத்தகைய வலிமையற்ற மூளையினால் எதுவும் செய்ய முடியாது. அதற்கு வலிவு கொடுக்க வேண்டும்.

* * *

நீங்கள் அறிந்தது அதிகம்; ஆனால் செய்வது குறைவு. உங்கள் அறிவு அளவு கடந்து போய்விட்டது. அதுதான் உங்களுடைய தொல்லை. உங்கள் இரத்தம் வெறும் தண்ணீர் போன்றது. ஆகையினால்தான் உங்கள் மூளை தோல் உரிந்து வருகிறது; உங்கள்

உடம்பு சோர்ந்து கிடக்கிறது. உங்கள் உடம்பை மாற்றிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

***

பேச்சு! பேச்சு! பேச்சு! பேச்சு அளவு கடந்து விட்டது. நாம் பெரிய சாதியாராம்! உளறல்! நாம் மனோபலமும், உடல் வலிவும் அற்ற சோகைகள்; உண்மை இதுதான்.

***

நமது தேசிய இரத்தத்தில் ஒரு பயங்கரமான நோய் ஊர்ந்து கொண்டிருக்கிறது. அதுதான் எதையும் பரிகசிக்கும் தன்மை; சிரத்தையில்லாமை. இந்நோயைத் தொலைத்து விடுங்கள். சிரத்தையுடைய பலசாலிகளா யிருங்கள். மற்றவையெல்லாம் தாமே வரும்.

***

நமது சமயம் சமையலறைக்குள் புகுந்து விடக் கூடிய அபாயம் நேர்ந்திருக்கிறது. நாம் வேதாந்திகளு மல்லோம்; பௌராணிகர்களு மல்லோம்; தாந்திரிகர்களு மல்லோம். நாம் "தொடாதே" சமயிகள். சமையலறையே நமது சமயம். சோற்றுப் பானையே நமது கடவுள். "என்னைத் தொடாதே. நான் பரிசுத்தன்" என்பதே நமது சமயக் கொள்கை. இன்னும் ஒரு நூற்றாண்டு காலம் இவ்வழியே சென்றோமானால் நம்மில் ஒவ்வொருவரும் பைத்தியக்காரர் விடுதியையே அடைவோம்.

***

என் மகனே! எந்த மனிதனாதல், தேசமாதல் பிறரைப் பகைத்து உயிர்வாழ முடியாது. என்றைய தினம் இந்நாட்டில் 'மிலேச்சன்' என்னும் வார்த்தை

யைச் சிருஷ்டித்தார்களோ, என்றைய தினம் பிறருடன் கலந்து பழகுவதை நிறுத்தினார்களோ அன்றே இந்தியாவுக்குச் சனியன் பிடிக்கலாயிற்று.

***

மற்றொரு படிப்பினையை நாம் நினைவுகூரவேண்டும். பிறர் செய்வதுபோல் செய்தல் நாகரிகம் ஆகாது. நான் இராஜாவின் உடைதரித்துக் கொள்ளலாம். அதனால் நான் இராஜாவாய்விடுவேனா? சிங்கத்தோல் போர்த்துக்கொண்ட கழுதை சிங்கமாகி விடுமா? பிறரைப்போல் வேஷந் தரித்தல் பெரிய கோழைத்தனம். அதனால் அபிவிருத்தி எதுவும் ஏற்படாது. உண்மையில் அது மனிதனுடைய பயங்கரமான இழிநிலைக்கு அறிகுறியாகும். ஒருவன் தன்னைத்தானே இழிவாக நினைக்க ஆரம்பித்துவிட்டால், தன் முன்னோர்களைப் பற்றி வெட்கப்பட ஆரம்பித்துவிட்டால் அவனுடைய அழிவு காலம் நெருங்கிவிட்டதென்பது உறுதியாகும். இந்தியவாழ்வு முறையிலிருந்து அகன்று விடாதீர்கள். இந்தியர் அனைவரும் வேறோர் அன்னிய ஜாதியாரைப்போல் உண்டு, உடுத்து, நடக்கத் தொடங்கினால் இந்தியா நன்மையடையும் என்று ஒரு கணமும் நினைக்க வேண்டாம்.

***

✓ நாம் சோம்பேறிகள்; நம்மால் வேலை செய்ய முடியாது; நம்மால் ஒன்றுசேர முடியாது; நாம் ஒருவரை யொருவர் நேசிப்பதில்லை; ஆழ்ந்த சுயநல உணர்ச்சி உள்ளவர்கள் நாம்; நம்மில் மூன்று பேர் சேர்ந்து ஒருவரை யொருவர் துவேஷியாமல் எதுவும் செய்யமுடியாது.

நமது இயற்கையில் நிர்மாணத்திறன் என்பது பூஜ்யமாயிருக்கிறது. இந்தத் திறன் பெற வேண்டும். அது பெறும் இரகசியம் பொறுமையைத் தொலைத் தலையாகும். உங்கள் சகோதரர்களின் அபிப்பிராயத்துக் கிணங்க எப்போதும் சித்தமாயிருங்கள். எப்போதும் சமரசப்படுத்தவே முயலுங்கள்.

***

நமது நிலைமை என்ன? கட்டுப்பாடு சிறிதுமில்லாத ஜனத்திரள்; சுயநலம் மிகக் கொண்டவர்கள்; நெற்றியில் குறியை இந்தப் புறமாய்ப் போடுவதா, அந்தப் புறமாய்ப் போடுவதா என்பது குறித்து நூற்றுக்கணக்கான வருஷங்களாய்ச் சண்டை போடுகிறவர்கள்; சாப்பிடும்போது பிறர் பார்த்தால் உணவு தீட்டாய்ப் போய்விடுகிறதா இல்லையா என்பது போன்ற விஷயங்களைப்பற்றிப் புத்தகம் புத்தகமாய் எழுதுகிறவர்கள்.—இத்தகைய மக்கள் நாம்.

***

ஆதலின் வருங்காலத்தில் பாரதநாடு பெருமை பெற்று விளங்க வேண்டுமானால் நிர்மாணத்திறன், சக்தி சேகரம், மன ஒற்றுமை இவை வேண்டும். ....சமூக வாழ்வின் இரகசியம் ஒருமனப்படுதலேயாகும்.....சிதறிக்கிடக்கும் மனோ சக்திகளை ஓரிடத்தில் சேர்த்து ஒருமுகப்படுத்திப் பிரயோகித்தலே வெற்றியின் இரகசியம். சீனன் ஒவ்வொருவனும் தன் தன் வழியே சிந்திக்கிறான். ஆனால் மிகச் சிறு தொகையினரான ஜப்பானியர் எல்லாரும் ஒரு வழியாய் எண்ணுகிறார்கள். இவ்விரண்டின் பயன்களும் நீங்கள் அறிந்தவையே யாகும்.

குழந்தையைப் போல் எதற்கும் பிறரை நம்பி யிருப்பது நமது தேசிய இயற்கையாய்ப் போய்விட்டது. உணவு வாயில் கொண்டுவந்து போடப்பட்டால் விழுங்க எல்லாரும் தயாராயிருக்கிறார்கள். சிலர் அதை யும் தொண்டைக்குள் தள்ளவேண்டு மென்கிறார்கள். உங்கள் காரியத்தை நீங்களே செய்துகொள்ள முடியா விடின் நீங்கள் உயிர் வாழத் தகுதி யற்றவர்களாவீர்கள்.

***

ஒவ்வொரு தேசமும் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே ரட்சித்துக் கொள்ளவேண்டும். பிறர் உதவியை எதிர்பார்த்தல் ஆகாது. இதை எப்போதும் நினைவில் வையுங்கள்.

***

அயல் நாட்டு உதவியை நீங்கள் நம்பியிருக்கக் கூடாது. தனி மனிதர்களைப் போலவே தேசங்களும் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள வேண்டும். இதுவே உண்மையான தேசபக்தி. ஒரு தேசம் இது செய்யக் கூடவில்லையானால், அதன் முன்னேற்றத்துக்கு இன்னும் காலம் வரவில்லை யென்று அறிந்து கொள்ளுங்கள். அது காத்திருக்கவே வேண்டும்.

***

தொழிலில் ஒழுங்கு முறையைப் பொறுத்தவரை ஹிந்துக்கள் அசட்டை அதிகம் உடையவர்களா யிருக்கிறார்கள். கணக்கு வைத்தல் முதலியவைகளில் அவர்கள் திட்டமாயும், கண்டிப்பாயும் இருப்பதில்லை. இந்தியாவில் ஒற்றுமைப்பட்ட முயற்சிகள் எல்லாம்

இந்த ஒரு பெருங் குற்றத்தின் காரணமாகவே அழிந்து விடுகின்றன. தொழிலில் ஒழுங்கு முறை அநுசரிப்பது குறித்து நாம் இதுகாறும் கவனம் செலுத்தியதே யில்லை.

***

தொழில் முறைமையில் கண்டிப்பு வேண்டும். அதில் சிநேகத்துக்கும் சங்கோசத்துக்கும் இடமிருத்தல் கூடாது. ஒருவன் தன் வசமுள்ள ஒவ்வொரு நிதிக்கும் மிகத் தெளிவாகக் கணக்கு வைத்திருக்க வேண்டும். ஒன்றுக்கு உத்தேசிக்கப்பட்ட பணத்தை-ஒருவன் பட்டினி கிடக்கவே நேர்ந்தாலும் - வேறொன்றுக்கு உபயோகிக்கக் கூடாது. இது தான் தொழில் நேர்மை. அடுத்தாற்போல், தளராத ஊக்கம் தேவை. நீங்கள் எக்காரியம் செய்தாலும், அந்த நேரத்திற்கு அதுவே இறைவன் பணி ஆகிவிட வேண்டும்.

2. தேசத்தொண்டர்கள்—அவர்களுக்கு வேண்டுவதென்ன ?

இதயத்தினின்று எழும் உணர்ச்சி வேண்டும். வெறும் அறிவினால் என்ன பயன் விளையும்? அறிவு சில அடி தூரம் சென்று நின்று விடும். இதயத்தின் மூலமாகவே இறைவன் அருள் சுரக்கின்றான். ....ஆதலின், சீர்திருத்தக்காரர்களே! தேச பக்தர்களே ! உங்கள் இதயத்தில் உணர்ச்சி கொள்ளுங்கள்.

***

நீங்கள் உண்மையான உணர்ச்சி கொண்டிருக்கிறீர்களா? தேவர்கள், முனிவர்கள் இவர்களின் சந்ததி

களான லட்சோப லட்சம் மக்கள் இன்று மிருகங்களி னின்றும் அதிக வேற்றுமை யில்லாமல் வாழ்கிறார்க ளென்பதை உணர்கிறீர்களா ? லட்சக் கணக்கான மக் கள் இன்றைய தினம் பட்டினி கிடக்கிறார்க ளென்பதை யும், லட்சக்கணக்கானவர்கள் பல்லாண்டுகளாகப் பட் டினி கிடந்து வருகிறார்களென்பதையும் உணர்கிறீர் களா ? அறியாமை என்னும் கருமேகம் இந்நாட்டைக் கவிந்திருக்கிற தென்பதை உணர்கிறீர்களா ? அவ் வுணர்ச்சி உங்கள் மன அமைதியைக் குலைத்து உங்க ளுக்குத் தூக்கமில்லாமல் செய்து விடுகிறதா ? அது உங்கள் குருதியில் கலந்து, நரம்புக் குழாய்களில் ஓடி, இதய அடிப்புகளுடன் சேர்ந்து அடிக்கின்றதா ? ஏறக்குறைய அவ்வுணர்ச்சி உங்களைப் பைத்தியமே யாக்கிவிட்டதா ? இந்தப் பெரிய துன்பம் ஒன்றே உங் கள் மனதை முற்றும் கவர்ந்து விட்டதா? இதனால் உங் கள் பெயர், புகழ், மனைவி, மக்கள், உடைமை இவை அனைத்தையும், உங்கள் உடலையுங்கூட மறந்துவிட்டீர் களா ? தேசபக்தனாவதற்கு முதற்படி இதுவே யாகும்.

***

✓ அன்பு, வெற்றி யளித்தல் நிச்சயம். உங்கள் சகோதரரிடத்து உங்களுக்கு அன்பு உண்டா ? கடவு ளைத் தேட நீங்கள் எங்கே செல்கிறீர்கள் ? ஏழைகள், துன்பப்படுபவர்கள், பலவீனர்க ளெல்லாரும் கட வுளர் அல்லரா ? அவர்களை ஏன் நீங்கள் முதலில் ஆராதிக்கக் கூடாது ?, கங்கைக் கரையில் கிணறு தோண்டுவதேன் ? அன்பின் அளவற்ற சக்தியில் நம்பிக்கை வையுங்கள். பெயர், புகழ் முதலியவை இங்கு யாருக்கு வேண்டும் ? பத்திரிகைகள் என்ன

சொல்கின்றன வென்று நான் கவனிப்பதே யில்லை. உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை. நீங்கள் சுய நலம் அறவே துறந்தவர்களா? அங்ஙனமாயின் உங்களை எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி யாதொன்றுமில்லை. எங்கும் ஒழுக்கமே பிரதானமானது. எத்தகைய பெரும் அபாயத்திலும் இறைவன் உங்களைக் காத்தருள் புரிவானென்று நம்புங்கள். உங்கள் தாய்நாட்டுக்கு வீரர்கள் தேவை; வீரர்களா யிருங்கள்.

***

குறுகலான பொந்துகளிலிருந்து வெளி வாருங்கள். உங்களைச் சுற்றிலும் நன்கு நோக்குங்கள். தேசங்கள் எப்படி முன்னேறுகின்றனவென்று பாருங்கள். உங்களுக்கு மனிதர்களிடம் அன்புண்டா? உங்கள் நாட்டினிடம் அன்புண்டா? அப்படியானால் வருக; இன்னும் பெரிய, சிறந்த இலட்சியங்களுக்காகப் போராடுவோம். பின்னால் திரும்பிப் பார்க்க வேண்டாம்; உங்களுக்கு உயிரினும் அருமையானவர்கள் புலம்பி அழும் சத்தம் கேட்கினும் திரும்பிப் பார்க்கவேண்டாம். முன்னேறிச் செல்லுங்கள்.

***

என் மகனே! அன்புக்கு எப்போதும் தோல்வி கிடையாது. இன்றோ, நாளையோ, பல யுகங்களுக்குப் பிறகோ சத்தியம் ஜெயமடைதல் நிச்சயம். அன்பே வெற்றி கொள்ளும். உங்கள் சகோதரர்களிடம் உங்களுக்கு அன்புண்டா?

நம்பிக்கை, அநுதாபம்! தீவிர நம்பிக்கை, அதி தீவிர அநுதாபம்! இவை இருப்பின் உயிரும், மரணமும், பசியும், குளிரும் ஒன்றுமில்லை யாகும்.

***

எப்போதும் தன்னம்பிக்கையை வளருங்கள். தீரச் சிறுவர்களே! நீங்களனைவரும் அரும்பெருங் காரியங்களைச் செய்யப் பிறந்தவர்களென்று நம்புங்கள்.

***

“உலகில் மற்ற எல்லாரும் தத்தமக்குரிய வேலையைச் செய்து விட்டனர். உலகைப் பரிபூரணமாக்கப் பாக்கியிருக்கும் வேலை நான் செய்யவேண்டியதே” என்று நம்மில் ஒவ்வொருவரும் நம்பவேண்டும். அத்தகைய பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

***

என் மகனே! உறுதியாக நில். பிறர் உதவியை எதிர் பாராதே. வேறு மனிதர்களின் உதவியைக் காட்டிலும் ஆண்டவனுடைய உதவி எவ்வளவோ பெரியதல்லவா? பரிசுத்தனாயிரு. பகவானை நம்பு. அவரை நம்பியுள்ளவரை நீ நேர் வழியில் செல்கிறாய். உன்னை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது.

***

பரஞ்சோதியின் ஒளியை வேண்டிப் பிரார்த்திப் போமாக. காரிருளிலே ஓர் ஒளிக்கிரணம் தோன்றும். பகவான் நமது கையைப் பிடித்து வழிகாட்டி அழைத்துச் செல்வார்.

ஆண்டவன் மகிமையே மகிமை. அவரே நமது படைத்தலைவர். எனவே, முன்னேறுங்கள். யார் விழுகிறார்கள் என்று திரும்பிப் பார்க்கவேண்டாம். மேலே நடவுங்கள். இவ்வாறே நாம் சென்று கொண்டிருப்போம். ஒருவன் விழுந்தால் மற்றொருவன் அவ் வேலையை ஏற்றுக் கொள்வான்.

***

சகோதரர்களே! நாம் ஏழைகள்; திக்கற்றவர்கள். ஆனால் இவ்வுலகில் பரமாத்மாவின் கருவிகளாக அமைந்தவர்கள் எல்லாரும் நம் போன்ற ஏழைகளாகவே யிருந்துள்ளார்கள்.

***

தீரர்களே! வேலைசெய்து கொண்டே போங்கள்; விட்டுவிடாதீர்கள். ‘முடியாது’ என்ற பேச்சு வேண்டாம். வேலை செய்யுங்கள்; இறைவன் அவ்வேலைக்குத் துணையா யிருப்பான். உங்களிடம் மகாசக்தி கோயில் கொண்டிருப்பதை உணருங்கள்.

***

குழந்தாய்! நான் வேண்டுவதென்ன தெரியுமா? இரும்பினை யொத்த தசை நார்கள்; எஃகினை யொத்த நரம்புகள்; இவற்றினுள்ளே இடியேறு போன்ற வலிவுள்ள மனம் - இவையே எனக்கு வேண்டும். பலம், ஆண்மை, க்ஷத்திரிய வீரியத்துடன் கூடிய பிரம்ம தேஜஸ் - இவை வேண்டும்.

***

பயம் என்பதையே யறியாத இரும்பினாலான உள்ளமும் இதயமும் தேவை.

உண்மையில் நீங்கள் என் குழந்தைகளானால் யாதொன்றுக்கும் அஞ்சமாட்டீர்கள் ; எதைக் கண்டும் தயங்கி நிற்கமாட்டீர்கள். சிங்க ஏறுகளை யொத்திருப்பீர்கள். இந்தியாவை மட்டுமன்று, உலகமுழுவதையும் நாம் எழுப்பியாகவேண்டும்.

***

துறவே முக்கியம். துறவு இன்றி எவனும் பிறருடைய தொண்டில் தன் இதய முழுவதையும் ஈடுபடுத்த முடியாது. சந்நியாசி எல்லாரையும் சமநோக்குடன் பார்க்கிறான். அனைவருக்கும் தொண்டு செய்வதற்கே தன்னைச் சமர்ப்பிக்கிறான்.

***

சத்தியம், அன்பு, உண்மை உள்ளம் இவற்றை எதுவும் எதிர்த்து நிற்கமுடியாது. நீங்கள் உண்மையாளர்களா? உயிரே போகுங் காலத்திலும் சுயநலத்தை மறந்தவர்களா? உங்களிடம் அன்பு உண்டா? அங்ஙனமெனில் அஞ்சவேண்டாம். நமனுக்கும் பயப்படவேண்டாம்.

***

மனிதர்கள், மனிதர்களே வேண்டும். மற்ற எல்லாம் தாமே வந்துசேரும். பலம், வீரியம், நம்பிக்கை, மாசற்ற உண்மை - இவையுடைய இளைஞர்கள் தேவை. இத்தகையர் நூறு பேர் இருந்தால் உலகத்தில் ஒரு பெரும் புரட்சியை உண்டுபண்ணி விடலாம்.

***

வேஷதாரியாகாமல், கோழையா யிராமல் ஒவ்வொருவரையும் மகிழ்விக்க முயல்க. தூய்மையுடனும் உறுதியுடனும் உன் கொள்கைகளைக் கடைப்

பிடித்து நட. தற்போது உன் வழியில் எவ்வளவு தடைகள் இருப்பினும், நாளடைவில் உலகம் உனக்குச் செவி கொடுத்தே தீரவேண்டும்.

***

கீழ்ப்படியும் நற்குணத்தைப் பயிலு. ஆனால் உன்னுடைய சொந்த நம்பிக்கையை மட்டும் கைவிடாதே. தலைவர்களுக்குக் கீழ்ப்படிதல் இல்லாத வரையில் சக்திகளை ஒன்று திரட்டுதல் சாத்தியமில்லை. தனி மனிதர்களின் சக்திகளை ஒன்று சேர்க்காத வரையில் எந்தப் பெரிய காரியமும் செய்ய இயலாது.

***

✓ நம்பிக்கையுடனும் பலத்துடனும் உறுதியாக நில். உண்மை, கண்யம், தூய்மை இவற்றைக் கைக்கொள்.

***

மக்களுக்குத் தொண்டு செய்யும் பாதையில் நீ முன்னேறி வருங்கால் அதனுடன் சமமாக ஆத்ம சாதன மார்க்கத்திலும் முன்னேறி வருவாய்.

***

வேலை செய்யத் தொடங்கு; மகத்தான சக்தி தானே வருவதைக் காண்பாய். "என்னால் வகிக்க இயலாது" என்று நீ நினைக்கு மளவுக்கு ஏராளமான சக்தி உன்னை வந்தடையும். பிறருக்காகச் செய்யும் அற்பமான ஊழியமும் உள்ளிருக்கும் சக்தியை எழுப்பவல்லது. பரநலத்தைப் பற்றிச் சிறிதளவு நினைத்து வருதலும் இதயத்துக்கு நாளடைவில் பெருவலிமை தருகின்றது. உங்கள் எல்லாரையும்

நான் உயிருக்குயிராக நேசிக்கிறேன். ஆயினும் நீங்களனைவரும் பிறருடைய தொண்டில் உயிர்விட வேண்டுமென்பதே என் மனோ ரதமாகும். அவ்வாறு நீங்கள் உயிர் நீத்தால் அதைக் கண்டு நான் மகிழ்ச்சியே யடைவேன்.

***

ஒவ்வொருவரிடத்தும் பொறுமையைக் கைக்கொள். .... ஆட்சி செலுத்த விரும்பாதே. எவன் சிறந்த ஊழியம் செய்யவல்லவனோ அவனே அரசரில் சிறந்தவனாவான்.

***

விவாதங்களில் நீ ஏன் தலையிட்டுக்கொள்ள வேண்டும்? பலர் பல அபிப்பிராயங்கள் கூறலாம். அவற்றைப் பொறுமையுடன் கேட்டுக்கொள். பொறுமை, தூய்மை, விடாமுயற்சி இவையே கடைசியில் வெற்றி பெறும்.

***

மரணம் வரையில் நான் இடைவிடாது வேலை செய்வேன். மரணத்திற்குப் பின்னரும் உலக நன்மைக்காக உழைப்பேன். சத்தியமும் நன்மையும் அசத்தியத்தையும் தீமையையும்விட எவ்வளவோ மடங்கு சக்தி வாய்ந்தவை. அவை உன்னிடம் இருந்தால், முன்னேற்றம் நிச்சயம்.

***

உங்களுக்கு விருப்பமிருந்தால் என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள். ஆனால் அதற்கு அத்தியந்த உண்மை உள்ளமும், பரிபூரண சுயநலத் தியாகமும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தூய்மையும் வேண்டும்.

மகனே! பொறுமை கொள். நீ என்றும் எதிர் பார்த்ததைவிட அதிகமாய் உன் முயற்சி செழித் தோங்கும். ஒவ்வொரு காரியமும் ஜெயம் பெறுவ தற்கு முன் நூற்றுக் கணக்கான கஷ்டங்களைக் கடந்தே யாகவேண்டும். முயற்சி யுடையவர்கள், இன்றில்லா விட்டால் நாளை நிச்சயமாக ஒளி காண் பார்கள்.

***

அளவற்ற பொறுமை, அளவில்லாத் தூய்மை, முடிவில்லா முயற்சி இவையே நல்ல காரியங்களில் வெற்றி பெறும் இரகசியங்களாம்.

***

சோம்பல் ஒழியுங்கள்; இகபர சுகாநுபவங் களைத் தள்ளுங்கள். ஜனங்களை இறைவன் பாதத் தில் கொண்டு சேர்ப்பதற்காகத் தீயினில் குதியுங்கள்.

***

உங்கள் சகோதரர்களுக்குத் தலைமை வகிக்க முயலற்க; அவர்களுக்கு ஊழியமே செய்க. தலைமை வகிக்கும் பைத்தியமானது வாழ்க்கை யென்னும் கட லில் எத்தனையோ பெரிய கப்பல்களை யெல்லாம் மூழ் கடித்து விட்டது. மரணம் நேரினும் சுயநலம் கருத வேண்டாம். தொண்டினை மறக்கவேண்டாம்.

***

பிறருக்கு வழிகாட்டவாதல், பிறரை அடக்கி யாளவாதல் எப்போதும் முயலவேண்டாம். அனை வருக்கும் ஊழியராயிருங்கள். எல்லாவற்றினும் முக் கியமானது இதுவாகும்.

அதிகார ஆசை, பொறாமை — இவ்விரண்டினிடமும் மிக ஜாக்கிரதையா யிருத்தல் வேண்டும்..... “தலைவன் நான்” என்று சொல்லிக் கொண்டு முன் வந்தால் யாரும் உங்களுக்கு உதவி செய்யமாட்டார்கள். வெற்றிபெற விரும்பினால் முதலில் “நான்” என்னும் உணர்ச்சியைக் கொன்றுவிடுங்கள்.

* * *

முதலிலேயே பெரிய திட்டங்களைப் போட்டுக் கொண்டு கிளம்பவேண்டாம். நிதானமாக ஆரம்பியுங்கள்; மேன்மேலும் நிதானமாக முன்னேறுங்கள்.

* * *

எனது தீரச் சிறுவர்களே! உத்தமப் புதல்வர்களே! செயல், செயல் புரியத் தொடங்குங்கள். உங்கள் தோள்களைக் கொடுத்து (தேச முன்னேற்றமென்னும்) தேரின் சக்கரத்தைக் கிளப்புங்கள். பெயர், புகழ் முதலிய மடமைகளுக்காக நின்று திரும்பிப் பார்க்கவேண்டாம்.

* * *

உங்கள் இதயங்களையும், மனோரதங்களையும் இவ்வுலகினைப்போல் விசாலமாக்கிக் கொள்ளுங்கள்..... மதவெறியனின் உறுதி, உலகாயதனின் விசாலப் பார்வை — இவை இரண்டும் நமக்கு வேண்டும். நீராழியின் ஆழமும் எல்லையற்ற ஆகாயத்தின் விஸ்தாரமும் உடைய இதயம் வேண்டும்.

* * *

எப்போதும் ஆக்க முறையையே கடைப்பிடி. பிறரைக் குறைகூற வேண்டாம். நீ சொல்ல வேண்டியதைச்சொல். நீ போதிக்க வேண்டியதைப் போதி. அவ்வளவுடன் நின்றுவிடு. பிற எல்லாம் ஆண்டவன் திருவுளம்.

மூன்றும் அத்தியாயம்

தாயகத்தில் தொண்டு

---

1. உண்மைத் தொண்டர்களின் பயிற்சி

ஆன்மத் தூய்மையினின் றெழும் தீவிர உற்சாகங் கொண்டவர்கள்; இறைவனிடம் அழியா நம்பிக்கையை அரணகப் பெற்றவர்கள்; ஏழைகளிடமும், தாழ்ந்தவர்களிடமும், ஒடுக்கப் பட்டவர்களிடமும் கொண்ட அநுதாபத்தினல் சிங்கத்தை யொத்த தைரியமடைந்தவர்கள்; இப்படிப்பட்ட ஸ்திரீ புருஷர்கள் நூறுயிரம் பேர் வேண்டும். இவர்கள் மோட்சம், பரோபகாரம், தாழ்ந்தோரின் முன்னேற்றம், சமூக சமத்வம் என்னும் சுவிசேஷங்களைப் பிரசாரம் செய்து கொண்டு இந்நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரை ஆட்சி செலுத்துவார்கள்.

***

தங்களுடைய தெனக்கூடிய எல்லாவற்றையும் தேசத்திற்காகத் தியாகம் செய்யச் சித்தமா யிருப்பவர்கள்; உள்ளும் புறமும் உண்மை வடிவானவர்கள்;— இத்தகைய மனிதர்கள் தோன்றும்போது இந்தியா ஒவ்வொரு துறையிலும் பெருமை பெறும்.

***

சமூக, அரசியல் ஏற்பாடுகள் எல்லாவற்றிற்கும் அடிப்படை மனிதனுடைய குணநிசயமே யாகும். ஒரு சமுதாயம் குணத்திற் சிறந்து பெருமை பெறுவது அத்தேசத்தின் பார்லிமெண்டு இயற்றும் சட்டங்

களைப் பொறுத்த தன்று; அச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் நல்லவர்களாய், பெருமை வாய்ந்தவர்களா யிருப்பதையே பொறுத்ததாகும்.

***

என்னைத் தொடர்ந்து வருவோர் மரணம் நேரி னும் உண்மை பிறழாதவர்களா யிருக்கவேண்டும். அத்தகையவர்களே எனக்குத் தேவை. ஜெயாப ஜெயங்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை....இயக் கம் தூய்மையா யிருக்கவேண்டும். இன்றேல் இயக் கமே வேண்டாம்.

***

✔ இவ் வுலகிலுள்ள செல்வ மனைத்தையும்விட மனி தர்களே அரிய தன மாவார்கள்.

***

✓ ஓ பாக்கியசாலியே! இத்தேசத்தின் மக்களை எவனாவது ஒருவன் தன் இதய பூர்வமாக நேசிப்பா னாயின் பாரத நாடு மீண்டும் விழித்தெழுமென்று நான் நம்புகிறேன். அம்மக்கள் எத்தகையவர்கள் ? லக்ஷ்மி கடாட்சம் அற்றவர்கள்; அதிர்ஷ்டவீனர்கள்; விவே கம் அறவே இழந்தவர்கள்; மிதித்து ஒடுக்கப்பட்டவர் கள்; நித்திய பட்டினிக்காரர்கள்; சண்டை யிடுபவர் கள்; அசூயை யுடையவர்கள்; வறுமை, அறியாமை என்னும் படு சுழலில் அகப்பட்டு நாளுக்கு நாள் அமிழ்ந்து வருபவர்கள். ✓ கோடிக் கணக்கான இத் தகைய தேச மக்களுக்காக, இந்நாட்டிலே பிறந்த விசால இதயம் படைத்த ஸ்திரீ புருஷர்கள் நூற்றுக் கணக்கானவர் தங்கள் சுகபோக ஆசைகளை யெல்லாம்

மறந்து பாடு படுவதற்கு எப்போது முன் வருகிறார்களோ அப்போதுதான் பாரதத்தாய் கண் விழிப்பள்.

* * *

இந்தியப் பாமர ஜனங்களைக் கைதூக்கி விடுதல் என்னும் இந்த ஒரே இலட்சியத்திற்காக இதயத்தையும், ஆன்மாவையும் ஈடுபடுத்தி உழைக்கக்கூடிய இளைஞர்களிடையே வேலை செய்யுங்கள். அவர்களைத் தட்டி எழுப்புங்கள். அவர்களுக்குத் துறவு நெறியில் பற்று உண்டாக்குங்கள். அவ்வேலை இளம் இந்தியர்களையே முழுதும் பொறுத்திருக்கிறது.

* * *

என்னுடைய வேலைத்திட்டம் இதுவாகும்: இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஸ்தாபனங்களை இந்தியாவில் ஏற்படுத்தல்; அவர்களைக்கொண்டு உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் நமது சமய நூல்களிலுள்ள உண்மைப் பொருள்களை எடுத்துரைக்கச் செய்தல்.

* * *

மத்திய கலாசாலையொன்று ஏற்படுத்தி அதில் இளைஞர்களைப் பயில்விக்க வேண்டும். இப்படிப் பயிற்சிபெற்ற பிரசாரகர்களின் மூலமாய் ஏழைகளின் வீட்டு வாயிலுக்குக் கல்வியையும், சமயத்தையும் கொண்டு போக வேண்டும். பாமரர்களைக் கைதூக்கி விடுவதற்கான இந்த யோசனையை எங்கும் பரப்புங்கள்.

2. பாரமார்த்திக அடிப்படை

நாம் கவனம் செலுத்தற்குரிய முதலாவது வேலை இதுவாகும்: நமது உபநிஷதங்களிலும், சாஸ்

திரங்களிலும் புராணங்களிலும் உள்ள அதிஆச்சரியமான உண்மைகளை அந்நூல்களிலிருந்து வெளிக்கொண்டு வந்து நாடெங்கும் விஸ்தாரமாகப் பரப்புதல் வேண்டும்.

***

இந்தியாவில் அபிவிருத்தி எதுவும் ஏற்பட வேண்டுமானால் முதலில் சமய எழுச்சி உண்டாக வேண்டும். ஆதலின் சமுதாய, அரசியல் கருத்துக்களைப் பரப்புவதற்கு முன்னால் நாட்டைப் பாரமார்த்திக வெள்ளத்தில் மூழ்குவியுங்கள்.

***

தர்ம பூமியாம் இந்நாட்டில் ஆத்ம வித்யாதானம் என்னும் முதன்மையான அறத்தை நாம் மேற்கொள்வோமாக. ஆனால் அப் பேரறத்தை இந்தியாவின் எல்லைகளுக்குள் கட்டுப்படுத்திவிடல் கூடாது.

***

சமூகப் புரட்சிக்காரர்கள் எல்லாரும் (அல்லது அவர்களுடைய தலைவர்களேனும்) தங்களுடைய சமதர்மக் கொள்கைகளுக்கெல்லாம் பாரமார்த்திக அடிப்படை ஒன்றைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய அடிப்படை வேதாந்தமேயாகும்.

***

பலாத்காரமோ, அரசாங்க அதிகாரமோ, கடுமையான சட்டங்களோ சமூக நிலைமையை மாற்ற முடியாது. சமூகத் தீமைகளை நீக்கக்கூடியது பாரமார்த்திகப் பயிற்சி ஒன்றேயாகும்.

***

எனக்கு அரசியலில் நம்பிக்கை கிடையாது. கடவுளும் சத்தியமுமே இவ்வுலகில் உண்மை அரசியல் ஆகும். மற்றவை யெல்லாம் வெறுங் குப்பை.

இந்தியாவில் நாம் எந்த அரசியல் ஏற்பாடுகள் வேண்டுமென்று போராடிக்கொண்டிருக்கிறோமோ அவை ஐரோப்பாவில் எத்தனையோ ஆண்டுகளாக இருந்து வந்திருக்கின்றன. மேனாட்டார் பல நூற்றாண்டு காலம் சோதனை செய்து அவை பயனற்றவை என்னும் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அரசியல் ஆட்சி சம்பந்தமான ஸ்தாபனங்கள், ஏற்பாடுகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் உபயோகமற்றவை என்று தள்ளப்பட்டிருக்கின்றன. ஐரோப்பா அமைதி இழந்து எப்பக்கம் திரும்புவதென்று தெரியாமல் தவிக்கின்றது.....மனித சமூகத்தை வாள் முனையினால் ஆளுதல் சிறிதும் பயனற்றதாகும். "பலாத்காரத்தினால் அரசாங்கம்" என்னும் கொள்கை எந்த இடத்திலிருந்து தோன்றிற்றோ, அதே இடந்தான் முதலில் இழிவுற்றுத் தாழ்வடைந்து துகள் துகளாய்ப் போகிறதென்பதை நீங்கள் காணலாம். ஜடசக்திக்குத் தோற்ற மனித்த ஐரோப்பாவானது, தனது அடிப்படையை மாற்றிக் கொள்ளாவிடில், தன் வாழ்விற்குப் பாரமார்த்திகத்தை ஆதாரமாகக் கொள்ளாவிடில், ஐம்பது ஆண்டுகளுக்குள் அது மண்ணோடு மண்ணாவது நிச்சயம்.

* * *

ஜனங்களால் நடத்தப்படும் புதிய ஆட்சிமுறை ஒன்று தோன்றி வருகிறதென்பதற்கு அறிகுறிகள் ஏராளமாய்க் காணக் கிடக்கின்றன. அவ்வாட்சிமுறையைச் சமுதாய ஆட்சி என்றாலும், வேறு எப்பெயரிட்டழைத்தாலும் கவலையில்லை. தங்கள் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று ஜனங்கள் கேட்கப்போவது நிச்சயம். வேலை குறைய

வேண்டுமென்றும், கொடுமையும் யுத்தமும் ஒழிய வேண்டுமென்றும், வயிறு நிறைய உணவு வேண்டு மென்றும் ஜனங்கள் வலியுறுத்துவார்கள். ஆகவே, தற்கால நாகரிகமோ, வேறெந்த நாகரிகமோ, சமயத்தையும் மக்களின் நற்குணத்தையும் அடிப்படையாகக் கொண்டாலன்றி நிலைத்து நிற்குமென்பது என்ன நிச்சயம்? சமயமே வாழ்வின் மூல வேர் என்பதை நம்புங்கள். அது சரியாயிருந்தால் எல்லாம் சரியாயிருக்கும்.

***

✓ மனிதர்களைப் பார்லிமெண்டின் சட்டத்தினுல் தர்மாத்மாக்களாகச் செய்ய முடியாதென்பது உங்களுக்குத் தெரியும்.....ஆகையினுல்தான் அரசியலைவிட மதம் முக்கியமானதென்று சொல்கிறேன். மதம் வாழ்க்கையின் வேர்; சன்மார்க்கத் தத்துவங்களுடன் அடிப்படையான சம்பந்தமுடையது.

***

சட்டம், அரசாங்கம், அரசியல் ஆகியவை முடிவான நிலைகளல்ல என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டே யாக வேண்டும். மக்களின் உண்மை நலம் அவைகளுக்கப்பால் இருக்கிறது. அங்கே சட்டம் தேவையே யில்லை.

***

வாழ்வின் அடிப்படை சட்டம் அன்று எனக் கிறிஸ்து நாதர் கண்டிருந்தார். சன்மார்க்கமும் தூய்மையுமே வாழ்விற்குப் பல மளிப்பவை யென்று அவர் உணர்ந்திருந்தார்.

MARAIMALAI ADIGAL

இங்கிலாந்து செய்யக் கூடியதெல்லாம் என்ன? இந்தியா தன் கதி மோட்சத்தைத் தானே தேடிக் கொள்வதற்கு உதவி செய்யக்கூடும். அவ்வளவுதான். இந்தியாவின் குரல்வளையில் கை வைத்துக்கொண்டிருக்கும் அன்னியர் வார்த்தையைக் கேட்டு நடப்பதனால் ஏற்படும் அபிவிருத்தி எதுவும் பயனளியாதென்பது என் கருத்து. மிக உயரிய வேலையாயினும், அடிமைத் தொழிலாளியினால் செய்யப்படுங் காலத்து அது இழிவுறுகிறது.

* * *

தேவைகள் உங்களுக்கா, அல்லது உங்களை ஆள்வோருக்கா என்று சொல்லுங்கள். உங்களுக்கானால், அவைகளை யார் பூர்த்தி செய்ய வேண்டும்? அவர்களா? நீங்களேயா? பிச்சைக்காரனின் தேவைகள் எப்போதும் பூர்த்தி செய்யப்படுவதில்லை. உங்களுக்கு வேண்டுவனவெல்லாம் அரசாங்கம் கொடுத்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அவற்றை வைத்து நிர்வகிக்க மனிதர்கள் எங்கே? எனவே முதலில் மனிதர்களைத் தயார் செய்யுங்கள். மனிதர்கள் நமக்கு வேண்டும். சிரத்தை யில்லாவிட்டால் மனிதர்கள் எங்கிருந்து வருவார்கள்?

* * *

முதலில் பாரமார்த்திக அறிவைப் பரப்புங்கள். அதனுடன் லௌகிக அறிவும், மற்ற எல்லா அறிவும் தாமே வரும். ஆனால் சமய சம்பந்தமில்லாத லௌகிக அறிவைப் பெற முயன்றீர்களாயின், இந்தியாவைப் பொறுத்தவரை, உங்கள் முயற்சி வீணேயாகும். ஜனங்களிடம் அதற்குச் செல்வாக்கு எப்

போதும் உண்டாகாது. இதைத் தெளிவாய் உணருங்கள்.

***

வருங்கால இந்தியாவை நிர்மாணிப்பதில் முதல் காரியம் சமய ஒற்றுமையேயாகும். யுக யுகாந்தரமாக நின்று நிலவிவரும் பாரத தேசம் என்னும் பாறையில் செதுக்கி அமைக்கவேண்டிய முதற்படி இதுவேயாம். "ஹிந்துக்களாகிய நமக்குச் சில பொது இலட்சியங்கள் உண்டு. நமது நன்மையையும், நமது ஜாதியின் நன்மையையும் முன்னிட்டு நமது அற்பச் சண்டைகளையும் சிறு வித்தியாசங்களையும் விட்டுவிட வேண்டும்" என்னும் இப்பாடம் நம்மெல்லாருக்குமே கற்பிக்கப்படல் அவசியம்.

***

சிதறிக் கிடக்கும் பாரமார்த்திக சக்திகளை ஒன்று திரட்டுதலே இந்நாட்டில் தேசீய ஒற்றுமை முயற்சியாம். பாரமார்த்திகம் என்னும் கீதத்திற்கு எவரெவருடைய இதயங்கள் ஒத்துத் தாளம் போடுகின்றனவோ அத்தகையவர்கள் சேர்ந்த சமூகமே இந்திய சமூகமாகும்.

***

உலக மனைத்தும் உண்மையில் ஒன்றே என்னும் உயர் இலட்சியத்தை அனுஷ்டானத்தில் கொண்டு வராமல் இந்தப் பாரத நாட்டை எவரும் புனருத்தாரணம் செய்ய முடியாது.

***

இரும்புபோன்ற தசை நார்கள், எஃகினை யொத்த நரம்புகள், எதனுலும் தடுக்கமுடியாத மனே வலிமை ஆகிய இவையே நமது தேசத்திற்குத் தற்போது

வேண்டியவை. இந்த புவனத்தின் இரகசியங்களை யெல்லாம் ஆழ்ந்து அறியக் கூடிய மனோவலிமை; ஆழாழியின் அடித்தலத்துக்குப் போக வேண்டி யிருந்தாலும், காலனை நேருக்கு நேர் சந்திக்க வேண்டி வந்தாலும் எடுத்த காரியத்தை எவ்வாறேனும் முடிக்கும் அஞ்சா நெஞ்சம்; இவை நமக்கு வேண்டும். எல்லாம் ஒன்றே என்னும் அத்வைத இலட்சியத்தை அறிந்து சாதனத்தில் கொணரும் போதுதான் அத்தகைய மனோவலிமையை நாம் உண்டு பண்ணவும், நிலைபெறச் செய்யவும் இயலும்.

* * *

உபநிஷதங்களின் மகத்தான உண்மைகள் உங்கள் முன்னால் இருக்கின்றன. அவற்றை உணருங்கள். அவற்றிற்கிணங்க வாழ்வு நடத்துங்கள். அப்போது இந்தியாவின் கதி மோட்சம் தானே கிட்டிவிடும்.

* * *

நமக்கு வேண்டுவது வலிமை, வலிமையே என்று உங்களுக்குச் சொல்கிறேன். அவ் வலிமையின் பெருஞ் சுரங்கம் உபநிஷதங்களாகும். உலகமுழுவதிற்கும் நவசக்தி ஊட்டுவதற்குப் போதிய வலிமை உபநிஷதங்களில் இருக்கிறது. அவற்றின் மூலமாய் உலகத்துக்கே புத்துயிரும், புதிய ஊக்கமும் தரலாம். எல்லாத் தேசங்களையும், சமூகங்களையும், மதங்களையும் சேர்ந்தவர்களுக்குள்ளே பலவீனர்கள், துன்புற்றவர்கள், கொடுமைக் காளானவர்கள் ஆகிய அனைவரையும் தத்தம் பலங்கொண்டு நின்று விடுதலை பெறும்படி உபநிஷதங்கள் சங்கநாதம் செய்து அழைக்கின்றன. சரீர விடுதலை, மனோ விடுதலை, ஆன்ம விடுதலை எனும் இவையே உபநிஷதங்கள் உபதேசிக்கும் மூல மந்திரங்களாகும்.

உபநிஷதங்களிலிருந்து வெடிகுண்டைப் போல் கிளம்பி அஞ்ஞான இருட்பாறைகளைத் தகர்க்கும் மந்திரம் ஒன்று உண்டு. அது நிர்ப்பயம்-அஞ் சாமை என்பதே. அஞ்சாமை மதம் ஒன்றே தற் போது கற்பிக்கப்பட வேண்டிய மதம்.

* * *

எழுங்கள்! கண் விழியுங்கள்! பலவீனம் என்னும் இந்த மாய வசியத்தினின்றும் விடுபடுங்கள். உண்மை யில் எவனும் பலவீன னல்லன். ஆன்மா எல்லையற் றது; சர்வசக்தி வாய்ந்தது; சர்வமும் அறிந்தது. எழுந்து நில்லுங்கள். "என்னுளே ஆண்டவன் உளன்" என்று அறைகூவுங்கள். தமோகுணமும், பலவீனமும், மனோபிரமையும் மிகுந்து நமது ஜாதியை அழுத்தி வருகின்றன. ஓ, ஹிந்துக்களே! அந்த பிர மையினின்று விடுதலை பெறுங்கள்.

* * *

உங்களுடைய உண்மை இயற்கையை உணருங்கள். மற்றவர்களுக்கும் அவரவருடைய உண்மை இயற் கையை உணர்த்துங்கள். உறங்கும் ஆன்மாவை எழுப் புங்கள். ஆன்மா விழித்தெழுந்து வினை செய்யத் தொடங்குங்கால் சக்தி, மகிமை, தூய்மை ஆகிய உயர் நலங்களெல்லாம் தாமே வரும்.

* * *

"அகம் (நான்) பிரம்மம்" என்று ஓயாது சொல் லிக் கொள்ளுங்கள். இந்த மந்திரம், மனதில் படர்ந் திருக்கும் மாசைப் போக்கி, உள்ளே உறங்கிக்கொண் டிருக்கும் அளவற்ற சக்தியை வெளிக்கொண்டு வரும்.

திரும்பிச் செல்மின். வலிமையும், ஜீவசக்தியும் நிறைந்திருந்த பண்டைக் காலத்துக்குத் திரும்பிச் செல்மின். பண்டை வாழ்வெனும் அமுத ஊற்றி லிருந்து ஜீவநீரை நிரம்பப் பருகி முன்போல் மீண்டும் பலசாலிக ளாகுமின். இந்தியாவில் வாழ்வுக்கு நிபந் தனை இது ஒன்றேயாம்.

***

ஹிந்து சமூக முன்னேற்றத்துக்கு மதத்தை அழித்தல் அவசியமில்லையென்று நான் கூறுகிறேன். தற்போது நமது சமூகம் தாழ்ந்த நிலையிலிருப்பதற்கு மதம் காரணமன்றென்றும், மதத்தை முறைப்படி கைக்கொள்ளாததே காரணமென்றும் சொல்கிறேன். இதில் ஒவ்வொரு வார்த்தையையும் நமது பழைய நூல்களிலிருந்து நிரூபிக்கச் சித்தமா யிருக்கிறேன். என்னுடைய போதனை இதுவேயாகும். இதை நிறை வேற்றி வைப்பதற்கே நமது வாழ்நாள் முழுதும் நாம் போராடவேண்டும்.

3. சமூக சீர்திருத்த முறை

நீங்கள் உண்மையான சீர்திருத்தக்காரர்களாக விரும்பினால் மூன்று விஷயங்கள் அவசியம். முதலா வது உணர்ச்சி. உங்கள் சகோதரர்களுக்காக உண் மையிலேயே நீங்கள் இரங்குகிறீர்களா? இவ்வுலகில் இவ்வளவு துயரமும், அறியாமையும், மூட நம்பிக்கை யும் இருந்து வருவது கண்டு உண்மையிலேயே மனம் புண்ணுகிறீர்களா? இந்நாட்டில் வாழும் மனிதர்கள் எல் லாம் உங்கள் சொந்தச் சகோதரர்களே என உணர்கிறீர் களா? இவ்வுணர்ச்சி உங்கள் உடம்பு முழுவதிலும் ஊறிப் போயிருக்கிறதா? அது உங்கள் குருதியில்

கலந்து ஓடுகிறதா ? உங்கள் நரம்புகளில் அது துடிக்கிறதா ? உங்கள் உடம்பின் ஒவ்வொரு தசை நாரிலும் அது ஊடுருவி நிற்கிறதா? அவ் வநுதாப உணர்ச்சி உங்களுக்குள்ளே பொங்கித் ததும்புகின்றதா ? அங்ஙனமாயின் முதற்படி ஏறி விட்டீர்கள். அடுத்தாற்போல் பரிகாரம் ஏதேனும் கண்டு பிடித்தீர்களா என்று சிந்திக்கவேண்டும். பழைய கொள்கைகள் மூடக்கொள்கைகளா யிருக்கலாம். ஆனால் அம்மூடக்கொள்கைத்திரளின் உள்ளே சத்தியமென்னும் தங்கக் கட்டிகள் புதைந்து கிடக்கின்றன. குப்பையைப் போக்கிவிட்டுத் தங்கத்தை மட்டும் வைத்துக்கொள்ள நீங்கள் உபாயம் கண்டுபிடித்திருக்கிறீர்களா? மூன்றாவது இன்னும் ஒன்று அவசியம். உங்கள் நோக்கம் என்ன ? பொன், ஞாசை, புகழாசை, அதிகார ஆசை என்னும் இவை உங்களிடம் அறவே யில்லை யென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா ?

***

ஆயிரக்கணக்கான மனிதர்களால் மேடைப் பிரசங்கங்கள் செய்யப்பட்டுவிட்டன. ஹிந்து சமூகத்தின் மீதும், ஹிந்து நாகரிகத்தின்மீதும் கணக்கில்லாத கண்டனங்களைச் சொரிந்தாகிவிட்டது. எனினும் காரியத்தில் நற்பயன் எதுவும் விளையக் காணோம். இதன் காரணமென்ன ? காரணங்கண்டுபிடிக்க அதிக சிரமப்படவேண்டியதில்லை. கண்டனத்தில்தான் காரணம் இருக்கிறது. நன்மை புரிவதற்கு வழி கண்டனம் செய்தல் அன்று.

***

நமது நவீன சீர்திருத்த இயக்கங்கள் எல்லாம் பெரும்பாலும் மேனாட்டு உபாயங்களையும் மேனாட்டு

வேலை முறைகளையும் யோசனையின்றிப் பின்பற்று வனவா யிருப்பது குறித்து வருந்துகிறேன். இவை நிச்சயமாய் இந்தியாவுக்குப் பயன்படமாட்டா.

***

இந்தியாவில் சீர்திருத்தக்காரர்கள் எல்லாரும் ஒரு பெரிய தவறு செய்தார்கள். புரோகிதக் கொடுமை முதலிய பயங்கரங்கள் எல்லாவற்றிற்கும் அவர்கள் மதத்தையே காரணமாகக்கொண்டு அழிக்க முடியாத தான சமயமென்னும் கட்டிடத்தை இடிக்க முற்பட்டார்கள். விளைந்ததென்ன ? தோல்வியே !

***

எனக்குச் சீர்திருத்தத்தில் நம்பிக்கையில்லை ; வளர்ச்சியிலேயே நம்பிக்கை உண்டு. நானே கடவுள் ஸ்தானத்தில் இருப்பதாய் எண்ணிக்கொண்டு, " இவ் வழிதான் போகவேண்டும்; அவ்வழி நோக்கக்கூடாது" என்று சமூகத்துக்குக் கட்டளைகள் பிறப்பிக்க எனக் குத் துணிவில்லை.

***

என்னுடைய இலட்சியம், தேசிய வழிகளில் வளர்ச்சி, விஸ்தரிப்பு, அபிவிருத்தி என்னும் இவை யாகும்.

***

மனிதன் எந்நிலையி லுள்ளானோ அந்நிலையில் அவனை ஏற்றுக்கொண்டு அங்கிருந்து மேலே தூக்கி விடுங்கள்.....நீங்களும் நானும் என்ன செய்ய முடி யும் ? ஒரு குழந்தைக்கேனும் அது அறியாத ஒன்றை நீங்கள் சொல்லிக் கொடுக்கமுடியுமா ? ஒருகாலும் முடியாது. குழந்தை தனக்குத் தானே பாடங்கற்றுக் கொள்கிறது. அதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்

கொடுத்தலும், வழியிலுள்ள தடைகளை நீக்குதலுமே உங்கள் கடமை. செடி வளர்கிறது. அதை வளரச் செய்பவர்கள் நீங்களா? அதைச் சுற்றி வேலி எடுத்து ஆடுமாடு மேயாமல் பார்த்துக் கொள்வதே உங்கள் கடமை. செடி தனக்குத் தானே வளர்கிறது.

* * *

தேசீய வாழ்வுக்கு உணவு என்ன வேண்டுமோ அதை அளியுங்கள். ஆனால் வளர்ச்சி அதனுடையதே யாகும். அதன் வளர்ச்சி குறித்து அதற்கு யாரும் ..ளையிட முடியாது.

* * *

முற்றும் மூட நம்பிக்கை கொண்டதும், முழு அறிவின முள்ளதுமான ஸ்தாபனங்களைக் கூடக் கடு மொழியால் கண்டிக்கவேண்டாம். ஏனெனில் அவை முற்காலத்தில் ஏதோ ஒரு நன்மையையே செய்திருக்க வேண்டும்.

* * *

உலகில் வேறெந்த நாட்டிலுள்ள ஸ்தாபனங் களும், இந்நாட்டு அமைப்புகளைவிட உயர்நோக்கங்கள் கொண்டவை அல்ல என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள்.

* * *

தற்போது முழுத் தீமைகளாகக் காணப்படும் வழக்கங்கள்கூட முற்காலத்தில் ஜீவசக்தி யளிப்ப னவா யிருந்திருக்கின்றன. ஆதலின் அவற்றை நாம் நீக்க வேண்டுமானால், அவ்வழக்கங்களைச் சபித்துக் கொண்டு அம்முயற்சியில் இறங்கவேண்டாம். நமது ஜாதியின் பாதுகாப்புக்காகச் செய்திருக்கும் அரிய வேலைக்கு நன்றி யறிதலுடன் அவற்றிற்கு ஆசிகூறிக் கொண்டே விலக்குவோமாக.

என் தேசத்தாரைக் கண்டிப்பதற்கு நான் ஒருப்படேன். அவர்களுக்கு நான் சொல்வதெல்லாம், "நீங்கள் செய்திருப்பது நன்று; ஆனால் இன்னும் அதிக நன்றாய்ச் செய்ய முயலுங்கள்" என்பதே.

***

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய மோக்ஷத்தைத் தானே தேடிக்கொள்ள வேண்டும். வேறு வழி கிடையாது. தேசங்களும் அப்படியே.....தற்போதுள்ளவற்றைவிடச் சிறந்த புதிய ஸ்தாபனங்கள் ஏற்படும் வரையில், பழைய ஸ்தாபனங்களைத் தகர்க்க முயலுதல் பெருவிபத்தாக முடியும். வளர்ச்சி எப்போதும் படிப்படியாகவே ஏற்படக் கூடும்.

***

இந்தியாவில், ஒரு சமூக சீர்திருத்தத்தைப் பரவச் செய்வதற்கு மார்க்கம், அப்புதிய ஏற்பாட்டால் பாரமார்த்திக வாழ்வு எந்த அளவில் மேன்மையுறும் என்று காட்டுவதேயாகும். அரசியலுக்கும் இது பொருந்தும். அதன் மூலம் தேசத்தின் ஆன்மஞானம் எந்த அளவில் வளர்ச்சியுறும் என்று காட்டியே அரசியல் பிரசாரம் செய்யவேண்டும்.

***

சமூகச் சீர்திருத்தம் எனும் வீண் முயற்சியில் இறங்கவேண்டாம். பாரமார்த்திகச் சீர்திருத்தம் முதலில் ஏற்படாவிட்டால் வேறெந்தச் சீர்திருத்தமும் ஏற்படமுடியாது.

***

விஷயத்தின் மூலவேருக்கே நீங்கள் போக வேண்டும். அதுவே அடிப்படையான சீர்திருத்த

மாகும். தீயை அடியில் வைத்து விடுங்கள். அது எரிந்து எரிந்து மேலெழும்பி வரட்டும்.

***

உங்கள் உதடுகளை மூடிக்கொண்டு உங்கள் இதயத்தைத் திறந்து விடுங்கள். உங்களில் ஒவ்வொருவரும், சுமை முழுதும் தம் தோள்களிலேயே சுமந்திருப்பதாய் எண்ணிக்கொண்டு உங்கள் நாட்டின் கதி மோக்ஷத்துக்காகவும், உலகத்தின் கதிமோக்ஷத்துக்காகவும் உழையுங்கள்.

***

நோயின் காரணங்களை வேருடன் களைந்து விடலே என் சிகிச்சை முறையாகும். அவற்றை மூடி வைப்பதன்று.

***

நன்மையான சமூக மாறுதல்கள் எல்லாம் உள்ளே வேலைசெய்யும் பாரமார்த்திக சக்திகளின் வெளித் தோற்றமேயாகும். இந்த சக்திகள் வலிமை பொருந்தி யிருப்பின், சீராக அமையின், சமூகமும் அதற்கிணங்க ஒழுங்காக அமையும்.

4. கல்வி—எல்லாச் சமூகத் தீமைகளுக்கும் அருமருந்து

தேசத்தின் பாரமார்த்திகக் கல்வியும் லௌகிகக் கல்வியும் நம் வசத்தில் இருக்க வேண்டும். உங்களுக்கு விளங்குகிறதா? அதைப் பற்றியே நீங்கள் கனவு காணவேண்டும். அதைப்பற்றியே பேசவும், நினைக்கவும் வேண்டும். அதைச் செயலில் நடத்தி வைக்கவும் வேண்டும். அது வரையில் இந்த ஜாதிக்குக் கதி மோக்ஷம் இல்லை.

என் வாழ்க்கையின் பேரவா இதுதான்: ஒவ்வொருவனுடைய வீட்டு வாசலுக்கும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு போகக்கூடிய ஓர் இயக்கத்தை ஏற்படுத்தி அதை நடத்தி வைத்தல்; பின்னர் ஜனங்களைத் தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும்படி விட்டுவிடுதல். வாழ்க்கையின் மிக முக்கியமான பிரச்னைகளைப் பற்றி நமது மூதாதைகள் கொண்டிருந்த கருத்துக்களையும், பிற நாட்டாரின் கொள்கைகளையும் அவர்கள் தெரிந்துகொள்ளட்டும். தற்போது அயல் நாட்டார் என்ன செய்து வருகிறார்களென்பதையும் அவர்கள் பார்க்கட்டும். பின்னர் தங்களுக்குத் தாங்களே முடிவு செய்து கொள்ளட்டும். இரசாயனப் பொருள்களை ஒன்று சேர்த்து வைப்பதே நமது வேலை; இயற்கைச் சட்டங்களின்படி அவை தாமாக மாறுதலடையும்.

***

பெண்களைப் பொறுத்த வரையில் மிக முக்கியமான பிரச்னைகள் பல உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் "கல்வி" என்னும் மந்திரத்தினால் தீர்த்து வைக்க முடியாதது அவற்றில்

***

தற்போது நீங்கள் பெற்றுவரும் கல்வியில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் அதிலுள்ள ஒரு பெரிய பிரதிகூலத்தினால் அந்த நல்ல அம்சங்களெல்லாம் அமிழ்த்தப்பட்டு விடுகின்றன. முக்கியமாக, அது மனிதத்தன்மை அளிக்கும் கல்வியன்று; முழுதும் எதிர்மறைக் கல்வி. இது கெட்டது, அது கெட்டது என்றே எப்பொழுதும் கூறும் எதிர்மறையான பயிற்சி மரணத்தைவிடக் கொடியதாகும்.

இப்பொழுது நம் நாட்டில், குழந்தை பள்ளிக்கூடம் சென்றதும் முதன் முதலில் கற்றுக்கொள்வதென்ன? தன் தந்தை மூடன் என்பதேயாகும். இரண்டாவதாக, தன் பாட்டன் பெரிய பைத்தியக்காரனென்றும், மூன்றாவதாகத் தன் உபாத்தியாயர்களெல்லாரும் ஆஷாட பூதிகள் என்றும், நான்காவதாக, வேத சாஸ்திரங்கள் எல்லாம் வெறும் பொய்க் களஞ்சியங்கள் என்றும் அவன் கற்றுக்கொள்கிறான். அவனுக்குப் பதினாறு வயதாகும்போது, உயிரற்ற, எலும்பற்ற, எதிர்மறைப் பிண்டமாக இருக்கிறான். எல்லாம் அவனுக்குக் கெடுதலாகவே காணப்படுகின்றன.

* * *

அப்பப்பா! பி. ஏ. பட்டத்திற்காக என்ன தடபுடல்? என்ன ஆர்ப்பாட்டம்? சில நாளைக்குள் அவ்வளவும் பறந்து விடுகின்றது. கடைசியில் அவர்கள் கற்றுக் கொள்வதுதான் என்ன? நம்முடைய சமயம், பழக்க வழக்கங்கள் எல்லாம் கெட்டவை என்றும், மேனாட்டாருடையன வெல்லாம் நல்லவையென்றும் கற்றுக்கொள்கிறார்கள்! அவ்வளவுதான்! இக்கல்வியினால் அவர்கள் தங்கள் பசிப் பிணியைக்கூட நீக்கிக் கொள்ள முடிவதில்லை. இத்தகைய உயர்தரக் கல்வி இருந்தாலென்ன? போனாலென்ன? இதைவிட ஜனங்கள் சிறிதளவு தொழிற்கல்வி பெறக்கூடுமானால் நன்மையுண்டு. "உத்தியோகம், உத்தியோகம்" என்று அடித்துக்கொண்டு திரிவதற்குப் பதிலாக அவர்கள் ஏதேனும் தொழில் செய்து ஜீவனோபாயம் தேடிக்கொள்வார்கள்.

கழுதையை நன்கு புடைத்தால் அது குதிரை யாகி விடு மென்று யாரோ சொல்லக் கேட்டு அவ் விதமே ஒருவன் செய்தான் என்றொரு கதை உண்டு. இத்தகைய முறையிலேயே நமது சிறுவர்களுக்குக் கல்வி யளிக்கப்பட்டு வருகிறது. இம்முறை தொலைய வேண்டும்.

***

' மனிதனுக்குள் ஏற்கெனவே இருக்கும் பூர ணத்துவத்தை விகசிக்கச் செய்வதே கல்வியாகும்.

***

• கல்வி என்பது, ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணித்து விடுவதன்று. அவ்விதம் திணிக்கப்படும் விஷயங்கள் அங்கே வாணாள் முழு தும் செரியாமல் உபத்திரவித்துக் கொண்டிருக்கின் றன. அதனால் என்ன பயன்? கற்கும் விஷயங்கள் நன்கு ஜீரணமாக வேண்டும். அவை உயிர் ஊட்டுவன வாய், மனிதத்தன்மை தருவனவாய், ஒழுக்க மமைப் பனவா யிருக்கவேண்டும். நீங்கள் ஐந்தே ஐந்து கருத் துக்களை ஜீரணித்துக் கொண்டு அவற்றை உங்கள் வாழ்க்கையிலும், நடக்கையிலும் ஊடுருவி நிற்கும்படி செய்வீர்களானால், ஒரு பெரிய புத்தகசாலை முழுவதை யும் மனப்பாடம் செய்திருப்பவனை விடப் பெரிய கல்விமான்களாவீர்கள்.

***

✓ உயர்தரக் கல்வியின் உபயோகம் யாது? வாழ்க் கையின் பிரச்னைகளைத் தீர்த்து வைத்த லெப்படி எனக் கண்டுபிடிப்பதே. நவநாகரிக உலகின் மிகச் சிறந்த அறிஞர்களின் கவனத்தை யெல்லாம் தற் போது கவர்ந்திருப்பது இவ்விஷயமே யாகும்.

ஆனால் நம் தேசத்தில் அதற்குரிய வழி ஆயிரம் ஆயிர மாண்டுகளுக்கு முன்னாலேயே கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.

***

✓ ஒழுக்கமளிப்பது, மனோவலிமை தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது, ஒருவனைத் தன் வலிமை கொண்டு நிற்கச் செய்வது ஆகிய இத்தகைய கல்வி நமக்கு வேண்டும்.

***

✓ மனிதத் தன்மை அளிப்பதே கல்விப் பயிற்சியின் இலட்சியமா யிருத்தல் வேண்டும். அதற்குப் பதிலாக நாம் எப்போதும் வெளிப் புறத்துக்கு மெருகு கொடுப்பதிலேயே ஈடுபட்டிருக்கிறோம். உள்ளே ஒன்றுமில்லா திருக்கையில் வெளிப்புறத்துக்கு மெருகிட்டுக்கொண் டிருப்பதால் யாதுபயன்?

***

பண்டைக் காலத்துக் குருகுலங்களைப் போன்ற கல்வி ஸ்தாபனங்கள் தேவை. அவற்றில் மேனாட்டுப் பௌதிக சாஸ்திரத்துடன் வேதாந்தமும் கற்பிக்கப்பட வேண்டும். பிரம்மசரியம், சிரத்தை, தன்னம்பிக்கை என்னும் அடிப்படைகளின்மீது கல்வி அளிக்கப்பட வேண்டும்.

***

✓ ஆசிரியன் தான் கற்பிப்பதாக எண்ணுவதிலேயே எல்லாவற்றையும் கெடுத்து விடுகிறான். சகல ஞானமும் மனிதனுக்குள் இருக்கிறதென்று வேதாந்தம் சொல்கிறது. அந்த ஞானம் ஒரு சிறுவனுக்குள்ளும் இருக்கிறது. அதை எழுப்புதலே தேவை. அதுவே ஆசிரியனின் வேலை. சிறுவர்கள் தங்கள்

சொந்த அறிவை உபயோகப்படுத்தவும், தங்கள் கால், கை, கண், செவி இவற்றை முறையாகப் பயன் படுத்தவும் தெரிந்து கொள்ளும் அளவில் நாம் அவர் களுக்கு உதவி செய்தால் போதும். மற்ற எல்லாம் தாமே எளிதாகி விடும்.

* * *

✓ உங்களால் ஒரு செடியை வளர்க்க முடியுமா? அது போன்றே ஒரு குழந்தைக்கு நீங்கள் எதுவும் கற்பித்தல் இயலாத காரியம். செடி தானே வளர உதவி மட்டுமே நீங்கள் செய்ய முடியும். கல்வி விஷயமும் இவ்வாறுதான். கல்வி என்பது உள் ளிருந்து விகசிப்பது. அது தன் னியற்கையினுல் வளர்ச்சி யுறுகிறது. அதன் வளர்ச்சிக்குத் தடையா யுள்ளவைகளை நீக்குவது மட்டுமே நீங்கள் செய்யக் கூடியதாகும்.

* * *

நமது நாட்டின் கல்வி முழுதும், பாரமார்த்திகக் கல்வியாயினும் சரி, லௌகிகக் கல்வியாயினும்சரி, நம் கையிலேயே இருத்தல்வேண்டும். கூடியவரையில் தேசிய வழிகளில் தேசீய முறைகளிலேயே கல்வி யளித்தல் வேண்டும்.

* * *

நமக்கு வேண்டுவதென்னவென நீங்கள் அறிவீர் கள். அன்னியநாட்டு ஆதிக்கமின்றி நமது சொந்த ஞானத்துறைகள் எல்லாவற்றையும் நாம் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். அத்துடன் ஆங்கில பாஷையையும், மேனுட்டு பௌதிக சாஸ்திரத்தையும் கற்கவேண்டும். இவையல்லாமல், தொழிற்கல்வியும், தொழில் வளர்ச் சிக்குரிய சகல அறிவும் நமக்குத் தேவை. இதன்

மூலம், படித்தவர்கள் உத்தியோகம் தேடி அலைவதற்குப் பதிலாக, தங்களுக்கு வேண்டிய அளவு சம்பாதித்துக் கொள்ளவும், கஷ்டகாலத்துக்குச் சிறிது பொருள் சேர்த்து வைக்கவும் சாத்தியமாதல் வேண்டும்.

***

சுடர்விட்டெரியும் தீயை யொத்த தூய ஒழுக்கமுடைய ஆசிரியனோடு ஒருவன் தன் குழந்தைப் பிராயத்திலிருந்து வசித்தல் வேண்டும். உயரிய கல்விப் பயிற்சிக்கு உயிருள்ள ஓர் உதாரணமாக அவ்வாசிரியன் இருத்தல் வேண்டும்.

***

பொய் சொல்லுதல் பாவம் என்று படிப்பதால் மட்டும் பயன் என்ன ? ஒவ்வொரு சிறுவனும் பூரண பிரம்மசர்யத்தை அனுஷ்டிக்குமாறு பயிற்சி செய்யப் படவேண்டும். பக்தியும் சிரத்தையும் அப்போது தான் உண்டாகும். பக்தி சிரத்தை யில்லாத ஒருவன் பொய் கூறுதிருப்பது எங்ஙனம் ?

***

சிறுவர்களுக்குத் தகுந்ததான ஒரு புத்தகம் கூட நம் நாட்டில் இல்லை. இராமாயணம், மகாபாரதம், உபநிஷதங்கள் இவற்றிலிருந்து சிறு கதைக ளடங்கிய சில புத்தகங்களைத் தாய்மொழியிலும், ஆங்கிலத்திலும் நாம் தயாரிக்கவேண்டும். அவை மிக எளிய நடையில் எழுதப்படவேண்டும்.

5. பாமரர் முன்னேற்றம்

நமது மூதாதைகளில் பிரபு குலத்தவர்கள் நாட்டின் பாமர மக்களைத் தங்கள் காலின்கீழ் நசுக்கிக் கொண்டே வந்ததின் பயனாக அவ்வேழை மக்கள்

திக்கற்றவர்களாகிக் கடைசியில் பாவம், தாங்கள் மக்கட் குலத்தவர் என்பதையே அநேகமாக மறந்துவிட்டனர்.

***

நூற்றுக் கணக்கான ஆண்டுகளாய் அவர்கள் பிறருக்கு உழைக்கும்படி கட்டாயப் படுத்தப் பட்டவர்களாதலின், நாம் அடிமைகளாகவே பிறந்தோம், குற்றேவல் புரியவே வாழ்க்கை யெடுத்தோம் என்று அவர்கள் உண்மையாகவே நம்பத் தலைப்பட்டனர்.

***

✓ ஹிந்து மதத்தைப்போல மக்கட் குலத்தின் மேன்மையை உயர்வுபடுத்திக் கூறும் மதம் இப்பூவுலகில் பிறிதொன்றில்லை; ஹிந்து மதத்தைப்போல் இப்பொழுது அனுஷ்டானத்தில் ஏழை எளியவர்களை மிதித்து நசுக்கும் மதமும் வேறொன்றில்லை.

***

இந்தியாவில் ஏழை எளியவர்களுக்கும், பாவிகளுக்கும் துணையே கிடையாது ; நண்பர்கள் இல்லை. அவர்கள் எவ்வளவுதான் முயன்றாலும் முன்னேற முடியாது. ஒவ்வொரு நாளும் அவர்கள் தாழ்ந்து கொண்டே யிருக்கிறார்கள். கொடூரமான சமுதாயமானது அவர்கள்மீது சொரிந்துகொண்டே யிருக்கும் அடிகளை அவர்கள் உணருகிறார்கள். ஆனால் அவ்வடிகள் எங்கிருந்து வருபவை என்று அவர்களுக்குத் தெரிவதில்லை; தாங்களும் மனித குலத்தைச் சேர்ந்தவர்களே என்பதை அவர்கள் மறந்தே விட்டார்கள். இதன் பயனே அடிமைத்தனமாகும்.

✔ பாமரஜனங்களை அசட்டை செய்ததே நமது தேசியப் பெரும்பாவம் என்று நான் கருதுகிறேன். நமது வீழ்ச்சியின் காரணங்களுள் அது ஒன்றாகும். இந்தியாவின் பாமர மக்கள் கல்விப்பயிற்சி யுடையவர்களாய், வயிற்றுச்சோற்றுக்குக் கவலையற்றவர்களாய் ஆகும் வரையில் அரசியல் அரசியல் என்று எவ்வளவு தான் கூச்சலிட்டாலும் பயன் விளையாது. அப்பாமர ஜனங்களே நமது கல்விக்குப் பணந் தருகிறார்கள். நமது கோயில்களை அவர்களே கட்டுகிறார்கள். பதிலுக்கு அவர்கள் பெறுவதென்ன? உதைகள் தான்! ஏறக்குறைய அவர்கள் நமது அடிமைகளாகி விட்டார்கள். பாரதநாட்டை நாம் புனருத்தாரணம் செய்ய விரும்பினால் இப்பாமர ஜனங்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

***

✔ இந்தியாவிலுள்ள லட்சோப லட்சம் ஏழைகளின் துயரங்களையும் துன்பங்களையும் நினைந்து உண்மையில் கண்ணீர் விடுவோர் எத்தனை பேர் இருக்கின்றனர்? நாமும் மனிதர்கள்தானா? அவர்களுடைய பசி தீர்வதற்காக, அவர்களுடைய முன்னேற்றத்துக்காக நாம் செய்வது என்ன? அவர்களை நாம் தொடுவதில்லை. அவர்கள் அருகிலும் நெருங்குவதில்லை! நாம் மனிதர்களா?

***

நான் ஏழை; நான் ஏழைகளை நேசிக்கிறேன். இந்நாட்டில் (அமெரிக்காவில்) ஏழைகள் எனப்படுவோரைப் பார்க்கிறேன்; அவர்கள் கதிக்கிரங்குவோர் எத்தனை பேர் உளர் என்பதையுங் காண்கிறேன். இந்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் எவ்வளவு பெரிய வேற்

ழுமை? இந்தியாவில், நித்திய தரித்திரத்திலும், அறியாமையிலும் மூழ்கிக் கிடக்கும் இருபது கோடி ஸ்திரீ புருஷர்களுக்காக இரங்குவோர் யார்? அவர்கள் முன்னேற்றத்துக்கு வழி என்ன? அவர்கள் கல்வி யறிவில்லாதவர்கள்; ஒளி காணுமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு அறிவொளியை அளிப்போர் யாவர்? வீட்டுக்கு வீடுசென்று அவர்களுக்குக் கல்வி புகட்ட யார் தயாராயிருக்கிறார்?

***

தேசம் குடிசையில் இருக்கிறதென்பதை நினைவு கூருங்கள். ஆனல் அந்தோ! அக்குடிசைகளில் வதிவோருக்கு எவரும் எதுவும் செய்தாரில்லை.

***

ஒரு தேசத்தினுடைய கதி மோட்சம் அந்நாட்டிலுள்ள விதவைகள் பெறும் கணவர்களின் தொகையையா பொறுத்திருக்கிறது? அன்று, அன்று. பாமர மக்களின் நிலையையே அது சார்ந்ததாகும். அப்பாமர ஜனங்களை உங்களால் கைதூக்கிவிட முடியுமா? அவர்கள் இயல்பாகப் பெற்றுள்ள பாரமார்த்திகத் தன்மையை இழந்துவிடாத வகையில், அவர்கள் இழந்துவிட்ட தன்னம்பிக்கையை நீங்கள் அவர்களுக்குத் திரும்ப அளிக்க முடியுமா?

***

இந்நாட்டில் லட்சோப லட்சம் ஏழை மக்கள் பசிப்பிணிக்கும், அறியாமைக்கும் இரையானவர்களாயிருக்கும் வரையில், அவர்களுடைய உழைப்பின் பயனைக்கொண்டு கல்வி கற்று அவர்களைக் கவனியாதிருக்கும் ஒவ்வொரு மனிதனையும் நான் துரோகி என்றே சொல்வேன்.

துன்பத்திலாழ்ந்த ஏழைகளை வதைத்துப்பெற்ற பணத்தைக்கொண்டு ஆடையாபரணங்களால் தங்களை அலங்கரித்துத் திரியும் மனிதர்கள், பசி பசி என்று பறந்து காட்டு மிராண்டிகளேபோல் வாழும் அந்த இருபது கோடி மக்களுக்காக எதுவும் செய்யாவிடில், அவர்களை நன்றிகெட்ட பாதகர்கள் என்றே நான் கூறுவேன்.

* * *

வறுமை, புரோகிதம், கொடுங் கோன்மை என்னும் இத்தகைய துன்பங்களால் நசுக்கப்பட்டு உயிர் வாழும் இந்தியாவின் ஏழைகளுக்காக நாம் ஒவ்வொரு வரும் இரவு பகல் பிரார்த்தனை செய்வோமாக.

* * *

ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்பட்டவர்கள், ஏழைகள், பலவீனர்கள் இவர்கள் எல்லாரும் அத்தனை தெய்வ வடிவங்களேயல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? கங்கைக்கரையில் கிணறு வெட்டப் போதல் உண்டா? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாய்க் கொள்ளுங்கள். அவர்களைப்பற்றிச் சிந்தியுங்கள்; அவர்களுக்கு ஊழியம் புரியுங்கள்; அவர்களுக்காக இடைவிடாது பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவார்.

* * *

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா வென்பேன் மற்றவர்கள் துராத்மாக்களே யாவர்.

நான் தத்துவ ஞானியல்லேன்; ஆத்ம ஞானியு மல்லேன். நான் ஏழை; ஏழைகளை நேசிக்கிறேன். அவ்வளவு தான்.

***

நமது பாமர ஜனங்கள் உத்தமர்கள். ஏனெனில் நமது நாட்டில் ஏழ்மை ஒரு குற்றமாகக் கருதப்படுவ தில்லை. நமது பாமரர்கள் பலாத்காரப் பற்றுள்ளவர் கள் அல்லர். ஐரோப்பாவிலுள்ள பாமர ஜனங்களைவிட நம்முடைய பாமர ஜனங்கள் அதிக நாகரிகமடைந்த வர்கள். இவர்களுக்கு நாம் லௌகிகக் கல்வி யளித் தல் வேண்டும். நமது மூதாதைகள் விடுத்துப் போயுள்ள உபாயத்தையே நாமும் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது எல்லா உயரிய இலட்சியங்களும் மெள்ள மெள்ளப் பாமர ஜனங்களிடையே வேரூன் றச் செய்யவேண்டும். அவர்களை மெதுவாக உயர்த் துங்கள்; சமத்வம் பெறுமாறு உயர்த்துங்கள். லௌகி கக்கல்வி கூட மதத்தின் மூலமாகவே அளியுங்கள்.

***

வேத மந்திரங்களில் பிராம்மணர்களுக்கு எவ் வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை அவர் களுக்கும் உண்டென்பதை அவர்கள் மனதில் பதி யச் செய்யுங்கள். அவ்வாறே வாழ்க்கைக்கு அவ சியமான விஷயங்கள், வியாபாரம், விவசாயம், கைத்தொழில் ஆகியவைகளைப் பற்றியும் எளிய மொழிகளில் அவர்களுக்குச் சொல்லுங்கள். உங் களால் இது செய்ய முடியாவிடில் உங்கள் கல்வியும், பயிற்சியும், வேதாத்தியயனமும், வேதாந்த விற்பத்தி யும் பழிக்குரியனவாகின்றன.

வயிற்றுக் கடவுள் பூசையே இப்போது முதன்மையான தேவையாகும். வயிற்றுக் கடவுளை முதலில் திருப்தி செய்தாலன்றி உங்கள் சமய உபதேசங்களுக்கு யாரும் செவி கொடார். முதலில் இந்தக் கொடிய பட்டினியை நீக்குங்கள். நீங்கள் யாருக்கு மதபோதனை செய்ய விரும்புகிறீர்களோ அவர்கள் இடைவிடாமல் தங்கள் வயிற்றுப் பிழைப்பைப் பற்றியே சிந்திக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் கவலை யில்லாமல் செய்தாலன்றி உங்கள் உபந்நியாசங்களும் பிறவும் எவ்வகைப் பயனும் தரமாட்டா.

* * *

நமக்கு இப்போது வேண்டியது ஏராளமான இராஜச சக்தியாகும். ஏனெனில் தேசமனைத்தும் இதுகாலை தாமஸத்தில் மூழ்கியிருக்கிறது. இந்நாட்டு மக்களுக்குப் பசிக்கு உணவும், உடுக்கத் துணியும் அளிக்க வேண்டும்; அளித்து அவர்களைத் தூக்கத்தினின்றும் எழுப்ப வேண்டும்; எழுப்பி முழு மனதுடன் செயலில் இறங்கச் செய்யவேண்டும்.

* * *

வாழ்க்கையின் மிக முக்கியமான பிரச்னைகளைப் பற்றி நமது முன்னோர்களும் மற்ற நாட்டாரும் கொண்ட கொள்கைகள் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். முக்கியமாக, தற்போது மற்ற நாட்டார் என்ன செய்துகொண் டிருக்கிறார்கள் என்பதை அவர்களே பார்த்துத் தாங்கள் செய்தற்குரிய தென்னவென்று முடிவு செய்ய வேண்டும். இரசாயனப் பொருள்களைச் சேர்த்து வைப்பதே நம்முடைய

வேலை. அப்போது அதினின்றும் புதியதோர் இரசாயனப் பொருள் இயற்கை விதிகளின்படி உற்பத்தியாகி விடுகிறது.

***

கொஞ்சம் நிதிசேர்த்துக் கொள்ளுங்கள். பின்னர், சில ஜால விளக்குகள் (Magic Lantern), தேசபடங்கள், பூகோளங்கள், இரசாயனப் பொருள்கள் இவற்றைச் சேகரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாள் மாலையும் ஏழை எளியவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் கூட்டம் ஒன்று சேருங்கள். முதலில் சமயத்தைப்பற்றி உபந்நியாசம் செய்யுங்கள்; பிறகு ஜால விளக்கு முதலியவற்றின் உதவியினால் வானநூல், பூகோள சாஸ்திரம் முதலியன ஜனங்களின் தாய்மொழியின் மூலம் கற்பியுங்கள்.

***

இந்தியாவிலும் வெளி நாட்டிலும் மக்கட் குலமானது எத்தனை யெத்தனை உயரிய கருத்துக்களை வளர்த்திருக்கிறதோ அவ்வளவையும், ஏழையிலும் ஏழையும் தாழ்ந்தவரிலும் தாழ்ந்தவனும்கூட அடையுமாறு அவர்களுடைய வீட்டுக்கே கொண்டு செல்லுதல்; பின்னர் அவர்களைத் தங்களுக்குத் தாங்களே சிந்திக்கச் செய்தல்; இவையே என்னுடைய அவாவாகும்.

***

“ பாமர ஜனங்களின் மதத்துக்கு ஊறு செய்யாமல் அவர்களை முன்னேற்றுதல் ” என்பதையே உங்கள் வாழ்க்கை நோக்கமாய்க் கொள்ளுங்கள்.

6. பெண்மக்கள் முன்னேற்றம்

பல நூற்றுண்டுகளாகப் பலவகைச் சந்தர்ப்பங்களினுல் நமது பெண்களுக்குப் பாதுகாப்பு அவசியமாயிருந்து வந்திருக்கிறது. நமது பழக்க வழக்கங்களுக்கு உண்மைக் காரணம் இதுவேயன்றி, ஸ்திரீகள் தாழ்ந்தவர்கள் என்னும் கொள்கையன்று.

***

நமது பெண்கள் திக்கற்றவர்களாகவும், பிறரை நம்பி வாழ்பவர்களாகவும் நீண்ட காலமாகப் பயிற்சி செய்யப்பட்டு வந்திருக்கின்றனர். இதன் பயனுக, மிகச் சிறு அபாயம் அல்லது துன்பம் நேர்ந்துவிட்டாலும் அவர்கள் கண்ணீர் பெருக்குவதற்கே தகுந்தவர்களாகி விட்டனர்.

***

குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை, இந்தியாவில் வழங்கும் முறைகள் மற்ற எந்த நாட்டாரின் முறைகளினும் பல அம்சங்களில் உயர்ந்தவை என்று நான் திட்டமாகக் கூறுவேன்.

***

இந்தப் புண்ணிய பாரத பூமியில், சீதையும் சாவித்ரியும் வாழ்ந்த இந்நாட்டில், இன்னமும் பெண்மைக்கு இலக்கியமானவர்களைக் காணலாம். அவ்வளவு தூய நடக்கையும், தொண்டில் விருப்பமும், அன்பும், த்யாளமும், திருப்தியும், பக்தியும் ஒருங்கே வாய்ந்த பெண்களை உலகில் வேறெந்த நாட்டிலும் நான் காண்பதற்கில்லை.

சீதைக்குப் பிறப்பளித்த ஒரு ஜாதியார் பெண் குலத்தினிடம் வைத்திருக்கும் மரியாதை உலகில் ஒப்புவமை யற்றதா யிருக்குமென நான் அறிவேன். சீதை அவர்கள் கனவில்கண்ட பெண்ணரசியா யிருப்பினுங் கூட இது பொருந்தும்.

* * *

பண்டை நாளில் ஆரண்யங்களில் நடைபெற்ற நமது சர்வகலாசாலைகளில் - குருகுலங்களில் - சிறுவர் சிறுமிகளுக்கு அளிக்கப்பட்ட சமத்வத்தினும் பூரண சமத்வம் வேறுண்டா? நமது சம்ஸ்கிருத நாடகங்களைப் படியுங்கள். சகுந்தலையின் சரித்திரத்தைப் படித்துவிட்டு, டென்னிஸன் இயற்றிய "இளவரசி" என்னும் கவிதை நமக்குக் கற்பிக்கக் கூடியது ஏதேனு முண்டாவெனப் பாருங்கள்.

* * *

விதவைகளின் பிரச்னையைப் பற்றியும், பொதுவாக ஸ்திரீகள் நிலையைப் பற்றியும் எனது கருத்தென்னவென்று அடிக்கடி கேட்கப்படுகிறது. நான் இதற்கு முடிவான பதிலாகச் சொல்வதென்னவெனில்,—இந்த அசட்டுக் கேள்வியை என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? நான் விதவையா? அல்லது ஸ்திரீயா? பின்னர், என்னை ஏன் கேட்கவேண்டும்?

* * *

பெண் மக்கள் சம்பந்தமான பலமுக்கிய பிரச்னைகள் உண்டென்பது உண்மையே. ஆனால் "கல்வி" என்னும் மந்திரத்தினால் தீர்த்து வைக்க முடியாதது அவற்றில் எதுவுமில்லை.

ஸ்திரீகளின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு நீ யார்? ஒவ்வொரு விதவையையும், ஸ்திரீயையும் அடக்கி ஆள்வதற்கு நீ என்ன, அவர்களைப் படைத்த ஆண்டவனா? விலகி நில். அவர்கள் தங்கள் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்வார்கள்.

* * *

உங்கள் பெண்மக்களுக்குக் கல்வி யளியுங்கள்; பின்னர் அவர்கள் போக்கில் விட்டு விடுங்கள். தங்களுக்கு என்னென்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்று அவர்களே சொல்வார்கள். அவர்களைப் பொறுத்த விஷயங்களில் தீர்ப்புச் சொல்ல உங்களுக்கென்ன அதிகாரம்? ✓

* * *

ஹிந்து பெண்மணிகளில் பெரும்பான்மையோரால் நினைக்கவும் முடியாத அளவு ஒவ்வோர் அமெரிக்கப் பெண்மணியும் கல்வி பயின்றிருக்கிறாள். நமது பெண்களும் ஏன் அத்தகைய கல்வி பெறுதல் கூடாது? பெற்றே யாதல்வேண்டும்.

* * *

அமெரிக்காவில் ஆண் மக்கள் தங்கள் பெண் மக்களை மிக நன்றாக நடத்துகிறார்கள். எனவே அவர்கள் செல்வத்திலும் கல்வியிலும் சிறந்து, ஊக்கமுடைய சுதந்திர வாழ்வு நடத்துகிறார்கள். ஆனால் நாம் துன்பத்தி லாழ்ந்து நடைபிணங்கள்போல் அடிமை வாழ்வு வாழ்வதேன்? இதற்கு விடை சொல்ல வேண்டுவ தில்லை.

பெண் கல்விக்கு ஆரம்பம் செய்வதெப்படி? கற்பு என்பது ஹிந்து மாதரின் பரம்பரைச் செல்வம். எனவே, கற்பு என்றால் என்னவென்று அவர்கள் எளி தில் அறிந்து கொள்வார்கள். முதலில், இந்த இலட்சி யத்தை அவர்களிடையே உறுதிப் படுத்துங்கள். இதனால் அவர்கள் சிறந்த ஒழுக்க வலிமை பெறு வார்கள். அவர்கள் இல்லறத்தை மேற்கொள்ளலாம்; அல்லது விரும்பின் கன்னிகைகளாகவே காலங்கழிக்க லாம். எங்ஙனமாயினும், அவர்கள் வாழ்க்கையின் ஒவ் வொரு படியிலும், தங்கள் கற்பினின்று ஒரணு வேனும் வழுவுவதினும் உயிரையே விட்டுவிடவும் அஞ்சாத மனத்திண்மை பெறுவார்கள்.

***

ஸ்திரீகள் தங்களுடைய பிரச்னைகளைத் தாங் களே தீர்த்துக் கொள்ளும்படியான நிலைமைக்கு அவர் களைக் கொண்டு வந்து விடவேண்டும்.

***

நமது பாரதத் தாயின் க்ஷேமத்திற்கு அவ புதல்வர் புதல்விகளில் சிலர் ஆத்மத் தூய்மை யுள்ள பிரமசாரிகளாகவும், பிரமசாரிணிகளாகவும் வாழ்வு நடத்தல் அவசியமா யிருக்கிறது.

***

தற்காலத்தின் தேவைகளை முன்னிட்டு ஆராய்ந் தால், பெண்மக்களில் சிலரைத் துறவு இலட்சியங்களில் பற்றுண்டாமாறு பயிற்சி செய்தல் அவசியமெனக் காண்கிறது. அவர்கள் அநாதி காலமாகத் தங்களுடைய இரத்தத்தில் ஊறிப்போயிருக்கும் பதிவிரதா தர்ம பலத்தினால் ஊக்கமடைந்து வாணாள் முழுதும் கன்

னிகைகளாக இருந்து தொண்டு செய்வதாக விரதங் கொள்ளவேண்டும்.

* *

நவீன பௌதிக சாஸ்திரங்கள் அவர்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படக் கூடிய வேறு விஷயங்களும் கற்பிக்கப்படவேண்டும்.

* * *

தேச சரித்திரம், புராணங்கள், குடும்ப நிர்வாக முறைகள், உயர் கலைகள், சன்மார்க்க தத்துவங்கள் இவை எல்லாம் நவீன பௌதிக சாஸ்திரத்தின் துணைகொண்டு அவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும். அத்துடன் அறநெறியிலும் பாரமார்த்திக வாழ்க்கையிலும் பயிற்சி யளிக்கவேண்டும். உரிய காலத்தில் அவர்கள் அன்னைமார்களுக்கு இலக்கியங்களாய் விளங்கும் வண்ணம் பயிற்சி செய்வித்தல் வேண்டும்.

* * *

பெண் பள்ளிககூடங்களில் கல்வி கற்பிக்கும் கடமை, படிப்புள்ள கைம்பெண்களுக்கும் பிரமசாரிணிகளுக்குமே எவ்வாற்றானும் உரியதாகும். இந்த நாட்டில் பெண் பள்ளிக்கூடங்களில் ஆண்மக்களின் தொடர்பை விலக்குதல் நலம்.

* * *

சமயம், கலைகள், பௌதிக சாஸ்திரம், வீட்டு வேலை, சமையல், தையல், சுகாதாரம் - இவற்றில் எல்லாம் முக்கியமான அம்சங்கள் நமது ஸ்திரீகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். நவீனங்கள், கதைகள் முதலியவை அவர்கள் படித்தல் நன்மையன்று. .... ஆனால் பூஜாவிதிகள் மட்டும் சொல்லிக் கொடுத்த

லும் போதாது. அவர்களுக்களிக்கப்படும் கல்வி எல்லா விஷயங்களிலும் கண் திறப்பதாய் இருக்கவேண்டும். நற்குணங்களுக்கு இலக்கியங்களான பெண்மணிகளின் சரிதங்களை அடிக்கடி பெண் குழந்தைகளுக்குச் சொல்லி, சுயநலத்தியாக வாழ்க்கையில் அவர்களுக்குப் பற்றுண்டாகும்படி செய்யவேண்டும். சீதை, சாவித்ரி, தமயந்தி, லீலாவதி, மீராபாய் முதலிய உத்தமிகளின் உதாரணங்கள் எப்போதும் அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கச் செய்தல் அவசியம். அக்கற்பரசிகளை இலக்கியமாகக் கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுமாறு செய்தல் நமது கடமையாகும்.

***

இந்நாட்டின் ஆண் மக்களுக்கு நான் சொல்வதையே பெண்மணிகளுக்கும் கூறுவேன். இந்தியாவிலும், இந்திய தர்மத்திலும் நம்பிக்கை வையுங்கள். பலசாலிகளாயும், வருங்காலத்தில் நம்பிக்கையுடையவர்களாயு மிருங்கள். உங்களுடைய பழைய நாகரிகத்தைக் குறித்து வெட்கப்பட வேண்டாம். ஹிந்துக்கள் பிறரிடமிருந்து பெற வேண்டியது கொஞ்சம் உண்டாயினும், உலகில் வேறெந்த நாட்டாரையும்விட அவர்களிடம் கொடுப்பதற் கதிகமிருக்கிற தென்பதை நினைவில் வையுங்கள்.

***

பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் முப்பதாண்டு பிரமசரியம் காத்த பின்னரே அவர்களுக்குக் கலியாணம் செய்து வைக்கவேண்டும். அதுபோன்றே பெண்களும் பிரமசரியங் காத்தல் அவசியம். அக்

காலத்தில் அவர்களுக்குப் பெற்றோர்களால் கல்வி யளிக்கப்பட வேண்டும்.

***

இந்தியாவின் பெண்கள் சீதையின் அடிச்சுவடு களைப் பின்பற்றியே முன்னேற வேண்டும். வேறு வழி கிடையாது.

***

மற்றவைகளுடன், அவர்கள் வீரமும் வலிமையும் கூடப் பெற வேண்டும். இந்நாளில் அவர்கள் தற் காப்பு முறைகள் தெரிந்து கொள்ளுதலும் அவசிய மாகிவிட்டது.

***

நமது ஸ்திரீகளைத் தற்கால நாகரிகத்தில் பழக்கு வதற்குச் செய்யப்படும் எந்த முயற்சியாயினும், அது சீதையின் இலட்சியத்திலிருந்து அவர்களை அகற்றிக் கொண்டு போவதாயிருந்தால், உடனே தோல்வி யடைதல் நிச்சயம். இதைப் பிரதிதினமும் நாம் பார்க் கிறோம்.

***

உங்கள் பெண்மக்களின் நிலைமையை உங்களால் உயர்த்த முடியுமா? முடியுமென்றால், வருங்காலத் தில் நீங்கள் க்ஷேமமடைவீர்க ளென்று நம்புதற் கிட முண்டு. இன்றேல் இப்போதுள்ள கீழ் நிலையிலேயே இருக்கவேண்டியதுதான்.

***

உண்மையான சக்தி உபாசகன் யார் என்று உங் களுக்குத் தெரியுமா? இவ் வுலகத்தில் ஆண்டவன் சர்வவியாபியான சக்தியா யுள்ளான் என்பதையறிந்து, பெண்மக்களிடத்தே அந்த சக்தியின் வெளித்தோற் றத்தைக் காண்பவனேயாவான்.

7. சாதிப் பிரச்னை

சமூகத்திற்கே சாதி - சமயத்திற்கு அன்று

சமயத்துறையில் சாதி என்பது கிடையாது. சாதி என்பது ஒரு சமூக ஏற்பாடேயாகும். மிக உயர்ந்த சாதியைச் சேர்ந்தவனும், மிகத் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவனும் இந்நாட்டில் சந்நியாசி யாகலாம். அப்போது இரண்டு சாதியும் சமமாகின்றன.

***

சாதி முதலிய நமது சமூக ஏற்பாடுகள் சமயத் தொடர்புடையனவாக வெளிக்குத் தோன்றிய போதிலும், உண்மையில் அவை அத்தகையன வல்ல. நம்மை ஒரு தனி சமூகமாகக் காப்பாற்றி வருவதற்கு அவ் வேற்பாடுகள் அவசியமா யிருந்து வந்திருக்கின்றன. தற்காப்புக்கு அவசியம் இல்லை யாகும்போது அவை இயற்கை மரணமடைந்து மறையும்.

***

கௌதம புத்தர் முதல் ராம் மோஹன் ராய் வரையில் (சீர்திருத்தக்காரர்) எல்லாரும் ஒரு தவறு செய்திருக்கிறார்கள். அவர்கள் சாதியை சமய ஸ்தாபனமாகக்கொண்டு சாதி, சமயம் எல்லாவற்றையும் சேர்த்து அழித்துவிட முயன்றார்கள். எனவே அவர்கள் அடைந்தது தோல்வியேயாகும். புரோகிதர்கள் என்ன பிதற்றினாலும் சரியே, சாதி என்பது ஒரு சமூக ஏற்பாடே என்பதில் சந்தேகமில்லை. அந்த ஸ்தாபனம் தன்னுடைய வேலையைச் செய்த பின்னர் இப்போது அழுகி நாற்ற மெடுத்திருக்கிறது. இந்திய ஆகாய வெளியில் அந்நாற்றம் நிறைந்துளது.

சாதி ஏற்பாடு வேதாந்த மதத்துக்கு விரோத மானது. சாதி என்பது ஒரு சமூக வழக்கமே யல்லாது வேறில்லை. நமது பெரிய ஆசாரியர்கள் எல்லாரும் அதைத் தகர்க்க முயன்றிருக்கிறார்கள். புத்தர் காலத்திலிருந்து சாதிக்கு விரோதமாக அநேகர் பிரசாரம் செய்து வந்தார்கள். ஆனால் ஒவ்வொரு முறையிலும் அது வலிமை பெற்று வந்ததே யன்றி வேறு பயனில்லை. இந்தியாவின் அரசியல் ஸ்தாபனங்களிலிருந்து வளர்ச்சி பெற்றதே சாதியாகும். அதைப் பரம்பரையான தொழிற்சங்க முறை என்று சொல்லலாம். ஐரோப்பாவுடன் நேர்ந்த தொழிற் போட்டியானது, எந்த போதனையையும் விட, சாதியை அதிகம் தகர்த்திருக்கிறது.

* * *

சாதி ஏற்பாட்டின் உட்கருத்து

ஐரோப்பிய நாகரிகத்திற்குரிய சாதனம் பலாத்காரமாகும். ஆரிய நாகரிகமோ வர்ண தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த வர்ணப் பிரிவினை, நாகரிகமென்னும் உச்சிக்கு ஜனங்களை அழைத்துச் செல்லும் படிக்கட்டாகும். ஒருவனுடைய கல்வியும், அறிவுப் பயிற்சியும் அதிகமாக ஆக, அவன் அந்தப் படிக்கட்டின் மூலமாய் மேலே மேலே ஏறிக்கொண்டிருக்கிறான். ஐரோப்பிய நாகரிகத்தில் பலசாலிகளுக்கே வெற்றி; பலவீனர்கள் அழிந்து போகவேண்டியதுதான். ஆனால் பாரத தேசத்திலோ ஒவ்வொரு சமூக விதியும் பலவீனர்களைப் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டதாகும்.

சாதி என்பது நல்ல ஏற்பாடு தான். ஆனால் உண்மையில் சாதி என்றால் என்னவென்று லட்சத்தில் ஒருவர் கூட அறிந்து கொள்வதில்லை. உலகில் சாதி இல்லாத தேசமே யில்லை. இந்தியாவில் நாம் சாதி என்னும் கீழ்ப் படியில் தொடங்கி சாதியற்ற மேல் நிலையை அடைகிறோம். சாதி என்பது இந்தத் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தியாவில், பிராமணன் மக்கட் குலத்தின் இலக்கியமாவான். ஒவ்வொருவனையும் பிராமணனாக்குவது சாதி ஏற்பாட்டின் நோக்கமாகும். இந்திய சரித்திரத்தைப் படித்தால் கீழ்வகுப்பாரை மேலே கொண்டுவர எப்போதும் முயற்சிகள் செய்யப் பட்டுவந்திருப்பதைக் காண்பீர்கள். பல வகுப்புகள் கைதூக்கி விடப்பட்டிருக்கின்றன. மற்றும் பல வகுப்புகளும் மேலே வந்து முடிவில் எல்லாரும் பிராமணர்களாவார்கள். இதுவே சாதி ஏற்பாட்டின் நோக்கம். யாரையும் கீழே கொண்டுவராமல் எல்லாரையும் நாம் மேலே தூக்கிவிடவேண்டும். இதைப் பெரிதும் பிராமணர்களே செய்தாகவேண்டும். ஏனெனில், உயர் குலத்தவரின் கடமை தங்கள் 'தனி உயர்'வுக்குத் தாங்களே குழி தோண்டிக் கொள்ளுதல், அதாவது மற்றவர்களையும் தங்களுக்குச் சமமாக உயர்த்துதலே யாகும். இதை எவ்வளவு விரைவில் செய்கிறார்களோ அவ்வளவுக்கு நன்மை.

***

ஆத்ம சாதனத்தையும் துறவு நெறியையும் மேற்கொண்ட பிராமணன் நமது இலக்கியமாவான். பிராமண இலட்சியம் என்றால் என்ன? உலகப்பற்று அறவே நீங்கி உண்மை ஞானம் குடிகொண்டுள்ள பிரம்மணீய

இலட்சியத்தையே நான் குறிப்பிடுகிறேன். இதுவே ஹிந்து சமூகத்தின் இலட்சியமாகும்.

***

உலக முழுவதிலும் ஆரம்பத்தில் பிராமணர்களே யிருந்தார்களென்றும், அவர்கள் இழிவடையத் தொடங்கியபோது பற்பல சாதிகளாகப் பிரிந்தார்களென்றும், மீண்டும் கிருத யுக ஆரம்பத்தில் எல்லாரும் பிராமணர்க ளாவார்களென்றும் மகாபாரதத்தில் படிக்கிறோம். ஆதலின் சாதிப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு வழி, ஏற்கனவே மேலேயுள்ளவர்களைக் கீழே இழுப்பதன்று; உண்ணல் குடித்தல் விஷயங்களில் மூளை கெட்டுத் தடுமாறுவது மன்று; அதிக சுகாநுபவங்களுக்காக நமது கட்டுக்களை மீறி நடப்பதுமன்று; நம்மில் ஒவ்வொருவரும் வேதாந்த சமயத்தின் கட்டளைகளை நிறைவேற்றிப் பாரமார்த்திக வாழ்வு எய்தலும், உண்மைப் பிராமண ராதலுமே வழியாகும்.

***

உங்கள் எல்லாருக்கும் விதிக்கப்பட்டுள்ள கட்டளை ஒன்றுதான். அதாவது நீங்கள் அனைவரும் இடையில் நில்லாமல் முன்னேறிக் கொண்டே யிருத்தல் வேண்டும். மிக உயர் நிலையிலுள்ளவனிலிருந்து, மிகத் தாழ்ந்துள்ள பறையன் வரைக்கும் இந்நாட்டில் எல்லாரும் முயன்று உண்மைப் பிராமணர் ஆதல் வேண்டும்.

***

பின்னர் நாளடைவில் ஏற்பட்ட ஸ்மிருதிகளில், சிறப்பாக இக்காலத்திற்கு முழு அதிகாரம் உள்ள ஸ்மிருதிகளில், நாம் காண்பதென்ன? சூத்திரர்கள்

பிராமணர்களுடைய வழக்க பழக்கங்களைக் கைக் கொண்டால் அவர்கள் நன்றே செய்கிறார்கள்; இவ் வழியில் அவர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும் என்று கூறப்படுவதைக் காண்கிறோம்.....எல்லாச் சாதிகளும் மெதுவாக, நிதானமாக, மேலே வரவேண்டுமென் பதே நோக்கமென்று பிரத்யட்சமாகத் தெரியவரு கிறது. ஆயிரக்கணக்கான சாதிகள் இருக்கின்றன. அவற்றுள் சில பிரம்மண்ய பதவி அடைந்தும் இருக் கின்றன.

* * *

பிராமணனுடைய மகன் ஒவ்வொருவனும் பிரா மணனாகவே யிருத்தல் வேண்டுமென்னும் கட்டாய மில்லை. பிராமணனுடைய மகன் பிராமணன் ஆவது பெரிதும் சாத்தியமாயினும், அவன் பிராமண னாகாம லும் போதல் கூடும்....பிராமண சாதியும், பிரம்மண்ய குணங்களும் முற்றும் வேறானவை....சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்கள் இருப்பதுபோல் ஒருவனை பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத் திரன் என்று குறிப்பிடும் குணங்கள் இருக்கின்றன. ....எனவே, ஒருவன் ஒரு சாதியிலிருந்து மற் றொரு சாதிக்கு மாறுதல் முற்றிலும் சாத்தியமாகும்; அது இயற்கையுமாகும். இல்லாவிடில் விசுவாமித்திரர் பிராமணராகவும், பரசுராமர் க்ஷத்திரியராகவும் எவ் வாறு ஆகியிருக்க முடியும்?

* * *

சாதி நல்லது; உரிமைதான் கெட்டது

சாதி என்பது நல்ல ஏற்பாடே. சமூக வாழ்க் கையை ஒழுங்குபடுத்துவதற்கு அது ஒன்றே இயற்கை வழி. எந்த சமூகத்திலும் மனிதர்கள்

தனித்தனிக் கூட்டமாகச் சேர்ந்தே யாக வேண்டும். இந்த இயற்கை நியதியை மாற்ற முடியாது. நீங்கள் எங்கே போனாலும் சாதி இருப்பதைக் காணலாம்.

***

சாதி அடியோடு போக வேண்டியதில்லை. அதை அடிக்கடி சீர்திருத்தி அமைத்தலே அவசியமாகும். அந்தப் பழைய ஏற்பாட்டில் இருநூறாயிரம் புதிய ஏற்பாடுகளை அமைப்பதற்கு வேண்டிய ஜீவசக்தி இருக்கிறது. சாதியை அடியோடு ஒழிக்க விரும்புதல் அறிவீனமாகும்.

***

நம்மை ஒரு தனிச்சமூகமாகக் காப்பாற்றுவதற்கு இந்த ஏற்பாடுகள் அவசியமா யிருந்திருக்கின்றன. தற்காப்புக்கு இந்த அவசியம் இல்லாமற்போகும் போது அவை இயற்கை மரண மடையும்.

***

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள சாதி ஏற்பாட்டைக் காட்டிலும் இந்திய சாதி ஏற்பாடு சிறந்ததாகும். அது முற்றிலும் நல்லது என்று நான் சொல்லவில்லை. சாதி இல்லாவிட்டால் இப்போது உங்கள் கதி என்னவாயிருக்கும்? உங்கள் கல்வியும், பிறவும் என்ன கதி அடைந்திருக்கும்?

***

✓ தனி வகுப்புகளாகப் பிரிந்தமைதல் சமூகத்தின் இயற்கை. விசேஷ உரிமைகளே தொலைதல் வேண்டும். சாதி என்பது ஓர் இயற்கை நியதி. சமூகவாழ்வில் நான் ஒரு கடமையைச் செய்கிறேன்; நீ மற்றொரு கடமையைச் செய்கிறாய். நீ நாட்டை ஆள்கிறாய்; நான் பழைய செருப்புத் தைக்கிறேன். இதனாலேயே

நீ என்னைவிடப் பெரியவனாவதெங்ஙனம்? நான் நாடாள முடியாதெனில், நீ செருப்புத்தைக்க முடியுமா?.... நான் செருப்புத் தைப்பதில் கெட்டிக்காரன்; நீ வேதம் ஓதுவதில் சமர்த்தன். அதனால் நீ என் தலை மீதேறி மிதிக்க வேண்டுமென்பதென்ன ?

***

ஆண்டவன் மக்கட்குலத்துக்கு அளித்த மிகச் சிறந்த சமூக ஸ்தாபனங்களில் சாதி ஏற்பாடும் ஒன்றென்பதாக நாங்கள் நம்புகிறோம். (விலக்கமுடியாத பல குறைபாடுகளும், அன்னியநாட்டாரின் கொடுமைகளும், எல்லாவற்றிற்கும் மேலாக பிராமணர் என்னும் பெயருக்குத் தகுதியற்ற பிராமணர் பலரின் மகத்தான அஞ்ஞானமும் கர்வமும் அவ்வுயரிய ஸ்தாபனமானது உரிய பயனளியா வண்ணம் செய்திருக்கின்றன. அங்ஙனமிருப்பினும், அந்த ஸ்தாபனத்தினால் பாரத நாட்டுக்கு ஆச்சரியகரமான நன்மைகள் விளைந்திருக்கின்றன வென்றும், இனியும் இந்திய சமூகத்தை அதன் இலட்சியத்துக்குக் கொண்டு சேர்க்கப் போவது அந்த ஸ்தாபனமே யென்றும் நாங்கள் நம்புகிறோம்.

***

தற்கால சாதி வேற்றுமையானது இந்தியாவின் முன்னேற்றத்துக்கு ஒரு தடைசல்லாகும். அது வாழ்வைக் குறுக்குகின்றது; கட்டுப்படுத்துகின்றது; பிரிவினை செய்கின்றது. அறிவு வெள்ளத்தின் முன்பாக அது விழுந்து மாயும்.

***

தற்காலப் போட்டியின் காரணமாக, சாதி எவ்வளவு விரைவில் மறைந்து வருகிறதென்று பாருங்கள். இப்போது அதைக் கொல்ல மதம் எதுவும் தேவை

யில்லை. வட இந்தியாவில் கடைக்கார பிராமணனும், செருப்புத் தைக்கும் பிராமணனும், சாராயம் காய்ச்சும் பிராமணனும் சர்வ சாதாரணமா யிருக்கிறார்கள். இந்நிலைமைக்குக் காரணம் என்ன? வாழ்க்கைப் போட்டியே யாகும்.

* * *

✓ தற்போதைய அரசாங்கத்தின்கீழ், எவனும் தன் ஜீவனோபாயத்துக்காக எந்தத் தொழிலும் செய்யலாம். தடை எதுவும் கிடையாது. எனவே, வாழ்க்கைப் போட்டி பலமாகி விட்டது. இதன் பயனாக, ஆயிரக்கணக்கானவர்கள் அடியில் கிடந்து உழலாமல், தங்கள் ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்தி மேனிலைக்கு வந்திருக்கிறார்கள்.

* * *

✓ தனி உரிமைகளும், விசேஷ பாத்தியங்களும் கோரும் காலம் என்றென்றைக்கும் இத்தேசத்திலிருந்து மலையேறி விட்டது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியினால் விளைந்துள்ள பெரு நன்மைகளில் இது ஒன்றாகும்.

* * *

சாதிப் பிரச்னையைத் தீர்க்கும் உபாயம்

சாதிச்சண்டை போடுவதில் பயனில்லை. அதனால் நன்மை என்ன? அச்சண்டை நம்மை இன்னும் அதிகமாகப் பிரிக்கும்; இன்னும் அதிகமாக பலவீனப்படுத்தும்; இன்னும் அதிகமாகத் தாழ்த்தும்.

* * *

சாதிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி மேலே யுள்ளவர்களைக் கீழே இழுப்பதன்று; கீழே யுள்ளவர்

களை மேலுள்ளவர்களின் நிலைக்கு உயர்த்துவதே யாகும்.

***

நமது இலட்சியத்தின் மேல்படியில் பிராமணன்; கீழ்ப்படியில் சண்டாளன். சண்டாளனை பிராமணனுடைய நிலைக்கு உயர்த்துவதே நமது வேலை.

***

✔ உயர் வகுப்பாரின் கடமை தங்களுடைய விசேஷ உரிமைகளைத் தாங்களே தியாகம் செய்வதாகும். இது எவ்வளவு விரைவில் நடக்கிறதோ அவ்வளவுக்கு நன்மை. தாமதம் ஆக ஆக அவை அதிகமாய்க் கெட்டுக் கொடிய மரணம் அடைகின்றன.

***

✓ தான் பிராமணன் என்பதாக உரிமை பாராட்டிக் கொள்ளும் ஒவ்வொருவனும் அவ்வுரிமையை இரண்டு வழிகளில் நிரூபிக்க வேண்டும். முதலாவது தன் பாரமார்த்திக மேன்மையை விளங்கச் செய்தல்; இரண்டாவது மற்றவர்களையும் தன் நிலைக்கு உயர்த்தல். ஆனால் தற்போது அவர்களில் பலர் பொய்யான பிறவிக் கர்வத்தையே பேணி வருவதாகக் காணப்படுகிறது. பிராமணர்களே! எச்சரிக்கை! இது சாவின் அறிகுறியாகும். விழித்தெழுங்கள். உங்களைச் சுற்றியுள்ள பிராமணரல்லாதாரை உயர்த்துவதின் மூலம் உங்களுடைய மனிதத் தன்மையையும், பிரம்மண்யத்தையும் நிரூபியுங்கள். ஆனால் இதை எஜமானன் என்ற இறுமாப்புடன், குருட்டு நம்பிக்கை கலந்த கர்வப்புரையுடன் செய்ய வேண்டாம். ஊழியன் என்ற தாழ்மை உள்ளத்துடன் செய்யுங்கள்.

பிராமணர்களை நான் வேண்டிக்கொள்வதாவது: "உங்களுக்குத் தெரிந்திருப்பதைப் பிறருக்குக் கற்பியுங்கள். பல நூற்றாண்டு காலமாக நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் ஞானச் செல்வத்தை எல்லாருக்கும் அளியுங்கள். இவ்வாறு இந்திய ஜாதியை உயர்த்தப் பெருமுயற்சி செய்யுங்கள்" என்பதே. உண்மைப் பிராமண்யம் எதுவென்பதை நினைவு கூர்ந்திருத்தல் பிராமணர்களின் கடமையாகும். பிராமணனிடம் 'தர்ம பொக்கிஷம்' இருப்பதினாலேயே அவனுக்கு இவ்வளவு சிறப்புகளும், விசேஷ உரிமைகளும் அளிக்கப்பட்டுள்ளன என்று மனு சொல்கிறார். பிராமணன் அப்பொக்கிஷத்தைத் திறந்து அதிலுள்ள செல்வங்களை உலகிற்கெல்லாம் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

***

பாம்பு தான் கடித்த மனிதன் உடலிலிருந்து தன் விஷத்தைத் திரும்ப உறிஞ்சி விட்டால் அம்மனிதன் பிழைத்துக் கொள்வானென்று வங்காளத்தில் ஒரு குருட்டு நம்பிக்கை உண்டு. அவ்வாறே பிராமணன் தன்னால் விளைந்த தீமையைத் தானே நிவர்த்தி செய்ய வேண்டும்.

***

✓ இந்தியாவிலுள்ள மற்றச் சமூகங்களின் கதி மோக்ஷத்திற்காக உழைப்பது பிராமணனின் கடமையாகும்.

***

✓ பிராமணரல்லாதாருக்கெல்லாம் நான் கூறுவதாவது: "பொறுங்கள்; அவசரப்பட வேண்டாம். பிராமணனுடன் சண்டையிட எங்கே சந்தர்ப்பமென்று காத்திராதீர்கள். நீங்கள் கஷ்டப்படுவதற்குக் கார

ணம் உங்கள் தவறேயாகும். பாரமார்த்திகத் துறையையும், ஸம்ஸ்கிருதக் கல்வியையும் அலட்சியம் செய்யும்படி உங்களுக்கு யார் சொன்னார்கள்? இவ்வளவு காலம் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? இத்தனை நாள் அசட்டையா யிருந்துவிட்டு, இப்போது மற்றவர்கள் உங்களைவிட அதிக மூளையும், ஊக்கமும், சாமர்த்தியமும் உள்ளவர்களா யிருப்பது குறித்து எரிச்சலடைவதில் யாது பயன்?, பயனற்ற விவாதங்களிலும், பத்திரிகைச் சண்டைகளிலும் உங்கள் சக்திகளை வீணாக்குவதற்குப் பதிலாக, உங்கள் சொந்த வீடுகளில் வீணை போர் நடத்திப் பாவந்தேடிக் கொள்வதற்குப் பதிலாக, பிராமணன் பெற்றிருக்கும் அறிவுச் செல்வத்தையடைவதில் உங்கள் எல்லா சக்திகளையும் பயன்படுத்துங்கள். உபாயம் அதுவேயாகும்.''

***

* தாழ்ந்த சாதியார்களுக்கெல்லாம் நான் சொல்வதாவது: ''உங்களுக்கு ஒரே பாது காப்பு, உங்களுடைய நிலையை உயர்த்திக் கொள்வதற்கு ஒரே வழி சம்ஸ்கிருதம் படித்தலேயாகும். உயர் சாதியார்களிடத்து எரிந்து விழுதலும், அவர்களுடன் சண்டை போடுதலும் பயனளியா. அவ்வழியினால் யாருக்கும் நன்மையில்லை. அதனால் துரதிர்ஷ்டவசமாக ஏற்கனவே பிரிவினை அதிகமாயுள்ள நமது சமூகத்தில் நாளுக்கு நாள் அதிக வேற்றுமையே ஏற்படும். உயர் சாதிகளின் வலிமையெல்லாம் அவர்களுடைய கல்வியும், பயிற்சியுமேயாம். நீங்களும் அவற்றைக் கைக்கொள்வதொன்றே சாதி சமத்வத்தை ஏற்படுத்தும் வழியாகும்.''

நீங்கள் ஏன் சம்ஸ்கிருத பண்டிதர்கள் ஆகக் கூடாது? இந்தியாவிலுள்ள எல்லா சாதிகளுக்கும் சம்ஸ்கிருதக் கல்வியளிப்பதற்காக நீங்கள் ஏன் கோடிக்கணக்கான பணம் செலவு செய்யலாகாது?.... இவைகளை நீங்கள் செய்து முடிக்கும் போது பிராமணனுடன் சமமாகிறீர்கள். இந்தியாவில் செல்வாக்குப் பெறும் இரகசியம் அதுவேயாகும். இந்தியாவில் ஸம்ஸ்கிருதமும் மரியாதையும் பிரிக்க முடியாதவையாயிருக்கின்றன. நீங்கள் ஸம்ஸ்கிருதக் கல்வி பெற்றவுடன் உங்களுக்கு விரோதமாய் யாரும் ஏதுவும் சொல்லத் துணியார்கள்.

8. இந்திய நாகரிகம் - அதைப் பாதுகாத்து வளர்த்தல்

அருவியொன்று ஹிமாலயத்தில் உற்பத்தியாகி யுக யுகாந்தரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அது ஓடத் தொடங்கியது எப்போதென்று யாருக்கும் தெரியாது. அந்த அருவியைத் தடுத்துத் திருப்பி அது உற்பத்தியான இடத்துக்குக் கொண்டு போக முடியுமெனக் கருதுகிறீர்களா? அம்முயற்சி சாத்தியமானுல்கூட நீங்கள் ஐரோப்பிய நாகரிகத்தை மேற்கொள்ளுதல் இயலாத காரியமாகும். ஐரோப்பிய நாகரிகம் பிறந்து வளரத் தொடங்கிச் சில நூற்றுண்டு காலமே ஆகிறது. அந்நாகரிகத்தையே மேனுட்டார் துறக்க இயலவில்லை யென்றால், எவ்வளவோ நூற்றுண்டு காலமாக ஒளிவீசித் திகழ்ந்து வரும் உங்கள் நாகரிகத்தை நீங்கள் எங்ஙனம் கைவிட இயலும்?

இந்தியாவில் நமது முன்னேற்ற மார்க்கத்தில் குறுக்கிடும் இரண்டு பெரிய தடைகள் இருக்கின்றன. ஒன்று பழைய குருட்டு வைதிகம்; மற்றொன்று நவீன ஐரோப்பிய நாகரிகம். என்னைக் கேட்டால் இவ்விரண்டினுள் பழைய குருட்டு வைதிகமே மேல் என்பேன். பழைய வைதிகன் ஒருவன் அறியாமையில் மூழ்கியவனாயிருக்கலாம்; பயிற்சியற்றவனா யிருக்கலாம். ஆனாலும் அவன் ஆண் மகன்; அவனுக்கு நம்பிக்கையுண்டு; பலமுண்டு; அவன் தன் வலிமை கொண்டு தான் நிற்கிறான். ஐரோப்பிய நாகரிக வயப்பட்ட மனிதனோ முதுகெலும்பற்றவன். அவன் பற்பல இடங்களிலிருந்தும் பகுத்தறிவின்றிப் பொறுக்கிய கருத்துக்களின் கலப்புப் பிண்டமாவான். இக் கருத்துக்களை அவன் ஜீரணித்துக் கொள்வதில்லை. அவற்றின் சாராம்சத்தைக் கிரஹிப்பதில்லை. முரண்பட்ட அக்கருத்துக்களினால் அவன் உள்ளம் அமைதியின்றி அலைக்கப் பெறுகின்றது.

***

ஐரோப்பிய நாகரிக வயப்பட்ட இந்தியன் நமது பழக்க வழக்கங்களில் சிலவற்றைத் தீமையென்று சொல்கிறான். இதற்கு அவன் கூறும் காரணம் யாது? ஐரோப்பியர்கள் அப்படிச் சொல்கிறார்கள் என்பது தான்! நான் இதற்கு ஒருப்படேன். இருந்தாலும், இறந்தாலும், நமது சொந்த பலங்கொண்டு நாம் நிற்றல் வேண்டும்.

***

இந்த நிதானமில்லாத பிராணிகள் (ஐரோப்பிய நாகரிகத்திலாழ்ந்த இந்தியர்கள்) இன்னும் தங்களுக்கென்று தனித்த நிலை ஒன்று எய்தவில்லை. அவர்களை

என்னவென்று நாம் அழைப்பது? ஆண்களென்று, பெண்களென்று, விலங்குகளென்று?

***

நன்மைக்கோ, தீமைக்கோ, நமது உயிர் நிலை நமது மதத்தில் அமைந்திருக்கிறது. அதை உங்களால் மாற்றமுடியாது. மதத்தை அழித்துவிட்டு அதனிடத்திற்கு வேறொன்றைக் கொண்டு வரவும் முடியாது. பெரிதாக வளர்ந்து விட்ட மரம் ஒன்றை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் பெயர்த்து நட்டு அங்கே உடனே வேர் கொள்ளச் செய்ய முடியுமா?

***

உண்ணலும், குடித்தலும், களியாட்டயர்தலுமே மனிதவாழ்க்கையின் இலட்சியம் என்று இந்தியாவில் ஒருவன் போதனை செய்வானாயின்,—இந்தச் சட உலகையே ஆண்டவனாக்க முயல்வானாயின்,—அவன் உடனே பொய்யனாகிறான். இப்புண்ணிய பூமியில் அவனுக்கு இடமில்லை. இந்திய மக்கள் அவனுக்குச் செவி சாய்க்க ஒருப்படார்கள்.

***

மற்ற நாட்டாரின் ஸ்தாபனங்களை நான் நிந்திக்கவில்லை. அந்த ஸ்தாபனங்கள் அவர்களுக்கு நல்லவை; ஆனால் நமக்கு நல்லவையல்ல. அவர்களுக்கு உணவாயிருப்பது நமக்கு விஷமாகலாம். நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முதற்பாடம் இதுவாகும்.

***

இந்தியாவை இங்கிலாந்தைப் போல் ஆக்கிவிடப் புத்தியுள்ள மனிதன் எவனும் கருதமாட்டான். எண்ணத்தின் வெளித்தோற்றமாக அமைவதே உடம்பு. அவ்வாறே சமூகவாழ்வும் தேசிய உள்ளத்தின்

வெளித் தோற்றமேயாகும். இந்தியாவில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளின் சிந்தனையினால் சமூகவாழ்வு அமைந்திருக்கிறது. எனவே இந்தியாவை ஐரோப்பிய நாகரிக வயப்படுத்தல் இயலாத காரியம்; அதற்காக முயலுதல் அறிவீனம்.

* * *

மேனாட்டார், நம்மினின்றும் வேறான சாஸ்திரங்களும், ஸ்தாபனங்களும், பரம்பரை தர்மங்களும் உடையவர்கள். அவற்றிற் கிணங்க அவர்கள் தற்போது ஒருவகை வாழ்க்கை முறையைப் பெற்றிருக்கின்றனர். நமக்குச் சொந்தமான பரம்பரை தர்மம் இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செய்த கர்மம் நமக்குப் பின்னால் இருக்கிறது. எனவே நாம் நமது சொந்த வழியிலேயே செல்லக் கூடும். அதுவே இயற்கையாகும்.

* * *

நமது முன்னேற்ற மார்க்கத்தில் பல அபாயங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று, உலகில் நம்மைத் தவிர வேறு ஜனங்கள் இல்லையென்றெண்ணிக் கண்ணை மூடிக் கொள்வதாகும். பாரத நாட்டினிடம் எனக்கு அளவற்ற அன்புண்டு; நமது முன்னோர்களை நான் போற்றுகிறேன்; தேசபக்தியில் நான் குறைந்தவனல்லன். ஆயினும் மற்ற நாட்டாரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உண்டென்பதை நான் ஒப்புக் கொண்டே தீரவேண்டும். எனவே எல்லாருடைய காலடியிலும் உட்கார்ந்து உபதேசம் பெற நாம் சித்தமாயிருக்கவேண்டும். ஒவ்வொருவரிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்வதற்குரிய சிறந்த பாடங்கள் உண்டு.

மேனாட்டிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. மேனாட்டாரின் கலைகளையும், பூதபௌதிக சாஸ்திரங்களையும் அவர்களிடமிருந்து நாம் கற்றறிதல் வேண்டும். புற உலகைப் பற்றிய விஷயங்களை யெல்லாம் அவர்களிட மிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் சமயத்திற்கும், பாரமார்த்திக ஞானத்திற்கும் அவர்கள் நம்மிடம் வரவேண்டியவர்களாவர்.

* * *

வெளி உலகத்துடன் தொடர்பின்றி நாம் உயிர் வாழ முடியாது. அப்படி வாழ முடியும் என்று எண்ணியது நமது மடமையாகும். அதற்குரிய தண்டனையை ஓராயிரம் ஆண்டு அடிமை வாழ்வு வாழ்ந்து நாம் அநுபவித்து விட்டோம். நமது நிலையைப் பிறதேசத்தாரின் நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்க நாம் வெளியே போகாததும், நம்மைச் சுற்றிலும் நடந்து வந்த காரியங்களைக் கவனியாததும் இந்தியர் தாழ்வடைந்ததற்கு ஒரு பெரிய காரணமாகும்..... இந்தியர்கள் இந்தியாவை விட்டு வெளியே போகக்கூடா தென்பது போன்ற மூடக் கொள்கைகள் குழந்தைத்தன மானவை. அவற்றை மண்டையில் அடித்துவிட வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு நீங்கள் வெளியே சென்று பிறநாட்டாரிடையே பிரயாணம் செய்கிறீர்களோ அவ்வளவுக்கு உங்களுக்கும் உங்கள் நாட்டுக்கும் நன்மையுண்டு. பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே நீங்கள் அவ்வாறு செய்து வந்திருந்தால் இன்று இந்நிலையில் இருக்க மாட்டீர்கள். இந்தியாவை ஆள விரும்பிய ஒவ்வொரு நாட்டாருக்கும் அடிமையாகி யிருக்க மாட்டீர்கள்.

என் மகனே! எந்த மனிதனுதல், எந்த தேசமாதல் பிறரைப் பகைத்து உயிர் வாழமுடியாது. என்றைய தினம் இந்நாட்டில் மிலேச்சன் என்னும் வார்த்தையைச் சிருஷ்டித்தார்களோ, என்றைய தினம் பிறருடன் கலந்து பழகுவதை நிறுத்தினுர்களோ அன்றே இந்தியாவுக்கு அழிவு காலம் தோன்றிற்று. எனவே, எச்சரிக்கை! அத்தகைய கொள்கைகளை வளர்த்தல் வேண்டாம். வாயிஞல் வேதாந்தம் பேசுதல் எளிது. ஆனுல் வேதாந்தத்தின் மிகச் சிறு போதனைகளையும் செயலில் கொணருதல் மிக அரிது.

**

நாம் யாத்திரை செய்யவேண்டும். வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும். மற்ற நாடுகளில் சமூக வாழ்வு எவ்வாறு நடைபெறுகிறதென்று பார்க்கவேண்டும். பிறநாட்டாரின் மனப்போக்கைக் கவனித்து அவர்களுடைய சிந்தனைகளுடன் நாம் சுதந்திரமான தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் மீண்டும் ஒரு பெரிய ஜாதியாராக உயிர்த்தெழல் முடியும்.

***

உங்களுடைய பலங்கொண்டு நில்லுங்கள்; ஆனுல் கூடுமானவரை வெளியிலிருந்து வலிமைபெற்று அதை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். வெளி நாட்டார் ஒவ்வொருவரிடமிருந்தும் உங்களுக்கு உபயோகமான விஷயங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். ஆனுல் ஹிந்துக்களாகிய நமக்கு நமது தேசிய இலட்சியங்களே முதன்மையானவை; மற்றவையெல்லாம் இரண்டாந்தரம், மூன்றுந்தரமே யாகும் என்பதை நினைவு கூருங்கள்.

நான்காம் அத்தியாயம்

வெளிநாட்டில் ஊழியம்

இவ்வுலகம் தொழில் பிரிவினை என்னும் தத்து வத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக் கிறது. ஒருவனிடமே எல்லாப் பொருள்களும் இருக் கும் என்று எண்ணுதல் வீணாகும். எனினும் நாம் எவ்வளவு குழந்தைப் புத்தி யுள்ளவர்களா யிருக்கி ரோம்? குழந்தை தன் அறியாமையால் இப்புவியில் விரும்பத்தக்க பொருள் தன்னிடமுள்ள பொம்மை ஒன்றே எனக் கருதுகிறது. அவ்வாறே இவ்வுலக அதிகாரம் மிகப்படைத்த ஒரு தேசத்தார், அவ் வதி காரம் ஒன்றே விரும்பத்தக்க பொருளென்றும், முன் னேற்றம், நாகரிகம் என்பவை யெல்லாம் அதுதா னென்றும் கருதுகிறார்கள். அவ்வதிகாரம் பெறாத, அதில் பற்றுமில்லாத வேறு ஜாதியார் இருப்பின் அவர்கள் உயிர் வாழ்வதற்கே தகுதியற்றவர்களென் றும், அவர்களுடைய வாணாள் வீண் என்றும் எண்ணு கிறார்கள்! இதற்கு மாறாக, வேறொரு ஜாதியார் வெறும் உலகாயத நாகரிகம் அணுவளவும் பயனற்ற தென்று எண்ணுதல் கூடும். ஒருவன் இவ்வையத்தி லுள்ள எல்லாச் செல்வங்களையும் பெற்றவனாயினும், பாரமார்த்திகச் செல்வம் மட்டும் பெறாதவனாயின் அவன் பாக்கியம் பெறாதவனே என்னும் வாக் கியம் கீழ்நாட்டில் எழுந்தது. இது கீழ் நாட்டு இயற்கை; முன்னது மேல் நாட்டு இயற்கை. இவ்விரண்டுக்கும் தனித் தனியே மேன்மையும், மகிமையும் உண்டு. இவ்விரண்டு இலட்சியங்களையும்

கலந்து சமரசப் படுத்தலே தற்போது செய்யவேண்டிய காரியமாகும். மேனாட்டுக்குப் புலனுலகம் எத்துணையளவு உண்மையோ அத்துணையளவு கீழ் நாட்டுக்கு ஆத்ம உலகம் உண்மையாகும்..... கீழ் நாட்டானைப் பகற்கனவு காண்பவனென்று மேனாட்டான் எண்ணுகிறான். அவ்வாறே மேனாட்டானைக் கனவு காண்பவனென்றும், இன்றிருந்து நாளை அழியக் கூடிய விளையாட்டுக் கருவிகளை சாசுவதமெனக் கருதி விளையாடுபவ னென்றும் கீழ் நாட்டான் நினைக்கிறான். இன்றோ நாளையோ விட்டுப் போகவேண்டிய ஒரு பிடி மண்ணுக்காக வயது வந்த ஸ்திரீ புருஷர்கள் இவ்வளவு பாடு படுகிறார்களே என்றெண்ணி அவன் நகையாடுகிறான். இவ்விருவரும் ஒருவரை யொருவர் கனவு காண்பவரென்று கருதுகிறார்கள். ஆனால் மக்கட் குலத்தின் முன்னேற்றத்துக்கு மேனாட்டு இலட்சியத்தைப் போல் கீழ் நாட்டு இலட்சியமும் அவசியமேயாகும். கீழ் நாட்டு இலட்சியமே அதிக அவசியமான தென்றும் நான் கருதுகிறேன்.

***

மேனாட்டார் பாரமார்த்திக உயர் ஞானத்தை அறிந்து கொள்வதற்கு நீண்ட காலமாக வேண்டும். பவுன் ஷில்லிங் பென்ஸே அவர்களுக்கு எல்லாமாகும். ஒரு மதமானது அவர்களுக்குப் பணம், சுகம், அழகு அல்லது தீர்க்காயுளை அளிக்குமானால் எல்லாரும் அதனிடம் ஓடுவார்கள்; இல்லாவிடில் அதன் அருகிலும் நெருங்க மாட்டார்கள்.

***

எவ்வித வளர்ச்சிக்கும் முதன்மையாக வேண்டுவது சுதந்திரம். உங்கள் முன்னோர்கள் ஆன்மாவுக்

குப் பூரண சுதந்திரமளித்தார்கள். அதன் பயனாக மதம் வளர்ச்சி பெற்றது. ஆனால் அவர்கள் உடலை எல்லாவகைப் பந்தங்களுக்கும் உட்படுத்தினார்கள். ஆதலின் சமூகம் வளரவில்லை. மேனாட்டில் இதற்கு நேர்மாறாக சமூகத் துறையில் எல்லாச் சுதந்திரமு மளித்து, சமயத் துறையில் சுதந்திரமே யில்லாமல் செய்யப்பட்டது.

* * *

மேனாடு சமூக முன்னேற்றத்தின் மூலமாகவே பாரமார்த்திக ஞானம் பெற விரும்புகிறது. வேறு வழியில் வரும் பாரமார்த்திகம் அதற்குத் தேவை யில்லை. கீழ்நாடோ பாரமார்த்திக அபிவிருத்தியின் மூலமாகவே சமூக அதிகாரம் பெற விழைகிறது. வேறுவகையான சமூக முன்னேற்றம் அதற்கு வேண் டாம்.

* * *

இயந்திரங்கள் மானிடர்க்கு என்றும் மகிழ்ச்சி அளித்ததில்லை; என்றும் மகிழ்ச்சி யளிக்கப் போவது மில்லை. அவை மகிழ்ச்சியளிக்கும் என்று நமக்குச் சொல்வோன் இயந்திரத்தில் இன்பமிருப்பதாகச் சொல்பவனாகிறான். உண்மையில், இன்பம் எப்போதும் நமது உள்ளத்தில் இருக்கிறது. எனவே மனதை அடக்கிய மனிதன் ஒருவனே உண்மை மகிழ்ச்சி யடை தல் கூடும். மற்றவர்கள் அடைய முடியாது. இயந் திர சக்தி என்பதுதான் என்ன? கம்பியின் மூலம் மின்சார சக்தியை அனுப்பக்கூடிய ஒருவனைப்பெரியவ னென்றும், மேதாவி என்றும் ஏன் கருத வேண் டும்? அதைவிடக் கோடானு கோடி மடங்கு பெரிய காரியங்களை இயற்கை ஒவ்வொரு கணமும்

செய்யவில்லையா? அந்த இயற்கையை ஏன் வணங்கிப் போற்றுதல் கூடாது? இவ்வுலகம் முழுவதிலும் உன் ஆணை செல்லலாம்; இந்த புவனத்திலுள்ள ஒவ்வோர் அணுவையும் நீ வயப்படுத்தி விடலாம்; ஆயினும் பயன் என்ன? உன்னை நீ வெற்றி கொண்டிருந்தாலன்றி, உனக்குள் நீ இன்பமுறும் சக்தி பெற்றிருந்தாலன்றி, உண்மை மகிழ்ச்சி யடைய முடியாது.

* * *

நமது துன்பங்களை யெல்லாம் என்றென்றைக்கும் அழித்துவிட வல்லது ஆத்ம ஞானம் ஒன்றேயாம். மற்ற ஞானங்கள் எல்லாம் சிறிது காலத்திற்கு நமது தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்; ஆனால் ஆத்ம ஞானம் உண்டாகும்போதுதான் பூரண உள்ள நிறைவு ஏற்பட்டுத் தேவை உணர்வே அடியோடு நசித்து விடுகிறது.

* * *

உடல் வலிமையினால் மிகப் பெருங்காரியங்கள் செய்யப்படுகின்றன. மூளைத்திறமையினால், பௌதிக சாஸ்திரங்களின் துணைபெற்ற இயந்திர சாதனங்களைக் கொண்டு இன்னும் அதிஆச்சரியமான வினைகள் நிகழ்த்தப்படுகின்றன. ஆனால் இவை யெல்லாம், ஆத்ம சக்தியின் மூலம் இவ்வுலகில் செய்யக்கூடிய மகத்தான காரியங்களுக்கு முன்னால் அற்பமானவையாகும்.

* * *

மேனாட்டு நாகரிகத்தின் பகட்டையும், பளபளப்பையும் நான் அறிவேன். அதினின்றும் வெளித்தோன்றும் ஆச்சரியமான புற சக்திகளையும் அறிவேன். ஆயினும் இந்த மேடைமீது நின்று "இவை யெல்லாம் வீண்; வெறும் பிரமை; உரு வெளித்

தோற்றம்; ஆண்டவன் ஒருவனே மெய்ப்பொருள்" என்று நான் கூறுகிறேன்.

*
* *

மேனாட்டாராகிய நீங்கள் உங்களுக்குரிய துறைகளில், அதாவது இராணுவம், அரசியல் முதலியவற்றில் காரியவாதிகளா யிருக்கிறீர்கள். இத்துறைகளில் கீழ்நாட்டான் செயல்திறன் அற்றவனா யிருக்கலாம். ஆனால் அவன் தனக்குரிய சமயத்துறையில் சிறந்த காரிய வாதியாய் விளங்குகிறான்.

*
* *

"ஹுர்ரா" என்ற கோஷத்துடன் பீரங்கியின் வாயில் குதிக்க உங்களுக்குத் தைரியமுண்டு. தேசபக்தி யென்னும் பெயரால் நீங்கள் தீரச்செயல்கள் புரிவீர்கள். தேசத்திற்காக உயிர் கொடுக்கவும் சித்தமா யிருப்பீர்கள். இதுபோன்றே, கீழ்நாட்டார் கடவுளின் நாமத்தைச் சொல்லிக்கொண்டு தீரச்செயல்கள் புரிவார்கள்.

*
* *

இக வாழ்க்கையில் சுகாநுபவம் மேனாட்டு இலட்சியமாயிருப்பதுபோல் உயரிய ஆத்மசாதனம் எங்கள் இலட்சியமா யிருக்கின்றது. "சமயம் என்பது வெறும் வாய்ப் பேச்சன்று; இவ்வுலகவாழ்க்கையில் முற்றும் அனுஷ்டித்தற்குரியது" என்று நிரூபித்தல் கீழ்நாட்டின் இலட்சியம்.

*
* *

ஒரு மனிதன் எவ்வளவு பொருள் படைத்தல் கூடும் என்னும் பிரச்னைக்கு முடிவுகாண மேனாட்டில் முயன்று வருகிறார்கள். இங்கு நாம் எவ்வளவு சொற்

பத்தில் ஒருவன் வாழ்க்கை நடத்தக்கூடும் என்று கண்டுபிடிக்க முயன்று வருகிறோம்.

***

ஒரு நாட்டார் நிலைபெற்று வாழவும், மற்றவர்கள் அழிந்து படவும் காரணமாயிருப்பதெது? வாழ்க்கைப் போராட்டத்தில் எது மிஞ்சி நிற்கும்? அன்பா, பகைமையா? துறவொழுக்கமா, சுகாநுபவமா? சடமா, ஆன்மாவா? எது நிலைக்கும்?....துறவு, தியாகம், அஞ்சாமை, அன்பு இவையே நிலைக்குமென்பது நமது முடிவு.

***

ஆசியாவின் போதனை சமய போதனையாகும். ஐரோப்பாவின் படிப்பினை அரசியல் படிப்பினையாகும்.

***

அரசியலிலும், பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியிலும் மேனாடு தீரர்களுக்குப் பிறப்பளித்திருக்கிறது. கீழ் நாடு பாரமார்த்திகத்துறையில் பெரியோர்களைத் தந்திருக்கிறது.

***

கீழ் நாட்டான் இயந்திரம் செய்யக் கற்றுக்கொள்ள விரும்பினால் அவன் மேனாட்டானின் காலடியில் அமர்ந்து கற்றுக்கொள்ளல் தகுதியுடைத்தாகும். அவ்வாறே மேனாட்டான் ஆத்மாவைப் பற்றியும், கடவுளைப் பற்றியும், சிருஷ்டி இரகசியங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்பினால் அவன் கீழ் நாட்டான் அடியின் கீழ் உட்கார்ந்து தெரிந்துகொள்ளல் வேண்டும்.

நமது சமயத்தின் மகத்தான உண்மைகளை உலகுக்கெல்லாம் எடுத்துரையுங்கள். உலகம் அவற்றிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

***

சமயப் பிரசாரம் செய்ய நீங்கள் வெளியே செல்லவேண்டும். உலகிலுள்ள ஒவ்வொரு தேசத்தார்க்கும், ஒவ்வொரு ஜாதியார்க்கும் உங்கள் சமய உண்மைகளை எடுத்துரைக்க வேண்டும். இதுவே முதலில் செய்ய வேண்டிய வேலை.

நூற்றுக் கணக்கான வருஷங்களாய் மனிதனுடைய சிறுமையைப் பற்றிய கொள்கைகளையே ஜனங்கள் கேட்டிருக்கிறார்கள். 'நீங்கள் வெறும் பூஜ்யங்கள்' என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது....இப்போது அவர்கள் ஆத்மாவைப் பற்றி அறிந்து கொள்ளட்டும். தாழ்ந்தவனிலும் தாழ்ந்த மனிதனிடத்தும் கூட ஆத்மா உண்டென்றும், அதற்குப் பிறப் பிறப்பில்லை யென்றும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்.

***

இந்தியாவின் ஆத்ம வித்தையினால் உலகை வெற்றிகொள்ள வேண்டும். நமது தேசீய வாழ்வு அவ்வெற்றியையே பொறுத்திருக்கிறது. அப்போது தான் நமது தேசீய வாழ்வு புத்துயிரும் புதிய பலமும் பெற்றுச் சிறந்து விளங்கும்.

***

நாம் வெளிப்புறப்பட வேண்டும். நமது பாரமார்த்திக ஞானத்தினாலும், ஆத்ம வித்தையினாலும்

உலகை ஜெயிக்கவேண்டும்; அல்லது இறந்துபட வேண்டும். வேறு வழி இல்லை.

***

சமயம், பாரமார்த்திகம் இவற்றின் வெற்றியே பாரத நாட்டின் வெற்றியென்பதாக இந்தியாவின் மகிமை வாய்ந்த சக்கரவர்த்தியான அசோகவர்த்தனர் கூறியிருக்கிறார். உலகம் மற்றொரு முறையும் இந்தியாவினால் ஜெயிக்கப்பட வேண்டும். இதுவே என் வாழ்க்கையின் கனவாகும். உங்களில் ஒவ்வொருவரும் இக்கனவைக் கண்டு வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அக்கனவு மெய்யாகும் வரையில் நீங்கள் சோர்வடைந்து நிற்கக் கூடாது....பாரத நாடு இப்பூவுலக முழுவதையும் ஜெயித்தல் என்பதே நம்முன்னுள்ள மகத்தான இலட்சியமாகும். அதற்குக் குறைவான இலட்சியம் நமக்கு வேண்டாம். அந்த இலட்சியத்திற்கு நாம் ஒவ்வொருவரும் சித்தமாக வேண்டும். அதற்காக அரும்பாடு பட வேண்டும். அன்னிய நாட்டார் வந்து இந்நாடு முழுவதையும் தங்களுடைய சைன்ய மய மாக்கட்டும். அதைப் பொருட்படுத்த வேண்டாம். பாரதர்களே! எழுந்திருங்கள். உங்கள் பாரமார்த்திக ஆயுதத்தினால் உலகை வெற்றி கொள்ளுங்கள்.

***

உலகாயத நாகரிகத்தையும் அதனுடைய துன்பங்களையும் உலகாயதத்தினாலேயே ஒருநாளும் ஜெயிக்க முடியாது. சைன்யங்கள் சைன்யங்களை ஜெயிக்க முயலும்போது அவை பல்கிப் பெருகி மக்களை மாக்களாக்குகின்றனவே யல்லாது வேறில்லை.

மேனாட்டைப் பாரமார்த்திகத்தினாலேயே வெற்றி கொள்ள வேண்டும்.

***

நீங்கள் பிறருக்கு அளிக்கக் கூடிய விலை மதிக்க வொண்ணாத பெருஞ் செல்வம் உங்களிடம் இருக்கிறது. அதுதான் உங்கள் சமயம்; உங்கள் ஆத்ம வித்தை. மேனாட்டாருக்கு அச்செல்வத்தை அள்ளி வழங்குங்கள்.

Sadhu Press, Madras.

ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம்

முதல் பாகம்

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அந்தரங்க சிஷ்யர்கள்—ஞானிகள், பக்தர்கள், கர்மயோகிகள்—துறவிகள், பிரம்மசாரிகள, கிருகஸ்தர்கள் ஆகிய அனைவருடனும் புரிந்த சம்பாஷணைகள் அடங்கியது. உயர்ந்த வேதாந்த உண்மைகள் மிக சுலபமான உபமானங்களால் விளக்கப்பட்டிருக்கும் இந்நூல் வெவ்வேறு நிலைகளிலுள்ள எலலா சாதகர்களுக்கும் இன்னும் அதிகமான பக்தி ஞான வைராக்கியங்களைப் புகட்டி முன்னேற்ற மடையும்படி செய்யவல்லது.

விலை ரூ. 1 8 0

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் அருளிய 1003 உபதேச மொழிகள்

[இரண்டாம் பதிப்பு]

சாதாரண பயிண்டு ரூ. 1 6 0
காலிகோ பயிண்டு ரூ. 1 12 0

ஸ்ரீமத் சுவாமி விவேகாநந்தர் அருளியவை

	அ.	பை.		அ.	பை.
கர்ம யோகம்	12	0	எனது போர்முறை	3	0
பக்தியோகம்	10	0	பவா ஹாரி பாபா	3	0
கடிதங்கள்	8	0	விதிவசம்	0	6
சிகாகோ பிரசங்கம்	5	0			

குருதேவர் வாக்கியம்

பாக்கெட் அளவில் புத்தக ரூபமாய் உள்ளது.

சாதாரண பயிண்டு அணா 5, காலிகோ பயிண்டு அணா 8

ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதாமணி தேவியார், ஸ்வாமி விவேகாநந்தர் இவர்களது புகைப்படங்களும், அச்சுப் படங்களும் வெவ்வேறு அளவில் கிடைக்கும்.

ஆத்மசாதன நூல்கள்

பக்திமார்க்கம் (பரமாநந்த சுவாமிகள் அருளியது)	0	5	0
முக்திநெறி (இராமகிருஷ்ணாநந்த சுவாமிகள் அருளியது)	0	2	0
ஜகஜீவபர விளக்க வினவிடை ,, ...	0	12	0
வேதாந்தத்தின் கோட்பாடுகளும் கருத்துக்களும்	0	3	0
தனக்குத்தானே உதவியும் ஆத்மார்ப்பணமும்	0	1	6
விவேகாநந்த சுவாமிகள் தற்கால இந்தியாவுக்குக் கொண்டுவந்த செய்தி..	0	4	0
நடராஜ வடிவம், தில்லைத் திருநடனம்	0	2	0

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகாநந்தர் இவர்களின் அரிய உபதேசங்களையும் நாட்டின் முன்னேற்றத்திற்கான பல கட்டுரைகளையும் கொண்டு வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வருஷ சந்தா உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விஜயம் சந்தாதாரர்களுக்குப் புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

தமிழ் நாவலர் சரிதை

திருக்கோணமலை

த. கனகசுந்தரம் பிள்ளை

பரிசோதித்தது.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1921

விலை 12 அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

முகவுரை

தமிழ் நாவலர் சரிதை என்னும் இந் நூல், தன் பெயர்க் கிணங்கத், தமிழ்ப் புலவர் சரிதத்தைப் பூரணமாகக் கூறுவதன்று: மற்றுத் தமிழ்ப் புலவருட் சிலர் அவ்வப்போது விநோதமாகவும், தமக்குதவிய வள்ளல்களைப் புகழ்ந்து இசையாகவும், அல்லாதாரை இகழ்ந்து வசையாகவும், தமக்குக் கொடுத்த சமிசையை அமைத்து ஆசுகவியாகவும் பல்வேறு வகையாற் பாடிய பாட்டுக்களைச் சேர்த்துத் தந்து, அவற்றுட் பல பாடப்பட்ட வரலாற்றினையுந் தெரிப்பது. இந் நூல் சிறந்த தமிழ்ப் புலவர் பலருடைய வரலாறுகளைக் கூறாதொழிவது மன்றிப், புலவரென்று சொல்லத் தகாதார் சிலருடைய வரலாறுகளையுங் கூறுகின்றது: இளங்கோவடிகள், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், திருத்தக்கதேவர், சேக்கிழார் முதலிய பெரும்புலவர்கள் வரலாறுகளுள் ஒன்றுங் கூறாது, புலமை அமையப் பெறாத திருக்கண்ணபுரத்துத்தாதி, திருவழுந்தூர்த்தாதி முதலிய தாதிகளின் வரலாறுகளையும் பெயருந் தெரியாத புலவர் சிலரின் வரலாறுகளையும் கூறுகின்றது. பாட்டுக்கள் பாடப்பட்ட வரலாறு கூறுகின்றுழியும் சிலவிடத்து அதனைத் தெளியக் கூறாதும், சில விடத்து ஒன்றுமே கூறாதும் செல்கின்றது. இவ்வளவு குறைபாடுடையதேனும், இந்நூலுள் கூறிய வரலாறுகள் சிலவற்றால் இக்காலத்து விளையும் பயன் நோக்கி இதனை வெளியிடலாயிற்று.

கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகம் முதலிய புலவர்களைப் பற்றிய வரலாறு இதனுட் கூறப்பட்

டது இக்காலத்து ஊரில் பயின்று வழங்கும் அவர்களுடைய வரலாற்றோடு எவ்வளவோ மாறுபடுகின்றது. இப்போது வழங்கிவரும் வரலாறுகளெல்லாம் வீராசாமிச் செட்டியார் எழுதிய விநோதரச மஞ்சரியை ஆதாரமாகக் கொண்டன. இந்த விநோதரசமஞ்சரி எழுதி இப்போது ஐம்பது, அல்லது, அறுபது வருடந்தாகுகின்றன; தமிழ் நாவலர் சரிதை எழுதியோ இருநூறு, அல்லது, இருநூற்றைம்பது வருடமாகின்றன. எழுத்தில் எழுதப் பட்டு நிலைபேறடையாது கர்ணபரம்பரையாக வழங்கி வருங் கதைகள் காலவடைவில் பலவாறு மாறுபடுவது இயல்பு. ஆதலால், இருநூறு மூந்நூறு வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட வரலாறுகளோடு, இக் காலத்து எழுதப் பட்ட வரலாறுகளாக, கர்ண பரம்பரையாக வழங்கி வரும் வரலாறுகளாக, மாறுபடுமாயின், முன் எழுதப் பட்ட வரலாறுகளே கொள்ளத் தகும் என்பது சொல்லாமே அமையும். ஆகவே, விநோதரசமஞ்சரியிலுள்ள புலவர் வரலாறுகள், தமிழ் நாவலர் சரிதையிலுள்ளவற்றோடு மாறுபடுமவைகளுக்குத் தக்க ஆதாரம் வேறு யாதுமின்றேல், அவை கொள்ளப்படாவாம. ஆயினும், இதனால் தமிழ் நாவலர் சரிதையிலுள்ள வரலாறுகள் எல்லாம் உண்மை என்பது போதராது.

ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்த காலத்திலே எழுதப்பட்ட அதன் வரலாறன்றி, அது நிகழ்ந்து நெடுங்காலமாயின பின் எழுதப்பட்ட வரலாறு முழுதும் உண்மையாய் இருத்தல் சாலாது. நெடுங் காலத்தின் பின் எழுதப் பட்ட வரலாறுகள் பெரும்பாலும் கர்ண பரம்பரையாக வந்த உலக வார்த்தைகளையே ஆதாரமாகக் கொண்டவைகளாகும். கர்ண பரம்பரையாக வருவன மேற்குறித்தபடி காலவடைவில் மாறுபடுவது இயல்பாதலால், அவற்

றையே ஆதாரமாகக் கொண்ட வரலாறுகள் பலவாறு மாறுபட் டிருக்கு மென்பதும் முற்றும் உண்மையாகா வென்பதும் நன்கு விளங்கும். ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்த காலத்துக்கும், அதன் வரலாறு எழுதப்பட்ட காலத்துக்கும் இடையில் சென்றகாலம் எவ்வளவு நெடிதோ அவ்வளவு அவ்வரலாறுகளும் மாறுபாடுகள் செறிந்தனவா யிருக்கும். காலஞ் செல்லச் செல்ல இயற்கையான நிகழ்ச்சிகள் மறைந்து போக, அவற்றினிடத்தில் இயற்கைக்கு மாறுயுள்ள அற்புதமான நிகழ்ச்சிகள் வந்து தோன்றும். இந்த உண்மை இந்நூலின் முற்பகுதியில் கூறப்படும் வரலாறுகளோடு பிற்பகுதியில் கூறப்படும் வரலாறுகளை ஒப்புநோக்கின் நன்கு புலப்படும். நக்கீரர், அவ்வையார், பொய்யாமொழியார், கம்பர் முதலியபுலவர்களின் வரலாறுகள் இந்நாலிற் கூறப்பட்டன அற்புதமான நிகழ்ச்சிகள் செறிந்தனவா யிருக்க, காளமேகம், தத்துவப் பிரகாசர், கவிராசபிள்ளை, கவி வீரராகவ முதலியார் முதலிய புலவர்களின் வரலாறுகள் இயற்கைக்குச் சிறிதும் மாறுபாடாதவைகளாயிருக்கின்றன.

இனி இந் நூலுட் கூறப்பட்ட வரலாறுகளுள் வேறு காரணம்பற்றிக் கொள்ளப்படாதனவும் உள. அவற்றுட் சில வருமாறு :—

அவ்வையாருடைய வரலாற்றில் —

I. பாரிமகளிர் அங்கவை சங்கவையைத் தெய்வீகனுக்குக் கலியாணம் பண்ணுவிக்கிறபோது, விநாயகரை அழைத்து மூவேந்தருக்கும் ஓலை எழுதுவித்த செய்தியும், அவர்கள் வந்தபோது பனந் துண்டத்தைப் பழந்தரப் பாடிய செய்தியும் மக்களாற் செய்யப்படாத அற்புதமான செயல்களா யிருப்பது மல்லாமல், அப்போது பாடப்பட்டனவாகக் கூறப்படும் செய்யுள்களும் அவ்வையார் பாடி

யனவென்று சொல்லுதற் கேலாதனவைகளா யுள்ளன. அவ்வையார் சங்க காலத்தில் இருந்தவர். அக் காலத்தில் சகர முதன் மொழி (சகரத்தை முதலெழுத்தாக வுடைய மொழி) தமிழிற் பயின்று வழங்கவில்லை. உண்மையாக அவ்வையார் பாடியனவாகக் கொள்ளக்கூடிய செய்யுள்கள் தொகை நூல்களுள் வருவனவற்றுள்ளும் சகர முதன் மொழி பயின்று வரவில்லை. அவ்வையார் பாடியனவாகப் புறநானூற்றில் வரும் முப்பத்து மூன்று செய்யுள் களில் சமம், சகடம் என்னும் இரண்டு சகர முதன் மொழிகள்தான் காணப்படுகின்றன. குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு முதலிய தொகை நூல்களில் வரும் அவ்வையார் பாட்டுக்களில் சகர முதன் மொழி ஒன்று மில்லை. அங்ஙனமாகவும், மேற் குறிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அவ்வையார் பாடியனவாக இந் நூலுள் வரும் செய்யுள்களில் "தன்னுண்மை தீர்ப்பேன் சபித்து," "சங்கியாதே வருகதான்," "சங்கோக்க வெண்குருத் தீன்று சலசலத்து" எனச் சகர முதன் மொழிகள் பல வந்துள்ளன. இம் மொழிகளுள் 'சபித்து,' 'சங்கி யாது' என்பன 'சாபம்,' 'சங்கை' என்னும் வட மொழி யடியாகப் பிறந்தன. இவ்வாறு வடமொழி யடியாகப் பிறக்கும் வினைகள் தமிழில் வழங்கலுற்றது மிகவும் பிற்காலத்தில்; சங்க காலத்திலன்று. இவ்வித வினைகளைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல் களில் காண்பது அரிது. 'சங்கு' என்ற சொல்லும் சங்க நூல்களில் வரவில்லை. ஆகவே, இப் பாட்டுக்கள், சகர முதன் மொழியும் வடமொழி யடியாகப் பிறக்கும் வினைகளும் தமிழில் வந்து வழங்கலுற்ற பின்பு, பிற்காலத் தவர்களால் பாடப்பட்டனவே யன்றி, அவ்வையாராற் பாடப்பட்டனவல்ல.

இனி அவ்வையார் பாரிமகளிரைத் தெய்வீகனுக்கு மணஞ்செய்துவைத்தார் என்ற கதையும் கொள்ளத் தக்க தன்று; பாரிமகளிர் வரலாறு சங்க காலத்து நூலாகிய புறநானூற்றில் கூறப்பட்டதனோடு மாறுபடுதலின். அவ் வரலாறு யாதெனின், மகண்மறுத்தல் காரணமாகப் பாரி யொடு பகைத்த மூவேந்தரும் அவன் பறம்பு மலையை முற்றி அவனையும் வஞ்சித்துக் கொன்றதன்பின், பாரியின் நண்பராகிய கபிலர், அவன் மகளிரை அழைத்துக் கொண்டு விச்சிக்கோனையும் இருங்கோவேளையுஞ் சென்று அவர்களை மணஞ்செய்துகொள்ளும்படி வேண்டி, அவர் மறுத்த பின், அம் மகளிரைப் பார்ப்பாருக்கு மணம் புணர்வித்தனர் என்பது.

2. சோழன் ஒரு தகிலைப் பார்த்துப் பராக்கா யிருப்ப, அப்போது பாடியதாகக் கூறப்படும் "நூற்றுப் பத்தாயிரம் பொன் பெறினும்" என்றற் றொடக்கத்துச் செய்யுளும் அவ்வையார் பாடினதாகமாட்டாது. அப் பாட்டில் சோழனை "அகளங்கா" என்று விளிக்கப்பட் டுளது. அகளங்கன் என்பது முதலாங் குலோத்துங்க சோழன் மகன் விக்கிரம சோழனுக் குரியபெயர். அகளங் கன் என்பது விக்கிரம சோழனைக் குறித்தலை இந்நூலில் 117, 120, 121, 123, 129-ம் செய்யுள்களிற் காண்க. விக்கிரமனுக்கு முன்னிருந்த சோழர்களுக்காவது பின்னர் வந்த சோழர்களுக்காவது அகளங்கன் என்னும் பெயர் வழக்கு இல்லை. பிற்காலத்துப் புலவர்கள் சோழனைப் பொதுவாக அகளங்கன் என்று சொல்லி யிருக்கலாம். ஆயினும், அது விக்கிரமனல்லாத மற்றைய சோழர்க ளுக்கு ஒரு விருதுவாக வழங்கவில்லை. விக்கிரமசோழன் கி. பி. 1118-ம் ஆண்டு தொடுத்து, 1143-ம் ஆண்டு வரை அரசு செய்தவன். அக் காலத்துக்குப் பல நூற்றாண்டுக

ளுக்குமுன் சங்க காலத்தி லிருந்த அவ்வையார் அவனைப் பாடினுரென்பது பொருந்தாது.

3. சேரன் கைலைக்குப் போகிறபோது, அவ்வையாரை அழைக்க, அவர் விநாயக பூசை பண்ணிக்கொண் டிருந்தமையால் உடன் செல்லாது, பின்னர் அப் பூசை முடிந்த பின் விநாயகர் துதிக்கையா லெடுத்துக் கைலையில் விடச் சேரனைக் கண்டு பாடியதாகக் கூறப்படும் அற்புத மான செய்தியும் அவ்வையார் காலத்து நிகழ்ந்த தொன் றாகாது. இங்கே சேரனென்று குறிக்கப்பட்டவர் சேரமான்பெருமாணுயனுர். இவர் சுந்தரமூர்த்தி நாயனுரோடு கைலைக்குச் சென்றது பெரியபுராணத்துட் கூறப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனுர் காலம் ஒன்பதாம் நூற்றுண்டாதலால், சேரமான் பெருமாணுயனுர் காலமும் அதுவேயாகும். ஆகவே, ஒன்பதாம் நூற்றுண்டி லிருந்த சேரமான் பெருமாணுயனுரோடு அவருக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன் சங்க காலத்திருந்த அவ்வையார் கைலைக்குச் சென்றுரென்றல் பொருந்தாது. அன்றியும் அவ்வையாரைப் பற்றிப் பெரிய புராணம் ஒன்றும் கூறுததனுல், அவ்வையார் சேரமானேடு கைலை சென்ற கதை பெரிய புராணம் பாடிய காலத்து வழக்கிலில்லை என்றும் அதன் பின்னரேயே தோன்றியிருக்க வேண்டுமென்றும் கொள்ளல் வேண்டும். இன்னும், கைலையில் சேரனைக் கண்டு அவ்வையார் பாடியதென்று சொல்லப்படும் "மதுரமொழியி னுமையாள் சிறுவன்" என்றற் றொடக்கத்துச்செய்யுளில் வரும் 'கிழவி' என்னும் பதத்திற்குச் சங்ககாலத்தில் 'உரியவள்' என்னும் பொருளே யன்றி, 'வயது முதிர்ந்தவள்' என்னும் பொருளின்மையும் அப் பாட்டுச் சங்ககாலத்துப் பாட்டன்று என்பதை நன்றுகத் தெரிவிக்கும்.

பாரிமகளிர் அங்கவை சங்கவைக்குக் கலியாணம் பண்ணுவிக்கிறபோது "கண்ணால வேலை கடிதெழுத வாரானேல்—தன்னாண்மை தீர்ப்பேன் சபித்து" என்று தன்னால் அச்சுறுத்தப்பட்ட விநாயகரை அவ்வையார் இங்கே பூசை செய்துகொண்டிருந்தார் என்பது விநோதமாயுள்ளது!

4 ஒருவனைப் பாடி அவன் ஒன்றுமில்லை என்றபோது பாடியதெனப்படும் "கல்லாத ஒருவனை நான்கற்றேன் என்றேன்" என்றற் றொடக்கத்து விருத்தமும் அவ்வையார் பாடினதாகாது. அவ்வையாரிருந்த காலத்தில் இவ்வகை விருத்தம் தமிழில் வழங்கவில்லை. விருத்தம் வடமொழியிலிருந்து தமிழில் வந்தது. அவ்வாறு வந்தது ஆறும் ஏழாம் நூற்றாண்டிலாதல் வேண்டும். பழைய இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் விருத்தத்துக்கு இலக்கணம் கூறப்படவில்லை "கல்லாத ஒருவனை" என்னும் இந்தப் பாட்டைச் சிலர் இராமச்சந்திரக் கவிராயர் பாட்டென்பர். இக்கவிராயர் சென்னையில் ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முன் வசித்தவராதலின், இவர் பாட்டு இருநூறு, அல்லது, இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன் தொகுக்கப்பட்ட தமிழ்நாவலர் சரிதையில் வருதற்கிடமில்லை.

ஏனைய புலவர் வரலாறுகளுள்ளும் இவ்வாறு கொள்ளப்படாதன சிலவுள. அற்றை எல்லாம் எடுத்துரைக்கப் புகின் இம் முகவுரை பெரிதும் விரியுமாதலினாலும், இங்கே கூறிய நியாயங்களைக்கொண்டு அவற்றை உய்த்துணர்ந்துகொள்ள வியலுமாதலினாலும் அவைகள் விரிக்காது விடப்பட்டன.

இனி இந்நூலுட் கூறப்பட்ட வரலாறுகளுள் இக்காலத்து மாறுபட வழங்குவன சில வருமாறு:—

கம்பர் வரலாற்றில் —

1. "ஆழியான் பள்ளியணையே" என்றற் ஜெடுத்துக் கத்துப் பாட்டுக் கம்பர் ஏரெழுபது பாடி அரங்கேற்றும் போது புதுவைச் சேதிராயனை விடந்தீண்டத் தீர்த்த பாட்டென்று இந்நூல் கூறுகின்றது. இக்கதை "அழு வதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண் டதுமறைத்தேர்— எழுபதுங் கொண்டு புகழ்க்கம்ப நாடனெழுப்ப" எனத் தொண்டைமண்டல சதகத்திலும், "பாவலர்தாம்—ஏரெழு பதோதியரங் கேற்றுங் களரியிலே—காரிவிட நாகங் கடிக குங்கை" எனத் திருக்கை வழக்கத்திலுங் கூறப்பட்டுளது. இவைகளினால் திருக்கைவழக்கம் பாடின காலத்தும், தமிழ் நாவலர் சரிதை எழுதின காலத்தும், தொண்டை மண்டலசதக மியற்றின காலத்தும் வழங்கி வந்த கதை ஏரெழுபது பாடி அரங்கேற்றுங் காலத்து ஒருவரை விடந் தீண்ட அதனைக் கம்பர் தீர்த்தாரென்பதுவே என்பது நன்கு விளங்குகின்றது. இக்கதை இப்போது மாறு பட்டுக் கம்பர் தில்லைவா ழந்தணரிடத்துத் தமது இராமாயணத்துக்குச் சாற்றுக்கவி வாங்கப் போயிருந்தபோது, அவர்களுடைய பிள்ளையொன்று பாம்புகடித் திறந்து விடக், கம்பர் இப்பாட்டைப்பாடி விடத்தைத் தீர்த்துப் பிள்ளையை எழுப்பினா ரென்று வழங்குகின்றது (விநோத ரச மஞ்சரி பார்க்க). இக்கதை காலவடைவில் இவ்வாறு மாறுபட்டதென்பதற்கு ஐயமேயில்லை. விநோதரசமஞ்சரியில் எழுதப்பட்ட கதைகளெல்லாம் விநோதமேயன்றி உண்மையல்ல என்பதற்கு இஃது ஒரு சான்றாகின்றது.

2. "இன்றோநங் கம்பனிறந்த நாள்" என்றற் ஜெடுக் கத்துப் பாட்டுக் கம்பர் பேரிற்பாடிய கையறம் என்று மாத்திரம் இந்நூல் கூறுகின்றதன்றி, யாரால் பாடப்பட்ட தென்று கூறவில்லை. இக்காலத்தில் இது ஒட்டக்கூத்த

சாற் பாடப்பட்டதென்று வழங்குகின்றது. இதனை ஒட்டக்கூத்தர் பாட்டென்பதற்கு ஓராதாரமும் இல்லை. கம்பரும் ஒட்டக்கூத்தரும் வெவ்வேறு காலத்திருந்தவர் என்பது இந்நூலியற்றினார் கொள்கையாகும். தமிழ்ப் புலவர் சரிதங்களைப் பெரும்பான்மை காலமுறைப்படி ஒழுங்கு படுத்திக் கூறு மிவ்வாசிரியர் ஒட்டக்கூத்தர் வரலாற்றைக் கம்பர் வரலாற்றுக் கடுத்துக் கூறாது, தொல்காப்பிய தேவர், இரட்டையர், சயங்கொண்டான் என்னும் மூவர் வரலாறு கூறி, அதன்பின் அவ் வரலாற்றைக் கூறியதே இதற்குத் தக்க சான்றாகும்.

இந்நூலுட் கூறப்பட்ட வரலாறுகளுள் இப்போது மறந்து போனவைகளும் சில வுள. அவற்றுள் முக்கியமானது புகழேந்திப் புலவர் இலங்கை சென்ற வரலாறு. இந்நூலில் வரும் 143, 144, 145, 146, 148-ம் செய்யுள்களால், புகழேந்திப் புலவர் இலங்கையிலுள்ள கண்டி, கொழும்பு, கதிர்காமம் முதலிய ஊர்களுக்குப் போனதும், இலங்கை யரசனாகிய சிங்கையாரிய சேகரனைப் பாடினதும், அவனிடத்தில் கடகம் யானையும் ஆயிரம் பொன்னும் பரிசு பெற்றதும், கதிர்காமத்தில் சுப்பிரமணியக் கடவுளையும், கொழும்பில் ஆரோடன் மைந்தனாகிய ஒடக்காரனையும் பாடியதும் நன்கு பெறப்படும்.

இனி இந்நூலை இயற்றினார் யாவரென்பது ஒருவாற்றானும் புலப்பட வில்லை. அவர் சமயத்தாற் சைவர் என்பது இந்நூலின் காப்புச் செய்யுளாலும், இறையனாரும் முருகவேளும் பாடிய பாட்டுக்களை நூன் முதலில் வைத்திருப்பதனாலும் விளங்குகின்றது. அவர், தமது நூலை அந்தக்கவி வீரராகவருடைய வரலாற்றோடு முடித்து, அக்கவிஞருக்குப் பின்வந்த புலவர்களுள் ஒருவர் வரலாறும்

கூறுதலால், அவரிருந்தது கவி வீரராகவருக்குச் சிறிது காலத்துக்குப் பின் என்று கருதலாகும். கவி வீரராகவர் யாழ்ப்பாணத்தில் அரசாண்ட பரராசசேகரன் காலத்தவர். பரராசசேகரன் யாழ்ப்பாணத்தில் அரசாண்டது பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில். ஆகவே, கவி வீரராகவரிருந்து இப்போது முந்நூற்றைம்பது வருடங்கள் வரையிலாகின்றன. இந்நூலியற்றினது கவி வீரராகவர் காலத்துக்கு நூறுவருடத்துக்குப் பின் என்று கொண்டாலும், இந்நூலியற்றினார் காலம் இற்றைக்கு இருநூற்றைம்பது வருடத்துக்கு முற்பட்டதாகும்.

இந்நூலில் வரும் பாட்டுக்கள் பலவற்றிற்கு இயன்றவரை குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. பாட்டுக்களில் குறிக்கப்பட்ட இடங்களையும் மக்களையும் பாட்டுப் பாடின புலவரிருந்த காலத்தையும் விளக்குவதே குறிப்புக்களின் நோக்கமாகும். குறிப்புக்கள் எல்லாம் பூரணமானவை என்பதில்லை; குறைவுள்ளன பல. பாட்டுக்களில் குறிக்கப்பட்ட இடங்கள் முதலியவற்றுள் விளங்காதனவும் பலவுள. இவற்றுள் தமக்குத் தெரிந்தவற்றை இந்நூலை வாசிப்பவர் எழுதி அறிவிப்பாராயின், அவை வந்தனத்தோடு ஏற்கப்பட்டு மறுபதிப்பில் உரிய விடங்களில் சேர்க்கப்படும். காளமேகப் புலவர் காலம் இதுவென்று இதனுள் சிறிதும் ஐயத்துக்கிடமின்றி நிர்ணயிக்கப்பட்டுள்ளது யாவரும் அறியத்தக்கது.

சென்னை,
ரௌத்திரி ௵

திரு. த. க.

தமிழ் நாவலர் சரிதை

கடவுள் வாழ்த்து

மதியாய் சடைமுடித்து மாசுணப் பைம்பூட்டுச்
சதியாய்த் துறந்தாட்டுத் தான — நதியாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த் தென்னுள்ளம்
உருகவிட்டு நின்ற வொளி.

குறிப்பு. இது [illegible] கண்டின் காப்பு. முன்வருவதுதான் தமிழ்நாவலர் சரிதை எழுதினோர் இயற்றியது.

தனிமை பெறுசீர்த் தமிழ்நா வலர்சீர்
இனிமை பெறச்சேர்ந் தெழுத — நனிதுணையாம்
இந்துமுகத் தந்தி யெனுஞ்செஞ் சடைமவுலி
ஐந்துமுகத் தந்தி யடி.

நூல்

தலைச்சங்கத்தார் இடைச்சங்கத்தார் கடைச்சங்கத்தார் எனப் புலவர் மூவகையர். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் இறையனாரும் முருகவேளும் நிதியின்கிழவனும் முரிஞ்சியூர் முடிநாகராயரும் என்று இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர். அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினர். அவர்க-

ளாற் பாடப்பட்டன * நூறு பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது யாண்டு. அவர்க்கு நூல் அகத்தியம்.

இடைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழி மோசியும் வெள்ளூர்க் காப்பியனாரும் சிறுபாண்டரங்கனும் மதுரையாசிரியன் † மாறனும் துவரைக்கோமானும் என இத் தொடக்கத்தார் ஐம்பத் தொன்பதின்மர். அவருள்ளிட்டு மூவாயிரத் தெழுநூற்றுவர் பாடினார். அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் தொல்காப்பியமும் ‡ பனம்பாரமும் என்ப. அவர் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு கபாடபுரத் திருந்தார். அப்பொழுது மதுரையைக் கடல்கொண்ட தென்ப.

கடைச்சங்கமிருந்தார் கபிலரும் பரணரும் சிறுமேதாவியரும் சேந்தம்பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங்குன்றூர் கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரியர் நல்லந்துவனாரும் மதுரை மருதனிளநாகனாரும் கணக்காயனார் மகனார் நக்கீரரும் என இத் தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்மர். அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார். அவராற்

* நூல் என்றும் பாடம்.

† துரையன் என்றும், மதுரையின் என்றும் பாடம்.

‡ பண்டிபாரம் என்றும் பாடம்.

பாடப்பட்டன குறுந்தொகையும் நற்றிணைநானூறும் அகநானூறும் புறநானூறும் ஐங்குறுநூறும் பதிற்றுப் பத்தும் பத்துப்பாட்டும் முத்தொள்ளாயிரமும் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் எழுபது பரிபாடலும் பாரதவெண்பாவும் என இத்தொடக்கத்தன. அக்காலத்து நூல் அகத்தியமும் தொல்காப்பியமும். அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற் றைம்பதிற்றியாண்டு.

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீராண்டு மழை பெய்யாது வற்கடஞ் சென்றது. சங்கத்தா ரெல்லாரும் வேறு வேறிடத்துப் போயினர். பின்பு மழை பெய்து நாடு விளைய அவரெல்லாரையும் மதுரையிடத் தழைப்பித்துத் தமிழாராய்ந்தார். பொருளதிகாரங் காணமற் போனதால் ஆலவாயிறையனார் அறுபது சூத்திரம் பாடினார்.

கு-பு. சில பிரதிகள் நெடுந்தொகை, களிற்றியானைநிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவை என்பவைகளையும் கடைச் சங்கத்தாராற் பாடப்பட்ட நூல்களாகக் கூறுகின்றன. நெடுந்தொகை என்பது அகநானூற்றின் மறுபெயராதலாலுங் களிற்றியானைநிரை முதலிய மூன்றும் அகநானூற்றின் பாகங்களுக்குட் பெயராதலாலும் அவை நீக்கப்பட்டன. கடைச்சங்கத்து நூலாகிய கலித்தொகை இங்குக் கூறப்படவில்லை.

இறையனார்

தருமி யென்னும் பிரமசாரிக்குப் பொற்கிழி வாங்கிக் கொடுத்த சிந்தாசமத்தி:—

அகவல்

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்

செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே. (க)

கு-பு. இது குறுந்தொகை இரண்டாம் பாட்டு.

பாணபத்திரனுக்காகச் சொக்கநாத சுவாமி சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுக

அகவல்

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவிய பானிற வரிச்சிறை
அன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையி னுரிமையி னுதவிய வொளிதிகழ்
குருமா மணிநிரைக் குடையத னிழற்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே. (உ)

கு-பு. இது பதினொன்றாந் திருமுறையில் வரும் பிரபந்தங்களுள் முதலாவது.

வள்ளுவரைச் சங்கத்தார் பாடிய வள்ளுவமாலையில் இறையனார் பாடிய.

வெண்பா

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேனிறைக்கு நீர்மையவாய்க் — குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் செவ்வித் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல். (ந)

கு-பு. தேனிரைக்கும் என்றும் பாடம்.

இறையனார் பொய்யாமொழிப்புலவர்முன்பு சிரா-
மலையைப் பாடிய   வெண்பா

கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுத்துக் — காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை. (௪)

கு-பு. பாட்டார் என்றும் பாடம்.

முருகவேள்

முருகவேள் பொய்யாமொழியாரைப் பாடிய

வெண்பா

விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழ்ந்தால்
எழுந்துசுடர் சுடுமென் றேங்கிச் — செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினாள்
பொய்யா மொழிப்பகைஞர் போல். (௫)

நாமகள்

வள்ளுவமாலையில் நாமகள் பாடிய

வெண்பா

நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன் — கூடாரை
எள்ளுவன் மீனுயர்த்த வேந்திலைவேல் வேந்தனே
வள்ளுவன் வாயதென் வாக்கு. (௬)

நக்கீரர்

நக்கீரர் நாடத்துக் குயக்கொண்டானைச் சாகப்
பாடிய அங்கத   வெண்பா

முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரணர் கபிலரும் வாழி — அரணிலா   [டான்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்
ஆனந்தஞ் சேர்கசுவா கா. (௭)

அவனைப் பிழைக்கப் பாடிய

வெண்பா

ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் — சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையினாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா. (அ)

கு - பு. இவ்விரண்டு வெண்பாக்களையும் தொல்காப்பியம் பொருளதிகாரத்துச் செய்யுளியலில் வரும் 'நிறைமொழி மாந்த ராணை' என்ற சூத்திரத்தின் உரையில் அங்கதப்பாட்டிற் குதாரணமாக எடுத்துக் காட்டி, 'இவைதெற்கண் வாயில்திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப்பாட்டாயின' என்பர் பேராசிரியர்.

கபிலர்

பாரியின் கோட்டையையும் மலையையும் சேரனும் சோழனும் பாண்டியனும் வளைத்ததின் பிறகு, அவர்கள் மூவரும் வலியக் கூடாரம் பிடுங்கிக் கொண்டுபோகக் கபிலர் பாடிய

அகவல்

அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரச மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளி கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாயமீ தழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்குப்

புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே. (௯)

(புறம் - ௧0௯)

மலையமான் திருமுடிக்காரியை வரிசையறியாது கொடுத்த இடத்துக் கபிலர் பாடியது:—

அகவல்

ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருகுவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே. (௧0)

(புறம் - ௧உ௧)

கபிலர் பிறந்தபோது பாடியது:—

அகவல்

நெட்டிலை யிருப்பை வட்ட வான்பூ
வாடா தாயிற்
பீடுடைப் பிடியின் கோடேய்க் கும்மே
வாடிலோ
பைந்தலைப் பரதர் மனைதொறு முணங்குஞ்
செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே. (௧௧)

பெருந்தலைச் சாத்தனார்

தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடுபற்றி யிருந்த குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது :—

அகவல்

ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே. (௧௨)

(புறம் - ௧௬௪)

இதுவுமது :— .

வெண்பா

ஆறுபெருக் கில்லா தறுந்திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ வுலகாற்றத் — தேற
வறியையே யானு மென்வறுமை தீர்க்கச்
சிறியையோ சீர்க்குமணா செப்பு. (௧௩)

இந்தப் பாட்டுக்குக் குமணன் தலை கொடுத்தது.

கோவூர்கிழார்

உறையூர் முற்றியிருந்த நலங்கிள்ளியையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையுங் கோவூர்கிழார் பாடியது:—

அகவல்

இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு,
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனாற்,
குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே. (கச)

(புறம் - சரு)

சோழன் நலங்கிள்ளியுழைநின்று உறையூர் புக்க இளந்தத்தனை நெடுங்கிள்ளி ஒற்றுவந்தானென்று கொல்லப் புக்குழிக்கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது:—

அகவல்

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட,
நண்ணார் நாண வண்ணாந் தேகி

ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே. (கரு)

(புறம் - சஎ)

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலயமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது:—

அகவல்

நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே, புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமது பகுத்துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே. (கசு)

(புறம் - சசு)

சாத்தந்தையார்

இது கோப்பெருநற்கிள்ளி முக்காவனாட்டு ஆமூர் மல்லனைப் பொருதட்டு நின்றானைச் சாத்தந்தையார் பாடியது:—

அகவல்

சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கு மிழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ

ஊர்கொள வந்த பொருநனோ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே. (கள)

(புறம் - அஉ)

பாடபேதம். போழ்தூன்றூசி, போர்தரவந்த பொருநன்.

சங்கத்தார்

பாண்டியன் வற்கடகாலத்து நம்மைத் தாங்கி-
யோர் யாரென்றவற்குச் சங்கத்தார் பாடியது:—

அகவல்

காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடிபடச் சுவறித்
தந்தையை மக்கள் முகம் பாராமல்
வெந்த சாகம் வெவ்வே றருந்திக்
குணமுள தனையுங் கொடுத்து வாழ்ந்த
கணவனை மகளிர் கண்பா ராமல்
விழித்த விழியெல்லாம் வேற்றுவிழி யாகி
அறவுரை யின்றி மறவுரை பெருகி
உரைமறந் தொழிந்த வூழி காலத்தில்
தாயில் லவர்க்குத் தாயே யாகவுந்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாரிதிக் கிழவன்
நீலஞ் சேரு நெடுமால் போல்வன்
ஆலஞ் சேரி யயிந்த னென்பான்
தன்குறை சொல்லான் பிறர்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையுங் குன்றான்
இறந்து போகா தெம்மைக் காத்தான்
வருந்தல் வேண்டாம் வழுதி
இருந்தன மிருந்தன மிடர்கெடுத் தனனே. (கஅ)

திருவள்ளுவர்

திருவாலங்காட்டுத் திருநடங் கண்டீரோ வென்று முனிவர் கேட்க வள்ளுவர் பாடியது :—

வெண்பா

பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க — நாவில்
இழைநக்கி நூனெருடு மேழையறி வேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து. (௧௯)

அவ்வை

அவ்வையார் தமக்கு நெல்லிப்பழங் கொடுத்த அதிகமானைப் பாடிய

அகவல்

வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
ஆர்கலி முழவி னதிகர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தோயே. (௨௦)

அப்போது பாடிய (புறம் - ௯௧)

வெண்பா

பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையும் — ஈங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றி னாவை
அறுப்பித்தா யாமலகந் தந்து. (௨௧)

புல்வேளூர்ப் பூதன் வரகுசோறிட்டபோது பாடிய

வெண்பா

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரவென் றேபுளித்த மோரும் — பரிவுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும். (உஉ)

அவன் வயலுக்குக் கிணற்று நீரேறிப்பாயக் கட்டளையிட்டாள்.

கு-பு. புல்வேளூர் திருவண்ணாமலைத் தாலுகாவில் பெண்ணையாற்றங்கரையி லுள்ளது. அவ்வை 'அழியா வாழையும் ஒழியாக் கிணறு மாகுக' என்று சொன்னாளென்பர்.

பழையனூர்க் காரிக்கு ஆடுவாங்கிக் கொடுக்க, வாதவன், வத்தவன், யாதவன் மூவரிடத்தும் போய் அவர்கள் கொடாதபடியினாலே சேரமானிடத்துப் போய்ச் சொல்லிய

வெண்பா

வாதவர்கோன் பின்னையென்றான் வத்தவர்கோ னாளை [யென்றான்
யாதவர்கோன் யாதொன்று மில்லையென்றான் - ஆதலால்
வாதவர்கோன் பின்னையினும் வத்தவர்கோ னாளையினும்
யாதவர்கோ னில்லை யினிது. (உ௩)

அப்பொழுது சேரன் பொன்னாடு கொடுக்கப் பாடிய

வெண்பா

சிறப்பார் மணிமுடிச் சேரமான் றன்னைச்
சுரப்பாடு கேட்கவே பொன்னாடொன் றீந்தான்
இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர். (உ௪)

கு-பு. 'சேரா உன்னாடு பொன்னாடு' என்று அவ்வை சொன்னாளென்பது பழைய வழக்கு.

பொய்யாமொழியார் பாதிபாட அவ்வையார் பாதி பாடியவை:—

வெண்பா

தண்ணீருங் காவேரி தார்வேந்த னுஞ்சோழன்
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு. (உ௫)

பத்தம்பிற் பாதி யுடையா னிரண்டம்பிற்
கொத்தமபி யென்பார் கொளப்புக்குச் — சுத்தப்
பசும்பொ னரவல்குற் பாவையர்க்குத் தோற்று
விசும்பிடைவைத் தேகினான் வில். (உ௬)

ஒருநாட் பசியினாலே ஒருவன் மனைக்குப் போக அவன் 'சோறில்லை போ' என்று சொன்ன பின்பு, அவன் மனைவி உபசாரஞ் சொல்லி அன்னமிட்டாள்; அப்போது சொல்லிய

வெண்பா

அற்ற தலையி லருகிற் றலையதனைப்
பற்றித் திருகிப் பறியேனோ — வற்றன்
மரமனையா னுக்கிம் மனையாளை யீந்த
பிரமனையான் காணப் பெறின். (உ௭)

ஒரு குறவன் பலாவைப் பகைவர் வெட்டிப் போட, அப்பலா வளரப் பாடிய

வெண்பா

கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
ஒரிலையாய்க் கொம்பா யுயர்மரமாய்ச் — சீரிய
வண்டுபோற் கொட்டையாய் வன்காயாய்ப் பின்
பண்டுபோ னிற்கப் பணி. [பழமாய்ப் (உ௮)

அப்போது குறப்பிள்ளைகள் நாழித்தினை கொடுக்க வாங்கிக் கொண்டு சோழனிடத்தில் வந்து பாடிய

வெண்பா

கூழைப் பலாத்தழையப் பாடக் குறச்சிறுர்
மூழக் குழக்குத் தினைதந்தார் — சோழாகேள்
உப்புக்குப் பாடிப் புளிக்கு மொருகவிதை
ஒப்பிக்கு மென்ற னுளம். (உகூ)

கு - பு. மூழக்கு - மூவுழக்கு என்பதன் மரூஉ; தொல். எழுத்து. நச்சினார்க்கினியம், சஙிஎ-ம் சூத்திரம் பார்க்க. இராசராசச் சோழன் காலத்துச் சிலாலேகைகளிலும் 'மூழக்கு' என்னும் பதம் வருகின்றது. மூவுழக்கும் உழக்கும் நாலுழக்கு ; ஒருநாழி.

அறம் பொருள் இன்பம் வீடு நான்கும் பாடிய

வெண்பா

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொத்துற் — ருதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. (௩0)

அரிசி கேட்க யானை கொடுத்த நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய

அகவல்

தடவு நிலைப்பலவி னஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்

பெருங்களிறு நல்கி யோனே யென்ன
தேற்றா வீகையு முண்டுகொல்
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே. (௩௧)

(புறம் - ௧௪0)

எழிற் கோவைப் பாடிய அங்கதம்;

வெண்பா

இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம் — மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள. (௩௨)

கு-பு. உலா என்னும் பாட்டு. இப்பாட்டுத் தொல்காப்பியம், பொருளதிகாரம், ௪௩௭-ம் சூத்திரவுரையில் செம்பொருளங்கதத்திற்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டுளது. இங்கே எழிற்கோவென்று குறிக்கப்பட்டவன் எழின்மலைக்குத் தலைவனாகிய நன்னன் என்பர். எழின்மலை மேலைக்கடலருகிலுள்ள கன்னனூரிலிருந்து வடக்கே பதினெட்டு மைல் தூரத்திலுள்ளது; இஃது ஒரு ரெயில்வே ஸ்டேஷன்.

மூன்று கிழிக்குச் சங்கிலிபிறப்பாட, ஒரு கிழிக்கு நிறை நில்லாத கவிபாட, ஒரு கிழிக்கு நாலுகோடி கவி பாட என்று ஆக அஞ்சு கிழியும் பாண்டியன் வாசலிற் கட்டி வைத்தபோது கிழியறப் பாடிய

வெண்பா

தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை — அடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
பொய்த்தா னிவனென்று போமே லவன்குடி
எச்ச மிறுமே லிறு. (௩௩)

சென்றுழு துண்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றுழு துண்பான் மனைவாழ்க்கை — முன்றிலில்
துச்சி லிருந்து துடைத்தழுகண் ணீராலேழ்
எச்ச மிறுமே லிறு. (௩௪)

வழக்குடையார் நிற்ப வரும்பொருள் கைவாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்லின் — வழக்குடையார்
சுற்றமுந்தாமுந் துடைத்தழுகண் ணீராலேழ்
சுற்ற மிறுமே லிறு. (௩௫)

கு-பு. எழுகண்ணீரால் என்றும் பாடம்.

ர்றைநில்லாதவகவல்

வையக மெல்லாம் வளவயலா வானோர்
தெய்வ மாமுகடு சேரிய தாகக்
காணமு முத்து மணியுங் கலந்தொரு
கோடானு கோடி கொடுப்பினு மொருநாள்
ஒருபொழு தொருவனா ணெழிதல் பார்க்கும்
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே. (௩௬)

கு-பு. வையகமெல்லா மளவளாட் என்றும் பாடம்.

நாலுகோடிகவி

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும். (௩௭)

உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி யுறும். (௩௮)

கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும். (௩௯)

கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும். (௪௦)

ஒருவனைப்பாடி அவன் 'ஒன்றுமில்லை' என்றபோது பாடிய

விருத்தம்

கல்லாத வொருவனைநான் கற்றாயென்றேன்
காடேறித் திரிவானை நாடாவென்றேன்
பொல்லாத வொருவனைநா னல்லாயென்றேன்
போர்முகத்துக் கோழையைநான் புலியேயென்
மல்லாரும் புயமென்றேன் றேம்பற்றோளை [றேன்
வழங்காத கையனைநான் வள்ளலென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லையென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின்றேனே. (சக)

கு-பு. சூம்பற்றோள் என்றும் பாடம்.

ஒருவனைப்பாடி அவன் இகழ்ச்சிசொல்ல அப்போது பாடிய

அங்கதசவகவல்

எம்மிக ழாதவர் தம்மிக ழாரே
எம்மிகழ் வோரே தம்மிகழ் வோரே
எம்புக ழிகழ்வோர் தம்புக ழிகழ்வோர்
பாரி யோரி நள்ளி யெழினி
ஆஅய் பேகன் பெருந்தோண் மலையனென்
றெழுவரு ளொருவனு மலலை யதனால்
நின்னை நோவ தெவனே யுறுவட்
டாற்றுக் குறைக் கட்டி போல
நீயு முளையே நின்னன் னோர்க்கே
யானு முளனே யெம்பா லோர்க்கே
குருகினும் வெளியோய் தேத்துப்
பருகுபா லன்னவென் சொல்லுகுத் தேனே. (சஉ)

கு-பு. இது தொல். பொருளதிகாரம் சஙஎ-ம் சூத்திரவுரையில் செம்பொருளங்கதத்துக் குதாரணமாகக் காட்டப்பட்டுளது. அங்கே அவ்வையார் பாட்டாகக் கூறப்படாமை நோக்கத்தக்கது. 'உறுவட் டாற்றுக் குறைக் கட்டிபோல' என்பதன் சுத்தபாடம் விளங்கவில்லை. பிரதிகளிலெல்லாம் இவ்வாறேயுளது.

சில புல்லறிவோர் தங்களைப் பாடச்சொன்ன போது பாடிய

அகவல்

மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக வென்றனிர் நும்மையிங்
கெங்ஙனம் பாடுகேன் யானே வெங்கட்
களிறுபடு செங்களங் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர்
இலவு வாய்ச்சிய ரிளமுலை புல்லீர்
அவிச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தேரீர்
உடலிடு ருண்ணீர் கொடலிடுர் கொள்ளீர்
ஒவ்வாக் கானத் துயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே. (சஙு)

திருக்கோவலூரில் அங்கவை சங்கவை என்கிற பெண்கள் வீட்டில் அவ்வைக்கு இலைக்கறி யிட்டபோது பாடிய

வெண்பா

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டுப் — பொய்யே
அடகென்று சொல்லி யமுதத்தை யிட்டாள்
கடகஞ் செறியாதோ கைக்கு. (சஙசு)

சிற்றாடைகொடுக்க அப்போது பாடிய

வெண்பா

பாரி பறித்த கலனும் பழையனூர்க்
காரியன் றீந்த கழைக்கோலுஞ் — சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர். (சரு)

கு-பு. இதனைப்பற்றிய கதையைச் செந்தமிழ் இரண்டாந் தொகுதி, 194, 195-ம் பக்கங்களிற் காண்க.

அங்கவை சங்கவையைத் தெய்வீகனுக்குக் கலியாணம் பண்ணுவிக்கிறபோது ஓலையெழுத விநாயகனை அழைத்த

வெண்பா

ஒருகை யிருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் செம்மல் — கரிமுகவன்
கண்ணால வோலை கடிதெழுத வாரானேல்
தன்னுண்மை தீர்ப்பேன் சபித்து. (சசா)

கு-பு. கல்யாணவோலை என்றும் பாடம்.

சேர சோழ பாண்டியர்க்கு விநாயகன் எழுதப் பாடிய

வெண்பா

சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக வுட்காதே — பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசன் மனமிசைந்தான்
சங்கியா தேவருக தான். (சஎ)

புகார்மன்னன் பொன்னித் திருநாடன் சோழன்
நகாதென்று தானங் கிருந்து — நகாதே
கடுக வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப்பதி னெட்டா நாள். (சஅ)

வையைத் துறைவன் மதுராபுரித் தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே — தையற்கு
வேண்டுவன கொண்டு விடியப்பதி னெட்டாநாள்
ஈண்டு வருக விசைந்து. (௪௯)

கு-பு. விடியல் பதினெட்டாநாள் என்றும் பாடம்.

மூவரும் வந்தபோது பனந்துண்டத்தைப் பாடியது:—

திங்கட்குடையுடைச்சேரனுஞ்சோழனும்பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.()

அந்தக் கலியாணத்திற் பெண்ணையாற்றைப் பாடிய

வெண்பா

முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திவரு நெய்பா றலைப்பெய்து — குத்திச்
செருமலைத் தெய்வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டோடி வா. (௫௧)

கு-பு. இந்தக் கதையைத்தான் வரந்தருவார் பாரதத்துக்குத் தாம் பாடிய பாயிரத்தில் "அவ்வைபாடலுக்கு நறுநெய்பால் பெருகி யருந்தமிழறிவினுற் சிறந்து — தெய்வமாநதி நீர் பரக்குநாடந்தத் திருமுனைப்பாடி நன்னாடு" என்று குறித்தது.

அப்போது வருணனைப் பாடிய

வெண்பா

கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற் — பெருமணத்து
நன்மாரி தாழ்க்கொண்ட நன்னீரது தவிர்ந்து
பொன்மாரி யாகப் பொழி. (௫௨)

சோழன் ஒருதுகிலைப் பார்த்துப் பராக்காக இருப்ப அப்போது பாடிய

வெண்பா

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சீலை
நாற்றிங்க டன்னிற் கிழிந்துபோம்—மாற்றலரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வேல கைளங்கா
என்றுங் கிழியாதென் பாட்டு. (ருங)

திருக்குடந்தையில் இரண்டு வேளாளர் ஒருத்தன் லோபியும் ஒருத்தன் விதரணியுமாக இருந்தவர்களைப் பாடிய

வெண்பா

திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருந்தன் றிருக்குடந்தை வாழை — குருத்தும்
இலையுமிலைப் பூவுமிலைக் காயுமிலை யென்றும்
உலகில் வருவிருந்தோ டுண்டு. (ருச)

கு-பு. சோழமண்டல சதகம் 65-ம் கவி பார்க்க.

ஒருவன் ஆடம்பரவானாகவந்த கீழான புலவன் கவியைக் கேட்டு இவள் கவியைக் கேளாதிருந்தான்; அப்போது பாடிய

வெண்பா

விரக ரிருவர் புகழ்வாரும் வேண்டும் [ரு
விரனிறைய மோதிரமும் வேண்டும்— அரையிலொ
பஞ்சேனும் பட்டேனு மில்லையோ பாணிகவி
நஞ்சேனும் வேம்பேனு நன்று. (ருரு)

சேரன் கைலைக்குப் போகிறபோது அவ்வையாரை அழைக்க, அவள் விநாயகபூசை பண்ணித் தாமதமா

யிருக்க, விநாயகன் தன் துதிக்கையாலெடுத்துக் கைலை
யில் விடச், சேரனைக்கண்டு பாடிய

கலித்துறை

மதுர மொழியி னுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினையவல்லார்க் கரிதோ முகில்போன் முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேரு மதன்பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே. (௫௪)

சேரன் கைலையிலிருக்கத், திரும்பவந்து பாடிய

வெண்பா

சிறுக்கீரை வெவ்வடகுஞ் சேதாவி னெய்யும்
மறுப்படாத் தண்டயிரு மாந்தி — வெறுத்தேனை
வஞ்சிக்குங் கொற்கைக்கு மன்னவனேற் பித்தானே
கஞ்சிக்கும் புற்கைக்குங் கை. (௫௭)

முருகவேள் கேட்கப், பாடிய

அகவல்

அரியது கேட்குந் தனிநெடு வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூகையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடு நீக்கிப் பிறத்தலு மரிதே
பேடு நீக்கிப் பிறந்த காலை
ஞானமுங் கல்வியு நற்குற லரிதே
ஞானமுங் கல்வியு நற்குறு மாயினுந்
தானமுந் தவமுந் தரித்தலு மரிதே
தானமுந் தவமுந் தரித்தோற் கல்லது
வானவ ருடு வழிதிற வாதே. (௫௮)

தத்துவங் கூறியது: — வெண்பா

ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்றன் வீரமே வீரம் — ஒன்றானுஞ்
சாகாமற் கற்பதே வித்தை தனைப்பிறர்
ஏவாம லுண்பதே யூண். (௫௯)

உழவு நன்றோ என்று கேட்டபோது பாடிய

வெண்பா

ஏரு மிரண்டுளதா யில்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய் — ஊருக்குச்[ட்டால்
சென்றுவர வண்ணிதாய்ச் செய்வாருஞ் சொற்கே
என்று முழவே யினிது. (௬௦)

கு-பு. அவ்வை சரிதத்தில் விளங்காதவற்றைச் செந்தமிழ் இரண்டாந் தொகுதியிற் கண்டுகொள்க.

பொய்யாமொழியார்

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த வருகா ரணிவயலிற் — காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ. (௬௧)

கு-பு. வயிரபுரம் என்பது க்ஷேத்திரபாலபுரம் என்றும் மாயூரந்தாலுகாவி லுள்ளதென்றும் இப்பாட்டுக் கம்பர் பாடியதென்றும் கூறுவர்.

இவராசிரியர் பாடிய வெண்பா

பொதியி லகத்தியனும் பொய்யா மொழியுமாய்
அதிக வமணப்பர்க் கிழாய்த் — துதிபெருகு
செங்காட்டுக் கோட்டங் துறையூ ரெனுந்தலத்துச்
சங்காத்தங் கொண்டிருப்பாய் தான். (௬௨)

கு-பு. இப்பாட்டில் இரண்டாமடியின் சுத்தபாடந் தெரியவில்லை.

பாண்டியன் வாசலிற்போய்ப் பாதி வசையும் பாதி இசையும் பாடிய

கலித்துறை

குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் றேநின் றிருக்குல நீயவன்றன்
அழற்கா லொளிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே.

கு-பு. புழைக்கா லரவிந்தம் என்றும் பாடம்.

சங்கப் பலகையிற் சிலா-ரூபமான சங்கத்தாரைப் பாடிய

வெண்பா

உங்களிலே யாரொருவ னொப்பேனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கோள் — சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழென் பன்னூலு மேற்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீ ரின்று. (௬௪)

சங்கப்பலகை மிதப்பப் பாடிய

வெண்பா

பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித. (௬௫)

காளையார் கோயில் தேவடியார் எழுபதுபேரும் எழுபதினாயிரம் பொன் கொடுக்கப் பாடிய

வெண்பா

வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன் றமர்க ளெழுபதின்மர் — தேசத்
திரவலர்மே னீட்டுவர்கை யீண்டுலகங் காக்கும்
புரவலர்மே னீட்டுவர்பொற் கால். (௬௬)

சீநக்கன் கட்டுச்சோறு கொடுக்கப் பாடிய

கலி விருத்தம்

அளிகொ ளுந்தொடை யானர சைக்குமன்
ஒளிகொள் சீநக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே. (சு௭)

கு-பு. சோழமண்டல சதகம் 54-ம் செய்யுள் பார்க்க. சிறீநக்கன் என்பது சீநக்கன் என்றாயது போலும்; சீமான் என்பது போல.

சீநக்கனுக்குப் பாடிக் கொடுத்த

வெண்பா

திறையின் முறைகொணர்ந்து தெவ்வரெல்லா மீண்ட
இறையு மிறைகடக்க லாகா — அறைகழற்காற்
போர்வேந்தர் போர்மாளப் போர்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் றஞ்சைத் தெரு. (சு௮)

கு-பு. சோழமண்டல சதகம் 53-ம் செய்யுள் பார்க்க.

கண்டியூர் வண்ணாத்தியைப் பாடிய

வெண்பா

தூசுதூ சாக்குவார் பாவை சுடர்த்தொடிக்கை
ஆசிலாக் கண்டியூ ராரணங்கு — வாசமலர்க்
கண்ணங்கை கொங்கைமுகங் காலுங் கடிக்கமலம்
கண்ணங்கை கொங்கைமுகங் கால். (சு௯)

கு-பு. தூசு தூய்தாக்குவார் பாவை என்றும் பாடம். தூசு தூசாக்குவார் என்ற பாடத்தில் இரண்டாவது தூசைத் தூய்தென்பதன் மரூஉ என்று கொள்க.

முருகவேளைப் பாடிய

வெண்பா

பொன்பாவுங் கன்னிப் பொறிப்புறவே யேதிலன்பின்
என்பாவை போக விசைந்தனளே — மின்பாயும்
மானவேன் முட்டைக்கு மாறுய தெவ்வர்போம்
கானவேன் முட்டைக்குங் காடு. (௭0)

கு-பு. இப்பாட்டின் முதலடி யிரண்டும் "பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே, என்பேதை செல்லற் கியைந்தனளோ" என்று இப்போது வழங்குகின்றது.

சிராமலையைப் பாடிய

கலித்துறை

அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பனை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.. (௭க)

நாலுபேருக்குக் கண் தெரியப் பாடிய

வெண்பா

கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீலம் — மூத்தாடன்
அன்னை முகத்தி லரவிந்த மன்னைதன்
அன்னை முகத்திரண் டம்பு. (௭௨)

கு-பு. காளையார் கோயிலிலே ஒருநாளிரவிலே பொய்யாமொழிப்புலவர் பசியால் வருந்திக் கூத்தாள் என்னுந் தாசியின் வீட்டை யடைந்து அவளை உசாவ, அவளும், அவள் தமக்கையும், தாயும், பாட்டியும், கண்தெரியாது வருந்துவது கண்டு மனமிரங்கி இப்பாடலைப்பாட அவர்கள் கண்தெரியப் பெற்றனர் என்ப. செந்தமிழ் தொகுதி V, பக்கம் 509.

பாண்டியன் 'நீர் நல்ல புலவன்' என்றபோது பாடிய

வெண்பா

அறமுரைத் தானும் புலவன் முப்பாலை
திறமுரைத் தானும் புலவன் — குறுமுனி
தானும் புலவன் றரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனில். (எங)

பொய்யாமொழியார்க்கு அபவாதம் வந்தபோது பாடிய

தரவு கொச்சகக் கலிப்பா.

தேரையார் தெங்கிளநீ ருண்ணூர் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய் பொன்சொரியுங் கொற்றவன்றன் கண்டி
யூரைவாய் மூட வுரையறிந்தோ மில்லையே. (எச)

கு-பு. சீநக்கன் கட்டிலிற் புலவர் ஒருநாள் படுத்து நித்திரை கொள்ள, அவரைச் சீநக்கன் மனைவி தன் கணவனென் றெண்ணி அருகிற்படுத்து நித்திரை போயினள். அதனைச் சீநக்கன் கண்டு, இஃது அறியாமையால் நிகழ்ந்தது என்று எண்ணிக்கொண்டு, புலவரைத் தட்டித் தனக்கு இடம் விட்டுச் சற்று விலகிப்படுக்கும்படி கேட்டான் என்றும் இந்நிகழ்ச்சியால் புலவருக்கபவாதம் உண்டாயிற்றென்றுஞ் சொல்லுப. செந்தமிழ் தொகுதி V, பக்கம் 540.

புலையன்றன் உடல் வெடிக்கப் பாடியது:—

வெண்பா

கோதில்குல மங்கைக் குலோத்துங்கச் சாவகனென்
றோதினேன் றன்னை யொறுப்பதனால் — மாது
துளையாது முத்துவடந் தூக்கினா ளாரம்
விளையாடு செப்பிரண்டின் மேல். (எரு)

சீநக்கருடன் தீப்புகுந்த பாட்டு:—

வெண்பா

அன்றுநீ செல்லக் கிடவென்று யாருயிர்விட்
டின்றுநீ வானுலக மெய்தினாய் — வென்றிதிகழ்
வானக்க பூண்மடவார் மார்பனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக் கிட. (எசு)

கு-பு. அன்று - நான் உனது கட்டிலில் உன் மனைவியுடன் தூங்கிய அன்று. செல்லக்கிட என்ற தொடருக்கு இப்போது கொள்ளு மர்த்தம் பொருந்துவதாகக் காணவில்லை.

கம்பர்

கம்பர் தெய்வவரத்தினால் கவிசொல்லிய நாளிற் பாடிய

வெண்பா

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்
உடையான் சரராம னூர். (எள)

கு-பு. சரராமனென்பது வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பனுக்கொருபெயர்.

ஏரெழுபது பாடி அரங்கேற்றும்போது புதுவைச் சேதிராயனை விடந்தீண்டத் தீர்த்த

வெண்பா

ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே — பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட. (எஅ)

மங்கை யொருபாகன் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களொடுஞ்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
ஏறிய பண்பே யிறங்கு. (௭௯)

கு-பு. இச் சேதிராயனைப் புதுவைச் சடையன் மகனென்று கருதுகின்றனர்—செந்தமிழ் தொகுதி V, பக்கம் 59. இக்கதை தொண்டை மண்டல சதகத்திலும் (57) திருக்கை வழக்கத்திலும் (69, 76) கூறப்பட்டுளது.

காவிரி எச்சில்படப் பாடிய

வெண்பா

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவிரியே — பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் றன்புகழை
யார்போற்ற வல்லா ரறிந்து. (௮0)

கு-பு. போர்வேல் என்பதும் புதுவையான் றில்லறத்தை என்பதும் மூவலூர்க் கல்வெட்டின் பாடம் - செந்தமிழ் IV, பக்கம் 252.

காவிரி பெருக்கடங்கப் பாடிய

வெண்பா

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனாளென் — றிந்நீர்
உரைகிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண். (௮௧)

ஒரு வேளாளன் களத்தில் குறுணிநெல் வாங்கி வேலிக்காலில் இறைத்துப் பாடிய

வெண்பா

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—இட்டமிலாப்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோம் பரிசறிந்து
காப்பா ருழவாளர் காண். (௮௨)

வாணியன் தாதன் விருதுகாளம் பிடிக்கப் பாடிய

கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப்
பானங் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம்
படுமன்னர் காதலிமார்
வேளம் பிடித்தகண் வெள்ளம்
பிடிக்கவெம் பேய்க்கிளம்பேய்
தாளம் பிடிக்கத் தனிவேல்
பிடித்த சயதுங்கனே. (௮௩)

தாதனைப் பாடிய கொச்சகக் கலிப்பா

தாதாவென் றாலுந் தருவென்று சொன்னாலுந்
தாதாவென் றாலுந் தருவனோ தாராதான்
தாதாவென் றாலுந் தருவென்று சொன்னாலுந்
தாதாவென் றாலுந் தருவனாந் தாதனே. (௮௪)

சோழனுடன் கோபித்துக்கொண்டு மதுரைக்குப் போம்போது பாடிய வெண்பா

காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ — மாதவா
கொல்லி மலையுடைய கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ வெங்கட் கிடம். (௮௫)

கூட்டிக்கொண்டுவரச் சோழன் அனுப்பிய இணையாரமார்பனைப் பாண்டியன் 'இவனார்' எனப் பாடிய

வெண்பா

என்னுடைய தம்பி சரராம னுக்கிளையான்
கன்னன் மதயானைக் கம்பன்மகன் — தன்னு
பணையார்நீர் வேலிப் பழனஞ்சூழ் சோணாட்
டிணையார மார்ப னிவன். (௮௬)

கு-பு. பிரதிகளிலெல்லாம் 'வெட்டிக்கொண்டுவர' என்பது பாடம். இக்கதை சோழமண்டலசதகம் 70-ம் செய்யுளில் குறிக்கப்பட்டுளது.

பாண்டியனுந் தேவியும் பல்லக்குச் சுமக்க அப்போது பாடிய

வெண்பா

உமையவளு நீயு மொருங்கொப்பை யொப்பை
உமையவளுக் குண்டங்கோ ஞனம் — உமையவடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின்
பாகந்தோய்ந் தாண்டான் பதி. (அஎ)

பின்னொருகாற் சோழனுடனே கோபித்துக் கொண்டு சொன்ன

வெண்பா

மன்னவனு நீயேயோ மண்ணுலகு மிவ்வளவோ
உன்னையோ நான்புகழ்ந்திங் கோதுவதும் — என்னை
விருந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ சோழா
குரங்கேற்றுக் கொள்ளாதோ கொம்பு. (அஅ)

பிரதாபருத்திரனிடத்திற்போய் அவன் அடைப்பை கட்டிவரப் பாடிய

வெண்பா

அவனி முழுதாண்டு மயிராவ தத்துள்
பவனி தொழுவார் படுத்தும் — புவனி
உருத்திரா வுன்னுடைய வோரங்க ணாட்டிற்
குருத்திரா வாழைக் குழாம். (அகூ)

கு-பு. பிரதாபருத்திரன் ஓரங்கல் நாட்டை அரசாண்ட கணபதியரசர்களில் ஒருவன். இவன் முதலாம் பிரதாபருத்திரன்போலும். இவன் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தவன்.

திருவொற்றியூர் வல்லியைக் கண்டு சொல்லிய

கலிப்பா

இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியோம்
பல்லென்று செவ்வாம்பன் முல்லையையும் பாரித்துக்
கொல்லென்று காமனையுங் கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில்லென்று போனாரென் னெஞ்சைவிட்டுப் போகாரே.

பின்பு சொன்ன

விருத்தம்

நடக்கி லன்னமா நிற்கினல் வஞ்சியாம்
கிடக்கி லோவியப் பாவை கிடந்ததாம்
தடக்கை யான்சது ரானன பண்டிதன்
மடத்து ளாளென் மனத்துறை வல்லியே. (கூக)

கு-பு. திருவொற்றியூரில் சதுரானனபண்டிதன் என்றொரு மடாதிபதி பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்ததாகக் கல்வெட்டுக்களால் தெரிகின்றது.

அப்போது வல்லி வீட்டுக்கு எருமை வாங்கிவரப் போய், காளிம்பன் நிரைகள் மேய்ப்பானைக் கண்டு அவன்பேரிற் பாடிப் பாட்டுச் சொல்ல, அவன் ஈன்ற எருமை ஆயிரங்கொடுத்த

வெண்பா

புக்கு விடைதழுவிக் கொண்டுழுத புண்ணெல்லாந்
திக்கினுறை காளிம்பன் றென்புழன்மான்—அக்கணமே
தோள்வேது கொண்டிலளேற் சுந்தரப்பொற் றோ
வாழ்வேதுங் கண்டிலமே மற்று. [ன்றனுக்கு

கு-பு. புழல் என்பது ஒரு கிராமம்; திருவொற்றியூருக்கு மேற்கில் ஐந்துமைல் தூரத்திலுள்ளது.

மயிலாப்பூரிற் போய்த் தட்டான் திருவாலிமேற் பாடிய

வெண்பா

அண்ணா றிருவாலி யணிமயிலை யத்தனையும்
வெண்ணிலவின் சோதி விரித்ததே — நண்ணுந்
தடந்துப்பு விற்பாணந் தன்முகத்தே கொண்டு
நடந்துப்பு விற்பா ணகை. (௬௩)

பின்பொருகால் குரும்பை என்னுந் தாதியைத் தழுவிச் சொல்லிய

கலித்துறை

சொல்லியைச் சொல்லி னமுதான சொல்லியைச் சொற்கரும்பு, வில்லியை மோக விடாய்தவிர்ப் பாளை விழியம்பினாற், கொல்லியைக் கொல்லியம் பாவையொப் பாளைக் குளிரொற்றியூர், வல்லியைப் புல்லிய கைக்கோ லிவர்வந்து வாய்த்ததுவே. (௬௪)

அதிகாரியை வெட்டுவிக்கப் பாடிய

வழுப்பாட்டு

சென்னி விளைகழனிச் செஞ்சிவாழ் சோழாண்டே
மன்னுபுக ழொற்றியூர் மட்டபக்க நாச்சியார்
தம்மை வரவிட்ட பூழலோ பூழல். (௬௫)

கு-பு. மட்டபக்க நாச்சியாரை இப்போது வட்டப்ப ரீச்சியார் என்கின்றனர்.

பின்பு காளியைப் பந்தம்பிடி என்று பாடிய

வெண்பா

ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர் காகுத்தன் மெய்ச்சரிதை — பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணுக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி. (௬௬)

வெண்பா

வில்லி களங்கைதமின்னை விண்ணவர்தங் கோமானை
வல்லிநெடுஞ் சேடனையும் வாணனையும் — புல்லியுறப்
பார்க்கும் போதும்மதரம் பற்றும்போதுந் தனத்தைச்
சேர்க்கும்போதும் நினைப்பஞ் சென்று.

இதுவுமொரு பாட்டு. (கூஎ)

கு-பு. பார்ப்பதற்கு ஆயிரங்கண் இல்லையே என்று இந்திரனையும், அதரம் பற்றுவதற்கு ஆயிரம்வா யில்லையே என்று ஆதிசேடனையும், தனத்தைச் சேர்ப்பதற்கு ஆயிரங்கை யில்லையே என்று வாணனையும் நினைப்பேம் என்க.

நெற்பயிர் விளைகழனி நென்மலிவாழ் தச்சன்
கற்பமு திண்டோளன் கங்கண கணகணவன்
விற்புரை திருநுதலாள் மிம்மினு மினுமினுமி
சொற்படி வேலைசெய்வாள் துந்துரு துருதுருமி.

இதற்குத் தியாகம் ஆயிரக்கல நெல்லு. (கூஅ)

கு-பு. ஏடுகளில் "இதற்குத்தியாகம் ஆயிரக்கல நெல்லு" என்னுங் குறிப்பு கூஎ-ம் பாட்டைச்சேர எழுதப்பட்டுளது. சோழமண்டல சதகம் 97-ம் பாட்டில் குறித்தபடி நென்மலித் தச்சன்தான் ஆயிரக்கல நெல்லுக் கொடுத்தவன்போலும். நென்மலி என்னுமூர் செஙகற்பட்டு ஜில்லாவில் ஸ்ரீபெரும்பூதூருக்குச் சமீபத்தில் (இரண்டு மைல் தூரத்தில்) உள்ளது.

சோழன் புலியைக் கொல்லவிட்டபோது பாடிய

கலித்துறை

வெங்கண்சிவந்து வெடிவான் முறுக்கி வெகுண்டெழுந்தென்
அங்கம்பிளக்க வரும்புலி யேயன் றிரணியனைப்
பங்கம் படப்பட வள்ளுகி ராலுரம் பற்றியுண்ட
சிங்க மிருப்பதுகாண் கெடுவா யென்றன் சிந்தையுள்ளே.

சோழன் எய்தபோது பாடியது:—

வெண்பா

வில்லம்புஞ் சொல்லம்பு மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து — வில்லம்பு
பட்டுருவிற் றென்னையென் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி. (௧௦௦)

மரணகாலத்திற் பாடிய கவி :—

வெண்பா

ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியுந்
தேம்பாய வுண்டு தெவிட்டுமனார் — தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும்போ தேனு மினி. (௧௦௧)

கு-பு. இப்பாட்டுச் சோழமண்டல சதகத்தில் எடுத்தாளப் பட்டுளது. அச் சதகத்தில் 79-ம் பாட்டுப் பார்க்க.

தாதன் பாடிய வசை :—

கலித்துறை

கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன் சொன்ன
மும்மணிக்கோவை முதற்சீர் பிழைமுன்னை வாளெயிற்றுப்
பைம்மணித் துத்திக்கணமணிப் பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக் கண்பதம்பொக்கக் கொல் யானைச் செயதுங்கனே. ()

கு-பு. இந்தத் தாதன் மேலே 83-ம் செய்யுளிற் கூறிய வாணி யன் தாதன்: தொண்டை மண்டலசதகம் 45-ம் பாட்டும் அதன் மேற்கோளும் பார்க்க.

கம்பன் பேரில் பாடிய கையறம் :—

வெண்பா

இன்றோநங் கம்ப னிறந்தநா ளிப்புவியில்
இன்றோநம் புன்கவிகட் கேற்றநாள்-இன்றோதான்

பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூல்வாங்கு நாள். (௧0௫)

கு-பு. "கையறம் - கையறுநிலை.

வாளை தூக்கிய வலையனைப் பாடியது:—

பந்தரிலே வாளை தூக்கும் பனையன்மகன் சோரன்
தங்கள் வீட்டிலே யிருந்தாலு மிருந்தான்
தங்களாத்தாள் வீட்டிலே யிருந்தாலு மிருந்தான்.

கு-பு. வாளை-வாளைமீன். வலையன்-வலைஞன், மீன் பிடிப்பவன்.

தொல்காப்பியதேவர்

தொல்காப்பிய தேவர், சமணர் கோவிலுக்குச் செங்கலறுப்பிக்கச், சிவதலத்தார் தங்களெல்லையென்ற போது பாடியது:—

வெண்பா

வேத மொழிவிசும்பு மேனி சுடர்விழிமண்
பாதந் திருப்பா திரிப்புலியூர் —நாதர்
பரமாம் பரமாம் படுகடலெண் டிக்குங்
கரமா மவர்க்குயிர்ப்பாங் கால். (௧0௬)

கு-பு. இப்பாட்டுத் தொல்காப்பிய தேவர் பாடிய திருப்பா திரிப்புலியூர்க் கலம்பகத்தில் உள்ளது; இரண்டாம் பாட்டு.

இதுகேட்டுக் கலம்பகம் பாடச்சொல்லிப் பாடினார். அரங்கேற்றும்போது சிதம்பரத்திற் கயிறுபோட்டுப்பார்க்கக் கண்ட கவி :—

கொச்சகக் கலிப்பா

பாடுவார் பாடும் பரிசில் வரிசையெல்லாம்
ஆடுவா ரன்றி யயலா ரறிவாரோ
தோடுவார் காதன்றே தோன்றுத் துணையயர்
பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே. (௧0௭)

கு-பு. இப்பாட்டும் திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகத்தில் உள்ளது; 16-ம் பாட்டு. "அரங்கேற்றும்போது சிதம்பரத்திற் கயிறுபோட்டுப் பார்க்கக்கண்ட கவி' என்னுங் குறிப்பினால் தொல்காப்பிய தேவர் கலம்பகம்பாடி அரங்கேற்றப் போனபோது ஏதோ தடை நிகழ்ந்ததென்றும் அப்போது ஈசன் திருவுளமறி யக் கலம்பகத்தில் கயிறு சார்த்தப்பட்டதென்றும் அப்போது இப் பாட்டுவந்து தோன்றினதென்றும் கருதப்படுகின்றது. சிதம்பரத் தில் கலம்பகம் பாடுவதற்குமுன் இரட்டையர்கள் திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகப் புத்தகத்தில் கயிறு சார்த்திப் பார்த்தார்கள் என்றும் அப்போது இந்தப்பாடல் அகப்பட்டதென்றும் மகாமகோ பாத்தியாயர் சாமிநாத ஐயரவர்கள், தாம் அச்சிட்ட திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகத்து முகவுரையில், கூறுங் கூற்றுப் பொருத்த மாகக் காணப்படவில்லை. அன்றியும் "தொல்காப்பிய தேவர் சொன்ன தமிழ்ப் பாடலன்றி" என்றற்றொடக்கதுக்கவி இரட்டை யரைத் திருவாமாத்தூருக்குக் கலம்பகம் பாடச் சொன்னபோது சொன்னதன்றி, மகா மகோபாத்தியாயர் சொல்லுமாறு, சிதம் பரத்திற்குக கலம்பகம் பாடச் சொன்னபோது சொன்னதன்று. முன்னர் வரும் 112-ம் கவியையும் அதன் குறிப்பையும் பார்க்க.

பின்னிரண்டடியிற் குறித்த கதை:—அசுவதரர் கம்பளர் என்னும் நாகர் இருவர் நாமகளைக் குறித்துத் தவஞ்செய்து மிக்க இசை யுணர்ச்சி பெற்றுச் சிவபெருமானைக் கருதிப் பலநாள் பாடிக்கொண்டிருந்து வரம்பெற்றுப் பின்பு அவருடைய திருச் செவிகளிலே தோடுகளாக அமைந்திருந்தனர் என்ப.

இரட்டையர்

இரட்டையர் திருவக்கைக் கொங்கராயன் அசன மிடுவித்தபோது பாடிய கவி :—

விருத்தம்

**சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்ட நாயன்
றமிழ்க் கொங்கர்கோன், பாணுற்ற வரிவண்டு சேர்வக்
கை நகராதி பக்கத்திலே, ஊணுக்கு வாரா திருப்பாய்**

**விருப்பாகி யுயர்வானிலே, வீணுக்கு நின்றாக மெலி
கின்ற திவ்வாறு வெண்டிங்களே. (க0எ)**

கு-பு. திருவக்கைக் கொங்கராயனை ஆட்கொண்ட நாயன் என்பவனை வில்லிபுத்தூரரைக் கொண்டு பாரதம் பாடுவித்த வக்கபாகை என்னும் ஊரிலிருந்த கொங்கர்குலவரபதி யாகிய ஆட்கொண்டான் என்று கருதப்படுகின்றது. வக்கபாகை வக்கை யென மரீஇயிற்று. வக்கபாகையைத் திருவக்கரை என்னும் சிவத்தல மென்பர் சிலர்; அது பொருந்தாது. திருவக்கரை தொண்டை நாட்டிலுள்ளது; மற்று வக்கபாகையோ கோவல்சூழ் பெண்ணை நாட்டைச் சேர்ந்தது ; பாரதம், பதினேழாம் போர்ச் சருக்கம், 33-ம் கவி பார்க்க. ஆட்கொண்டான் காலம் இற்றைக்கு நானூற்றைம்பது வருடத்துக்கு முன்.

திருவண்ணாமலைச் சம்பந்தன் சமுத்திபாடச் சொல்லச் சொன்னது :—

வெண்பா

**மன்னுதிரு வண்ணா மலையிற்சம் பந்தனுக்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன் — மின்னின்
இளைத்த விடைமடவா ரெல்லாருங் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு. (க0அ)**

கு-பு. இப்பாட்டைப் பிற்காலத்தார் காளமேகப் புலவருக் கேற்றுவர்.

சம்பராசன் விகடசமுத்தி பாடச் சொல்லப் பாடியது:—

கலித்துறை

**எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம் பரன்சம்ப னெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம் வேட்டபின் பூவையன்னாள்
வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துள்ளித்
தெறிக்குந் துவலை யழிக்குஞ் சிந்தூரத் திலகத்தையே. ()**

கு-பு. இரட்டையர் பாடிய ஏகாம்பரநாதருலாவில் சம்பன், சம்புபதி, சம்புகுலத்தொருவன், சம்புகுலப் பெருமான் என்று

மலையடிகள் நூல்

சுட்டப்படுபவன் இச்சம்பராசனே போலும். இவன் பல்லவ குலத்தைச் சார்ந்தவன்.

சம்பராசனது படைவீடு முற்றியிருந்த பாண்டியனுக்குப் பாடியது:—

வெண்பா

காற்று லலைப்புண்டுங் கண்ணன் கடல்கடைந்தும்
ஏற்று னெடுத்துவளைத் தெய்திளைத்தும் — ஆற்றுத
செம்பொன் மலையன்று சேனுக்கிடங் கொடுக்கச்
சம்பன் மலைகை தவா. (௧௧0)

ஆற்குழையோ வரவோ வாயர்பாடி யருமனையோ
பாற்கடலோ திங்களோ தங்கு மாவம் பலபலவாம்
மார்க்கமுமாகி நின்றார் மாதைநாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில் கொண்டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே.

இது, ஆறுவிலகிய பாட்டு. (௧௧௧)

கு-பு. இப்பாட்டுத திருவாமாத்தூர்க் கலம்பகத்தில் வருவது; 61-ம் பாட்டு. இது பாடுமுன் பம்பையாறு ஆமாத்தூரிலுள்ள சிவாலயத்துக்கு மேற்குப் பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்ததென்றும் இது பாடியபின் ஓரிரவு பெய்த மழையால் ஆறு வழிமாறிச் சிவாலயத்திற்குக் கிழக்காக ஓடலாயிற்றென்றும் கூறுவர்.

திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடச் சொன்னபோது பாடிய கவி:—

கொச்சகக் கலிப்பா

தொல்காப் பியதேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் பொருளழற்குப் பாற்கடலொன் றீந்தார்க்கே.

கு-பு. பொருள் - புத்திரன். "பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்-" என்பது காண்க.

காட்டுவழியிற் போம்போது இளஞ்சூரியர் வினவுக்கு முதுசூரியர் விடை கூறியது:—

வெண்பா

குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ — ஒன்றுங்
கொடாதாரைச் சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்னால்
இடாதோ வதுவே யிது. (கக௩)

கு-பு. இளஞ்சூரியர் முதுசூரியர் என்பன இரட்டையர் பெயர். இவர்களில் ஒருவர் முடவரும் ஒருவர் குருடருமா யிருந்தனர் எனவும் குருடர் முடவரைத் தூக்க முடவர் குருடருக்கு வழி யுணர்த்த இவர்கள் செல்வார்களெனவும் ஒரு செய்யுளை ஒருவர் பாதியும் மற்றொருவர் பாதியுமாகப் பாடி முடிப்பார்கள் எனவும் கூறுவர். சங்கு - சங்கநிதி. கோ - காமதேனு.

செயங்கொண்டான்

செயங்கொண்டாரை அபயன் உமதூர்யாதென்று கேட்டபொழுது சொன்ன கவி:—

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

செய்யும் வினையும் மிருளுண் பதுவுந்
தேனுந் நறவும் மூனுங் களவும்
பொய்யுங் கொலையும் மறமுந் தவிரப்
பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் மிதழும் விழியும்
காலுந் நிறமும் போலுங் கமலங்
கொய்யும் மடவார் கண்வா யதரங்
கோபங் கமழுந் தீபங் குடியே. (கக௪)

கு-பு. செயங்கொண்டான் கலிங்கத்துப்பரணி பாடிய புலவன். அபயன் என்றது முதலாங் குலோத்துங்கனை. இவன் கி. பி. 1070-ம் ஆண்டு தொடுத்து 1118-ம் ஆண்டுவரையும் அர

சாண்டவன். தீபங்குடி தஞ்சாவூர் ஜில்லாவில் குழிக்கரை றயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கில் ஐந்துமைல் தூரத்தில் உள்ளது.

அபயன்மேற் கோபம் வந்தபோது பாடியது:—

வெண்பா.

காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா — பூவினிலே
ஆகாப் பொருளை யபயனளித் தான்புகழாம்
ஏகாப் பொருளளித்தேன் யான். (கக௫)

செட்டிகள்மேல் இசையாயிரம் பாடியபோது, செக்கார், புகார் தங்களுக்கு ஊர் என்று பாடச்சொல்லப், பாடியது :—

வெண்பா.

ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவு மெண்ணெயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே — நீடுபுகழ்க்
கச்சிச்செப் பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம்
உச்சிக்குப் பின்புகா ரூர். (கக௬)

ஒட்டக்கூத்தர்

சரசுவதி தம்பலங் கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்த முதலியாரை, அரும்பைத் தொள்ளாயிரம் பாடும்போது, விக்கிரம சோழன் கேட்டு, ஒரு கவியை யொட்டச் சொல்லென்று சொன்னபோது பாடியது:—

கலித்துறை.

நடித்தது நச்சர வுச்சியி லுச்சி மதிலிலங்கை
பிடித்தது வென்ற திருபது தோள்பதினெண் பகலே
முடித்தது பாரதம் வீரப்புலிவைப்ப மூரிச்செண்டால்
அடித்தது பொற்கிரி விக்கிரமசோழவளங்கனே.(கக௭)

கு-பு. இப்புலவர் இயற்பெயர் கூத்தன் என்பது. இவர் பல முறை கவிகளை ஒட்டப்பாடினபடியால் ஒட்டக்கூத்தர் எனப்பட்

டார். விக்கிரமசோழன் முதலாங் குலோத்துங்கன் மகன். இவன் கி. பி. 1118-ம் ஆண்டு தொடுத்து 1143-ம் ஆண்டு வரை அரசாண்டவன். அரும்பைத்தொள்ளாயிரம் அரும்பகைத் தொள்ளாயிரம் என்றும் ஏடுகளில் காணப்படுகின்றது.

சோழன் வரிசை யளித்து விடுத்தபோது கூத்த முதலி கூறிய வகுப்பு :—

இடுக்கட்புண்படு நிரப்புக்கொண்டுழன்
றிரக்கச்சென்றலின் றெனக்குச்சிங்களந்
திடுக்குற்றஞ்சும்வெஞ் சினத்துச்செம்பியன்
றிருக்கைப்பங்கயஞ் சிறக்கத்தந்தன
படுக்கக்கம்பளம் பரக்கக்குங்குமம்
பதிக்கக்கங்கணம் பரிக்கக்குஞ்சரம்
கடுக்கக்குண்டலங் கலிக்கச்சங்கினங்
கவிக்குப்பஞ்சரங் கவிக்கத்தொங்கலே. (கக அ)

இந்த விருதுகள் யாருக்கென்றபோது பாடியது:—

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
பைம்பொற்று ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருண்மானு பரணு
முத்துப்பந் தரினிற்குங் குருளைக்குஞ் சினவேன்
முருகற்கும் பொதியக்கோ முனிவற்கும் பதுமக்
கொத்தற்குஞ் சடிலக்குந் தளருக்கு மல்லாற்
கூழைத்தண் டமிழர்க்கேன் கொடியுங்கா ளமுமே.

விக்கிரமசோழனுலாப் பாடியபோது, இரண்டு கண்ணியை ஒரு பாட்டாகப் பாடென்ற போது, பாடியது :—

வெண்பா

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே — வையம்
அளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான். (௧௨௦)

கு-பு. 'கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ் - செய்ய கரிய திருமால்' என்பது விக்கிரம சோழனுலாவில் 158-ம் கண்ணி.

கவிகளை அறுத்தபோது, சேரனும் பாண்டியனும் பாவமென்று ஓலை வரவிட, இராசா வெட்ட வந்தபோது பாடியது:—

வெண்பா

அன்றையினு மின்றைக் ககன்றதோ வல்லாது
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டாயோ-என்றும்
அடைந்தாரைத் தாங்கு மகளங்கா நீயும்
நடந்தாயோ நாலைந் தடி. (௧௨௧)

கண்டன் செண்டுவெளியிற் குதிரை யேறியபோது பாடியது:—

வெண்பா

கண்டன் பவனிக் கவனப் பரிநெருக்கால்
மண்டளங் காதே யிருந்தவா — கொண்டிருந்த
பாம்புரவி தாயல்ல பாருரவி தாயல்ல
வாம்புரவி தாய வகை. (௧௨௨)

கு-பு. பரிநெடுங்கால் என்றும் பாடம். கண்டன்-சோழன். செண்டுவெளி - அரசர்கள் குதிரையிலேறிச் செண்டாடுகின்ற வெளி. செண்டு-ஒருவகைப் பந்து. இக்காலத்து இதனைப் போலோ (polo) என்பர்.

யானை நிகளம் விடுத்தபோது பாடியது:—

வெண்பா

இன்னங் கலிங்கத் திகல்வேந்த ருண்டென்றோ
தென்னன் றமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா வுன்ற னயிரா வதத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு. (கஉங)

கண்டன் துலாபுருடதானம் பண்ணியபோது பாடியது:—

கலித்துறை

தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற் றுலாத்திடைவண், டுழுகின்ற தார்க்கண்ட னேறிய ஞான்றி னுவாமதிபோய், விழுகின்ற தொக்கு மொரு தட்டுக் காலையில் வேலையில்வந், தெழுகின்ற ஞாயிறொத் தான் குலதீப னெதிர்த்தட்டிலே. (கஉச)

கு-பு. ஒருவனுடைய நிறையளவு பொன்னையோ வெள்ளியை யோ வேறு விலையுயர்ந்த பொருள்களையோ ஒரு பிராமணனுக்குத் தானஞ் செய்வது துலாதானம் அல்லது துலாபுருட தானம் எனப்படும். துலையில் ஒருவனுக்குச் சமமாகப் பொன் முதலிய வற்றை இட்டு நிறுப்பதைத் துலாபாரம தூங்குதல் என்ப.

தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது பாடியது:—

கலித்துறை

கரத்துஞ் சிரத்துங் களிக்குங் களிற்றுடைக் கண் டன்வந்தான், இரத்துங் கபாட மினித்திறப்பாய் பண் டிவனணங்கே, உரத்துஞ் சிரத்துங் கபாடந் திறந்திட்ட துண்டிலங்கா, புரத்துங் கபாட புரத்துங் கல்யாண புரத்தினுமே. (கஉரு)

கு-பு. கபாடபுரம் பாண்டிநாட்டின் பழைய தலைநகர். கல் யாணபுரம் சளுக்க வேந்தருடைய ராஜதானி; வடக்கே நைசாமி ராச்சியத்திலுள்ளது.

கவிகளை அறுத்தபோது புலவரெல்லாரும் வெருளப் பாடியது:—

கலித்துறை

பாட்டுத் தொடுக்கும் புலவோர்க்குக் கூத்தன் பயப்படல்பே
தாட்டுக் கடற்புலி யஞ்சலன் றேவறுத் துக்கிடந்த
சூட்டுக் கதிர்க ணிலத்தடங் காமற் றெருகுத்துமள்ளர்
மேட்டுக் குவாலிடும் பொன்னி நன்னாடுடை வேற்கண்டனே. ()

கவிஞரை வெட்ட வேண்டாமென்று நெற்குன்றவாண முதலியார் பாடியது:—

கலித்துறை

கோக்கண்ட மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனகப்
பூக்கண்ட கொட்டியும் பூவா தொழிந்தில பூவில்விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்திநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்களோ கவிபாடிய பாவலரே. ()

கு.- பு. இந்நெற்குன்றவாணமுதலியார் திருப்புகலூரந்தாதி பாடியவர்போலும். தொண்டைமண்டல சதகத்தில் 26-ம் கவியும் 83-ம் கவியும் பார்க்க.

ஒட்டக்கூத்தன் பாதி சோழன் பாதி பாடியது :—

கலித்துறை

ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்தபிரா னென்றும் நித்தநவம்
பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச
சூடுங் குலோத்துங்கச் சோழனென்றே யென்னைச் சொல்லுவரே.

கு-பு. இந்தக் குலோத்துங்கன் விக்கிரம சோழன் மகன்; இரண்டாங் குலோத்துங்க னென்றும் குமாரகுலோத்துங்கனென்றும் சொல்லப்படுபவன். இவன் பன்னிரண்டாம் நூற்றாண்டின் நடுவில் அரசு செய்தவன்.

உலாப் பாடியபோது பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது:—

விருத்தம்

செங்கான்மட வன்னம்படர் தீயாமென வெருவிச்
சிறையிற்பெடை மறையக்கொடு திரியத்திரள் கமுகின்
பைங்காய்மர கதமீது படர்ந்தேறி நறுந்தண்
பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா
தங்காதலி யருமைந்தரு முடனாக வணங்கித்
தலைகாவெம துடல்காவெம துயிர்காவக ளங்கா
கொங்காமனை துங்காவென மதுரேசர் வணங்குங்
கொல்யானைய பங்காவிவள் குழலோசை பொறாளே.

கு-பு. பேராசிரியர் நேமிநாதர் என்பது ஒருவர் பெயரே போலும். பேராசிரியராகிய நேமிநாதர் என்க. இவர் தொல்காப் பியத்திற் குரையெழுதிய பேராசிரியரல்லர். அவர் ஆத்திரையன் பேராசிரிய னெனப்படுவோர். அவர் இயற் பெயர் மகேசுவரர் போலும். இவர் நேமிநாதஞ் செய்தவருமல்லர்; நேமிநாதஞ் செய் தவர் குணவீர பண்டிதர்.

ஒட்டக் கூத்தர் என்னும் தலைப்பின்கீழ் வரும் ஏனைப் பாட் டுக்கள்போல இதுவும் ஒட்டக் கூத்தர் பாடியதேயாம். நேமி நாதர் பட்டோலை பிடிக்க இதனைப் பேராசிரியர் பாடினார் என்று சொல்வது பொருந்துவதாகக் காணவில்லை.

இராசாவுக்கு வேளையேதென்று கேட்ட சோம னுக்குச் சொல்லியது:—

வெண்பா

தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் றானுரைப்ப
துன்னுடைய கீர்த்தி யுயர்நலமே — துன்னுபுகழ்ச்
சேமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை
யாமா ருரைக்க வினி. (௧௩0)

கு-பு. சோமன் என்பவன் திரிபுவனம் என்னும் ஊரிலிருந்த ஒரு பிரபு; ஒட்டக் கூத்தரைப் பழிகாரர் கையினின்று தப்புவித்த வன். திரிபுவனம் தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணத்திலிருந்து திருவிடை மருதூருக்குப் போகும் வழியில் திருநாகேசுரத்திற்குச் சமீபத்திலுள்ளது.

பழிகாரர் தொடர்ந்தபொழுது சோமன் வாசலில் ஓடிச் சொன்ன கவி:—

வெண்பா

அடையென்பார் தள்ளென்பா ரன்பொன்றில் லாமற்
புடையென்பார் தங்கடைக்கே போகேங்-கொடையென்றால்
முந்துஞ்சோ மாபுவனை முன்னவனே நின்கடைக்கீழ்
வந்துய்ஞ்சோ மாதலான் மற்று. (கஈக)

கு-பு. புவனை - திரிபுவனம்.

கூத்தன் மாணாக்கன் பாடிய அந்தாதிச் சமுத்தி:-

கலிப்பா

மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வின்னமென் மகள் கண்ணுறங்கிலள் கையனைக்
கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளை குதட்டநின்
றாவுறங்கு புகாரசஞ்சல வஞ்சமென்ன வடுக்குமே (கஈஉ)

இரண்டாமடி அம்பிகாபதி பாடியது:—

விருத்தம்

ஏகா வடமென் னிருகொங் கையின்மேல்
ஆகா வடமான தறிந்திலையே
தியாகா பரணு திசையா னைகளின்
பாகா பரராச பயங்கரனே. (கஈஈ)

கு-பு. இப்பாட்டு எந்தச் சமயத்தில் பாடின தென்பது விளங் கவில்லை. இரண்டாமடி பாடின அம்பிகாபதி கம்பருடையமகனோ அல்லனோ என்பதுந் தெரியவில்லை. தமிழில் தண்டியலங்கார மியற்றிய தண்டி என்பவர் தமது நூலில்

"சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள் — ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன் றன்வாக்கு"

என்று ஒட்டக் கூத்தர் பாட்டைப் புகழ்ந்திருத்தலினால், இங்கே கூறப்பட்ட அம்பிகாபதி அவருடைய தந்தையாகிய அம்பிகாபதியே போலும். இவர் ஒட்டக் கூத்தருக்கு மாணாக்கராதல் வேண்டும்; இல்லையாயின், உற்ற நண்பினராதல்வேண்டும்.

இராசா கை கொடுத்தபோது பாடியது:—

கலித்துறை

கொலையைத் தடவிய வைவே லரக்கர் குலமடியச்
சிலையைத் தடவிய கையே யிதுசெக தண்டத்துள்ள
மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்தவொன்னார்
தலையைத் தடவி நடக்குங்கொல் யானைச் சயதுங்கனே.

மடையனைத் தண்டஞ்செய்ததை விலக்கப் பாடியது:—

கலித்துறை

மீனகம் பற்றிய வேலையு மண்ணையும் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யேபொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள்பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனதுங்கனே. (கரு)

அரியைப் பாடவேண்டுமென்னப் பாடியது :—

கலித்துறை

ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்தும்
பேரே வருமென்ன பேறுபெற் றேன்பெரு நான்மறையின்
வேரே மிதிலையின் மின்னுட னேவெய்ய கானடந்த
காரே கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே ()

கு-பு. ஒட்டக் கூத்தர் சரிதத்தைச் செந்தமிழ் இரண்டாந் தொகுதி, கஉ-ம் பகுதியிற் காண்க.

புகழேந்தி

புகழேந்தியார் பாடியது :—

கலித்துறை

சத்தம் பயிலும் புலவோர் சகலித்தண் டோட்டம்புக்க
பித்த னிவனென்ப தென்னைக்கண் டாய்பிழைத் துக்கணத்தே
தத்த முதுகிட்ட தெவ்வேந்தர் தங்கள் தடமகுட
சத்த மலசத்த மாகுங்கொல் யானைச் சயதுங்கனே. ()

தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது பாடியது:-

கலித்துறை

தூபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழன்மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் றானின் றிருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாய்த்துநின்ற
கோபந்தணி யன்னமே யெளிதோநங் குடிப்பிறப்பே ()

இழையொன் றிரண்டு வகிர்செய்த வற்றொருன் றிணையுமிடைக்
குழையொன் றிரண்டுகெட் கொம்பனை யாய்கொண்ட கோபந்தவிர்
மழையொன் றிரண்டுகைம் மான பரணன்டன் வாசல்வந்தால்
பிழையொன் றிரண்டு பொறுப்பதன் றோகடன் பேதையர்க்கே.

நானே யினிச்சொல்லி வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடந்திறந்துவிடாய் செம்பொன் மாரிபொழி
மானே ரபய னிரவி குலோத்துங்கன் வாசல்வந்தால்
தானே திறக்குநின் கைம்மல ராகிய தாமரையே. (௧௪0)

இராசா துலாபுருட தானம் பண்ணியபோது பாடியது :—

வெண்பா

பொருந்த வொருதட்டு மேருப் புகினும்
இருந்த வொருதட் டெழாதால் — திருந்து
மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைபுக்க தெவ்வாறு நீ. (௧௪௧)

குதில் தேவியை உயர்த்திப் பாடியது:—

கலித்துறை

பழியும் புகழு மெவர்க்குமுண் டாமிந்தப் பாரினுனக்
கழியுஞ் சிலையுங் கயலுமன் றேவக ளங்கதுங்க
மொழியும் பொழுதெங்கள் பெண்சக்ர வர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமு மாகிப் போதுன்னை வெல்கின்றவே.

கு-பு. புகழேந்திப் புலவர் சரிதத்தைச் செந்தமிழ் இரண்டாந் தொகுதி, கஉ-ம் பகுதியிற் காண்க.

சார்வபௌமபாண்டியன் உண்டி நிமித்தமாகக் கோபித்து ஆரிய சேகரன் வாசலிலேயும் இந்தக் குறும்பு செல்லுமோ என்னப் பாடிய

வெண்பா

கவியரசர் தம்முனிவு கண்டாற் புகழ்கொள்
புவியரசர் சீறுர் பொறுப்பர் — கவியரசர்
உன்னல் முனியி லவர்பொரு ரோதுமவர்க்
கென்னாடுஞ் செல்லாத தில். (கசங)

கு-பு. இது முதல் எழுசவியும் புகழேந்தியார் பாடினதானல், அவர் இலங்கை சென்றிருந்தவரெனவும், அங்குள்ள கண்டி, கொழும்பு, கதிர்காமம் முதலிய ஊர்களுக்குப் போனவரெனவும், இலங்கையில் அரசாண்ட சிங்கையாரியச் சக்கரவர்த்தி காலத்தவ ரெனவும் ஏற்படும். சிங்கையாரியச் சக்கரவர்த்தி காலம் பதின் மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதி. புகழேந்தியார் காலம் பதின் மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியாயின், அவர் ஒட்டக் கூத்தரோ டொரு காலத்திருந்தவ ராகார்.

தேவாரம்பாடிய திருஞானசம்பந்தர், சுந்தரர், திருப்புகழ் பாடிய அருணகிரி நாதர், மகாராஜாதுறவு பாடிய குமார தேவர் முதலிய பல புலவர்கள் இலங்கை சென்றிருந்ததாக அவர்களுடைய பாடல்களால் தெரிகின்றது.

ஆரிய சேகரனிடத்திற் போயிருந்து புத்த சமயத்திற் கடகம் யானை வாங்கி மீண்டு மதுரையில்வந்து பாண்டியன் வரிசையளிப்ப இருந்தபின் ஆரியசேகரன் பட்டானென்று கேட்டபோது பாடிய கவி:—

வெண்பா

அஆ விதியோ வடலா ரியர்கோமான்
எஏ வலரா விழிந்தநாள் — ஒஓ
தருக்கண் ணிலுங்குளிர்ந்த தண்ணளி தந்தாண்ட
திருக்கண் ணிலுஞ்சுடுமோ தீ. (கசச)

கதிர்காமத்து வேலர்முன் பாம்பை மயில் விடப் பாடியது:—

வெண்பா

தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ — தீயரவைச்
சீறு மயிற்பெருமாள் தென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெருமா ளே. (கசரு)

கு-பு. கதிர்காமம் என்பது இலங்கையிலுள்ள பிரசித்திபெற்ற சுப்பிரமணியஸ்தலம்; அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்பெற்றது.

இராசாவைப் பாடாமல் ஒட்டக்காரனைப் பாடியது:-

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கயக்காவி நாறுங் கொழும்பிற்பிர சண்டா
காரோர்கொ டைச்செப்கை யாரோதன்மைந்தா
இயக்காநின் மார்பிற் செழும்புன்னை யந்தார்
இப்போது நீநல்கி லென்பேதை தன்மேற்
சயக்காம வேளம்பு தையாது முத்தின்
தாமஞ்சுடா சந்தனம் பூசினுங்
தியக்காது வேயுஞ் செவிக்கும் பொறுக்குந்
தென்று மூளாது திங்கட் கொழுந்தே. (கசசா)

கு-பு. கொழும்பு இப்போது இலங்கைக்குப் பிரதான பட்டணமா யுள்ளது.

பாண்டியன் வாசலில் வந்து அவன் புறப்படவில்லை யென்று பழியாகப் பாதி பாடி, அவன் வந்து வணங்கப் புகழாகப் பாதி பாடியது :—

கலித்துறை

எண்ணீர்மை நூலுக் ககத்திய னுமிவ னென்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றி விரகல்ல விக்ரம மாறன்செஞ்சொற்
பண்ணீர்மை தேரும் பராக்ரம மாறன் பதங்கழுவுந்
தண்ணீர் குடித்தல்லவோ கும்பயோனி தமிழ்கற்றதே.

ஆரியசேகரன் ஆனைமேல் ஆயிரம் பொன்னும் வரவிட, அந்த யானையைப் பாண்டியன் வந்து கேட்கப் பாடியது:—

கலித்துறை

பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்குங்
காவலர் நிற்கும் படிவைத்த வாகண்டி யொன்பதினும்
மேவலர்மார்பினுந் திண்டோளினுஞ் செம்பொன்மேருவினுஞ்
சேவெழுதும் பெருமாள் சிங்கையாரிய சேகரனே. ()

கு-பு. கண்டி சிங்களவரசர் தமிழரசர் காலங்களில் இலங்கைக்கு இராஜதானியா யிருந்தது; இப்போது மத்திய மாகாணத்துக்குத் தலை நகராயுள்ளது.

சித்திரத் தனுமனைப் பாடச்சொல்லப் பாடியது:—

கலித்துறை

புராதனமெண்ணுங் கவிப்புலவீ ரிந்தப் புன்குரங்கு
மராவனம்விட்டிங்கு வந்ததென்னே வந்தவாறு சொல்வேன்
தராதல மெண்ணுந் தமிழ்மா றனையுமித் தம்பியையும்
இராகவ னென்று மிலக்குவ னென்றுமிங் கெய்தியதே.()

வேம்பத்தூரார் சமுத்தி சொல்லப் பாடியது:—

வெண்பா

இந்து நுதலழ கோரகுரா மாவிவட்குக்
கொந்து முடிமுகிலோ கோவிந்தா-வெந்திறல்சேர்
வேலோ விழியிரண்டும் வேங்கடவா ணுவயிறும்
ஆலிலையோ நாரா யணு. (கரு௦)

மூவேந்தர்

பழையனூரார் பழிதீர்த்த தீக்குழி அவியாதெரிய மூவேந்தரும் வந்து பார்த்துப் பாடியது:—

வெண்பா

யாவரே காராளர் யாவ ரிணையாவார்
நாவலோ நாவலோ நாவலோ — கோவைப்
பொருப்பா லளித்தார்க்குப் போதுமே யுண்மை
நெருப்பா லமைத்தார்க்கு நேர்.

இது சேரன். (கருக)

எல்லை பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்துத்
தொல்லை மனுக்காக்கத் தோன்றிற்றே — கொல்லை
வழியிலொரு பேய்நின்று வஞ்சனையாற் செய்த
குழியிலெழு செந்தீக் கொழுந்து.

இது சோழன். (கருஉ)

பிழைத்தாரோ காராளர் பேய்மகள்சொற் கேட்டுப்
பிழைத்தார்க ளல்லர்பிழை தீர்ந்தார்—பிழைத்தார்கள்
எல்லாருங் காண வெரியகத்தே மூழ்கினுர்
எல்லாரு மின்று முளர்.

இது பாண்டியன். (கருங)

கு-பு. பழையனூரில் ஒரு வேளாளன் இருந்தான். அவனுக்கோர் ஆண் குழந்தையும் ஒருபெண் குழந்தையும் இருந்தன. பெண்

குழந்தை இறந்து திருவாலங்காட்டில் பேயாய்த் திரிந்துகொண்டிருந்தது. ஒருநாள் காஞ்சிபுரத்து வணிகன் ஒருவன் அந்தக் காட்டு வழியே தனித்துச் சென்றபோது, அந்தப் பேய் அவனுடைய மனைவியைப் போல வடிவு கொண்டு, அவனைத் தொடர்ந்தது. அவன் அதனைப் பேயென்றறிந்து கொண்டு அதன் வார்த்தைக் கிணங்காது சென்றான். அந்தப் பேய் அவனைப் பழையனூருக்குத் தொடர்ந்து சென்று, அங்கே அம்பலத்திற் கூடியிருந்த வேளாளரிடத்தில் அவன் தனது கணவனென்றும் தன்னைக் காரணமின்றி விட்டுச் செல்லுகின்றானென்றும் முறையிட்டது. அவர்கள் "நீ இவன் மனைவி என்பதற்குச் சாட்சி யாது?" என்று வினவப், பேய் "எனது குழந்தையே சாட்சி; இதனை இதோ விடுகின்றேன்; இது போய்த் தந்தையின் மடிமீது ஏறுகிறதோ இல்லையோ? பாருங்கள்" என்று சொல்லித் தன் ஒக்கலையிலிருந்த குழந்தையைக் கீழே விட்டது. குழந்தை சென்று வணிகனை அப்பாவென்றழைத்து அவன் மடி மீதேறிற்று. அதனைக்கண்ட வேளாளர்கள் வணிகனை அப்பேயை ஏற்றுக்கொள்ளும்படி சொன்னார்கள். வணிகன் அது பேயென்று மீட்டும் மறுக்க, வேளாளர்கள் "இது பேயானால் நாங்கள் பிணையாவோம்" என்று சொல்லிப் பேயை அவனுடன் கூட்டி யனுப்பினார்கள். பேய் அவ்விடத்தேயே அவனுடன் அரையுட் புகுந்து அவன் உயிரைக் குடித்து மறைந்தது. அதனைக்கண்ட அம்பலத்து வேளாளர்கள் தங்கள் சொற்படி தீப்பாய்ந்து தங்கள் பழியைத் தீர்த்தனர் என்ப.

இக்கதை "வஞ்சம் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகை கேட்டஞ்சும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே" என்று திருஞானசம்பந்த சுவாமிகளால் தமது தேவாரத்துக் குறிப்பிக்கப் பட்டதுமன்றி,

"மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரு முழுகிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப
னண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்

பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ''

என்று உமாபதி சிவாசாரியரால் சேக்கிழார் புராணத்தும் கூறப்பட்டிருக்கின்றது. தொண்டைமண்டல சதகம் 8-ம் பாட்டும் பார்க்க.

அச்சுத களப்பாளன் தளையிட்டபோது பாடியது:—

வெண்பா

தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானுங் — கனைசீர்
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுணங்கு மச்சுதன் முற்றத்து.

இது சேரன். (க௫௪)

அரச குலதிலக னச்சுதன்முற் றத்தில்
அரச ரவதரித்த வந்நாள் — முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடு மோசை மிகும்.

இது சோழன். (க௫௫)

குறையுளா ரெங்கிரார் கூர்வே லிராமன்
நிறையாறு திங்க ளிருந்தான் — முறைமையால்
ஆலிக்குந் தானை யலங்குதா ரச்சுதமுன்
வாலிக் கிளையான் வரை.

இது பாண்டியன். (க௫௬)

பாண்டியனிது பாடியபின்பு ஒருவிலங்கு கூடப் போடப், பின்பு பாடியது:—

குடகர் குணகடலென் றார்த்தார் குடகர்க்
கிடவர் வடகடலென் றார்த்தார் — வடகடலர்
தென்கடலென் றார்த்தார்தென் றில்லையச்சு தாநின்றன்
முன்கடைநின் றார்க்கு முரசு. (க௫௭)

கு-பு. இந்த அச்சுத களப்பாளர் யார் என்பதும் யாதுகாரணத்தினால் இவர் மூவேந்தரையும் சிறையிலிட்டாரென்பதுந் தெரியவில்லை. தமிழ்நூல்களால் அறியப்படும் அச்சுதகளப்பாளர் ஒருவர் உளர். அவர் சைவசமய சந்தான குரவர்களுள் முதல்வரும் சிவஞானபோதகர்த்தாவுமாகிய மெய்கண்டதேவருடைய தந்தையார்; பன்னிரண்டாம நூற்றாண்டின் கடையிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முதலிலும் நடு நாட்டிலே திருக்கடந்தை என்றும் திருப்பெண்ணாகடம் என்றும் சொல்லப்படும் திருந்தூங்கானை மாடத்திலிருந்தவர். அவர் வேளாளர். இங்கே கூறப்படும் அச்சுத களப்பாளரை, "அரசகுலதிலகனச்சுதன்" என்பதனால், இராஜ வமிசத்தவர் என்று கொள்ளவேண்டியிருக்கின்றது. "தென்றில்லை யச்சுதன்" என்பதனால் அவரூர் சிதம்பரமாகும்.

சேரன்

சேரன் கணைக்காலிரும்பொறை, செங்கணாற் குணவாயிற் கோட்டத்துத் தளைப்பட்டபோது, பொய்கையாருக் கெழுதி விடுத்த பாட்டு:—

ஆசிரியப்பா

குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே. (கரு-அ)

இது கேட்டுப் பொய்கையார் களவழி நாற்பது பாடச், செங்கணான் சிறைவிட் டரசளித்தான்.

கு-பு. இது புறநானூற்றில் வருவது; ௭௪-ம் பாட்டு. அங்கே இது "சேரமான் கணைக்காலிரும்பொறை, சோழன் செங்கணானோடு போர்ப்புறத்துப் பொருது, பற்றுக்கோட்பட்டுக், குடவாயிற்

கோட்டத்துச் சிறையிற் கிடந்து, தண்ணீர் தாவென்று பெறாது, பெயர்த்துப் பெற்றுக், கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சியபாட்டு" என்று கூறப்பட்டுளது. புறநானூற்றுக் குறிப்புக் காலத்தால் முந்தினதாதலின், அதுவே கொள்ளத்தக்கது. பொய்கையார் களவழி பாடிச் சிறைவீடு கொண்டது வேறொரு சேரனைப்போலும். ஆள்வினையின்றென வாளிற்றப்பார் என்றும் பாடம்.

பாண்டியன்

பாண்டியன் நெடுஞ் செழியனைச் சேரனும் சோழனும் சிறியனென்றிகழ்ந்திடப் பொய்கையார் வந்து கூறக்கேட்ட நெடுஞ்செழியன் கூறின வஞ்சினக்காஞ்சி:-

அகவல்

நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்கப் படேஎ னாகிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே. (கஙு)

கு-பு. இது பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டு; புறநானூறு, ௭௨. மாங்குடி மருதனார் பத்துப் பாட்டு ளொன்றாகிய மதுரைக்காஞ்சி பாடினவர்; மாங்குடி கிழார் என்றும் சொல்லப்படுவர்.

பாண்டியன் கழாய்க் கூத்துப் பார்க்குமிடத்தில் பராமுகமாகக், கூத்தாடினவள் கோபித்துக்கொண்டு விழுங்கால் பாடியது:—

கலித்துறை

மாகுன் றனையபொற் றோளான்
  வழுதிமன் வான்கரும்பின்
பாகென்ற சொல்லியைப் பார்த்தென்னைப்
  பார்த்திலன் பையப் பையப்
போகின்ற புள்ளினங் காள்புழற்
  கோட்டம் புகுவ துண்டேல்
சாகின்றன ளென்று சொல்லீ
  ரயன்றைச் சடைய னுக்கே. (க௬0)

கு-பு. இப்பாட்டுத் தொண்டை மண்டல சதகம் 33-ம் செய்யுளில் எடுத்துச் சொல்லப்பட்டுளது. பாண்டியன் முன் கழைக் கூத்தி ஒருத்தி விச்சுளிப் பாய்ச்சல் என்னும் அரிய வித்தையை ஆடினபோது அவன் பராமுகமாக இருந்துவிட்டுப் பெயர்த்தும் அதனை ஆடச் சொல்ல, அரசனாணையை மறுத்தற்கஞ்சி ஆடுபவள், அதனால் தன் உயிர்க்கு நாசம் வருமென்று கண்டு, இப்பாடலைச் சொன்னாள் என்ப. புழற் கோட்டம் என்பது தொண்டை மண்டலத்திலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்று. மேலே ௩௨-ம் பாட்டில் வந்த புழல் என்னு மூரால் பெயர் பெற்றது. புலியூர்க் கோட்டத்துக்கு அடுத்து வடக்கேயும் பையூர்க் கோட்டத்துக்குத் தெற்கேயு முள்ளது. ஞாயிறு, அம்பத்தூர், ஆவடி, ஆற்றூர், எழும்பூர், சென்னைநகர் முதலியன இக் கோட்டத்திலுள்ள ஊர்கள்.

பாண்டியன் இந்தக் கவிதை கேட்டுச் சோதிக்கச் சிலரை விடுக்க, அவன் கூலி முதுகிற் சோறிட்டபோது பாடியது :—

அகவல்

இரவலாளரே பெருந்திருவுறுக
அரவுமிழ் மணியு மலைகடலமுதுஞ்
சிங்கப் பாலுந் திங்கட் குழவியும்
முதிரை வாலுங் குதிரை மருப்பும்
ஆமை மயிரு மன்னத்தின் பேடும்
ஈகென விரப்பினு மில்லென வறியான்
சடையனை யயன்றைத் தலைவனை
உடையது கேண்மி னுறுதியா ராய்ந்தே (கசுக)

கு-பு. இங்கே 'அவன்' என்றது அயன்றைச் சடையனை. கூலி முதுகிற சோறிட்டது "அனறு கூலிமுது கன்னமிட்டவ னெனன்னை கூன்முது கழிக்கிலான்" என்று ஆறைக் கலம்பகத்தி லும் "கூலி முதுகிற் சுடசசுடவப் போதுசமை-பாலடிசி றன்னைப் படைக்குங் கை" எனத் திருக்கை வழக்கத்திலுங் (கஉ-ம் கண்ணி) கூறப்பட்டுளது. முதிரை - அவரை துவரை முதலிய; அவற் றிற்கு வாலில்லை.

தொண்டைமண்டலத்துவேளாளரைப் பாடியது:—

வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டாரென்
றையன் களந்தைப் புகழேந்தி
யாண்டா னுரைத்த வவரோநீர்
எய்யுஞ் சிலைவேள் வடிவோனே
யிராசாதிபனே யிரப்போர்கள்
ஐயந் தவிர்த்த பெருமானே
யாவோ மடியோ மாவோமே.

இது பின்னிரண்டடி வேளாளர் பாடியது. (கசுஉ)

கு-பு. இந்தப் பாட்டுத் தொண்டை மண்டல சதகம் கஎ-ம் செய்யுளில் எடுத்துக் கூறப்பட்டுளது. புகழேந்தி செஞ்சிக்குத் தலைவனாகிய கொற்றந்தை என்பவனைப் பாடிய கலம்பகத்தில் "வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டார்" என்று கூறினர். அச் செய்யுள் வருமாறு —

"கையும் படியென் றுங்கொற்ற நங்கோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெறுநுண் ணிடைமடவா யகிலின் றூப முகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று பிரசத் துளியே பிழையாது
வையம்பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே."

அறம் வளர்த்த முதலியாரைப் பாண்டியன் கலம்பகம் பாடலாமோ என்ற புலவர்க்குக் கூறியது:—

கலித்துறை

உங்கண் மனந்தெரியும் புலவீரொருசீர் மரபோன்
திங்கண் மரபினத் திங்களின் கூடச் செம்பூரறமா
துங்கன் மரபினிற் கங்கையுஞ் சூடினன் சோதியன்றே
எங்கண் மரபுண் டெனக் கவிபாடினம் யாமவற்கே.

கு-பு. இப்பாட்டு மிகவும் பிழைபட்டுக் கிடக்கின்றது. முதலடியில் 'மரபெண்' என்றும், இரண்டாமடியில் 'திங்கண் மரபு மத்திங்களின்' என்றும் 'கூடற் செம்பூரறமால்' என்றும், நாலாமடியில் 'மரபொன்றெண' என்றும் பாடபேதமுள. அறம் வளர்த்த முதலியார் யாரென்பது விளங்கவில்லை.

விட்டல ராசனைப் பாடியது:—

வெண்பா

தொட்டிலிருக்கத் தொடங்கிய நாண்முதலாய்
அட்டதிக்கு நின்குடைக் கீழாயிற்றே—விட்டலயா
தன்குமரி யன்றித் தனிக்குமரி கொள்ளாநீ
தென்குமரிக் கேகுவதென் செப்பு. (கசுச)

கு-பு. இப் பாட்டும் பாண்டியனே பாடினது போலும். இந்த விட்டல ராசா விஜய நகரத்து ராஜ வமிசத்தைச் சார்ந்தவர். இவர்

சதாசிவராயர் (1542-1567) காலத்திருந்தவர். தஞ்சாவூர் ஜில்லாவில் கோவிலடி என்னு மூரிலுள்ள கல்வெட்டும் தோசூரி கோனேரு கவிசெய்த தெலுங்குப் பாலபாகவதமும் இவரைச் சந்திரவமிசத்த வரென்றும் ஆரவீடு-புக்கராஜனின் பெரும்பேரன் என்றும் கூறு கின்றன. ஆரவீடு-புக்கராஜன் மகன் ராமராஜன்; ராமராஜன் மகன் திம்மராஜன்; திம்மராஜன் மகன் விட்டலராஜன். விட்டலராஜன் சகோதரனாகிய சின்ன திம்மராஜ னென்பவன் சந்திரகிரியை ஆண்டுகொண்டிருந்ததாகக் கல்வெட்டுக்களால் தெரிகின்றது. வீரப்பிரதாப ஸ்ரீ மகா மண்டலேஸ்வர ராமராஜ திம்மராஜ விட்டல தேவ மகாராஜா என்பது விட்டலராஜாவுடைய முழுப் பெயர். திருவிடை மருதூரிலுள்ள கல்வெட்டொன்று, சக வருஷம் ௧௪௬௬-ல் (கி. பி. 1544-45) வெட்டப்பட்டது, இவர் அநந்த சயனத்துக்கு(திருவாங்கூருக்கு)ப் படை யெடுத்துச் சென்றதாயும், இவருடைய சேனை தெற்கிலுள்ள அநந்த சயனந் தொடுத்து வடக்கில் (நைசாம் தேசத்தில்) உள்ள முதுகல் வரைக்கும் சண்டைசெய்து ஊர்களைப் பிடித்ததாயும், இவர் திருவிடை மருதூர்ச் திருச்சிற்றம்பலத்தான் என்பவன் வேண்டுகோளின்படி, திருவிடை மருதூர்ச் சிவன் கோயிலுக்குரிய ஆவணம் சிற்றுடி என்னும் இரண்டு கிராமங்கள், மறுபேர் கைப்பட்டிருந்தவற்றை, விசாரணை செய்து அவற்றின் எல்லைக்கல்லில் மருதப்பேசுரர் முத்திரை யிட்டிருந்தமைகண்டு, சிவன் கோயிலுக்குச் சேர்த்ததாயும் கூறுகின்றது. இன்னுமிவர் கன்னியாகுமரி வரைக்கும் சென்றதற்குச் சான்றாகக் கன்னியா குமரிக்குச் சமீபத்திலுள்ள சுசீந்திரத்தில் ஒரு கல்வெட்டு, கொல்ல மாண்டு 722 (கி. பி. 1546-47)-ல் வெட்டினது, அங்குள்ள விஷ்ணு கோயிலில் இவர் பிறந்த நாளில் அர்ச்சனை செய்வதற்காக ஜயதுங்கநாட்டுப் பூதலவீர ஸ்ரீராமவன்மா என்னும் கேரளவரசன் பொருள் வைத்ததைக் கூறுகின்றது. இவர் திருச்சிறுப்பள்ளிச் சீமையை ஆண்டவர். மிஸ்டர் சிவெல் என்பவர் எழுதிய புராதன பட்டிகையால் இவர் மதுரையில் கி. பி. 1547-48-ல் அரசாண்டதாகவும் தெரிகின்றது. விட்டு, விட்டி, விட்டல என்னுங் கன்னடச் சொற்கள் விஷ்ணு என்னும் சமஸ்கிருத பதத்தின் திரிபு. விஷ்ணு என்னும் வடமொழி தமிழிற் போலக் கன்னடத்திலும் விட்டு என்று திரியும்.

பணியாரக் கூடத்துள் மதுரைக்குப் பாண்டியன் தேவி விடுத்த கவி:—

விருத்தம்

என்னையவரற மறந்தும் யானவரை
மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்றானோ வப்பிறப்பிற்
செய்ததவ முடிந்த வாறோ
கன்னன்மத னபிராமன் வரதுங்க
ராமனியற் காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்கா ளினியெவ்வா
றுயிர்தரிக்கிங் காற்று மாறே. (௧௫)

செப்பாரு முகிழ்முலையா ரெல்லாருங்
கணவருடன் சேர்ந்து வாழ
ஒப்பாரு மில்லாவென் கணவனுடன்
யான்கூடி யுறவா டாமல்
வெப்பாலு மிகுகாமத் துயராலு
நாடோறு மெலிந்து வாடி
இப்பாடு படவென்றோ விறையவனென்
றலையோட்டி லெழுதி னானே. (௧௬)

எண்டிசா முகமுந் திங்க ளிளநிலா வெள்ளங் காயக்
கொண்டமால் பெருகுந்தோறுங் கொழுங்கணீர் முலையிற் கோப்பப்
பண்டுநா மறியாக் காமத் துயரினாற் படுவ தெல்லாம்
வண்டுகா ளுரையீ ருங்கள் வரதுங்க ராம னுக்கே. (௧௭)

கு-பு இப்பாட்டுக்களால், இம் மூன்று பாட்டும் பாடினவள் வரதுங்கராம பாண்டியனுடைய தேவி என்பது தெரிகின்றது. வரதுங்கராம பாண்டியன் பிரமோத்தர காண்டமும் கருவை அந்தாதிகளும் பாடினவன். இவனை அதிவீரராம பாண்டியன் சகோதரன் என்பர். அதிவீரராமன் அரசு செய்யத் தொடங்கியது சாலிவாகன சகம் ௧௪௮௪-ம் (கி. பி. 1562) ஆண்டில்; முடி சூடினது சகம் ௧௪௮௯-ம் ஆண்டில். காசிநாடென்பது திருநெல்வேலியிலுள்ள தென்காசி.

சத்திமுற்றப் புலவன்

சத்திமுற்றத்திலுள்ள ஒரு புலவன் பாண்டியன் மதுரைக்குப் போகிப், பாண்டியன் வாசற் புலவர் வாசல் விடாமல் மறிக்க, ஊரில் அம்பலத்திற் கிடந்தான் பாடியது:—

அகவல்

நாராய் நாராய் செங்கா லாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா லாராய்
நீயுநின் பெடையுந்
தென்றிசைக் குமரி யாடி வடதிசைக்
காவிரி யாட வேகுவி ராயின்
சத்தி முற்றத்து வாவியிற் சென்று
நனைசுவர்க் கூரை யரிகுரற் பல்லி
வரவுபார்த் திருக்கு மனைவியைக் கண்டெங்
கோமான் வழுதி கூடன் மன்றத்
தாடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலுறத் தழீஇ
அலகு திறந்த பல்லின னாகிப்
பேழைசெய் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மெனுமே.

இதனை ராஜா நகரி சோதனையிற் கேட்டு மறுநாள் வரிசைபண்ணி, வீடும் ஆள் விட்டுக் கட்டுவித்துப் பின் பனுப்பினான். (சகூஅ)

கு-பு. இச் செய்யுளைப் புறநானூற்றில் வரும் 'அன்னச் சேவலன்னச் சேவல்' என்றற் றொடக்கத்து கூஎ-ம் கவியோடு ஒப்பிடுக. இச் செய்யுள் சோழமண்டல சதகத்து 63-ம் பாட்டில் எடுத்துக் குறிப்பிக்கப்பட்டுள்ளது.

சோழன் புலவன்

பாண்டியன் போரிற் புறந்தந்தோடுவது கண்டு சோழன் புலவன் கூறியது :—

வெண்பா

மான பரனபயன் வந்தா னெனவழுதி
போனவழி யாரேனும் போவரோ — ஆனல்
படவே யமையாதோ பாவியே னிந்தக்
குடைவே லுடைநுழைந்த கோ. (கசுகூ)

கு-பு. பாவியேன் - கெட்டேன் என்பதுபோல இரக்கத்தின் கண் வந்த குறிப்புமொழி. குடைவேல் - நெடிய முட்களையுடைய ஒருவகை வேலமரம்; குடைபோலக் கவிந்திருக்கு மியல்புடையது. இதனை உடைவேல் என்றுஞ் சொல்வர். இதன்முள் உடமுள் எனப்படும்.

வசை பாடிய புலவன், மதுரையிற் பாண்டியன் கண்டு முனியப், பின்னுங் கூறியது:—

வெண்பா

இலங்கிலைவேற் கிள்ளி யெதிர்மலைந்த வந்நாட்
பொலங்கலனும் பொன்முடியுஞ் சிந்த - நிலங்குலுங்க
ஓடினார் மேலோ வுயர்தரள வெண்குடையாய்
பாடினார் மேலோ பழி. (கஎ0)

கு-பு. 169-ம் செய்யுளும், 170-ம் செய்யுளும் ஒரு புலவன் பாடியன. பாண்டியன் போரிற் புறந்தந்ததைப் பாடிய புலவனைப் பாண்டியன் மதுரையிற் கண்டு கோபிக்க, அவன் அப்போது கூறியது என்க.

கம்பனைக் கொன்றானென்று பழிகூறலின் பாண்டியனிடத்திற் சோழன் விட்ட புலவன் முடிசூட்டு மங்கல நாள் பாடிய வசை :—

வெண்பா

பாண்டியரிற் பாண்டியரிற் பாழான பாண்டியரில்
ஈண்டிரென விட்ட வெழுத்தல்ல — பூண்டதிருப்
போகவென்றும் வேற்றார் புகுதவென் று நீயிவண்விட்
டேகவென்று மிட்ட எழுத்து.

இதுகேட்டு நன்றாகவே பொருள் கூறிப் பரிசில் கொடுக்க மறுத்தான். நீ வந்த காரியம் வேண்டிற் சோழன்பாற் போக என்றனன். (கசக)

கு-பு. புலவன் பாடிய வசைப்பாட்டிற்குப் பாண்டியன் நன்றாகவே பொருள்கண்டு பரிசில் கொடுக்கப் புலவன் மறுத்தான் என்க.

பாண்டியன் புலவன்

சோழன் புறங்கொடையிற் பாண்டியன் புலவன் கூறியது :—

வெண்பா

ஆறெல்லாஞ் செந்நீ ரருகெல்லாம் பல்பிணங்கள்
தூறெல்லாஞ் சோழன் சரிகுஞ்சி — மாறில்லாக்
கன்னிக்கோ னேவமுடிக் காரிக்கோன் பின்றொடரப்
பொன்னிக்கோன் போன புகார். (கசஉ)

கு-பு. புகார் - காவிரிப்பூம்பட்டினம். புகார் ஆறெல்லாம் செந்நீர் அருகெல்லாம் பல்பிணம் தூறெல்லாம் சோழன் சரி குஞ்சி என முடிக்க. கன்னிக்கோன் :- பாண்டியன். காரிக்கோன் - பாண்டியன் படைத்தலைவன் போலும்.

ஒருதாதி

ஒரு தாதியை ஒரு புலவனுக் களிப்ப, அவள் ஊடலிற் சொல்லியது :—

வெண்பா

மூன்று னிருவர் முயங்கும் படிகண்டு
மன்று பனிதவிர்த்து வாழ்வித்தாய் — துன்னார்தஞ்
சேனைகண் டாலிக்குஞ் செம்பியர்கோன் செங்கண்விழித்
தானைகண் டார்தா மவர். (கஎ௩)

கு-பு. பணிதவிர்த்து என்றும் பாடம்.

சோழனும் தேவியும்

சோழனுந் தேவியும் பாடியது :—

விருத்தம்

காடுமீ னம்படக் கண்டநங் கண்டன்வேற்
கோடுமேயுந் துறைத் தொண்டியிக் கோனகர்
தேடுநீ டுங்கொடி தெரியநா முய்யவுந்
தாடுமே பாடுமே யன்னமே யின்னமே.

இது தேவி பாடியது. (கஎ௪)

கு-பு. இந்தப்பாட்டு இரண்டாமடியும் மூன்றாமடியும் மிகப் பிழை பட்டுளது.

விருத்தம்

மலையினுங் கானினும் போயினோர் வருவரே
முலையின்மேற் பசலைபோய் முதனிறங் கொள்ளுமே
துலையிலங் கியகொடைச் சோமன்வாழ் புவனையில்
தலையிலங் கியதடத் தன்னமே யின்னமே.

இது சோழன் பாடியது. (கஎ௫)

கு-பு. புவனை - திரிபுவனம்; க௨0—ஆம் பாட்டுக் குறிப்புப் பார்க்க. இது கும்பகோணத்திலிருந்து திருவிடைமருதூருக்குப் போகுஞ் சாலையில் நான்காவது மைலிலுள்ளது.

வெண்பா

காரென்றேன் வந்தேன் கடுக வழிநடந்தேன்
யான்வந்த தூர மெளிதல்ல — கூனன்
கருந்தேனுக் கங்காந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்.

இதுகேட்டுச் சோழன் மடியில் வைத்தான். (கஎசு)

கு-பு. இது 'சிந்தா சமுத்தி வெண்பா' என்று சில பிரதியிற் காணப்படுகின்றது.

குரு நமசிவாயர்

குரு நமசிவாயர் பாடியது:—

வெண்பா

அத்தி முதலெறும்பீ றானவுயி ரத்தனைக்கும்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா — மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
எரிக்குதையா காரோண ரே.

காரோணரமுது கொடுத்தார். (கஎஎ)

கு-பு. குகை நமசிவாயருடைய மாணாக்கர் குரு நமசிவாயர் என்பர். இவர் சிதம்பரத்திலே பல திருப்பணிகள் செய்தவர். பரமரகசிய மாலை, சிதம்பர வெண்பா, அண்ணாமலை வெண்பா என்னும் நூல்கள் செய்தவர். இவர் இற்றைக்கு முந்நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னிருந்தவர். வட ஆர்க்காடு ஜில்லா வேலூர்த் தாலுகாவிலுள்ள விரிஞ்சிபுரம் கோயில் தெற்குவாயிலிலுள்ள சாசனம் ஒன்று சகம் கஙிகச, நந்தன வருடத்தில் இவருடைய அடியாராகிய ஆநந்த நமசிவாய பண்டாரத்துக்கு மடங் கட்டுவதற்காக வாண்டவராயன் திருவீதியில் வடசிறகில் புன்னூற்றார் பெரிய எரம்ப நாயக்கர் நிலங் கொடுத்ததாகக் கூறுகின்றது. இதனால் இவர் காலம் அநுமானிக்கலாயிற்று. See South Indian Inscription, Vol I. p.85.

காரோணம் என்பது காயாவரோகணம் என்பதன் மரூஉ. காயாவரோகணம் காயத்தில் இறங்குதல் என்று பொருள்படும். இருபத்தெட்டாஞ் சதுர்யுகத்திலே வேதவியாசர் காலத்திலே சுடலையிற் கிடக்கு மொரு பிணத்தினுட் சிவபெருமான் புகுந்து லகுலி என்னும் பிரமசாரியாய்த் தோன்றுவரெனவும், அவர் அவ்வாறு தோன்றுமிடம் காயாவதாரம் அல்லது காயாவரோகணமென்று பெயர்பெறுமெனவும் வடமொழி இலிங்கபுராணம் (உச -ம் அத்தியாயம்) கூறுமென ஸ்ரீராமகிருஷ்ண கோபால பாண்டாரகர் கூறுவர். பிரம விஷ்ணுக்கள் ஒருங்கே இறக்க வருங் காலத்தில் சிவபெருமான் அவர்களை ஒடுக்கி அவர்களுடைய காயத்தைத் தம்மீதேற்றிக்கோடலால் காயாரோகணரெனப் பெயர் பெறுவரென்று காஞ்சிப்புராணம் கூறும்.

இலாடதேசத்திலே காரோகணம் என்றோர் ஊருளது. அங்கே சிவன் ஸ்ரீலகுலீசபட்டாரகராக அவதரித்தார் என்று சிலாசாசனம் கூறும். தென்னாட்டில் காஞ்சியிலும் திருக்குடந்தையிலும் நாகையிலுமுள்ள சிவாலயம் சிவ காரோணமெனப்படும்.

ஏகம்பவாணன்

வாணன் தாதிமேற் கோபமாய் விலங்கு கொண்டுவாவென்றபோது வாணன் சேடியர் பாடியது :—

வெண்பா

அலங்க லணிமார்ப னையர்கோன் வாணன்
விலங்கு கொடுவருக வென்றான் — இலங்கிழையீர்
சேரற்கோ சோழற்கோ தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ யார்க்கோ விலங்கு. (கஎஅ)

கு-பு. வாணனென்றது ஏகம்பவாணனை. இவன் மகதநாடெனப்படும் நடுநாட்டிலுள்ள ஆற்றூருக் குரியவன். இது "தேருளைப்புரவி" என்றற் றொடக்கத்துப் பாணராற்றுப்படைச் செய்யுளிலே, "மகதேசனுறை நகர் காவலன் வாணபூபதி" என்று வருவதனால் விளங்கும். அடுத்த பாட்டில் இவன் காலத்திருந்த பாண்டியன் சீவலமாறன் என்பதனால், இவன் ஸ்ரீவல்லபதேவன்

என்னும் அதிவீரராம பாண்டியன் காலத்தவனாதல் வேண்டும். அதிவீரராம பாண்டியன் சகம் கசஅசு, ரக்தாக்ஷி வருஷம் முடி சூடினான். அதாவது கி. பி. 1564; இற்றைக்கு 356 வருஷங்களுக்குமுன். அக்காலத்தில் சேர சோழ பாண்டியர்கள் வலிகுன்றி விஜயநகரத் தரசரின்கீழ்ச் சிற்றரசராய் வாழ்ந்தனர். ஏகம்ப வாணன் சேர சோழ பாண்டியர்மேல் அதிகாரஞ் செலுத்தியதாகத் தெரிதலால், இவன் விஜயநகரத்தரசர்களது சேனாபதியாக, அல்லது பிரதிநிதியாக இருந்திருத்தல்வேண்டும். இவனைப் பற்றிய மற்றைய விஷயங்களுக்குச் செந்தமிழ் ஆறாந் தொகுதி பார்க்க. ஏகம்பன் என்பது இயற்பெயர்; வாணன் என்பது குடிப் பெயர். இவனைக் கம்பர்காலத்தவ னென்பது கட்டுக்கதை.

நாலு தாதியரைப் பாண்டியன் மாலை வாங்கிக் கொவர அனுப்ப, அவர் பாடியது:—

வெண்பா

தென்னவா மீனவா சீவலமா றாமதுரை
மன்னவா பாண்டி வரராமா — முன்னஞ்
சுரும்புக்குத் தாரளித்த தூயதமிழ் நாடா
கரும்புக்கு வேம்பிலே கண். (கஎகூ)

கு-பு. சீவலன் - ஸ்ரீவல்லபன். வரராமன் - அதிவீரராமன்.

மாப்பைந்தார்க் கல்லமுத்து வண்ணத்தார்க் கல்லவஞ்சி
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளோ - பூப்பைந்தார்
சேர்ந்திருக்கு நெல்வேலிச் சீவலமா றாதமிழை
ஆய்ந்துரைக்கும் வீரமா றா. (கஅ0)

வேம்பா கினுமினிய சொல்லிக்கு நீமிலைந்த
வேம்பா கினுமுதவ வேண்டாவோ — தேம்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாண் மான். (கஅக)

கு-பு. வெந்த பாகினுமினிய சொல். பாண்டியன் கடல்சுவற வேல்விட்ட கதையைத் திருவிளையாடல் புராணத்துக் காண்க.

இந்த மூன்று கவிக்கும் மாலை கொடாமைகப், பின் ஒருத்தி பாடியது :—

வெண்பா

இலகுபுக ழாறை யேகம்ப வாணன்
அலகைவரும் வருமென் றஞ்சி — உலகறிய
வானவர்கோன் சென்னியின்மேல் வண்ணவளை யெறிந்த
மீனவர்கோன் கைவிட்டான் வேம்பு.

இது கேட்டு மாலை கொடுத்தான் (கஅ௨)

கு-பு. பேய்க்கு வேம்பு மருந்தாக எண்ணப்படுதலால் வாணனது பேய்க்குப் பயந்து வேப்ப மாலையைக் கைவிட்டான் என்று சாதுரியமாகச் சொல்லப்பட்டது.

வாணனுடைய பாணன் மதுரையிற் போனபோது பாண்டியன் தியாகம் கொடுக்க, பாணன் வலக்கையாலல்லாமல் இடக்கையால் ஏற்கப், பாண்டியன் உழவனென்றிகழ்ந்தபோது பாடியது :—

வெண்பா

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த வருஞ்சேற்றில் — மானபரன்
மாவேந்தன் வன்கண்ணன் வாணன் பறித்துநடும்
மூவேந்தர் தங்கள் முடி. (கஅ௩)

கு-பு. இதனால் இப்பாட்டு ஏகம்பவாணன் மனைவி பாடினதென்ற பிற்காலத்து வழக்குக் கொள்ளப்படாமை அறிக.

முனையதரையன்

திருக்கண்ணபுரத்துத் தாதி முனையதரையனுக்கு எழுதி விடுத்த பாட்டு :—

வெண்பா

இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யிற்றைக்கு
நின்று வரிலதுவு நீயறிவை — வென்றி
முனையா கலவி முயங்கியவா றெல்லாம்
நினையாயோ நெஞ்சத்து நீ. (கஅச)

கு-பு. முனையதரையர் என்பவர் விக்கிரம சோழனுடைய மந்திரிகளி லொருவர் என்று தெரிகின்றது ; அதனை,

ஆர்க்குங் கழற்கா லனகன்றன தவையுட்
பார்க்குமதி மந்திர பாலகரிற் — போர்க்குத்
தொடுக்குங் கமழ்தும்பை தூசிநெடுஞ் சூடிக்
கொடுத்த புகழ் முனையர் கோனும். (70 71)

எனவரும் விக்கிரம சோழனுலாவினடிகளா லறிக. விக்கிரம சோழன் காலம் 1118-1136. இவர் சரித்திரத்தை செந்தமிழ் ஏழாந் தொகுதி, ககO - ககச - ம் பக்கத்தில் காண்க. திருக் கண்ணபுரம் தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலுகாவிலுள்ளது.

திருவழுந்தூர்த் தாதி

திருவழுந்தூர்த் தாதியைச் சோழன் எந்தவூர் என்று கேட்டபோது பாடியது :—

வெண்பா

கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாபங் குலைந்தவூர் — செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாதையுந் தேடிக்காணு
வேதவித்து வாழு மழுந்தூர். (கஅரு)

கு-பு. கும்பமுனி - அகத்தியர். இவருக்கு நேரிட்ட சாபமாவது நரமாமிச பக்ஷணம் செய்யென்று காவேரியாற் கொடுக்கப்பட்ட சாபமென்பர். திருவழுந்தூர் தஞ்சாவூர் ஜில்லா மாயவரந் தாலுகாவில் குற்றாலத்துக்குத் தெற்கே இரண்டு மைல் தூரத்திலுள்ளது.

ஒரு புலவன்

பரிசில் பெற்றுக் கிராமப் பிரதட்சிணம் வரும் புலவன் உப்பரிகைமேற் பார்த்த ஒருத்தியைக் கண்டு விரகமாய்ப் பாடியது:—

வெண்பா

என்னெஞ்சு மென்விழியுங் கொண்டோ விலங்கேசன்
பொன்னஞ் சிகாமணியும் பொன்முடியும் — வன்னெஞ்சுஞ்
சிந்துங் கொடைச்சிவந்தான் றென்கோடை யார்கழங்கும்
பந்துஞ் சாதித்த படி.

கண்டு பணியக் கடவேனோ காதலுடன்
தொண்டை யிதழருந்தித் தோய்வேனோ - கொண்டற்
கொடைச்சிவந்தான் கோடைக் குளிர்காவி லன்ன
நடைச்சிவந்தா ளென்செய்வே னான்.

இந்தக் கவிதை ஒற்றனாய மழவராயன் கேட்டிருந்து வரைந்துகொண்டு அவனைக் கொடுத்தான். (கஅஎ)

கு-பு. இப்புலவர் யாரென்பதும் இஃதெங்கு நிகழ்ந்த தென்பதும் தெரியவில்லை. கோடை என்பது சிவந்தான் என்பவனுடைய ஊர். கோடை புறநானூற்றில் நெடுவேட்டுவன் மலை என்று கூறப்பட்டுளது.

உத்தரநல்லூர் நங்கை

உத்தரநல்லூர் நங்கை பிராமணரைப் பாடிய வசை:—

விருத்தம்

சந்தன மரமும் வேம்புந் தனித்தனி கந்த நாறும்
அந்தணர் தீயில் வீழ்ந்தா லதுமண நாறக் காணேன்
செந்தலைப் புலைய னார்க்குத் தீமண மதுவே நாறும்
பந்தமுந் தீயும் வேறோ பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

கு-பு. இப்பாட்டுப் '**பாய்ச்சலூர்ப் பதிகம்**' என்னும் சிறு நூலில் வருவது; ஒன்பதாம் பாட்டு. தீயிலிட்டால் சந்தனமும் வேம்பும் வெவ்வேறு மணம் நாறுவதுபோல, அந்தணரும் புலையரும் தீயில் வீழ்ந்தால் வெவ்வேறு மணம் நாறுவதில்லை; ஆதலால் ஜாதிவேற்றுமையில்லை என்பது இதன் கருத்து. பந்தம் - விளக்கு, தீவட்டி. சில பிரதிகளில் இன்னும் இரண்டு பாட்டுக்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு:—

குலங்குல மென்ப தெல்லாங் குடியும் பூணு நூலும்
சிலந்தியு நூலும் போலச் சிறப்புடன் பிறப்ப துண்டோ
நலந்தரு நான்குவேத நான்முகன் படைத்த துண்டோ
பலந்தரு பொருளு முண்டோ பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

வைருள பார்ப்பார் கூடி யுயர்ந்தன சாலை கட்டி
நீரிலே மூழ்கி வந்து நெருப்பிலே நெய்யை விட்டுக்
கார்வயற் றவளை போலக் கதறிய வேத மெல்லாம்
பாரைவிட் டகன்ற தோதான் பாய்ச்சலூர்க் கிராமத் தாரே.

இவ் விரண்டில் முதல் பாட்டுப் பாய்ச்சலூர்ப்பதிகத்தில் இல்லை. பாய்ச்சலூர் திருச்சிராப்பள்ளிக்கு நேரே கொள்ளிடத்தின் வடக்கிலுள்ளது.

திருவாரூர் நாகரசநம்பி

திருவாரூர் நாகரச நம்பி செய்த குற்றங் கிள்ளைக்குச் சொல்லுவித்துத் தலத்தார் இராயருக்குச் சொல்லி அறிவித்தது :—

வெண்பா

முன்னை யறுபத்து மூவரிருந் தாரவரில்
இந்நா ளிரண்டுபேர் ரேகினர் — கன்னன்
நருக்கின்றான் விற்றுவிட்ட நாகரச நம்பி
இருக்கின்றான் கிட்டணரா யா. (௧௮௯)

கு-பு. நாகராசநம்பி என்பவர் திருவாரூர்க் கோயில் அருச்சகர்போலும். இதனால் தெரிவது யாதெனில், திருவாரூர்க்

கோயிலிலிருந்த அறுபத்துமூவர் விக்கிரகங்களுள் இரண்டை நாகராசநம்பி எடுத்து விற்றுவிட்டாரென்பதும் அவற்றைக் கன்னான் ஒருவன் நருக்கி உருக்கினான் என்பதும். இந்தப் பாட்டை அந்தத்தலத்தார் கிளி ஒன்றுக்குச சொல்லிப் பயிற்றி அதனைக் கொண்டு கிருஷ்ண தேவராயருக்கு அறிவித்தார். கிருஷ்ண தேவராயர் காலம் 1509 - 1529.

புங்கனூர்க் கிழவன்

புங்கனூர்க் கிழவனைக் கல்யாணத் தொருவன் பாடியது :—

கட்டளைக் கலித்துறை

வெண்ணெயும் பார்த்தன்னை கண்ணையும்
பார்த்துத்தன் மெய்யிற்பட்ட
புண்ணையும் பார்க்க திருநெடு
மால்புங்க னூர்க்கிழவன்
பண்ணையுஞ் சேனுக ளுந்தட
நீள்கயல் பாயுநெடுந்
திண்ணையுங் கெண்டை புரட்டுங்கல்
யாணத்திற் சென்றவர்க்கே

இதுகேட்டுப் புங்கனூர்க் கிழவன் பிராணத்தியாகம் பண்ணினான். (௧௬௦)

கு-பு. கெண்டை புரட்டும் என்பது மீனுக்கும் கணைகாலுக்கும் சிலேடை. விஷபேதிகண்டு இறக்குந் தருணத்தில் கணைக்காலில் தோன்றும் வலிக்குக் கெண்டை புரட்டுதல் என்பர். இதனால் புஙகனூர்க் கலியாணத்தில் விருந்துண்டவர் பலர் விஷபேதி கண்டு இறந்தார் எனறு புலப்படுகின்றது. கெண்டைக் கால் - கணைக்கால்.

இப்பாட்டைக் கேட்டுப் புஙகனூர்க்கிழவன் பிராணத்தியாகம் செய்ததைச சோழமண்டல சதகமுடையாரும் கூறுவர்.

அறங்கூர் பெரியோர் மாசுவரிலாற்று
ரஃதேயமைக விளிக்
கறங்கூர் கெண்டை புரட்டுமெனக்
கலியாணத்திற் கவிகேட்டுப்
புறங்கூர் பவளக்கடன் முழுகும்
பொன்னங்கலத்திற் புடைசொரிந்த
மறங்கூர் புங்கனூர்க்கிழவன் வளஞ்சேர்
சோழ மண்டலமே (67)

புங்கனூர் தஞ்சாவூர் ஜில்லா சீர்காழித் தாலுகாவி லுள்ளது.

குடிதாங்கி

கட்டளைக் கலித்துறை

வெறும்புற் கையுமரி தாய்க்கிள்ளை
சோரவென் வீடுகெட்டேன்
எறும்புக்கொ ராற்பத மில்லைகண்
டாயென் னிருங்கலியின்
குறும்பைத் துரத்துங் குடிதாங்
கியைச்சென்று கூடியபின்
தெறும்புற்கொள் யானை கவளங்கொள்
ளாமைத் தெவிட்டியதே. (கசுக)

இது பாதிகேட்டுப் பரிசில் கொடுத்தபின் பாதி பாடியது.

கு-பு. உலகி லிலையென் றுரையாமே
யுரவல் குணத்தோர்க் குளதாமே
இலகு மெறும்புக் காற்பதம்வே
றில்லையென யாவது மீந்தான்
புலவன் மகிழ்ந்து பிற்பாதி
புகலக் கேட்ட புகழாளன்
மலைகொள் புயத்துக் குடிதாங்கி
வளஞ்சேர் சோழ மண்டலமே. (82)

என்னும் சோழமண்டல சதகச் செய்யுளால், இது குடிதாங்கியைப் பாடினதாகத் தெரிகின்றது

கச்சிராயன்

கச்சிராயன் கண்டிய தேவனைப் பாடிய கவி: —

சிந்தியல் வெண்பா

குப்பாய மிட்டுக் குறுக்கே கவசமிட்டுக்
கைப்பாச மிட்டுவருங் கண்டியதே வாவுனது
தொப்பாரத் தின்கீழ் மயிர். (கசஉ)

கு-பு. குப்பாயம் - சட்டை. தொப்பாரம் - வீரர்கள் தலையி லணியும் ஒருவகை முடி (helmet). கைப்பாசம் என்பது கைக் கவசம் போலும்.

கண்டியதேவன்

இதுகேட்டுக் கண்டிய தேவன் விருதெறிந்து போட்டுக் கச்சிராயர் சரக்கறை தியாகங் கொடுக்கப் பலிதூக்க வந்த நீலகங்கனைக் கண்டியதேவன் பாடியது.

கட்டளைக் கலிப்பா

அலைவ ளைத்த திருப்பாற் கடலிலே
யாட ராவி னணையிலே பச்சையால்
இலைவ ளைத்த மணிமண் டபமிலே
யிங்கு நீவந்த வாறே தியம்புவாய்
கொலைவ ளைத்த விலங்கேசன் மாமலர்க்
கொத்து மாமுடி பத்துக்கு மன்றொரு
சிலைவ ளைத்த கரநீல கங்கனே
திங்கள் வெண்குடைச் சிற்றம் பலவனே.

இதுகேட்டு அவன் குதிரை கொடுவந்தே னென்று குதிரை கொடுத்தான். (கசரு)

கு-பு. 'கசசிராயர் சரக்கறைத் தியாகங்கொடுக்கப் பராலிக்க வந்த' என்றும் 'பலிதூக்கவந்த' என்றும் பாடபேதம்.

விண்ணன்

விண்ணன் அரவின்மணி கொடுத்தபோது ஒரு புலவன் பாடியது :—

வெண்பா

கூர்ந்த வறுமையிடைக் கோளரவ மீன்றமணி
சார்ந்த புலவன் றனக்களித்தான் — வார்ந்ததரு
மேலைவிண்ணின் மண்ணில் விளங்கும் புகழ்படைத்த
சாலைவிண்ண னுக்கிணையார் தாம். (கசுச)

வாயற்பதிவடுகன்

பிணத்தை மூடி அன்னமிட்டபோது ஒருபுலவன் பாடியது :—

கட்டளைக் கலித்துறை

தன்னுடன் கூடப் பிறந்துபி
ராகிய தம்பியையும்
அந்நிலை மாண்டது தோன்றுமன்
மூடிவைத் தன்னமிட்டான்
மன்னவர் போற்றிய வாழ்செங்க
லங்கை வடுகனுக்குக்
கன்னனுஞ் சோமனு மோங்க
ராயினிக் காண்பதுவே. (கசுரு)

கு-பு. தனது தம்பியின் பிணத்தை மூடிவைத்து வந்த புலவனுக் கன்னமிட்டவன் வாயற்பதியில் வடுகன். இதனைப் பின் வருந் தொண்டை மண்டல சதகச் செய்யுளாலறிக :—

நேயத் துடன்பிறந் தோன்பிண மூடி நெருப்பவித்துத்
தாயொப் பெனவெதிர் கொண்டழைத் தேதன் னுடனெனவே
ஆயத் தமிழ்கொண் டருங்கவி ராயனுக் கன்புசெய்த
வாயற் பதியில் வடுகனும் வாழ்தொண்டை மண்டலமே. (58)

கச்சியப்பன்

கச்சியப்பனை உதைத்த புலவன் பாடியது:—

வெண்பா

மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ வெப்போதுங் கற்றவர்க்குப் — பண்புடனே
மெச்சியப்பா லுங்கொடுக்கும் வீறுவல்லைக் காளத்திக்
கச்சியப்ப னையுதைத்த கால். (கசுரு)

கு-பு. இங்கே குறித்த கச்சியப்பன் வல்லைமாநகர்க் காளத்தி முதலியார் மகன் கச்சியப்பன். இக்கதை தொண்டை மண்டல சதகத்திலுங் கூறப்பட்டுளது:—

வில்லைச் செருப்பிட்ட காலா
லுதைத்து வியனுலகிற்
சொல்லற் கரிய புகழ்கொடுத்
தோன்றட்ட வீரன்றன்னாற்
பல்லக்கி லேயன்றி மண்படு
மோவென்னும் பாடல்கொண்ட
வல்லைப் பதிக்கச்சி யப்பனும்
வாழ்தொண்டை மண்டலமே. (50)

ஒரு புலவன்

வெண்பா

அடும்போதுஞ் சொல்லில்லை யென்று மடுஞ்சோ
றிடும்போதுஞ் சொல்லில்லை யென்னுங் — குடும்பமெனும்
பேய்க்கொளித்துப் போகின்றேன் பேரையூ ராதிபனே
தாய்க்கொளித்த சூலுண்டோ தான்.

வண்டியூர்க் கெழுந்தருளப் பண்ணுகிற மண்டபத்திற் சொல்லியது. (கசுஎ)

இதுகேட்டு வேம்பத்தூர்ப் பிராமணப் பிள்ளைகள் பாடியது :—

வெண்பா

ஒன்று மறியோநா மும்மாணை யப்பரே
சென்று தொழில்புரியுஞ் சீபதியார் — கன்றக்
கயிற்றினாற் கட்டிக் கதவுபடத் தெற்றி
இயற்றினு லென்செய்வோம் யாம். (௧௯௮)

கு-பு. இப் பாட்டுக்களைப் பற்றிய கதையாதுந் தெரிய வில்லை.

அம்மைச்சி

அம்மைச்சி பிராமணர் தன் வீட்டைப் பிடுங்கிய போது பாடியது :—

வெண்பா

பெருமா டிருநாளைப் பேயாக்க வென்றோ
வருமாண்டு தோறுமிந்த மாண்ப — வொருநாளு
மாக்குதிரை யேறியா மாசனங்க ளாமணக்கஞ்
சாய்க்குதிரை யேறினார் தாம். (௧௯௯)

பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்தீர்
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே — கோப்பமைந்த
கொம்மைச் சிகரலங்கைக்கோட்டையென்று கொண்டீரோ
அம்மைச்சி வாழ்வா ரகம். (௨00)

கு-பு. அம்மைச்சி என்பவள் காஞ்சிபுரத்திலிருந்த ஒருதாசி. அவளுடைய வீடு வரதராஜப்பெருமாள் தேரோடும் வீதியிலிருந்த தென்றும் ஒரு முறை அந்தத்தேர் வழியினின்று சாய்ந்து அம் மைச்சி வீட்டுப்புறம் சென்றதென்றும் அதனைத் திருப்பி வழிக் குக் கொண்டுவருதற்கு அம்மைச்சிவீட்டை இடிக்க நேர்ந்ததென் றும் கூறுவர். இதனை இக்கவிகள் குறிக்கின்றன.

காளமேகப் புலவர்

காளமேகம் சீரங்கத்தில் பிள்ளையார் வருவானேன் என்றதற்குப் பாடியது:—

வெண்பா

தந்தை பிறந்திறவாத் தன்மையாற் றன்மாம
னந்தம் பிறந்திறக்கு மாதலால் — முந்துமளி
நாணிக்கு வில்வேளு மாய்தலால் நன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண். (௨௦௧)

கு-பு. காளமேகப் புலவரைப்பற்றிய கதை யாவரும் நன்கறிந்தது. அவர் காலமிதுவென்பதுதான் தெரியாதிருந்தது, அதுவும் இப்போது திருவானைக்காக் கோயிற் றென்சுவரிலுள்ள கல்வெட்டால் ஐயந்திரிபறத் தெரிந்துவிட்டது. இக்கல்வெட்டுச் சகவருடம் ௧௩௭௫-க்குச சரியான ஸ்ரீமுக வருடத்தில் கோபராஜன் குமாரனை சாளுவத் திருமலைராயன் ஜம்புகேசுரருக்கு ஒரு திருவாபரணமளித்ததாகக் கூறுகின்றது. இந்தத் திருமலைராயன் விஜயநகரத்தரசரின் (மல்லிகார்சசுனராயர் 1449-1465; விரூபாக்ஷராயர் 1466 - 1485) பிரதிநிதியாகத் தென்னாட்டை கி. பி. 1453 முதல் கி. பி. 1468 வரை ஆண்டவன். இவ்வரசனுடைய காலத்தில் காளமேகப்புலவர் இருநதது முன்னர் வரும் ௨௦௯-ம். பாட்டால் நன்கு விளஙகும். ஆகவே காளமேகப் புலவர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய 450 வருடத்துக்கு முற்பட்டது. காளமேகப் புலவரின் இயற்பெயர் வரதன் என்பது. இவரூர் கும்பகோணத்துக்கருகிலுள்ள நாதன் கோயில் எனப்படும் நந்திபுரம். முன்னர் வரும் ௨௧௧-ம் பாட்டும் ௨௨௨-ம் பாட்டும் பார்க்க. வேறு கூறுவதுமுண்டு.

மாம்-மாமன். அனந்தம் பிறந்திறக்கும் - முடிவின்றிப் பிறந்திறப்பான். முந்தும் - முன்னரும். அளிநாணும் இக்குவில்லுமுடைய வேள் - மன்மதன். காணி - உரிமை.

பாகவதரிட்ட சமுத்திக்குப் பாடியது:—

கட்டளைக் கலித்துறை

தடக்கட லிற்பள்ளி கொள்ளுவம்
யாமதைச் சங்கரனார்
அடற்புலிக் குட்டிக் களித்தன
ராலது கேட்டுநெஞ்சம்
நடுக்கம தூற்றது கைகா
லெழாநளி னத்தியென்னை
இடுக்கடி பாயைச் சுருட்டடி
யேறடி யம்பலத்தே. (உ0உ)

கு-பு. "இடுக்கடி பாயைச சுருட்டடி ஏறடி யம்பலத்தே" என்பது பாகவதரிட்ட சமுத்தி. புலிக்குட்டி வியாக்கிரபாத முனிவரின் புதல்வரான உபமன்யு. இவருக்குச் சிவபெருமான் பாற்கடல் கொடுத்ததைப் "பாலுக்குப் பாலகன்வேண்டி யழுதி டப் பாற்கடலீந்த பிரான்" என்னுந் திருப்பல்லாண்டா லறிக. இக்கதை இலிங்க புராணத்திற் கூறப்பட்டுளது. நளினத்தி-தாமரை யாசனியாகிய இலக்குமி.

சைவர்க்குந் தாதர்க்குஞ் சண்டையானபோது பாடியது:—

வெண்பா

சீரங்கத் தார்க்குந் திருவானைக் காவார்க்கும்
போரங்க மாகப் பொருவதேன் — ஓரங்கள்
வேண்டாமி தெல்லாம் விகற்பந் தெரியாதோ
ஆண்டாருந் தாசருமா னால். (உ0௩)

கு-பு. சைவப்பரதேசிகள் ஆண்டிகளென்றும் வைஷ்ணவப் பரதேசிகள் தாதரென்றும் கூறப்படுவர். ஓரம் - பக்ஷபாதம்.

ஞானவரோதயர் மதுரைக்குப் போனபோது எழுதி அனுப்பின கவிதை:—

கட்டளைக் கலித்துறை

முதிரத் தமிழ்தெரி யின்பாட றன்னை முறையறிந்தே
எதிரொக்கக் கோப்பதற் கேழெழு பேரில்லை யின்றமிழின்
பதரைத் தெரிந்தெறி கோவில்லை யேறப் பலகையில்லை
மதுரைக்கு நீசென்று செவ்வாறு ஞான வரோதயனே. ()

கு-பு. ஞானவரோதயர் என்பர் ஒரு புலவர். இவரைப்பற்றி வேறு ஒன்றுந்தெரியவில்லை. ஏழெழுபேர் - சங்கப்புலவர் நாற்பத்தொன்பதுபேர். இன்தமிழின் பதரைத் தெரிந்தெறிகோ - பிள்ளைப்பாண்டியன். பலகை - சங்கப்பலகை.

திருமலைராயன் சபையிற் கங்கை குடத்திலே அடங்கப் பாடுமென்று சொன்னபோது பாடியது:—

வெண்பா

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும் — பெண்ணை
இடத்திலே வைத்த விறைவர் சடாம
குடத்திலே கங்கையடங் கும். (உ0௫)

திருமலை ராயனைப் பாடியது:—

விருத்தம்

இந்திரன் கலையா யென்மருங் கிருந்தா
னக்கினி யுதரம்விட் டகலா
னெமனெனைக் கருதா னரனெனக்கருதி
நிருதிவந் தென்னையென் செய்வான்
அந்தமாம் வருண னிருகண்விட் டகலா
னகத்துமக் களுக்குமப் படியே
யநிலமா மரியே யமுதமாய் வருவ
னரெனை யுலகினி லொப்பார்

சந்தத மிந்த வரிசையே பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய்கல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்

மந்தரப் புயனுங் கோப்பைய னுதவு
மகிபதி விதரண ராமன்
வாக்கினுற் குபேர னுக்கினு னிவனே
மாசிலீ சான னவனே. (உ0சு)

கு-பு. இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான் என்பது இந்திரனுக் காயிரங்கண் ணுதலின், நான் கட்டியிருக்கும் வஸ்திரம் ஆயிரம் பீறலென்றதாம். அக்கினி உதரம்விட் டகலான் என்பது வயிற்றில் பசி நீங்காது என்றதாம. வருணன் இருகண் விட்டகலான் என்பது கண் எப்போதும் அழுது நீரோடினபடியே யிருக்குமென்றதாம். அநிலமாம அரியே அமுதமாய் வருவன் என்பது வயிற்றுக் காகாரம் வாயுவே என்றதாம்.

இப் பாட்டில் இந்திரன் முதலிய அட்டதிக்குப் பாலகர் பெயரும் வரிசையாக வந்தது காண்க.

கோபராஜன் குமாரனை சாளுவத்திருமலைராயன். மேலே 201-ம் பாட்டின் கீழுள்ள குறிப்புப் பார்க்க.

அதிமதுர கவிராசன் பின்னே காணவரப் பாடியது :—

வெண்பா

கோக்குதிரை நின்குதிரை கோவன்மதுரா வொன்னார்
மாக்குதிரை யெல்லா மனைக்குதிரை — தூக்குதிரைத்
துங்கக் கரைக்குதிரை சொக்கன் குதிரைசது
ரங்கக் குதிரைகளே யாம். (உ0எ)

கு-பு. 'கோவல்மதுரா' என்றதனால், அதிமதுர கவியினூர் திருக்கோவலூர் போலும். கரைக்குதிரை - ஆற்றங்கரை கட்டுவதற்கிடும் குதிரை. சொக்கன்குதிரை - நரி; பொய்க்குதிரை என்றுமாம்.

ஆரூரில் அதிமதுர கவிராசன் உடன்வந்து கோவி லிலே ஒரு கவி பாடுகெனக் காளமேகம் பாடியது:—

வெண்பா

சேலை யுடையழகா தேவரகண் டாகழுநீர்
மாலை யழகா மணிமார்பா — வேலை
அடங்காார் புரமெரித்த வாரூரா வீதி
விடங்கா பிறியா விடை. (உ0அ)

கு-பு. தேவரகண்டன் என்பது தியாகராசப்பெருமாள் திரு நாமங்களுளொன்று. திருவாரூருலா 28-ம் கண்ணி பார்க்க.

அதிமதுர கவிராசன் பாடியது :—

வெண்பா

நாணென்றால் நஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்டின்ற பாணமே — தாணுவே
சீராரூர் வாழுஞ் சிவனேயஃ தெப்படிநீர்
நேராரூர் செற்ற நினைவு. (உ0கூ)

கு-பு. நஞ்சிருக்கும் நாண் - நஞ்சுடைய வாசுகி (கெட்டிருக்-கும்நாண்). கற்சாபம்- மேருமலை (கற்போல வளையாவில்.) மண் தின்றபாணம் - திருமால் (மண் அரித்தபாணம்). பாணந்தான் மண் டின்ற பாணமே என்ற அடி காளமேகப் புலவராற் பாடப் பட்டது. முன்னர் வரும் உஉக - ம் பாட்டுப் பார்க்க.

மாவலிவாணனைப் பாடிய வசை :—

வெண்பா

சொக்கன் மதுரையிற் றெண்டற்கு முன்னவிழ்த்த
பொய்க்குதிரை சண்டைக்குப் போமதோ — மிக்க
கரசரணு வந்தக் கரும்புறத்தார்க் கெல்லாம்
அரசான மாவலிவா ணு. (உக0)

தெண்டிக்கு வரதன் விடுத்த சீட்டுக்கவி :—

வெண்பா

நள்ளாற்றுத் தெண்டிக்கு நல்வரதன் சீட்டுமயல்
விள்ளாம லெத்தனைநாள் வெம்புவேன் — கள்ள
மதனப் பயலொருவன் வந்துபொருஞ் சண்டைக்
குதவக் கடுகிவர வும். (உகக)

கு-பு. நள்ளாறு - திருநள்ளாறு. காரைக்காற் சீமையிலுள்ளது. தெண்டி - ஒரு தாசி. சீட்டுக்கவி - சீட்டுக்கவி. சீட்டு - எழுத்து. சீட்டு என்பது இக்காலத்துச் சீட்டு என மருவிற்று. வரதன் - காளமேகத்தின் இயற்பெயர்.

தெண்டி நள்ளாற்றினின்று திருக்குடந்தைக்கு வந்தபோது பாடியது :—

வெண்பா

தேற லமிர்தந் தெவிட்டிடினுஞ் செங்கனிவாய்
ஊற லமிர்த முவட்டாதே — வீறுமதன்
தன்னுணை நள்ளாறர் தம்மாணை யும்மாணை
என்னுணை தெண்டியா ரே. (உகஉ)

கு-பு. தண்டியாரே என்றும் பாடம். குடந்தை - கும்பகோணம்.

வேளான் வீட்டிலிருந்து இல்லையென்று சொன்னபோது பாடியது :—

வெண்பா

பாலலகை யன்று பரிந்தளித்த கோத்திரத்துக்
காலமென வந்த வடைக்கலவன் — சூலந்
திருக்கையிலே யேந்துஞ் சிவனறிய வேளான்
இருக்கையிலே சாகுடியா ஞன். (உகங)

கு - பு. அலகை என்றது காரைக்காலம்மையைப் போலும். சாகுடி - செத்தகுடி.

நாகபட்டணத்துச் செட்டி அடைப்புவீதம் பாடச் சொன்னபோது பாடினதி லொருபாட்டு:—

வெண்பா

முற்றாத காஞ்சியினு முல்லையினும் பாலையினுங்
கற்றான்பின் சென்ற கருணைமால் — பெற்றான்சேர்
ஆலைப் பதித்தா ரளகத்தி யார்க்கயனார்
வேலைப் பதித்தார் விழி. (உகச)

கு-பு. அடைப்புவீதம் யாதென்பது விளங்கவில்லை. காஞ்சியில் கற்றான்பின் சென்றது - கணிகண்ணருக்குப்பின் போனது. முல்லையில் கற்றான்பின் சென்றது - முல்லை நிலத்தில் கன்றையுடைய பசுவின்பின் சென்றது - கிருஷ்ணன். பாலையில் கற்றான்பின் சென்றது - காட்டில் விசுவாமித்திரர்பின் சென்றது - இராமன். பெற்றான் - வணிகன்பேர். ஆலைப்பதி - அவனூர்.

சவையப்ப நாயனைப் பாடிய கவி:—

வெண்பா

சொருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்கெழுந்த வாயா புலையா — திருக்குடந்தை
நாயா நரியாவுன் ளைய்முகமுஞ் சேய்வடிவுந்
தாயார்தான் கண்டிலளோ தான். (உகரு)

கு-பு. சோற்றுப்பொருக்கு - சோற்றுப்பற்று பட்டைபோற் காய்ந்து வெடித்தது. கண்டிலையோ என்றும் பாடம்.

திருக்கண்ணமங்கை நம்பியாரைப் பாடியது:—

வெண்பா

தருக்குலவு கண்ணமங்கைத் தானத்தா ரெல்லாந்
திருக்குளத்து மீனொழியத் தின்றார் — குருக்கொடுக்கும்
நம்பிமா ரென்றிருந்தோம் நாட்டி லழிகூத்தித்
தம்பிமா ராயிருந்தார் தாம். (உகசு)

கு-பு. திருக்கண்ணமங்கை தஞ்சாவூர் ஜில்லா நன்னிலந் தாலுகாவில் திருவாரூரிலிருந்து மேற்கே குடவாசல்போகுஞ் சாலையிலுள்ளது. தானத்தார் - ஸ்தானிகர். குரு - பெருமை. உருக்கொடுக்கும் என்றும் பாடம்.

கண்ணபுரந் தீத்தாளைப் பாடிய வசை :—

வெண்பா

கந்த மலரயனூர் கண்ணபுர மின்னூருக்
கந்தவிள நீரைமுலை யாக்கினார் — சந்ததமுந்
தோற்றமுள தீத்தாட்குத் தோப்பை முலையாக்கினார்
ஏற்றமெவர்க் காமோ வினி. (உகஎ)

கு-பு. கண்ணபுரம் - மேலே கஅச - ம் பாட்டின்கீழ்க் குறிப்புப் பார்க்க. தீத்தாள் - ஒரு தாசி. தோப்பை - தோற்பை.

குடவாசல் விண்ணாள் தானே வசை பாடச் சொல்லப் பாடிய கவி :—

கட்டளைக் கலித்துறை

செக்கோ மருங்குல் சிறுபய றோதனஞ் சிக்களகம்
வைக்கோற் கழிகற்றை யோகுழி யோவிழி வாவிதொறுங்
கொக்கேறி மேய்குட வாசல்விண் ணாள்வரைக்கோம்பியன்னீர்
எக்கோ படைத்தது நீரோ நெருப்பி லெரிந்தவரே. (உகஅ)

கு-பு. குடவாசல் - தஞ்சாவூர் ஜில்லா நன்னிலந் தாலுகாவிலுள்ளது. விண்ணாள் - ஒரு தாசி. கோம்பி - ஓணான்.

புலிக்குட்டிச் சிங்கனைப் பாடிய வசை :—

விருத்தம்

போன போன விடந்தொ றுந்தலை
பொட்டெ ழப்பிறர் குட்டவே
புண்ப டைத்த மனத்த னாகிய
பொட்டி புத்திர னத்திரன்

மான கீன னிலச்சை கேட
னொழுக்க மற்றபு ழுக்கையன்
மாண்ப ஞம்புலிக் குட்டிச் சிங்கன்
வரைக்கு ளேறியி றங்குவீர்
பேனு மீரு மெடுக்க வோசடை
பின்னி வேப்பெணெய் வார்க்கவோ
பிரிவி ழிக்கரி யெழுத வோவொரு
பீறு துண்டமு டுத்தவோ
கான கந்தனில் வைக்க வோவிரு
கால்வி லங்கிடு விக்கவோ
கற்க ரங்கொடு சாட வோவொரு
காரி யந்தனை யேவுமே. (உகக)

கு-பு. பொட்டி - அறிவில்லாத பெண்; மலையாளம்.

முச்சங்கம் திருவிளையாட்டு மதுரைச் சொக்கர் எல்லா மடங்கப் பாடிய கவி :—

வெண்பா

நூலார்நா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலார்நா னூற்றுநாற் பத்தொன்பான் - மேலார்நாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்குங்
கத்தன் மதுரையிற்சொக் கன். (உ௨௦)

கு-பு. இதில் முதல் இடை கடைச்சங்கங்களிலிருந்தார் தொகை முறையாகக் கூறப்படவில்லை. முதலடியில் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்ப தென்பது முதற்சங்ககாலத்துப் பாடினோர் தொகை. இரண்டாமடியில் நானூற்று நாற்பத்தொன்ப தென்பது கடைச்சங்ககாலத்துப் பாடினோர் தொகை. பின்னர் நாற்பத்தொன்ப தென்பது கடைச்சங்கமிருந்தார் தொகை. முச்சங்கத்தும் இருந்தார் பாடினோர் முதலியவர்கள் தொகையை இறையனாரகப்பொருளுரையிற் காண்க.

திருமலைராயன் சபைக்கெழுதி விடுத்த கவி :—

விருத்தம்

தூதஞ்சு நாழிகையி லாறுநா ழிகையினிற்
பல்சந்த மாலைசொலவுஞ்
சூழுலா வந்தாதி யேழுநா ழிகையினிற்
றொகைபெற வகுத்தோதவும்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகையினிற்
பரணியொரு நாண்முழுதுநீள்
பாரகா வியமெலா மோரிரு தினத்தினிற்
பகரக்கொ டிக்கட்டினேன்
சீதஞ்செ யுந்தொங்கன் மார்பினு னியலிசை
தெரிந்ததிரு மலைராயன்முன்
சீறியே வாதுகவி பாடுதற் கெதிர்வருந்
திருட்டுக்க விப்புலவரைக்
காதும்பி டித்துக் கவித்துக் கதுப்பிற்
கரத்திட்ட டித்துமுதுகிற்
கலனைவைத் தேமுழுக் கடிவாள மிட்டேறு
கவிகாள மேகநானே. (உஉக)

கு-பு. தூது, பல்சந்தமாலை, உலா, அந்தாதி, மடல், கோவை, பரணி, காவியம் என்பன நூல் விகற்பம். இவற்றின் இலக்கணங்களை வச்சணந்திமாலை முதலிய பாட்டியல்களிற் காண்க.

அதிமதுர கவிராசன் பாடிய கையறம் :—

வெண்பா

வாசவய னந்தி வரதா திசையனைத்தும்
வீசு கவிகாள மேகமே — பூசுரனே
விண்டின்ற வெவ்வழலில் வேவதோ பாவியேன்
மண்டின்ற பாணமென்ற வாய். (உஉஉ)

கு-பு. நந்தி - நந்திபுரம். மேலே உ0௧ - ம் பாட்டின் கீழுள்ள குறிப்புப் பார்க்க. மண்டின்றபாணம் - மேலே உ0௬-ம் பாட்டின் கீழுள்ள குறிப்புப்பார்க்க. கையறம் - கையறு நிலே. கை - செயல்.

குமாரசரசுவதி

குமார சரசுவதி கிருஷ்ண பூபாலன் ஒட்டியனைச் செயித்தபோது பாடியது :—

வெண்பா

கலிங்க மிழந்து நந்திக் கைச்சங்கந் தோற்று
மெலிந்து கடகந்நழுவ விட்டாள் — மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானகிட்ண பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் பெண். (உ௨௩)

கு-பு. குமாரசரசுவதி என்பவர் ஒரு புலவர். இவர் சரிதம் வேறொன்றுந் தெரியவில்லை. பாலசரசுவதி என்பதுபோல் குமாரசரசுவதி என்பதும் பட்டமா யிருக்கலாம்.

இப்பாட்டு விஜயநகரத் தரசரான கிருஷ்ணதேவராயர் ஒட்டரதேசத் தரசனாகிய பிரதாபருத்திர தேவனை வென்றதை-யும் பின்னர் அவனோடு சந்தி செய்துகொண்டு அவன் மகளை மணமுடித்ததையும் கூறுகின்றது.

கிருஷ்ணதேவராயர் நரசிம்மராயரின் இரண்டாம் புதல்வர். இவர் கி. பி. 1509-ல் பட்டத்துக்கு வந்து கி. பி 1530 வரை அரசு புரிந்தவர். விஜயநகரத் தரசர்களுள் இறைமாட்சி, கல்வி, ஆண்மை, கொடை முதலியவற்றால் சிறந்து விளங்கியவர் கிரு-ஷ்ணதேவராயரே. இவர் காலத்தில் விஜயநகர ராச்சியம் பெருஞ் சிறப்புற்று விளங்கியது. இவர் புலவர்களை ஆதரித்தது மன்றித் தாமுமொரு புலவராய் விளங்கினர். தெலுங்கிலுள்ள ஆமுக்தமால்யதா என்னும் நூல் கிருஷ்ணதேவராய ரியற்றியது. கிருஷ்ணராய விஜயம் முதலிய நூல்கள் இவர் வீரப்பிரதாபங்-களை எடுத்துக் கூறும். தென்னாட்டில் வழங்கும் இராயர் அப்-பாஜி கதைகளில் வரும் இராயர் இவரே ; அப்பாஜி என்பவர்

இவர் மந்திரி திம்மப்பர். கிருஷ்ணராயர் தென்னாட்டிலுள்ள பல தேவாலயங்களையும் தரிசித்து அவைகளுக்குப் பூதானம் சொர்ணதானம் முதலிய வழங்கியது மன்றி மண்டபம் கோபுரம் முதலியவும் கட்டி வைத்தனர்.

பிரதாப ருத்திரதேவன் ஒட்டா தேசத்தைக் கி. பி. 1504 முதல் கி. பி. 1532 வரை ஆண்டவன். புருஷோத்தம தேவன் பின் பட்டத்துக்கு வந்தவன்.

இப்பாட்டுச் சிலேடை. பிரதாபருத்திரனைப்போல அவன் மகளும் கலிங்கத்தை இழந்து கைச்சங்கத்தைத் தோற்றுக் கடகத்தையும் நழுவ விட்டாள் எனகின்றது. பிரதாபருத்திரனைக் குறிக்கும்போது கலிங்கம் என்பது கலிங்கதேசம்; கைச்சங்கு என்பது ஒட்டரதேசத்துக் கீழ்க்கரையிலுள்ள ஓரூர். கடகம் என்பது ஒட்டரதேசத்துத் தலைநகர்; அவன் மகளைக் குறிக்கும்போது கலிங்கம் என்பது புடைவை; கைச்சங்கு என்பது முன் கையில் வளையல்; கடகம் என்பது தோள்வளை. கடைசியடியிலுள்ள பெண் என்பது ஒட்டியன் பெண்ணைக் குறியாது பொதுவாக ஒரு பெண்ணைக் குறிக்கின்றது என்றும் கூறலாம்.

அபிராமன் நாலுபாஷையிலும் பாடுகிறவரோ வென்ற போது பாடியது:—

வெண்பா

கூத்தாடி லஞ்சக் கொடுக்கா வபேபேட்டிச்
சோத்தாட்டா வைவேசித் தொண்டனே-ஆத்தான
அந்த விழுப்புரமு மம்பிநக ருங்கெடுக்க
வந்தகுலா மாவபிரா மா. (உஉச)

கு-ப. இப்பாட்டும் குமாரசரசுவதியே பாடினது. அபிராமன் என்பவன் விஜயநகரத்து அரசமரபைச சார்ந்தவனாக, அன்றேல், அவ்விராச்சியத்தில் உத்தியோகம் வகித்தவனாக இருத்தல் வேண்டும்.

லஞ்சக்கொடுக்கு தெலுங்கு; வேசிமகன் என்பது பொருள். அரே - அடே. பேட்டிச்சோத் - மகளைப் பெண்டாள்பவன். ஐவேசி - ஐவேசு, பொருள். குலாமன் - அடிமை. இவை நான்கும் இந்துஸ்தானி. தாட்டன் - இறுமாப்புள்ளவன்; கன்னடம். ஆத்தானம் - ஆஸ்தானம்.

ஆத்தானமாகிய அந்த விழுப்புரம்-சிறந்த வேத்தவை. அம்பிநகர் - விஜயநகரம்; இது பல்லாரி ஜில்லாவி லுள்ளது; அங்கில பாஷையில் Hampi எனப்படும்.

தத்துவப் பிரகாசர்

திருவாரூர்க் கொடியிறக்காமற் றகைந்தது :—

வெண்பா

மருவுபுகழ்க் கிட்ண மகாராய ராணை
அரிய வடமலையா ணை — திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதந் திருவாணை
தியாகக் கொடியிறக்கா தே. (உஉ௫)

கு-பு. தத்துவப் பிரகாசர் என்பவர் ஒருபண்டாரம். முன்னர் வரும் 237-ம் பாட்டுப்பார்க்க.

கிட்ணமகாராயர் - விஜயநகரத்தரசர் கிருஷ்ண தேவ மகாராயர். மேலே 223-ம் பாட்டின் கீழுள்ள குறிப்புப் பார்க்க.

வடமலையான் என்பவன் இராயருடைய அதிகாரி போலும். கிருஷ்ண தேவராயர் காலத்தில் அறுவன்பாடியில் வடமலையார் என்று ஒருபண்டிதர் இருந்ததாகத் தெரிகின்றது. கி. பி. 1523-ல் இவருக்குச் சோழப்பூண்டி என்னு மூரில் நிலமும் ஒருவீடும் தேவதானமாகப் பிக்ஷாமடத்து விசுவேசுர சிவாசாரியர் கொடுத்ததாக வட ஆர்க்காட்டில் ஆரணித்தாலுகாவில் தேவிகாபுரத்தி லுள்ள பிருகதாம்பாள் கோயிலின் முதற் பிரகாரத்து வடக்குச் சுவரிலுள்ள கல்வெட்டொன்று கூறுகின்றது.

பாகற் கொடியறுத்தல் என்பது திருவாரூரில் நடக்கும் பாகல் வேட்டையைக் குறிக்கும். பங்குனி யுற்சவத்தில், தேரினின்று இறங்கிய பின்பு, சுவாமி திருவாரூரிலிருந்து பலிவலத்துக்கு மேற்கேயிருக்கும் வேலங்குடியிலுள்ள மண்டபத்துக்கெழுந்தருளி அதற்கு எதிர்த் தோட்டத்திலுள்ள பாகற் கொடிகளை அறுப்பர். இது அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடிய திருவாரூருலாவில் 421-ம் கண்ணியில் "தியாகக் கொடியே தனிவளரச் செய்தொரு நாட் - பாகற் கொடியே பலவறுப்பான்" என்று குறிக்கப்பட்டுளது. 'பாகற் கொடியறுப்பார் பாகர் திருவாணை' என்றும் பாடம்.

தியாகம் என்பதின் இகரம் குற்றியலிகரம்.

கிருஷ்ணராயருக் கெழுதி விடுத்த பாட்டு:—

வெண்பா

ஊழித் துலுக்கல்ல வொட்டியான் றானுமல்ல
வீழித் துலுக்குவந்து மேலிட்டு — வாழி
சிறந்ததிரு வாரூர்த் தியாகருடை பூசை
இறந்ததே கிட்டணரா யா. (உஉசு)

கு-பு. ஊழித்துலுக்கு என்றது விஜயநகர ராச்சியம் தலையெடுத்தற்குமுன் தென்னாட்டின்மேற் படையெடுத்து வந்து கொள்ளையடித்த மாலிக்காபூர் முதலிய துலுக்கரை. ஒட்டியானென்றது பிரதாபருத்திர தேவனை. இவர்கள் கிருஷ்ணதேவராயர் பட்டத்துக்கு வருமுன் தென்னாட்டின்மேற் படையெடுத்துச் சென்று ஊர்களை அழித்தவர். வீழித்துலுக்கு என்றது திருவீழிமிழலையிலிருந்து வந்து திருவாரூரில் அருச்சகர்களாயிருந்த பட்டர்களை. அடுத்த பாட்டுப் பார்க்க. இவர்கள் துலுக்கரை யொத்த குணத்தினராயிருந்தமையின் துலுக்கரெனப்பட்டார். வீழியார் திருவாரூர்க் கோயில் நிர்வாகர்களாகிய உள்துறைப் பகுதியாருள் ஒரு பகுதியார் என்ப.

இதுகேட்டு ராயர் சிரிபட்டரை மாற்றிய போது பாடியது:—

வெண்பா

உண்ட வயிற்றி லுமிக்காந்த லிட்டதே
தொண்டரே வீழ்த் துலுக்கரே — பண்டெல்லாம்
அப்ப மவலெள் ளதிரசமுந் தோசைகளுங்
கப்புவதும் போச்சே கவிழ்ந்து. (உஉஎ)

கு-பு. சிரிபட்டர் - ஸ்ரீபட்டர். உமிக்காந்தல் - எரிந்து தழலாயிருக்கும் உமி. காந்தல் - எரிதல். கப்புதல் - மொக்குதல், உண்ணல். கவிழ்ந்து போச்சு என்க.

சாளுவ நாயக்கர் படுத்துக்கொள்ளச் சொன்ன போதுபாடிய கவி:—

வெண்பா

மூட்டை கலம்புழுதி முக்கலஞ் சுத்தப்பாழ்
வீட்டை விடுதியாய் விட்டாயே — போட்ட
தடுக்கெல்லாம் ஈறல் தலையணையேல் வைக்கோல்
படுக்கலா மோசொல்லப் பா. (உஉஅ)

கு-பு. சாளுவநாயக்கர் - இவர் சரிதமும் ஒன்றும் தெரியவில்லை. இவரும் விஜயநகரத்தரசரது அதிகாரியாதல் வேண்டும். சாளுவநாயக்கன் பட்டினமென்று இவர் பெயரால் ஒரு பட்டினம் தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலுகாவில் கடலோரத்திலுளது.

மூட்டைப்பூச்சி கலம்; புழுதி முக்கலம் (மூன்றுகலம்) என்க.

இதுகேட்டுத் திருத்தோணியப்பர் பாடியது:—

விருத்தம்

ஆயிரவர் புலவோரி லொருவன் பிரபந்தகவி
யவரா யிரர்க்குளொருவன்
அந்தாதி நூதுலாப் பரணிகோ வைக்கமக
னவரா யிரர்க்குளொருவன்

போயிடம் பெறுநா டகபுரா ணிகனவன்
போலா யிரர்க்குளொருவன்
பொருட்பெருங் காப்பியம் புகல்வாக்கி மற்றவன்
போலா யிரர்க்குளொருவன்

பாயிரந் தருபஞ்ச லட்சண விதானியப்
படியா யிரர்க்குளொருவன்
பரசமய தர்க்கநூல் பகர்வாதி மற்றுமப்
படியா யிரர்க்குளொருவன்

தேயமெண் டிசைபரவு தேசிகோத் தமனத்
திறத்தா யிரர்க்குளொருவன்
சிவனைத் துதித்துண் டுடுத்துக் கொடுத்திடுந்
தெய்வச் சிவக்கியானியே. (உஉரு)

கு-பு. மேற்பாட்டுக்கும் இதற்கும் ஏதும் சம்பந்த மிருப்ப தாய்த் தெரியவில்லை. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் முதலிய கவிகள் பாடுவோன் கவி. அரும்பொருள்களைச் செம்பொருணடையவாகச் செய்பவன் கமகன். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களைக் கேட்போர் வேட்குமாறு விரித்துக் கூறுபவன் வாக்கி. வாது செய்யுமிடத்து ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டிப் பிறன்கோள்களை மறுப்பவன் வாதி.

புலவர் ஆயிரவர்க்குள் ஒருவன் பிரபந்தகவி; பிரபந்தகவி ஆயிரவர்க்குள் ஒருவன் கமகன் என்றிவ்வாறு பொருள் பண்ணுக. அவர் - அத்தன்மையர். விதானி - விதிமுறை யறிந்தவன்.

விருத்தம்

குட்டுதற்குப் பிள்ளைப்பாண் டியனு மில்லை
குறும்பியள வாக்காதைக் குறித்துத் தோண்டி
எட்டினு லறுப்பதற்கு வில்லி யில்லை
இரண்டொன்றாய் முடிந்து திறங்கப் போட்டு
வெட்டுதற்குக் கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டுக் கவிப்பாட்டு விரைந்து பாடித்
தெட்டுதற்குத் தமிழறியாத் துரைக ளுண்டு
தெல்லடித்துப் புலவரெனத் திரிய லாமே. (உ௲௦)

கு-பு. வில்லி - பாரதம் பாடிய வில்லிபுத்தூரார். தெட்டுதல் - வஞ்சித்தல். தெல்லடித்தல் - விளையாடுதல்; தெல் - ஒரு வகை விளையாட்டு. தெல்லடித்தல் வஞ்சித்தலுமாம்.

விருத்தம்

நினைவுகவி சொல்வோ மெனச்சொலிப் பிறர்கவிதை
நினைவினைத் திருடி வையோம்
நீடுலகின் மனிதரைப் பாடிலோ நாமென்று
நீள்வசைகள் பாட வறியோம்
பினையிளைய நாவல ருடன்பங்கு பேசிப்பிர
பந்தங்கள் பாடிக் கொடோம்
பேசுவது தேவார மேயலால் வாய்க்கெளிய
பேய்க்கிரந் தங்கள் பேசோம்
இனிமைதரு பூருவத் தூக்குருக் களைமறந்
தெட்டிடத் துத்திட் சைபோய்
இட்டசிறு பேர்மாற்றி மாதமொரு பேரிட்
டழைக்கநா மிறுமாந் திரோந்
தனியிருந் தெம்மைப் புறங்கூறு வார்பாடு
தணியக் கவிபா டுவோஞ்
சமணூல்க ளைப்பொரு ளெனக்கொளோந் திருஞான
சம்பந்த ரடியார் நாமே. (உ௲௧)

கூத்தனூரப்பன் வாலகோகிலங்கவிகள் எப்படி என்று இராயர் கேட்கச் சொல்லியது:—

கட்டளைக் கலித்துறை

மன்கவி தாவும் பொழிற்கூத்த னூரப்பன் வாய்தலைமன்
தன்கவி தெள்ளிய பால்வால கோகிலந் தானுரைத்த
நன்கவி பாலுக் கிடுசர்க் கரைக்கவி நாங்கள்சொல்லும்
புன்கவி யுப்பொடு காயமென் றேசொல்லிப் போற்றுவரே.

கு-பு. கூத்தனூரப்பன் வாலகோகிலம் என்னுமிவர்களது கவிகள் எப்படி என்று கிருஷ்ணராயர் கேட்க என்க.

கவிதாவும் - குரங்குகள் தாவும். கூத்தனூரப்பன்கவி பால்; வாலகோகிலங்கவி பாலுக்கிடு சர்க்கரை; எங்கள்கவி கறிக்கிடும் உப்பும் காயமும். காயம் கறிகட்கிடும் கூட்டு.

ஒட்டக்கூத்த னென்றொரு புலவன்வரவு அவர் கேட்டுச் சொல்லியது:—

வெண்பா

பறியாரோ நின்வாயிற் பல்லதனைப் பாரோர்
முறியாரோ நின்முதுகின் முள்ளைச் — சிறுகவொரு
மட்டப்பேர் போதாதோ வாக்கிதுவே யானக்கால்
ஒட்டக்கூத் தன்று னுனக்கு. (உ௩௩)

கு-பு. பாவோர் என்றும் பாடம். முதுகின் முள் - முதுகெலும்பு. மட்டப்பேர்-அளவானபேர்; தகுதிக்குத் தக்கபேர்.

ஒருவன் புடவைதரப் பார்த்துச் சொல்லியது:—

விருத்தம்

வெற்றிப் பாடுங் குணப்பாடும் வீரப் பாடு மொருகவியில்
தெற்றிப் பாட வதுகண்டு சீநக் கரசர் துகிலீந்தார்
பற்றிப் பார்க்க வதனூடே பலதே வேசர் வீற்றிருந்தார்
சுற்றிப் பார்க்கப்பயப்பட்டுத்தூரவைத்துத்தொழுதோமே

கு-பு. தெற்றுதல் - பின்னுதல், கோத்தல். சீநக்கரசர் - ஸ்ரீநக்கராசர். சுற்றுதல் - உடுத்தல்.

உலோபரைப் பாடியது:—

விருத்தம்

குரங்குமாய் நண்டுகட்டித் தேளுங் கொட்டிக்
குடியாத மதுக்குடித்தே பேயு மேறி
இரங்கவருங் காஞ்சொறியின் பொடியுந் தூவி
இஞ்சிதின்று கொள்ளிபிடிந் தெழுந்தாற்போலத்
தருங்கருணை யில்லாத புல்லர் வாழ்வில்
தண்டிகையின் மீதேறிச் சம்பத் தேறிக்
கருங்கைமதக் களிறேறிக் கழுவி லேறிக்
காடேறி நாடேறித் திரிவார் கண்டீர். (உருடு)

கு-பு. எரிந்தாற் போல என்றும் பாடம்.

தீயோரைப பாடியது:—

விருத்தம்

பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்
பசாசறைந்தா லீறிட்டுப் பார்க்க வல்லோம்
வேம்புகசப் பறக்கறியு மாக்க வல்லோம்
விறல்வேழத் ததிகமதந் தணிக்க வல்லோஞ்
சாம்பொழுது திடமாகப் பேச வல்லோந்
தரணியின்மேற் கல்லாத தொன்று மில்லை
தீம்பரைநல் லவராக்கிக் குணமுண் டாக்கத்
திறமதறி யாமனின்று திகைக்கின் றோமே. ()

தத்துவப்பிரகாச பண்டாரத்துக்கு இலக்கணம் வருமோ என்றபோது பாடியது:—

வெண்பா

கவடிகளா கத்திரியுங் கள்ளர்கா ணன்னூற்
சுவடியிருந் தாவதென்ன சொல்வீர் — குவலயத்துக்
காட்டுக் கெறித்தநிலாக் கண்ணிரண்டு மில்லாதான்
வீட்டுக் கெரித்த விளக்கு. (உகஎ)

கு-பு. கவடிகள் - கபடிகள். சுவடி - ஏடு. நன்னூற்கருத்தறியும் ஆற்றலில்லாதாரிடத்து நன்னூற் சுவடியிருத்தல் காட்டினெறிக்கும் நிலவும் குருடன் வீட்டிலெரியும் விளக்கும் போலும். நீங்கள் நன்னூல் படித்திருந்தும் உங்களுக்கு இலக்கணம் வாராது என்பது குறிப்பு. இவ்வாறு பொருள் கொள்ள அறியாது வீட்டுக் கெறித்த விளக்கு என்று பாடத்தை மாற்றினருமுண்டு.

கவிராசபிள்ளை

ஆசுகவிராச சிங்கம் கடிகையாரைப் பாடியது:—

வெண்பா

செந்தமி ழோர்தங்கள் சீபாத தூளிபொர
வந்த புலவோர்தம் மார்பானி — கந்தன்
அடிகையா ரப்பரவு மாசுகவி ராசன்
கடிகையார் கோலா கலன். (உ௫அ)

கு-பு. இங்கே ஆசு கவிராச சிங்கம் என்று குறிக்கப்பட்ட புலவர் சேறைக் கவிராசபிள்ளை என்பவர். சௌந்தரிய லகரி பாடிய வீரைக் கவிராசபண்டிதர், செங்கோட்டைக் கவிராச பண்டாரம் முதலியோரினின்று வேறு படுத்தற்கு இவர் சேறைக் கவிராசர் எனப்படுவர். இவர் இயற்பெயர் கவிராசரோ வேறோ தெரியவில்லை. விரைவிற் கவிபாடும் ஆற்றலுடையாருட் சிறந்தமையின் ஆசுகவிராசசிங்கமெனப்பட்டார். வண்ணம் பாடுவதிற் சிறந்தவராதலின் வண்ணக் களஞ்சியம் என்னவும் படுவர். இவர் காஞ்சியாற் கருணீகர். திருக்காளத்தியிலிருந்த செங்குந்தர் மரபினராகிய வேங்கடராச முதலியாரால் ஆதரிக்கப் பெற்றவர். முருகக்கடவுண்மீது பதிகம் பாடினர்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் தாம்பாடிய சேயூர் முருகன்பிள்ளைத்தமிழிலே அம்புலிப்பருவத்தில் வரும் 'தவிராத' என்றற்றொடக்கத்துக் கவியிலே இவர் செய்த சேயூர் முருக னுலாவை எடுத்துக் கூறியிருத்தலால், இவர்காலம் வீரராகவ முதலியார் காலத்துக்கு முந்தியதாகும். இவர் இயற்றிய நூல்கள் திருக்காளத்தி நாதருலா, திருவண்ணாமலையார் வண்ணம், சேயூர்

முருகனுலா, திருவாட்போக்கி நாதருலா முதலியன. இவர்பாடிய திருவண்ணுமலையார் வண்ணம் "சிலைக்காம னுடலெரிய"என்றற் ருெடக்கத்தது; அதனை வண்ணத்திரட்டு என்னும் சிறுபுத்தகத் தில் காணலாம்.

கடிகை - கடிகாசலம்; திருக்கடிகை என்று சொல்லவும் படும். இது வைஷ்ணவத் திருப்பதிகள் நூற்றெட்டின் ஒன்று; வட ஆர்க்காடு ஜில்லா வாலாஜாபேட்டைத் தாலுகாவிலுள்ள சோளங்கி புரத்திலுள்ளது.

கடிகையார் - கடிகை யூரார்; சிலர் கடிகைப் புலவர் என்ப. கோலாகலன்-ஆரவாரஞ் செய்பவன். கடிகையார் புகழைப் பரப் புவன் என்க.

பாண்டியராசா ஆரென்று கேட்டபோதுபாடியது—:

விருத்தம்

தென்பா ராளு மறிவிற் குறுமுனி
தெக்கிண கயிலையில்வாழ்
செங்குந் தக்குல வேங்கட ராயன்
றிருவா சற்புலவன்

என்பேர் வண்ணக் கட்சிய தன்றி
யெதிர்த்தவர் மார்பாணி
இந்தத் தேசப் புலவர் மனத்துக்
கிடியென வந்தேன்காண்

உன்பால் யான்வர வாசற்காரர்க்
குத்தா ரம்பண்ணி
உள்ளுக் கென்னை யழைப்பித் தாசி
லுரைக்குங் கவிதைகள்கேட்

டென்பால் வரிசைகள் பரிசில்க ணல்கி
யிரட்சித் திடவேணும்
இராமா சீவல மாறு பாண்டிய
ராச வரோதயனே. (உ௩௯)

கு-பு. தெக்கிணகயிலை - திருக்காளத்தி. வேங்கடராயன் ஒரு பிரபு. வண்ணக்கட்சி - வண்ணக்களஞ்சியம். கட்சி - கூடு. மார்பாணி - மார்பிலறையுமாணி. உத்தாரம் - கட்டளை. ஆசில் - விரைவில். விரைவிற்பாடுவோர் ஆசுகவி எனப்படுவர்.

இங்கே குறித்த சீவலமாறன் இராமபாண்டியன் அதிவீர ராமபாண்டியனாயிருக்கலாம்; அவனுக்கு ஸ்ரீவல்லப தேவன் என்னும் பெயருண்டு. அதிவீரராமபாண்டியன் கி. பி. 1563-ல் முடிசூடினன்.

திருவண்ணாமலையிற் பாடியது:—

கட்டளைக் கலித்துறை

கண்ணார் மதிக்குங் கவிராச சிங்கங் கடந்துதிரு
அண்ணாமலையப்பர் மேல்வண்ணம் பாடிமுத் தாலத்திகொண்
டெண்ணா யிரமட வார்சூழப் பல்லக்கி லேறிவந்தான்
உண்ணா முலையெல்லன் மூலைக டோறு மொதுங்கினனே.

இது பரமேசுரப் புலவன் பாடியது. (உசo)

கு-பு. கண்ணார் - கருதார், பகைவர். வண்ணம் - திருவண்ணாமலையார் வண்ணம். உண்ணாமுலை யெல்லன் - அடுத்தபாட்டுப் பாடிய உண்ணாமுலை எல்லப்ப நயினார்.

வெண்பா

பாழ்ப்பாய் மடத்துப் பரமாவுன் பாண்கவிதை
கேட்பாரெல் லாம்புத்தி கெட்டபேர்—தோட்பாவும்
ஓணன் விழுந்தாலு முண்டுபரி காரமிது
வாணா ளளவே வரும்.

இது உண்ணாமுலை எல்லப்ப நயினார் பாடியது. (உசக)

பாழ் பாய் - பாழ் பரந்த. பரமன் - மேல்வந்த 'கண்ணார்' எனறற்றொடக்கத்துக் கவிபாடிய பரமேசுரப் புலவன். பாண் - பாழ்; தாழ்ச்சியுமாம்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

கவிவீரராகவன் காஞ்சீபுரத்திலே படித்தபோது கந்தப்புராணங் கச்சியப்பர் பாடியது:—

விருத்தம்

பொங்குதமி ழயோத்தியில்வாழ் தசரதனென்
போனிடத்தும் பூதூர் வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா
கவரிருவர் தோன்றி னூரால்
அங்கொருவ னொருகலைமா னெய்திடப்போய்
வசைபெற்றா னவனி பாலன்
இங்கொருவன் பலகலைமா னெய்திடப் போய்க்
கவியினா லிசைபெற் றானே. (உ௪உ)

கு-பு. கவி வீரராகவ முதலியார் செங்கற்பட்டு ஜில்லாவில் பொன்விளைந்த களத்தூருக் கருகிலுள்ள பூதூரிலிருந்த வடுக நாத முதலியாரின் புத்திரன். இவர் இயற்பெயர் வீரராகவ முதலியார்; மிகச் சிறந்த புலவராய் விளங்கினமையில் கவி வீரராகவ முதலியாரென்றும் பிறவிக் குருடரானமையின் அந்தகக்கவி வீர ராகவ முதலியாரென்றும் சொல்லப்படுவர். அந்தகர்-குருடர். இவர் குருடராயிருந்தமையால் நூல்களை எட்டில் எழுதிப்படி யாது மனத்தில் அவதானித்துப் படித்தனர் என்பது, பின் வரும் 244-ம் கவியில் "கச்சியிலே தன்னெஞ்ச மேடெனக் கற்றா னொருமுத் தமிழையுமே" என்பதனாலும், 251-ம் கவியில் "ஏடா யிரங்கோடி யெழுதாது தன்மனத் தெழுதிப் படித்த வீரசன்' என்பதனாலும் விளங்கும். இவர் காஞ்சீபுரத்திலே கல்வி பயின்று புலமை நிரம்பப்பெற்றுச் சோழமண்டலம், பாண்டிமண்டலம், ஈழமண்டலம் முதலிய இடங்களெல்லாம் சென்று பற்பலவரி சைகள் பெற்றவர். இது பின்னர் 253-ம் கவியில் "இனிதினி தெனச்சேர சோழபாண் டியர்மெச்சி யிச்சித்த மதுரவாக்கி-ஈழமண் டலமளவு திறைகொண்ட கவிவீர ராகவன்" என்பதனா லும் ஏனையகவிகளாலும் விளங்கும். இவர் காலத்தில் இவர்

குடும்பத்தார் பூதூரை விட்டுக் களத்தூரிற் குடிபுக்கதனால் இவ ரூர் களத்தார் என்று சொல்லவும் படும். இவர் காலம் ஈழமண் டலத்திலே யாழ்ப்பாணத்தி லரசாண்ட பரராசசேகரன் காலம்.

இவரியற்றிய நூல்கள் திருக்கழுக்குன்றப் புராணம், சந்திர வாணன் கோவை, திருவாரூருலா, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் முதலியன.

கந்தபுராணங் கச்சியப்பர் - கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியர்.

வீரராகவர் என்பது கவி வீராகவருக்கும் இராமபிரானுக் கும் பொதுவாய் நின்றது ஒருகலைமான் - மாரீசனாகிய மாய மான். அவனிபாலன் ஒருகலைமான் எய்திடப்போய் வசைபெற் ருன் என்க. எய்திட - முன்னையது எய்ய என்றும் பின்னையது அடைய என்றும் பொருள்படும்.

பரராசசிங்கம் பொற்பந்தங் கொடுத்தபோது பாடி யது:—

வெண்பா

பொங்குமிடி யின்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே — குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம
பொற்பந்த மின்றளித்த போது. (உசரு)

கு-பு. பரராசசிங்கம் - பரராசசேகரன். இவன் முழுப்பெயர் பரராசசேகர சிங்கையாரியன் என்ப. இவன் யாழ்ப்பாணத் தில் பதினாறும் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரசாண்டவன். கனக சூரியச் சிங்கையாரியன் புத்திரன். இவன் விஜயவாகு என் னும் சிங்கள வரசனோடு செய்த யுத்தத்தில் சிங்கம்போற் பாய்ந்து யுத்தஞ் செய்தமையின் பரராச சிங்கமெனப் பட்டான் என்ப. பரராச சேகர சிங்கையாரியன் என்பதைத் திரித்துப் பரராச சிங்கம் என்று வழங்கினரென்று கொள்ளல் பொருத்த முடைத்து.

பொற்பந்தம் - பொற்கிழி. மிடியின் பந்தம் - வறுமையின் தொடர்ச்சி. விருது பந்தம் - வெற்றி விளக்கு. வெற்பு அந்தமான - மலையை ஒத்த.

இராமாயணம் அவதானிச்சுச் சொன்னபோது இராசா பாடியது:—

கட்டளைக் கலித்துறை

இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றொரு முத் தமிழையுமே.

கு-பு. இராமாயணச் செய்யுட்களை வாய்ப்பாடமாகச் சொல்லிப் பிரசங்கித்தபோது என்க. இராசா - பரராச சேகரன். அம்புயப்பள்ளி - தாமரைச் சேக்கை.

வண்ணம் பாடியபோது இராசா பாடியது:—

கலிவிருத்தம்

விரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும போதெலாம்
உரகனும் வாணனு மொப்பத் தோன்றினூற்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே. (உசஙு)

கு-பு. விரகன் - நிபுணன். வரகவி - சிறந்தகவி. உரகன் - ஆதிசேடன். வாணன் - மாவலி மகன். சிரகம்பிதஞ்செய்ய ஆயிரந்தலையுடைய ஆதிசேடனும், கரகம்பிதஞ்செய்ய ஆயிரங் கரமுடைய வாணாசுரனும் வேண்டு மென்பதாம். கம்பிதம்-அசைத்தல்.

சீவிலிபுத்தூரிற் பாடிய கவி:—

வெண்பா

வேசையரே மல்குமூர் வீதியிலார் வந்தாலும்
பேசி வலைவீசிப் பிடிக்குமூர் — ஆசைமயல்
பூட்டுமூர் கையிற் பொருள்பறித்தே யோடுகொடுத்
தோட்டுமூர் சீவிலிபுத் தூர். (உசச)

கு-பு. சீவிலிபுத்தூர் - ஸ்ரீ வில்லிபுத்தூர். இது இராமநாத புரம் ஜில்லாவிலுள்ளது; ஸ்ரீ வில்லிபுத்தூர்த் தாலுகாவிற்குத் தலைநகராயுள்ளது. இது வைஷ்ணவ ஆழ்வார்களுள் பெரியாழ் வாரும் சூடிக்கொடுத்த நாய்ச்சியாரும் பிறந்தவூர். இங்கே நாய்ச் சியாருக்கும், வடபத்திரசாயிக்கும், கிருஷ்ணசாமிக்கும், வைத் தியநாத சுவாமிக்கும் கோயில்களுள.

அரியலூர் மழவராயன் படி கொடுத்ததற்குப் பாடிய கவி:—

கட்டளைக் கலித்துறை

சேயசெங் குன்றை வருமொப் பிலாதிக்குச் செங்கமலத்
தூயசெங் கண்ணா னிணையொப்ப னேதண் டொழாயணிந்த
மாயன ளக்கும் படிமூன்று கிட்டிணைய மாமழவ
ராயன ளக்கும் படியொரு நாளைக் கிலக்கமுண்டே. ()

கு-பு. அரியலூர் திருச்சிறுப்பள்ளி ஜில்லாவில் உடையார் பாளையந் தாலுகாவிலுள்ளது. இவ்வூருக்குத் தலைவன் மழவரா யன் என்பவன். இவனை இப்போது ஜமீன்தார் என்ப. இங்கே குறித்த மழவராயன் பெயர் கிருஷ்ணைய ஒப்பிலாத மழவராயன் என்பது. இவன் வமிசத்தில் வந்த விஜய ஒப்பிலாத மழவராயன் என்பவன் சகம்1664-ம் ஆண்டு துந்துபி வருடத்தில், அஃதாவது கி. பி. 1742-ல், நரசப்பன் என்னும் பிராமணனொருவனுக்குப் பதினைந்துகுழி நிலம் தானங்கொடுத்ததாக அரியலூர்க் கிரு ஷ்ண சுவாமி கோயில் மகாமண்டபத்தின் வடபுறத்திலுள்ள கல்வெட்டொன்று கூறுகின்றது. இதனால் இந்த வமிசத்தார் ஒப்பிலாத மழவராயர் என்று சொல்லப்பட்டார் என்று தெரி கின்றது.

செங்குன்றை - செங்குன்றூர். மாயன் அளக்கும் படி - திரு மால் அளந்த உலகம். இரண்டாவது படி ஒருநாளுணவுக்கு வேண் டிய பொருள். இலக்கம்-லக்ஷம்.

குமார ஒப்பிலாதான் சங்கீதத்தைக் கேட்டுப் பாடியது:—

கட்டளைக் கலித்துறை

வாழொப் பிலாதவன் சேயொப்
பிலாத மழவதிசை
ஆழக் கடல்விட்டு நீபாடுங்
காலத்தரிசெலுங்கால்
நீழற் கவுத்துவ நீத்தச்செல்
வானந்த நீண்மணிதான்
காழொப் பினுநின் னிசைகேட்குங்
காற்கரைந் தேகுமென்றே. (உசஅ)

கு-பு. குமார ஒப்பிலாதான் என்பவன் மேற்பாட்டில் வந்த கிருஷ்ணைய ஒப்பிலாத மழவராயன் மகன். இவன் இயற்பெயர் தெரியவில்லை. அரி - திருமால். நீழல் - ஒளி. கவுத்துவம் - திருமால் மார்பிலணிந்துள்ள கௌத்துப மணி; கடலிற் பிறந்தது என்று பொருள். காழ் - வயிரம்.

நீத்தான் சங்கீதத்தைக் கேட்டுப் பாடியது:—

கட்டளைக் கலித்துறை

வாவிய பொற்பரி யாவூரில் விரையன் மைந்தபஞ்ச
காவியந் தேர்கின்ற நீத்தாசங் கீதத்திற் காவலாதாய்(?)
ஓவிய சாலையெல் லாங்கொல்லி யாமுள் ளுருகும் ரத்னம்
மேவிய கூடமெல் லாந்திரி கூடத்தின் மேற்படுமே. ()

கு-பி. வாவிய போர்ப்பரி என்றும் பாடம். ஆவூர் எவ்விடத்திலுளதென்பது தெரியவில்லை. ஓவியசாலை - சித்திரசாலை. கொல்லி - கொல்லிமலை, கொல்லிப்பாவை எழுதியுள்ளமலை. திரிகூடம் - திரிகூட பர்வதம்; இராவணனுடைய இலங்காநகரமிருந்த மலை. ஒற்றின் மேவிய கூடம் என்றும் பாடம்.

செழியதரையன் பரிசில் கொடுத்தனுப்பின போது சிலபொருள் வேண்டிப் பாடியது :—

கட்டளைக் கலித்துறை

சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவர்தண் ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் கறக்கின்ற வாவைநற் காறளைவர்
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு நிற்பரென்னீர்
சேலத்து வேந்த னகத்தாகந் தீர்த்த செழியனுக்கே. ()

கு-பு. செழியதரையன் என்பது பல்லவ தரையன், முனைய தரையன் என்பனபோல் வந்ததோர்பட்டப்பெயர். செழியனுடைய தரையன், பல்லவனுடைய தரையன் என்று பொருள் படும்போலும். தரையன் என்பதற்குப் பொருள் விளங்கவில்லை; நிலத்தான் என்னும் பொருட்டுப் போலும். இச்செழிய தரையன் கொங்கு நாட்டிலே சேலத்தி லிருந்தாண்டவன் போலும். இதனை இப் பாட்டில்வரும் 'சேலத்து வேந்தன்' என்பதும், அடுத்த பாட்டில்வரும் 'தென்பாலை சேலம் செயித்ததா கந் தீர்த்த செழியன்' என்பதும் குறிக்கும். இவன் தாகந்தீர்த்த செய்தி யாதென்பது தெரியவில்லை.

பழுத்த மரத்தில்தான் பழத்துக்கெறிவார்கள்; நீர் சுரக்கும் நிலத்தில்தான் கிணறு வெட்டுவார்கள்; பால்கறக்கின்ற பசுவைத் தான் காலைக்கட்டுவார்கள்; பாற்கடலைத்தான் மத்திட்டுக் கடைவார்கள்; அதுபோலக் கொடுக்கிறவனிடத்துத்தான் பொருள் இரப்பார்கள் என்க. இஃது ஒட்டென்னுமலங்காரம்.

செழியதரையனுக்கு விடுத்த சீட்டுக்கவி:—

விருத்தம்

ஏடாயி ரங்கோடி யெழுதாது தன்மனத்
தெழுதிப்ப டித்தவிரகன்
எதுசொலினு மதுவே யெனச்சொலுங் கவிவீர
ராகவன் விடுக்குமோலை

சேடாதி பன்சிர மசைக்குங் கலாகரன்
றிரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலஞ் செயித்த தாகந்தீர்த்த
செழியனெதிர் கொண்டுகாண்க

பாடாத கந்தருவ மெறியாத கந்துகம்
பத்திகோ ணுதகோணம்
பறவாத கொக்கனற் பண்ணுத கோடைவெம்
படையாய்த் தொடாதகுந்தஞ்

சூடாத பாடலம் பூவாத மாத்தொடை
தொடுத்துமுடி யாதசடிலஞ்
சொன்னசொற் சொல்லாத கிள்ளைபொன் றெயகுந்
துதிக்கவர விடவேணுமே. (உ௱௫௧)

கு-பு. சேடாதிபன் - ஆதிசேஷன். கலாகரன் - கலைக்கிருப்பிடமானவன். சிரிபதகை குலசேகரன் - கங்கை குலாதிபன்; வேளாளன். தென்பாலை - தெற்கிலுள்ள பாலைக்காடு கந்தருவம் எனபது இசைக்கும் குதிரைக்கும் பெயர்; ஆகவே பாடாத கந்தருவம் என்பது, பாடாத என்னும் அடையினுல் இசை என்னும் பொருள் நீங்க, குதிரைக்கு வெளிப்படை. எறியாத கந்துகம் முதலியவும் இவ்வாறே குதிரைக்கு வெளிப்படை. கந்துகம் - பந்து. பத்தி - வரிசை. கோணம் - வாட்படை. கொக்கு - கொக்குப்பறவை. கோடை - வேனிற்காலம். குந்தம் - சிறுசவளம், எறிவேல். பாடலம - பாதிரிப்பூ. மா - மாமரம். சடிலம் - சடை. கிள்ளை - கிளி. கந்துகம், கோணம், கொக்கு முதலிய வெல்லாம் குதிரைக்கும் பெயர். தொடை - மாலை.

தென்பாலை சேலஞ் செழித்ததாகத் தீர்த்த என்றும் பாடம்.

சந்திரவாணன் கோவை பாடியபோது பாடியது :—

விருத்தம்

மின்னு மாளிகை யனந்தை யாதிபதி
சந்திர வாணமகி பாலன்முன்
வீர ராகவன் விடுக்கு மோலைதன்
விருப்பி னுல்வலிய வேயழைத்

துன்னு காவிய மதிற்பெ ருத்ததொரு
கோவை யோதுகென வோதின
ஞேத மாதமொரு மூன்று மோதியொரு
நாலு மாதமள வாகவும்
இன்ன முந்தனது செவிபி லேற்றதிலை
யென்னி லிந்தவுல கெண்ணுமோ
இராச ராசர்நிறை கொள்ளு மென்கவிதை
யிங்கு வந்துகுறை யாகுமோ
தன்னை யென்சொலுவ ரென்னை யென்சொலுவர்
தமிழ்க்குத் தான்மண மல்லவோ
தன்பு கழ்க்குமிது நீதியோ கடிது
தானிங் நேரம்வர வேணுமே. (உ௩உ)

கு-பு. சந்திர வாணனைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லை. அநந்தை என்பது அநந்தபுரம் என்பதன் திரிபு. அநந்தபுரம் தென் ஆர்க்காடு ஜில்லாவில் விழுப்புரந்தாலுகாவில் விழுப்புரத்துக்குக் கிட்ட உள்ள ஓரூர். இங்கே முற்காலத்தில் ஒரு சிற்றரசன் இருந்தான் என்ப. கோவைபாட மூன்று மாதம் சென்றதென்றும், பாடி முடிந்து நாலுமாதமாயும் அதைச் சந்திரவாணன் கேட்கவில்லை என்றும் பொருள் கொள்க.

எருமை வரவிடப் பாடியது :—

விருத்தம்

இனிதினி தெனச்சேர சோழபாண் டியர்மெச்சி
யிச்சித்த மதுரவாக்கி
ஈழமண் டலமளவு திறைகொண்ட கவிவீர
ராகவன் விடுக்குமோலை
வனிதையர் விகாரமன் மதராச ரூபனம்
மயிலையதி பதிசக்கிர
வாளத்தி யாகிநங் காளத்தி கிட்ணப்ப
வாணனெதிர் கொண்டுகொண்க

கனதமிழ்த் துறையறி மரக்கலங் காதல்கூர்
கன்னிகா மாடநன்னூற்
கட்டுபொற் கொட்டாரம் வாணிசிங் காதனங்
கவிநாட கஞ்செய்சாலை

வினவுசிவ கதையிற் சரக்கறை யெனத்தக்க
வினையே னுடம்புநோயால்
மெலியுமோ மெலியாத வகைபால் பெருத்ததொரு
மேதிவர விடவேணுமே. (உ௫௩)

கு-பு. இத்தீட்டுக்கவி மயிலையாதிபதி காளத்தி கிருஷ்ணப்ப வாணனுக்கு எருமைக்காக எழுதி விடுத்தது. கிருஷ்ணப்பவாணன் சரிதம் தெரியவில்லை. மயிலை - மயிலாப்பூர். காளத்தி - காளத்தி முதலியார். காளத்தி முதலியார் மகன் கிருஷ்ணப்ப முதலியார்.

சக்கிரவாளத்தியாகி - உலகமெங்கும் புகழ்பெற்ற கொடையாளி. கொட்டாரம் - கொட்டகாரம், சாலை. நன்னூற்கொட்டாரம் - புஸ்தகசாலை. வாணி - சரசுவதி. நாடகஞ்செய்சாலை - கூத்தக்களரி. சரக்கறை - பொக்கிஷம். மேதி - எருமை.

திருக்கழுக்குன்றப் புராணம் பாடியபோது பாடியது :—

விருத்தம்

இந்நா ளிருந்தபேர் புதியபா கம்பண்
டிருந்தபேர் பழைய பாகம்
இருபாக மும்வல்ல லக்கணக் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை

அன்னுதி தானப்பிர வாகன் பிரசங்கத்
தனந்தசே டாவ தாரன்
அகிலப்பிர காசன்திம் மய்ய வப்பய்ய
னகமகிழ்ந் தினிது காண்க

தன்னூரு மோலையும் வரக்கண்டு நாம்வேத
சயிலப்பு ராணத் தையித்
தனைநா ளிருந்தோதி னேமரங் கேற்றுவது
தான்வந்த லாம லில்லை
நன்னுவ லோருட னிதைக்கேட் டெனைச்சோழ
னாட்டுக் கனுப்ப வேண்டும்
நவிலோலை தள்ளாம லேசுக்கிர வாரத்து
நாளிங்கு வரவேண் டுமே. (உருச)

கு-பு. தானப் பிரவாகன்-வரையாதுகொடுப்பவன். சேடன்-ஆதிசேஷன். திம்மைய வப்பையன் யாரென்பது புலப்படவில்லை. கி. பி. 1680 அளவில் செங்கற்பட்டில் ஒரு திம்மைய நாயக்கன் இருந்தாகத் தெரிகின்றது. வேதசயிலம் - திருக்கழுக்குன்றம்.

இப்படி எழுதின நீட்டுக்கவி அநேகமுண்டு. நீட்டுக் கவிக்கு நிரஞ்சன நாதர் பாடியது :—

கட்டளைக் கலித்துறை

நீட்டுக் கவியென்று சொல்வார் சிலரந்த நீட்டுக்கவி
காட்டுக் கெறித்த நிலவாகிப் போஞ்செங் கனகரத்னச்
சூட்டுக் கிரீட முடிவேந்த ருற்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுக் கிலக்யங் கவிவீர ராகவ னற்கவியே. (உருரு)

கு-பு. நீட்டுக்கவி காட்டுக்கெறித்த நிலவுபோற் பயனற்றுப் போம். அன்றேல், முடிவேந்தர் உற்பத்தியை நாசஞ் செய்யும் என்க.

ஆரூருலாக் கேட்டுப் பரராச சேகரன் பாடியது:—

கட்டளைக் கலித்துறை

புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெல்லாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே. (உருசு)

கு-பு. பரராச சேகரன் - மேலே 243-ம் பாட்டில் குறித்த பரராசசிங்க மென்பவன். இவன் திருவாரூர்த் தியாகர்மீது மிகுந்த பத்தியுள்ளவனென்றும் அடிக்கடி திருவாரூருக்குச் சுவாமி தரிசனத்துக்காகச் செல்பவனென்றும் இவனுக்கங்கொரு மாளிகை இருந்ததென்றும் அங்கிருந்து அந்தப்புரத்துப் பெண்கள் கோயிலுக்குப் போவதற்கு ஒரு கரந்த கற்படைவழி இருந்ததென்றும் சொல்வர். ஆதலால் இத்திருவாரூருலா இவன் வேண்டுகோளின்படி பாடி யிருத்தல்வேண்டும்.

கற்கவி — கல்லாற் செய்தகவி: கவி - கவிந்த வடிவினதாகச் செய்து வாசல் நிலையின்மேல் வைப்பது.

கயத்தாற்றுராசா உலாப் பாடியபோது பாடியகவி:—

வெண்பா

ஒட்டக்கூத் தன்கவியு மோங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டதே — அட்டதிக்கும்
வீசுங் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின். (௨௫௭)

கு-பு. கயத்தாறு - திருநெல்வேலி ஜில்லாவிலே கோயிற்பட்டித் தாலுகாவில் பாளையங்கோட்டையிலிருந்து பதினெட்டு மைல் தூரத்தில் உள்ளது. இப்போதுள்ள ஊருக்கு வடக்கே ஓரழிந்துபோன கோட்டையும் அழிந்துபோன பெருமாள் கோயிலும் சிவன் கோயிலுமுள. இந்தக் கோட்டை வெட்டும்பெருமாள் ராஜா கட்டினதாகச் சொல்லுவர்.

ஒட்டக்கூத்தன் கம்பன் கவிகள் பட்டப்பகல் விளக்குப் போல ஒளிமழுங்கித் தோன்றின. ஒட்டக் கூத்தன் கவிபட்டது; கம்பன் கவிபட்டது என்று தனித்தனி கூட்டி முடிக்க.

விசயராசன் பல்லக்கின்மீது வந்தபோது பாடிய கவி:—

கட்டளைக் கலித்துறை

திருமாலு மீசனும் பின்போயுந் தூது செலத்துணிந்தும்
அருமா துரியத் தமிழ்வளர்த் தாரவ ரோடுபங்காய்
வருமா மறையவன் பேர்சாதித் தேசிக வண்டமிழ்க்குப்
பெருமான் சிவிகைப்பின் சென்றான் விசயப் பிரமனுமே.

கு-பு. திருமால் பின்போனது காஞ்சியிலே கணிகண்ணன் பின்போனது. ஈசன் தூதுபோனது திருவாரூரிலே சுந்தரருக்காகப் பரவை நாய்ச்சியாரிடத்தில் தூதுசென்றது. மறையவன் - பிரமன். திருமாலோடும் ஈசனோடும் பங்கு போட்டுப் பிரமனும் பின்போனான் என்ன, விசயப் பிரமன் வண்டமிழ்க்குப் பெருமான் சிவிகைப்பின் சென்றான் என்க. 'விசயப்பிரமன்' என்றதனால் இங்கே குறித்த விசயராசன் பிராமணனாதல் வேண்டும்.

இடும்பாவனத்திற் பாடிய கவி:—

வெண்பா

பசிமுடுக நோவதல்லாற் பாழ்வீட்டிற் பாழ்த்த
கொசுகுகடி யாலுங் குமைந்தோம் — நிசையில்
நெடும்பாவம் யாஞ்செய்தா லீரென்ன செய்வீர்
இடும்பா வனநாத ரே. (உ௫௬)

கு-பு. முடுகல் - அணுகல். கொசுகு - உளம்பு. குமைதல் - குழைதல், வருந்தல். இடும்பாவனம் - திரு இடும்பாவனம் என்னும் சிவஸ்தலம். இது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் தேவாரம் பாடப்பெற்றது; தஞ்சாவூர் ஜில்லாவிலே திருத்துறைப்பூண்டித் தாலுகாவிலே தில்லைவளாகத்திலிருந்து தென்கிழக்கே ஆறுமைல் தூரத்திலுள்ளது.

நாகதேவனைப் பாடியது :—

விருத்தம்

வாயிலொன்று கல்லுமொன்று
நெல்லதான வண்ணமும்
வாடலாக வாறுமாதம்
வைத்திருந்த கத்தரிக்
காயிறப்பி லர்த்தகஞ்சி
யைக்கலந்த வண்ணமுஞ்
சாம்பொடிந்த தோரகப்பை
கைப்பிடித்த வண்ணமும்
மோரிலாத மீன்கள்வந்து
மொலுமொலென்ற சட்டியும்
மோருதர்க் கிடக்கொணர்ந்த
* * * *
* * * * *
* * * நாக
தேவனிட்ட வூணைநாம்
மறப்பதில்லை காணுமே. (௨௬௦)

கு-பு. இந்தப்பாட்டில் மூன்றாமடியின் பிற்பாகமும் நான்காமடியின் முற்பாகமுஞ் சிதைந்து விட்டன. வாயிலிட்ட சாதம் ஒன்று கல்லும் ஒன்று நெல்லுமாயிருந்ததன்மை என்க.

சிறையன் தினகரனைப்பாடிய வசை:—

வெண்பா

சிறையன் தினகரனைச் செந்தமிழ்க்கு நல்ல
துரையென்று நாங்கவிதை சொன்னோஞ் - சுரையுண்ணும்
வண்ணமே செய்தான் வரகவிக்கு வண்மை யென்னும்
எண்ணமே செய்தா னிலை. (௨௬௧)

கு-பு. துரை - தலைவன், அரசன். சுரை - கள். வரகவிக்கு வண்மை செய்யவேண்டுமென்று எண்ணினானில்லை என்க.

நந்திய மாணிக்கத்தைப் பாடியது:—

விருத்தம்

மாதாவைப் போற்பிறக்கத் தந்தையைப்போற்
 செலிக்கவிந்த வையந் தன்னில்
ஏதேனு மொன்றல்லால் நந்தியமா
 ணிக்கமிவ னேற்றம் பாரீர்
* * * * * *
* * * * *
பாதாதி கேசமெல்லாந் தன்றனைப்
 போற்படைத்தான் பதுமத் தானே. (உ௩०

கு-பு. இந்தப்பாட்டில் மூன்றாமடி சிதைந்து போய்விட்டது
பிறந்தார் பதுமைதானே என்றும பாடம்

கயத்தாற்று ராசா பாடிய கையறம்:—

வெண்பா

இன்னமுதப் பாமாரி யிவ்வுலகத் திற்பொழிந்து
பொன்னுலகிற் பெய்யப் புகுந்ததால் — மன்னும்
புவிவீர ராகமன்னர் பொனமுடிமேற் சூட்டுங்
கவிவீர ராகவமே கம். (உ௩௧

தோற்று தொளித்திருந்த தூலக் கவிகளெல்லாம்
மேற்று ரசையின் விளங்கியவே — ஏற்றாலுங்
கன்னவ தாரன் கவிவீர ராகவனும்
பொன்னுருஞ் செங்கதிரோன் போய். (உ௩௨

கு-பு. ஏற்றாலும் - இரத்தல் தொழிலுடையனாயினும், அரச
ரைப்பாடிப் பரிசுபெறுந் தொழிலுடையனாயினும். கன்ன
தாரன் - கன்னனுடைய அவதாரமானவன், கன்னனைப்போ
கொடுப்பவன். தான் ஏற்றாலும் பிறர்க்குக் கொடுப்பவன் என்

சடையாண்டியைப் பாடிய வசை:—

விருத்தம்

கொடையாண்ட மன்னரிற் கச்சிநல்லானைக் குறுகியன்றேன்
தொடையாண்ட முல்லைப் புயவரைச் சாரலிற் றன்னிமுப்பான்
உடையாண் டிருந்து கவிமத மாக்க ளுடன்பொருத
சடையாண்டி கையிற் குசங்காண வாமுத் தமிழ்ச்சிங்கமே.

கு-பு. தொடையாண்ட முல்லைப்புயம் - முல்லைத்தொடை யாண்டபுயம், முல்லைமாலை யணிந்த புயம். முப்பானுடையாண்டு இருந்து - முப்பது வருடம் இருந்து. கவி மதமாக்கள் - புலவர்கள். குசம் - தருப்பை.

கள்ளர்தீச்சூடு முனையர்மடத்திலிட்ட ஆண்மறக்கச் சடைப் பெரிய தேவனுக்கு விண்ணப்பத் திட்டெழுத வைத்த தெய்வமேதென.

கு-பு. இது ஏடுகளில் இவ்வாறே சிதைந்து காணப்படு கின்றது.

குடந்தைப் பயணந் தவிர்த்து ஒரு தாதி நிமித்தமா யிருந்தபோது பாடியது:—

வெண்பா

மனந்தான் றளர்ந்தார்க்கும் வாயுமுண்டோ கச்சி
அனந்தா புதனு ளகல்வோஞ் — சினந்து
வடித்தெடுத்த வேற்கண் மணியிரண்டு கொண்ட
கொடித்தடுத்தா லாரேகு வார். (உசகூ)

கு-பு. ஒருதாதி நிமித்தமாய்க் குடந்தைப் பயணம் தவிர்த் திருந்த போது பாடியது என்க. குடந்தை - கும்பகோணம். அனந்தா - விஷ்ணு. புதனுள் - புதன்கிழமை. வடித்தல் - கூராக்கல். கொடி - காக்கைக்கும் கொடிபோன்ற பெண்ணுக்கும் சிலேடை.

தமிழ் நாவலர் சரிதை

முற்றிற்று.

செய்யுண் முதற் குறிப்பகராதி

அ	
அஆரிதியோ - -	52
அநகம் புலியத - -	27
அடும்போதுஞ் - -	79
அடை யென்பார் - -	48
அண்ணறிருவாலி - -	34
அத்தி முதலெறும்பீ -	68
அரச குலதிலக - -	56
அரியது கேட்குந் - -	23
அலங்க லணிமார் - -	69
அலைவளைத்த திருப் -	77
அவனி முழுதுண் - -	32
அவரி கொளுந்தொ - -	26
அரிசீதா தானே - -	6
அறங்கூர் பெரி - -	76
அறமுரைத் தானும் -	28
அற்றதலையிலரு - -	14
அன்று ந செல்லக் - -	29
அன்றையிலுமின் - -	41

ஆ	
ஆசெப கடைமணி - -	46
ஆடு ஈளிமறந்த - -	8
ஆடுவதுஞ் செக்கே -	42
ஆயிரவர் புலவோரில் -	96
ஆரிய நன்று - -	6
ஆரேயெனு மொன்று -	49
ஆழியான் பள்ளியணை -	29
ஆறு பெருக்கில்லா -	8
ஆறெல்லாஞ் செந் - -	66
ஆற்குழைபோ - -	40
ஆன்பாலுந்தே - -	36

இ	
இடுக்கட் புண்படு -	43
இந்திரன் கலையா - -	83
இந்து நுதலழகோ -	54
இந்நாளிருந்தபேர் - -	111
இரவலாளரே - -	60
இருபா மணி - -	16
இருபனை வெண் - -	9
இலகு புகழாறை - -	71
இலங்கிலை வேற் - -	65
இல்லென்பார் - -	33
இனிதினி தெனச் - -	110
இன்று வரிலென் - -	72
இன்றே நங்கம்ப - -	36
இன்னாங் கலிங்கத் - -	45
இன்னங் கலைமக - -	105
இன்னமுதப் பாமாரி -	116
இறைபொ யொன்றிரண்டு -	50

ஈ	
ஈரலறக் கிளிளே - -	15

உ	
உயகவிழிலயா - -	25
உங்கண்மனார் - -	61
உண்ட வயிற்றி - -	95
உண்ணுணீ ருண்ணுணீ - -	17
உடையவளு நீயு - -	32
உலகிலிலையென் - -	76

ஊ	
ஊழித் துலுக்கல்ல -	94
ஊருள பார்ப்பார் - -	74

எ

எண்டிசா முகமுங் - - 63
எண்ணீர்மைநா - - 53
எம்மிகழாதவர் - - 18
எல்லைபலகடங் - - 54
எறிக்கும் புகழ்க் - - 39
என்றும்புலரா - - 4
என்னுடைய தம்பி - 31
என்னையவரற - - 63
என்னெஞ்சமென் - - 73

ஏ

ஏகாவடமென் - - 48
ஏடாயிரங்கோடி - - 108
ஏருமிரண்டௌ - - 24

ஒ

ஒட்டக்கூத்தன் - - 113
ஒருகையிருமருப் - - 20
ஒருதிசையொரு - - 7
ஒற்றியூர்காக்க - - 34
ஒன்றுகக் காண்ப - - 24
ஒன்றுமறியோசா - - 80

க

கண்டன் பவனிக் - - 44
கண்டு பணியக்கட - - 73
கண்ணார் மதிக்கு - - 102
கந்தமலரயனார் - - 88
கம்பன் பிறந்தவூர் - - 72
கயக்காவி காறு - - 52
கரத்துஞ் சிரத்துங் - - 45
கருணையாலிந்த் - - 21
கலிங்கமிழந்து - - 91
கல்லாத வொருவனை - - 18
கவடிகளாகத் - - 99
கவியரசர்தம் - - 51
கன்னியழிந்தனள் - - 30

கா

காடுமீனம்பட - - 67
காத மிருபத்து - - 31
காலை ஞாயிறு - - 11
காவல ரீகைகரு - - 42
காற்றுலலைப்புண் - - 40
காடுனுங்தேன் - - 68

கு

குடகர்குணகட - - 56
குட்டுதற்குப் - - 97
குப்பாயமிட்டு - - 77
குரங்குமாய் - - 99
குலங்குலமெ - - 74
குழவியிறப்பினு - - 57
குழற்காலரவிங் - - 25
குறையுளார் - - 56
குன்றும் வனமுங் - - 41

கூ

கூத்தாடி லஞ்சக் - - 92
கூத்தாண் முகத் - - 27
கூரிய வாளாற் - - 14
கூர்ந்த வறுமை - - 8
கூழைப்பலாத் - - 13
கூளம் பிடித் - - 31

கை

கைம்மணிச்சீர் - - 36
கையுமலரடியு - - 44

கொ

கொங்குதேர் - - 3
கொடையரண்ட - - 117
கொலைபைத் தடவிய - 49

கோ

கோக்கண்டமன் - - 46
கோக்குதிரை - - 84
கோடானுகோடி - - 17
கோடி கொடுத்தும் - 17

கோட்டாற்கொழும் - 5
கோதில் குலமங் - - 28

ச

சத்தம் பயிலும் - - 50
சந்தன மரமும் - - 73

சா

சாணர்க்குமுன் - - 38
சாலப் பழுத்த - - 108
சாறுதலைக்கொ - - 10

சி

சிரையன்றினகர - - 115
சிறப்பார்மணி - - 13
சிறுக்கீரைவெவ் - - 23

சீ

சீரங்கத்தார்க்குந் - - 82

செ

செக்கோ மருங்குல் - 88
செங்கான் மடவன் - 47
செட்டி மக்கள் - - 30
செந்தமிழோர் - - 100
செப்பாரு முகிழ் - - 63
செய்யும் வினையும் - 41
சென்று செவியளக் - 49
சென்றமுழுதுண் - - 17
சென்னி வினைகழ - 34

சே

சேய செங்குன்றை - 106
சேரலர் கோன்சே - 20
சேலை யுடையழகா - 85
சேனை தழையாக்கி - 71

சொ

சொக்கன் மதுரையி - 85
சொருக் கவிழ்ந்த - 87
சொல்லியைச் சொல்லி - 34

த

தடக் கடலிற் - - 82
தடவுசினைப் - - 15
தண்டாம லீவது - - 16
தண்ணீருங்கா - - 14
தந்தை பிறந்திற - - 81
தருக்குலவுகண்ண - - 87
தனிமை பெறு - - 1
தன்னுடன் கூடப் - - 78
தன்னுடையதேவி - - 47

தா

தாதாவென்று - - 31
தாயரவைமுன் - - 52

தி

திங்கட்குடை - - 21
திருத்தங்கிதன் - - 22
திருமாலுமீசனும் - - 114
திறையின் முறை - - 26
தினை விளைத்தார் - - 56

தீ

தீட்டுக்கவியென்று - - 112

தூ

தூசு தூசாக்கு - - 26
தூதஞ்சு நாழிகை - 90
தூபங் கமழும் - - 50

தெ

தென்பாராளு - - 101
தென்னவா மீனவா - 70

தே

தேரையார் தெங் - - 28
தேறலமிர்தந் - - 86

தொ

தொட்டி லிருக்க - - 61
தொல்காப்பிய - - 40
தொழுகின்றமன் - - 45

தோ

தோற்ற தொடித்திருந் - 116

ந

நகுதக்கன்றே - - 58
நடக்கிலன்ன - - 33
நடித்தது நச்சர - - 42
நள்ளாற்றுத் - - 86

நா

நாடாமுதனுண் - - 5
நானென்றனந் - - 85
நாராய் நாராய் - - 64
நானே யினிச் - - 50

நி

நினைவுகலி - - 97

நீ

நீயே, புறவினல் - - 10

நூ

நூலார் நாலாயிர - - 89
நூற்றுப்பத்தா - - 22

நெ

நெட்டிலையிருப் - - 7
நெற்பயிர் விளை - - 35

ப

பசிமுடுக நோவ - - 114
பத்தம்பிற்பாதி - - 14
பத்துக் கொண்டன - - 43
பந்தரிலே வாளை - - 37
பழியும் புகழும் - - 51
பறியாரோ திகவா - - 98

பா

பாடுவார் பாடும் - - 37
பாட்டுத் தொடுக்கு - - 46
பாண்டியரிற்பா - - 65
பாப்புக் குரங்கை - - 80
பாம்பு கடித்தா - - 99
பாரி பறித்த - - 20
பாலலகை யன்று - - 86
பாவலன் வாசலி, - - 53
பாழ்ப்பாம்பட - - 102

பி

பிழைத்தாரோ - - 54

பு

புகார் மன்னன் - - 20
புக்கு விடைதழுவி - - 33
புராதன மென்னுங் - - 53
புவியோர் பெறுக - - 112

பூ

பூங்சமல வாவி - - 12
பூவி லயனும் - - 12
பூவேந்தர்முன் - - 25

பெ

பெருமாடிரு நாளை - 80

பொ

பொங்கு தமிழ் - - 103
பொங்குபீடியின் - - 104
பொதியி லகத்திய - - 24
பொருந்து வொரு - - 50
பொன் பாடுங் - - 27

போ

போன போன - - 88

ம

மங்கை யொருபா - - 30
மண்படுமோ - - 79
மதிபாய் சடை - - 1
மதிமலி புரிசை - - 4
மதியாதார் - - 17
மண்கவிதாவும் - - 98

மதுர மொழியி - -	23
மருவு புகழ்க் - -	93
மலையினுங்கா - -	67
மனந்தான் றளர்ந் - -	117
மன்னவனு நீயோ - -	32
மன்னு திருவண் - -	39

மா

மாகுன் றனைய - -	59
மாதாவைப் - -	116
மாப்பைந்தார் - -	70
மாவுறங்கின - -	48
மாறுகொடு - - -	55
மானபரணபயன் - -	65

மி

மின்னு மாளிகை - -	109

மீ

மீனநம் பற்றிய - -	49

மு

முதிரத் தமிழ்தெரி -	83
முத்தெறியும் பெண் -	21
முரணில் பொதியில் -	5
முற்றுந காஞ்சி - -	87
முன்னொ ளறுபத்து - -	74
முன்னொ ளிருவர் - -	67

மூ

மூட்டை கலம் - -	95
மூவர் கோவையு - -	19

மெ

மெய்கழுவிவர் - -	30

மோ

மோட்டெருமை - -	29

யா

யாவரேகாரானர் - -	54

வ

வரகரிசிச்சோ - -	13
வலம்படுவாய்வா - -	12
வள்ளியோர்ப் - -	9
வழுக்குடையார் - -	17

வா

வாசமலர்மடந் - -	25
வாசவயனந்தி - -	90
வாதவர்கோன் - -	13
வாயிலொன்று - -	115
வாய்த்தவயிரபுர - -	24
வாவியபொற்பரி - -	107
வாமொழிப்பிலாத - -	107

வி

விண்ணுக்கடங் - -	83
விரகரிருவர் புகழ் - -	22
விரகன்முத்தமிழ் - -	105
வில்லம்புஞ்சொல் - -	36
வில்லிகளந்தை - -	35
விழுந்தது - -	5

வெ

வெங்கண்சிவந்து - -	35
வெண்ணெயும் - -	75
வெய்யதப்நறவி - -	19
வெறும்புற்கையு - -	76
வெற்றிப்பாடு - -	98

வே

வேசையர்மலகு - -	105
வேம்பாகுலுமினி - -	70
வேதமொழி - -	37

வை

வையகமெல்லா - -	17
வையமபெறினும் - -	60
வையைத்துறை - -	21

பெயரகராதி

அகத்தியம் 2, 3.
அகத்தியனார் 1, 2.
அகளங்கன் 42, 44, 45, 47, 51.
அகநானூறு 3.
அங்கதப்பாட்டு 6, 16.
அங்கவை 19, 20
அசுவதரர் 38.
அச்சுதகளப்பாளன் 56.
அடைப்பு வீதம் 87.
அதிகமான் 12
அதிமதுர கவிராசன் 84, 85, 90.
அதிவீரராம பாண்டியன் 70.
அந்தகக்கவி வீரராகவ முதலியார் 103
அபயன் 41, 42, 50, 65.
அபிராமன் 92.
அம்பர்ச் சிலம்பி 14.
அம்பிகாபதி 48, 49.
அம்பிகர் 92.
அம்மைச்சி 80
அயோத்தி 103.
அரி 49.
அரியலூர் மழவராயன 106.
அரும்பைத்தொள்ளாயிரம் 42.
அவ்வையார் 12, 14.
அறம்வளர்த்த முதலியார் 61.
அறிவுடையரனார் 2.
அயன்றைச் சடையன் 59, 60.
அனந்தன் 117.
அனந்தை 109, 110.
அனுமன் 53.
ஆசுகவிராச சிங்கம் 100.
ஆய் 18.
ஆட்கொண்ட நாயன் 38, 39.
ஆதூர்மல்லன் 10.
ஆரியசேகரன் 51, 52 53.
ஆரூருலா 112.
ஆரூர் 85
ஆலஞ்சேரிமயிந்தன் 11.
ஆறை 71.
ஆறைக்கலம்பகம் 60
ஆறையர்கோன் 69.
இசையாயிரம் 42.
இசைநுணுக்கம் 2.
இடும்பாவனம் 114.
இடைச்சங்கம் 2
இணையாமார்பன் 31.
இரட்டையர் 38.
இரணியன் 3.
இராமாயணம் 105.
இராயர் 74, 95
இருந்தையூர்க் கருங்கோழி மோசி 2
இலங்காபுரம் 45, 51.
இளஞ்சூரியர் 4.
இளந்தத்தன் 9
இளந்திருமாறன் 2
இறையனார் 1, 3, 4, 5.
ஈழமண்டலம் 110.
உண்ணாமுலை எல்லப்ப நயினார் 107.
உத்தரநல்லூர் நங்கை 73
உறையூர் 9.
ஊழித்துலுக்கு 94

எழினி 18.
ஏகம்பநாதருலா 39.
ஏகம்பவாணன் 69, 71.
ஏரெழுபது 29.
எழிற்கோ 16.
ஐங்குறுநூறு 3.
ஒட்டக்கூத்தர் 42, 46, 97, 98, 113.
ஒட்டியன் 91.
ஒப்பிலாதி 106.
ஓரங்கல் நாடு 32.
ஓரி 18.
கச்சி 117.
கச்சி நல்லான் 117.
கச்சியப்பர் 102.
கச்சியப்பன் 79.
கச்சியேகாம்பரன் 39.
கச்சிராயன் 77.
கடகம் 57, 91.
கடிகை 101.
கடிகையார் 100.
கணக்காயனார் 2.
கணக்காவிரும்பொறை 57.
கண்டன் 44. 45.
கண்டி 53.
கண்டியூர்ச் சிங்கன் 29.
கண்டியூர் வண்ணத்தி 26.
கண்டியதேவன் 77.
கண்ணபுரம் தீத்தாள் 88.
கதிர்காமத்து வேலர் 52.
கந்தப்புராணங்கச்சியப்பர் 103.
கபாடபுரம் 2, 45.
கபிலர் 2, 6, 7
கம்பர் 29, 36, 65, 72, 113.
கம்பளர் 38.
கயத்தாறு 113.
கயத்தாற்றுராசா 113, 115.
கலி 2.
கலிங்கம் 45, 91.
கலியாணபுரம் 45.
கவிராசபிள்ளை 100.
கவிவீரராகவன் 103, 113, 116.
கழாய்க் கூத்து 59.
களத்தூர் 104.
களந்தை 35, 105.
களரியாவிரை 2.
களவழி நாற்பது 57.
கன்னிக்கோன் 66.
காகுத்தன் 34.
காசிநாடு 63.
காஞ்சி 87.
காரிக்கோன் 66.
காரோகணம் 69.
காரோணர் 68.
காவிரி, காவேரி 14, 30, 72.
காளத்தி 79, 110.
காளமேகப் புலவர் 81.
காளி 34.
காளிங்கன் 24.
காளிடபன் 33.
காளையார் கோயில் 25, 27.
கிட்ணப்பவாணன் 110.
கிட்ண-ராயர், மகாராயர் 74. 93
கிட்ணைய மழவராயன் 106
கிட்ண(கிருஷ்ண)பூபாலன் 91.
கிட்ண (கிருஷ்ண) ராயர் 94.
கிள்ளிவளவன் 10
குடகர் 56.
குடந்தை 117
குடவாசல் விண்ணன் 88.
குடிதாங்கி 76.
குணவாயிற் கோட்டம் 57.
குமணன் 8.
குமாரகுலோத்துங்கன் 46.
குமாரசரசுவதி 91.
குமாரவொப்பிலாதான் 106.

கும்பமுனி 72.
கும்பயோனி 53.
குயக்கொண்டான் 5.
குருகு 2.
குருநமசிவாயர் 68.
குரும்பை என்னும் தாதி 34.
குலோத்துங்கன் 43, 46.
குளமுற்றம் 10
குறுந்தொகை 3.
கூத்தமுதலி, கூத்தன் 42, 43, 46, 48.
கூத்தனூரப்பன் 98.
கூத்தாள் 27.
கூத்து 3
கொல்லிப்பாவை 34
கொல்லிமலை 31.
கொழுப்பு 51.
கொற்கை 23.
கோடை 73
கோபராஜன் 84.
கோப்பெருநற்கிள்ளி 10.
கோவூர் கிழார் 9, 10.
கைசசங்கு 91.
கையறம் 36, 116.
கைலை 22.
சங்கத்தார் 11, 25.
சங்கப்-லகை 25.
சங்கவை 19. 20.
சடையன் 36.
சடையாண்டி 117.
சதுரானன பண்டிதன் 33.
சத்திமுற்றப் புலவன் 61.
சந்திரவாணன் கோவை 109.
சமணர் 37.
சப்பராசன 39, 40.
சம்புகுலப்பெருமான் 39.
சம்புபதி 39.
சம்துங்கன் 49.
சரசுவதி 42.
சராமன் 31.
சவையப்ப நாயன் 87.
சாத்தந்தையார் 10.
சார்வபௌம பாண்டியன் 51.
சாளுவத் திருமலைராயன் 84.
சாளுவ நாயக்கர் 95.
சிங்களம் 43
சிங்கையாரியச் சக்கிரவர்த்தி 51, 53.
சிராமலை 5, 27.
சிரிபட்டர் 95.
சிரையன் தினகரன் 114.
சிவந்தான் 73.
சிறுபாண்டரங்கன் 2
சிறுமேதாவியர் 2
சிற்றிசை 3.
சீநக்கன் 26, 29.
சீரங்கம் 81, 82.
சீவலமாறன் 70.
சீவிலிபுத்தூர் 105.
செக்கார் 42.
செங்களுன் 57
செங்காட்டுக் கோட்டம் 24.
செங்குன்றை 106.
செஞ்ச 34.
செண்டுவெளி 44.
செம்பியர்கோன 67.
செம்பியன் 43.
செயங்கொண்டான் 41.
செயதுங்கன் 36
செழிய தரையன் 107, 108.
சேடன் 35.
சேடாதிபன் 108.
சேதிராயன் 29, 30.
சேந்தம் பூதனூர் 2.
சேரசோழ பாண்டியர் 20.
சேரமான் 13.

சேரன் 13, 23, 44, 54, 56, 57, 58, 69
சேரன் கணைக்கா லிரும்பொறை 57.
சேரமான் பெருமாள் 4.
சேலம் 109.
சைவர் 82.
சொக்கநாத சுவாமி 4.
சோமன் 47, 48.
சோழன் 22, 31, 32, 35, 36, 43, 46, 54, 56, 58, 66, 69, 72
சோழனும் தேவியும் 67.
சோழ புலவன் 65.
ஞானவரோதயர் 82.
தஞ்சை 26
தட்டான் திருவாலி 34
தண்டி 48.
தத்துவப்பிரகாசர் - பண்டாரம் 93, 99.
தருமி 3.
தலைச்சங்கம் 1.
தாதர் 62.
தாதன் 36.
தாதி 16.
திம்மராஜன் 62.
திம்மய்ய வப்பய்யன் 111.
திரிபுவனம் 47, 48.
திருக்கண்ணபுரம 71, 72, 88.
திருக்கண்ணமங்கை 87, 88.
திருக்கழுக்குன்றப் புராணம் 111.
திருக்குடந்தை 22, 86.
திருக்கை வழக்கம் 60.
திருக்கோவலூர் 9.
திருஞான சம்பந்தர் 97.
திருத்தங்கி 22
திருத்தோணியப்பர் 95.
திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் 37.
திருப்புகலூரந்தாதி 46.
திருமலைராயன் 81, 83, 90.
திருமால் 43.
திருவக்கைக் கொங்கராயன் 38.
திருவண்ணாமலை 102
திருவண்ணாமலைச் சம்பந்தன் 39.
திருவழுந்தூர்த்தாதி 72.
திருவள்ளுவர் 12.
திருவாமாத்தூர்க்கலம்பகம் 40.
திருவாரூருலா 112, 113.
திருவாரூர் நாகராசநம்பி 74.
திருவாலங்காடு 12.
திருவாலி 34.
திருவானைக்கா 82.
திருவிளையாடல் 89.
திருவொற்றியூர் வல்லி 33.
தினகரன் 114.
தீட்டுக்கவி 112.
தீத்தாள் 88.
தீத்தான் 107.
தீபங்குடி 41, 42.
துலாபுருடதானம் 45, 50.
துவரைக்கோமான் 2.
துறையூர் 24.
தெண்டி 86.
தெய்வீகன் 20.
தென்பாண்டி நாடு 69.
தெனபாலை 109.
தென்றில்லை 55.
தேவரகண்டன் 85.
தொண்டி 67
தொண்டைமண்டலம் 60
தொல்காப்பிய தேவர் 37.
தொல்காப்பியம் 2, 3.
தொல்காப்பியனார் 2.
நக்கீரர் 2, 5.

நந்தி, நந்திபுரம் 90.
நந்திடமாணிக்கம் 116.
நலங்கிள்ளி 9.
நல்லந்துவனார் 2.
நள்ளாறு 8૮.
நள்ளி 18.
நற்றிணை நானூறு 3.
நாகதேவன் 114.
நாகபட்டணத்துச செட்டி 87.
நாஞ்சில் வள்ளுவன் 15.
நாமகள் 5.
நாலுகோடிகவி 17.
நான்முகன் 5.
நிதியின கிழவன் 1.
நிரஞ்சனநாசர் 112.
நிறைநில்லாதவகவல் 17.
நீலகங்கன 77.
நெடுங்கிள் ளி 9.
நெடுஞ்செழியன் 59.
நெற்குன்றவாணமுதலியார 46
நென்மலி - த்தசசன் 35.
நேமிநாதர் 47
பட்டிமணடபத்தார் 6.
பணியாரக்குடம் 63.
பதிற்றுப்பத்து 3
பத்துப்பாட்டு 3.
பயைபையாறு 40.
பரணர் 2.
பரமேசுரப்புலவன் 102.
பரராச சிஙகம் 104.
பரராச சேகரன் 112.
பராக்ரமமாறன் 53.
பரிபாடல் 2, 3.
பனந்துண்டம் 2·.
பனம்பாரம் 2.
பழையனூரார் 54
பழையனூர்க்காரி 13.
பாகற்கொடியறுத்தல் 94.
பாகவதம் 82.
பாணபத்திரன் 4.
பாண்டியன் 11, 25, 28, 32, 42, 53, 54, 56, 58, 59, 60, 61, 64 65, 70, 71, 101.
பாணடியன் தேவி 63.
பாண்டியன புலவன 66.
பாய்சசலூர் 73, 74.
பாரதம் 5.
பாரதவெண்பா 3.
பாரி 6, 18.
பிரதாப ருத்திரன் 32, 92.
பிரமன் 14.
பிள்ளைப் பாண்டியன் 97.
புகழேந்தி 50.
புகார 42, 66.
புகைக்ஞூர்க் கிழவன் 75.
புதுவைச சேதிராயன் 29
புத்தசமயம 57.
புலிகுட்டிச சி கன் 83.
புல்வேளூர்ப் பூதன் 12, 13.
புவனை 48, 67.
புழல் 33.
புறற்கோட்டம 59.
புறநானூறு 3.
பூதூர் 103.
பெண்ணையாறு 21.
பெருங்குன்றூர் கிழார் 2.
பெருந்தலைச சாததனார் 8.
பேகன 18.
பேராசிரியர் 47.
பேரிசை 3.
பேரையூர் 79.
பொதியில் 5.
பொய்கையார் 57.
பொய்யா மொழியார்-புலவர் 14, 24, 28.
பொருளதிகாரம் 3.

பொன்னிக்கோன் 6?.
மடப்பக்க நாச்சி 34.
மடையன் 49.
மதுரையாசிரியன் மாறன் 2
மதுரைச் சொக்கர் 89.
மயிலாப்பூர் 34
மருதனிள நாகனார் 2.
மருத்தன் 22.
மலயமான் 10.
மலையமான் திருமுடிக்காரி 7
மலையன் 18
மறவராயன் 73.
மாங்குடி மருதனார் 59.
மாதவன் 40.
மாபுராணம் 2.
மாவலிவாணன் 85
மிதிலை 49
முக்காவனாடு 10.
முசுகம் 89
முடிசூட்டு மங்கலம் 65
முட்டை 27.
முதுசூரியர் 41
முதுகுருகு 2.
முதுநாரை 2.
முத்தொள்ளாயிரம் 3.
மும்மணிக்கோவை 36
முரிஞ்சியூர் முடிநாகராயர் 1
முருகவேள் 1, 5, 23, 27.
முனையதரையன் 71
மூவேந்தர் 54.
யாதவன் 13
ராமராஜன் 62.
வக்கபாகை 30.
வஞ்சினக்காஞ்சி 58.
வடுகன், - நாதமுதல் 10.
வட்டப்ப நாச்சி 34.
வண்டியூர் 79.
வண்ணம் 105.
வத்தவன் 13.
வயிரபுரம் 24.
வரதன் 86, 90.
வரதுங்கராம பாண்டியன் 63.
வரி 3
வருணன் 21.
வல்லை 70
வளவன் 47.
வள்ளுவமாலை 4.
வலையன் 37.
வள்ளுவர் 4, 5, 12.
வாணன் 35, 69, 71, 105.
வாணியன் தாதன் 30.
வாதவன் 13.
வாயிற் பேசிடுகன் 78.
வாலகோகிலம் 98.
விகடசமுத்தி 39
விக்கிரம சோழனுலா 43
விக்கிரம சோழன் 42, 43, 50, 72.
விக்கிரம மாறன் 53.
விசயாலயன் 113
விசயரங்க ராசசகல் 59.
விட்டலராசா 61.
விண்ணணன் 78.
விஞ்ஞனா 88.
விநாயகர் 20, 23.
வியாழமாலையகவல் 2.
விலல் 35, 47
விரிபடகன் 85.
வீரராகவன் 103.
வெண்பாமாலை 2.
வெள்ளூர்க்காப்பியனார் 2.
வேம்பத்தூர் 80.
வேம்பத்தூரார் 54.

Printed at the 'Caxton Press', Madras — 1921.

ஓம்

ரமண மஹரிஷிகளின்

நிஜ ஸ்வரூபம்

இரண்டாம் பதிப்பு

ரமணாஸ்ரமம்

பெருமாள்சாமி அவர்களால்

வெளியிடப்பட்டது.

1938

விலை அணா

PRINTED AT
THE SENGUNTHA MITHRAN PRESS,
MADRAS.

முகவுரை

1. அடியேன் ஒரு ஸந்யாசி. ஏட்டைப்பார்த்துப் படித்தது அதிகம் இல்லையெனினும், உலகைப் பார்த்துப் படித்தது சிறிது உண்டு. உண்மை ஸந்யாசிகளிடத்தில் பெருமதிப்பும், பக்தியும் உண்டு. இளமைக் காலத்தில் பர்மா நாட்டில் ஒரு மஹானைத் தரிசித்துப் பழகும் பாக்கியம் பெற்றிருந்தேன். அவர் ஆசிரமத்துக்கு வந்து சேரும் அரும்பொருளெல்லாம் அன்றன்றே பலர்க்கும் செலவிடும் *மஹாத்யாகி; அரும்பெரும் ஞானி. அவர் தியாகபுத்தியில் அடியேனுக்கு எண்ணரிய ஈடுபாடுண்டு. பின் இந்தியநாட்டுக்குத் திரும்பியபோது யோகானந்தர் என்னும் உத்தமர், பிராமணசுவாமிகள் நிலையை வியந்து கூறக்கேட்டு, திருவண்ணாமலை சென்று பிராமண பால சந்யாசியைத் தரிசித்தேன். பிற அன்பர்கள் அவரை ஜோதிரூபமாகவும், தட்சிணாமூர்த்தமாகவும், இன்னும் பலப்பல வடிவங்களாகவும், தரிசித்ததாகக் கூறுவர். அடியேன் அத்தகைய காட்சிகள் ஒன்றும் காணவில்லை. ஆனால் பல நற்குணங்களையும், அரிய வைராக்கியங்களையும் கண்டேன். அவை, பர்மாதேசத்து மகானைப் போலவே சுவாமிகளைக் கருதும்படி எளியேனைத் தூண்டின. அக்குணங்களுள் ஒன்று ஆசிரமத்துக்கு வரும் பொருள்களை அப்போதே அன்பர் பலர்க்கும் செலவிட்டுவிடும் தியாகபுத்தி; நாளைக்கென்று கருதா நன்மனம். இதில் ஈடுபட்ட அடியேன், மஹரிஷிகளுக்குத் தொண்டுபூண்டு கிடந்தேன். உடல் பொருள் எல்லாம் பகவான் பணிவிடைக்கே என மதித்தேன்.

2. புகழ்பரவாத முன்னெல்லாம் பிராமண சாமிகளை எடுத்துக் காப்பாற்றி ஆளாக்கியது பழனிசாமிகள் முதலான பல சந்யாசிகள் என்பதை ரமண சரித்திரமே கூறும். சாமியின் புகழ் பரவிய பிற்காலத்தில் சுற்றமும், ஜனமும் வந்து சேர்ந்தன. இவ்வருகையே எமதூதர் வருகையாக முடிந்தது. பின் தாய் என்னும் எமனும் வந்து

சேர்ந்தது. அதற்கு வாகனமாக வாய்த்த தம்பி என்னும் எருமைக் கடாவும் ஆசிரமத்தை அண்டியது. இக்காலத்தில் எமபாசம்போல் பொருள்வருவாயும் சிறிது நீண்டு வளர்ந்துகொண்டேவந்தது. இவை எல்லாம் ஒன்றுசேர்ந்து பிராமணசாமியின் ஆருயிர்க்குணங் களைக்கொள்ளை கொள்ளத் தொடங்கின.

3. ஆசிரமத்தில் சந்யாசிகள் செல்வாக்கு வரவரக் குறைந்து சுற்றத்தார் ஆதிக்கம் மேலிட்டது. இப்போது சாமிகளை பந்து அபி மானம் ஒருபுறமும், சந்யாசிகளிடம் கொண்ட போலி அபிமானம் மற்றொரு புறமும் பிடித்தாட்டின. ரிஷி, சுற்றத்தார்க்குச் சாதுக் கள் அடங்கியிருப்பது சகியாதவர்போல் நடிக்கத்தொடங்கினர். இந்நடிப்பெல்லாம் மெய்யென்றே நம்பி மதிமோசம்போனேன். சுவா மிகள் விருப்பறிந்து, அவர் உத்தரவுப்படியே ரமணஜயந்தி என்னும் உற்சவம் சாதுக்களுக்கும், பிராமணர்க்கும் பயனுறும் முறையில் கொண்டாட அடியேனால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, வருடந் தோறும் நடந்தேறி வந்தது.

படிப்படியாய் சுவாமிகளின் அபிமானங்கள் வளரத்தொடங் கின. ஐயோ! உலக அநுபவமற்ற சிற்றிளம் பருவத்தில் எப்ப டியோ வெளிவந்த இவரை, சுற்றத்தார் சூழ்ந்து இப்படிக் கெடுக் கிறார்களே எனும் இரக்கம், சில சமயம் உண்டாகும். ஆயினும் நாமார் அதைச் சொல்ல என்று எண்ணி அடங்கிவிடுவேன் ஜயந்தி உற்சவம் பிரபலப்பட்டது. அதனால் புகழும், பொருளும் பெருகின. அவ்வுற்சவத்திற்கு விக்ரகமும் செய்யப்பட்டது. இவ்விக்ரகம் ஸ்தாபிக்கப்படுமானால் தம்பிக்கும், சுற்றத்துக்கும் ஆதிக்கம் குறையும் எண்றெண்ணிய ஆசிரமத்துச் சுயநலக் கூட்டத்தார், சூழ்ச்சிகள் செய்து, பலர்க்கும் பயன்படும் தர்மத்தைக் கெடுக்கத் தலைப்பட்ட னர். சுவாமியும் பகிரங்கமாக இச்சூழ்ச்சிக்குத் துணை செய்யத் தொடங்கினர். இந்நிலையில் சுவாமிகளின் நிஜஸ்வரூபம் எப்படியோ என்று ஐயுற்றேன். தம்பிக்குப் பொதுச் சொத்தில் அதிகாரப்பத்தி ரம் எழுதிக்கொடுத்தது முதலாகப் பின் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல, ஜயந்தீர ரிஷியை வஞ்சக மனத்தினர் என்று காட்டி விட்டன.

4. என்னைப்போல் சுவாமிகளை நம்பிப் பலரும் மோசம் போகாமல், அவர் வஞ்சக நிலையைப் புலப்படுத்த வேண்டும் என நினைத்து வழக்குகள் தொடர்ந்தேன். ரிஷிகளும் எதிர்பாராதபடி பொய்யும் புனைசுருட்டும் சொல்லித் தம்பியின் கொடுஞ்செயலுக்கும், சுயநலக் கூட்டத்துக்கும் ஆக்கம் தந்தனர். உள்ளூர் அன்பர் கசந்தனர். சுவாமிகள் குணத்தை வெளியாக்கும் நோக்கங் கொண்ட அடியேனுக்குப் பூரண வெற்றியும் கிடைத்தது. ரமண மகரிஷிகள் நிஜஸ்வரூபம் வெளிப்பட்டது. அதுபற்றிப் பெரிதும் மகிழ்கிறேன். நிற்க, எதிரிகளின் செல்வத் திமிர், அதிகாரச் சார்பு, ஆள் பலம் இவற்றிற்கிடையே அடியேனால் செய்யக் கூடியதைச் செய்தேன். இனி, செய்வனவற்றை உலகம் செய்க.

5. ரமணாசிரமத்தார் அக்ரமங்கள் அளவு கடந்து போய் ஊர் சிரிக்கவும், நாடு நகைக்கவும், ரிஷிகளின் பொய்ப் பெருமைகள் பல, பத்திரிகை மூலமாகவும், புத்தக மூலமாகவும் வெளிவந்து பரவி உலகை ஏய்க்கின்றன. அவற்றின் பொய்மை விளக்கி உண்மையை மக்கட்கு எடுத்துக் காட்டவேண்டும் என்னும் எண்ணத்தால் இந்நூல் சம்பாஷணை முறையில் எழுதப்பட்டு "ரமண மகரிஷிகள் நிஜஸ்வரூபம்" என்னும் பெயரோடு வெளியாகிறது. இந்நூலில் மறுக்கப்படும் விஷயங்கள் எல்லாம் ஆசிரமத்தார் திருத்தமாக வெளிப்படுத்திய தமிழ் ஆங்கில சரித்திரங்களில் உள்ளவை. இதில் ரமண விஜயத்தின் பக்கங்கள் (முதல் பதிப்பு) எண்களால் குறிக்கப்பட்டுள்ளன. இது தவிர அதிகாரப் பத்திரத்திலும், பிரமாண வாக்குமூலத்திலும், விசாரணையிலும் ரிஷிகள் கூறிய பொய்யும், தீர்ப்பிலிருந்து எடுத்துக் காட்டும் பிறவும் "   " இப்படி மேற்கோள் குறியால் குறிக்கப் பெற்றுள்ளன. உலகம் உண்மை கண்டு உய்க.

திருவண்ணாமலை
20-5-1937

பெருமாள்சாமி

ரமண மகரிஷிகள் நிஜஸ்வரூபம்

அறிந்தவன் :—என்ன ! நான் வந்ததைக் கூடக் கவனியாமல், இவ்வளவு ஆழ்ந்தபடி படிக்கிறாயே ! இவை என்ன புத்தகங்கள் ?

ஆராய்ச்சிக்காரன் :—வருக ! வருக ! இது பகவான் ரமண மஹரிஷிகள் சரித்திரம். இவை அவர் அருளிய உபதேசங்கள். ஆஹா ! அவர் பெருமையே பெருமை. அவர் அவதரித்தில்லாவிட்டால் இந்திய நாடே இருண்டுபோயிருக்கும். ஏதோ அம்மகான் ஒருவராலேயே நம் நாட்டு மஹரிஷிகளின் பழைய சீரும் சிறப்பும் நிலைத்தன. அவர் கொண்ட வீரத்துறவும், அத்தவராஜனிடம் பக்தர்கள் கண்ட வியன் காட்சிகளும் அற்புதங்களும் எண்ணத் தொலையா ! எட்டில் அடங்கா. இதோ பார் ! இதுதான் ரமண விஜயம் என்னும் நூல். இது மற்றைப் புளுகாண்டிகள் சரிதைகளைப் போன்றதன்று. இந்நூலில் கூறப்படும் மஹரிஷிகளின் சரிதம் எவரும் அசைக்க முடியாத உண்மைகளைக் கொண்டது. இதன் உண்மையையும், திருத்தத்தையும் பற்றி முகவுரையில் கூறப்பட்டுள்ளதை வாசிக்கிறேன் கேள். "இதுவரை பல சரித்திரங்கள் வெளி ஆயின. இவற்றில் பல பிழைகள் உள்ளன. ஏனென்றால் இந்த மூர்த்தியானது தன் சரித்திர விருத்தாந்தங்களை உலகோர் சொல்லும் மாதிரியாய்ச் சொல்வது இல்லை. ஆகையால் முதலில் எழுதியவர்கள் தம்தம் புத்தி போக்கின்படி தாமே ஒருவித அபிப்பிராயம் வைத்துக் கொண்டு சரித்திரம் எழுதினார்கள். மூன்று வருடங்கட்கு முன்பு ஒரு தெளிந்த விவேகியான சீடர்— ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமியவர்கள்—பகவானுடைய சரித்திரத்தை ஆராய்ந்தும், தேவையான சந்தர்ப்பங்களில் பகவானையே நேரில் கேட்டும், கூடியமட்டில் பிழை இன்றி ஆங்கிலத்தில் ஒரு சரிதம் எழுதித் தந்தார். அதன்பின் தமிழில் விரிவானதும் சுத்தமானதுமாகச் சரித்

திரம் ஒன்று வெளிவராதோ, என்று அன்பர்கள் 'ஆசை கொண்டனர். அவர்களின் தாகத்தைத் தீர்க்கவே, இந்தத் திவ்விய சரித்திரத்தைத் தமிழில் எழுதவல்ல ஒரு யோக மூர்த்தி இதை நாற்பத்தொன்று அத்தியாயங்கள் அடங்கிய ஐந்து காண்டங்களாக எழுதி முடித்தார். அவர் ஸ்ரீ சுத்தானந்த பாரதி என்னும் யதிசிரேஷ்டர்". முகவுரை XI

அ:—போதும்! போதும்! நிறுத்து. நான் இப்போது தான் உமது ரிஷி வசிக்கும் திருவண்ணுமலையிலிருந்து வருகிறேன். ஆசிரமத்துக்கும் சென்றேன். அருகிலிருந்தாரையும் விசாரித்தேன். அனைத்தையும் ஆராய்ந்துகொண்டு வந்திருக்கிறேன். விஷயமறிந்தவர்கள் எல்லாம் ரிஷியின் யோக்யதையைக் குறை கூறுகின்றனர். இது முன்போல ஏமாறும் காலம் அல்ல. உன் ரிஷி, மலையை விட்டு இறங்கியபோதே அவர் பெருமை எல்லாம் மலை ஏறிவிட்டன.

ஆ:—பாவம்! பாவம்! உலகமே கொண்டாடும் ஓர் உத்தம சந்நியாசியை அப்படிக் கூறலாமா, இரும்புத் தூணைக் கறையான் அரிக்குமா? அவர் மகிமையும் அவர் கண்டுபிடித்த ரமண தீர்த்த மகிமையும் படிக்கிறேன் பார். "ரமணுசிரமத்தில் இளநீர்போன்று இனிய வற்றா ஊற்றொன்றுளது. அதாவது:— பகவானின் கூர்ந்த விழிகள் ஒரு சிறிய ஈர நிலத்தைக் கண்டன. சுற்றிலும் நிலம் வறண்டிருக்க, அங்கு மட்டும் சதசதுப்பாய் இருந்தது. அவ்விடத்தை அகழ்ந்து பார்க்கவே பகவானின் உபதேசங்களைப் போன்று தெளிவும், சுவையும், இனிமையு முள்ள ஒரு பாலூற்றுப் பொசிந்து பொங்கியது. இதற்கு ரமண தீர்த்தம் என்று பெயரிடுகிறோம். அப்புண்ணியப் புனல் அருங்கோடையிலும் வற்றுவதில்லை!" (பக்கம் 317)

அ:—உன்னைப்போலவே நானும் இப்புண்ணியப் புனலை நேரில் சென்று பார்த்துப் பாவத்தைத் தொலைக்க நினைத்தேன். ரமணுஸ்ரம வாயிலில் சென்றதும், யான் கண்ட காட்சியை என்

னென்பது! "குரங்குகள் உபத்திரவம் ஜாக்கிரதை" என்று எழுதப்பட்டிருந்தது. என்னடா இது தொல்லை! 'மயிலும், பாம்பும், புலியும், நாயும், குரங்கும், அந்தணனும், யானையும், ஆவும், புலையனும் ஒன்று என்னும் உண்மையை ரமணாஸ்ரமத்தில் காணலாம்' எனக் கேள்வியுற்றேமே என்று எண்ணி உள் நுழைந்த போது, குரங்குகளால் எனக்கு யாதொரு உபத்திரவமும் நேரவில்லை. ஆனால் அங்கிருந்த மனிதக் குரங்குகளால் நான் பட்ட அவஸ்தையிலிருந்தும், அவர்கள் மனக் குரங்கின் ஆட்டத்திலிருந்தும் தப்பியது தம்பிரான புண்ணியம் ஆயிற்று. புண்ணியப் புனலைப் பார்க்கப்போன என்னைச் சூழ்ந்து கொண்டு அக்குரங்குகளுள் ஒன்று, "இது பசுமடம்; செட்டியார உபயம்" என்று கூறிற்று. மற்றொன்று வந்து, "இது உக்கிராணம்; கவுண்டர் உபயம்" என்று சொல்லிற்று. நான் ரமண தீர்த்தம் எங்கே என்று ஆவலோடு விசாரித்தேன். அதற்குப் பதிலே இல்லை. இதற்குள் வேறொன்று, சில புத்தகங்களையும் படங்களையும் கொண்டுவந்து காட்டி, "இவை, பகவான் அருளிய உபதேசங்கள், சரித்திரங்கள், பூஜைக்கு ஆகும் படங்கள்" என்று என்னிடம் கொடுக்க வந்தது. நான் பணமில்லையே என்று சொன்னவுடன், "பரவாயில்லை. வி. பி. யில் அனுப்புகிறோம். விலாசம் சொல்லுங்கள்" என்றது. அப்போது தம்பி சர்வாதிகாரி வந்து, "பகவான் சந்நிதானத்தில் தங்கள் உபயம் ஒன்று நடந்தேறினால் நல்லது. பகவான் இருக்கும் இந்தக்கூடம் பல பக்தர்களால் கட்டித்தரப்பட்டது. பெண்மணிகள் தங்குவதற்குத் தனியே ஒரு இடம் இருந்தால் மிக்க வசதியாயிருக்கும். இதைப்பார்த்தீர்களா? இது தான் சமையல் கட்டின் பிளான். இதைக் கட்ட 9 ஆயிரம் பிடிக்கும். இதற்கு ஏதேனும் உபயம் நடந்தால் தங்கள் பெயரும், புகழும் நிலைக்கும். பகவான் அருளும், புண்ணியமும் உண்டு" என்று அளந்து கொண்டே போனார். தீர்த்தமிருக்கு மிடத்தைக் கேட்டால் இந்த வார்த்தையெல்லாம் எதற்கு என்று சொன்னேன். உடனே அவர் "தீர்த்தத்தைப்பற்றிக் கவலை வேண்டாம்; தாகத்திற்கு நீர் வேண்டுமானால்

குழாய்த் தண்ணீர் இருக்கிறது." என்றார். "தாகம் இல்லை. வற்றாப் புனலைக் கண்டு தரிசிக்க வேண்டும்" என்றேன். ஒன்றும் பேசாது திரும்பிச் சென்றார் சர்வாதிகாரி. அருகே இருந்த ஒருவர் அழைத்துச் சென்று, ஓர் இடத்தைக் காட்டி "இது தான் அது" என்றார். அதன் கோலத்தை என்னென்று கூறுவது! ரமண தீர்த்தத்தின் நிலைமை இப்போது எப்படி இருக்கிறது தெரியுமா? அது ஒரு தீர்த்தமே அல்ல, பெரும்பாறையில் குடையப்பட்டதோர் பள்ளம். அதில் மழைக்காலத்தில் மட்டும் சிறிது நீர் தேங்குவதுண்டு. அது பல வருஷங்களாய் ஆயிரக்கணக்கான கூலி ஆட்களின் முயற்சியையும், ரூபாய்களையும், வெடி மருந்துகளையும் தின்று விக்கி, தன் தாகத்தைத் தணிக்கவே தண்ணீருக்கு ஏங்கியிருக்கிறது. ரமணாஸ்ரமத்தார், கண் மூடித் தனமாய் அத்தீர்த்தத்தின் போலிப்புகழை நிலை நாட்டப் பொதுப்பணத்தை விரயம் செய்து, பாறையை 15 அடி குறுக்களவில் 50 அடி ஆழம் வரையில் குடைந்து பார்த்தார்கள். எதிர்பார்த்த வற்றா ஜலம் சிறிதும் இல்லை. முழுமையும் அருணாசலமே. இதோடு விட்டார்களா! ஊர்ப்பணம் சும்மா இருக்க விடுமா! அதன் கீழ் யந்திரங்களை வைத்து, சோதனைக்கு குழிப்போடத் தொடங்கி, 80அடி வரையில் போரிங்வைத்துத் துளைத்தார்கள். அப்பொழுதும் ஜலம் வந்த பாடில்லை. சரித்திரத்தின் புகழ் போகுமே என்றும், பகவான் மகிமை பறந்துவிடுமே என்றும், ஊரார் சிரிக்க நம் நிஜஸ்வரூபம் வெளிப்பட்டு விடுமே என்றும் அழும் கண்ணீர்தான் ஆறாய்ப் பெருகுகிறது. ரமண சரித்திரம் கூறும் வற்றாப் புனலின் தற்காலச் செய்தி இதுவே. இத் தீர்த்தத்தின் வரலாற்றை மேலும் கேட்டால் "பாவி! உன் திருஷ்டிப் பட்டுத்தான் தண்ணீரெல்லாம் இப்படிப் பாறையாய்ப் போய்விட்டது" என்று கூறி இம்சிப்பார்களோ எனப் பயந்து ஓடோடியும் வந்து விட்டேன்.

ஆ:—அடடா! அப்படியா சமாசாரம். ரமண விஜயம் முகவுரையில் "முற்காலத்திய பாகவதம் போன்ற புராணங்கள் இதிகாசங்கள் எவ்வளவு மட்டில் நடப்பு, எவ்வளவு கற்பனை என்று

பலர் சந்திக்கிறார்கள். ரமண விஜயம் இசைக்கும் ஸ்ரீ ரமணரோ இதோ இருக்கிறார், சரித்திரம் உண்மை யென்று அறிய போது மான சாக்ஷிகளும் உயிருடன் இருக்கிறார்கள் ' (13 பக்) என்று கூறியிருக்கிறதே. ஓர் ஊற்றின் உண்மை இதுவானால் எல்லாம் இப்படித்தான் போலும். மேலும், அந்நூல் " ஒரு நாட்டிற்குச் சிறந்த செல்வம், ஒரு மகரிஷியே என்பதற்கு ஐயமில்லை. பாரதசமுதாயத்தை ஆக்கி அணிவகுத்து வாழவைத்தவர் யார்? வேதமுனிவர், வியாச முனிவர் போன்ற தபசிகளாலன்றோ நம் நாடு உருவானது. ஆனால் காமக்குரோதங்களையும், பணப் பேராசையையும், ஏமாற்றங்களையும், சுயநலத்தையும் நீற்றிலும், காவியிலும் மறைத்து அல்லவை செய்து உழலும் போலிகள் நம் நாட்டிற்கும், தர்மத்திற்கும் நோயென்றே கருதி, அந்நோய்கள் தீர்ந்து துறவறம் களங்கமற்ற சூரியனைப் போலப் பளிச்சிட்டு இயல்பாகி, தவசக்தி கதிரைப் பரப்பி, நிற்கவேண்டு மென்பதை யார்தாம் விரும்பார்? இன்றைய காஷாய உலகின் விநோதங்கள் பல. அவ்வுலகம் தற்காலம் பல விதம். பூர்ணுதி ஒரு கவளம் விழுங்கி, முருகையாவின் ஆவேசத்தை நடித்து, பேதையரை பிரமிக்க வைத்துப் பணம் வாங்கும் ஒன்று; ஓரிடத்தில் வேலை நட்டுப் பழனியாண்டிக்கு உண்டியல் வசூல் செய்யும் ஒன்று; இன்னொன்று தாயும் குஞ்சுகளுமாகத் தங்கி, சித்த மூலிகை வைத்தியக் கடை விரிக்கும்; மற்றொன்று உடுக்கடித்துக் குறி சொல்லும்; இன்னொன்று ரேகை ஶாஸ்திரம் சொல்லும்; மற்றொன்று ஜோதிடம் மாந்திரீகம், இவற்றின் பெயரால் புகழும் பிழைப்பும் தேடும்; இன்னொன்று கஞ்சாவில் மயங்கி " அந்தோ பரலோகம், அதற்குக் கீழ் யமலோகம் " என்று வர்ணித்துப் பாடும்; மற்றொன்று தங்கம செய்து கொடுக்கிறேன் என்று தொகை வாங்கிக்கொண்டு ஓட்டமெடுக்கும்; சில கை கால்களிலும், நாவிலும் தந்திரமாக வேல்களைக் குத்திக் கொண்டு பணத்திற்காகத் துணியை விரித்து நிற்கும். சில "சோறு கண்டவிடம் சொர்க்கலோகம்" என்று தின்று தூங்கும்; சில "மார்பிலும் விலாவிலும் அடித்துக் கொண்டு பணம் கேட்கும்;"

(பக் 168) என்று இப்படிப் போலிச் சந்யாச உலகை இகழ்ந்து பேசியதல்லாமல், சுவாமிகள் பணத்தைக் கையாலும் தொடுவதில்லை" என்று புகழ்ந்தும் கூறுகிறதே! இப்படிக்கூறும் ரமணாஸ்ரமத்தாரா உன்னிடம் பணம் பறிக்கப் பிளானையும் புஸ்தகத்தையும் படத்தையும் காட்டி, அப்படியெல்லாம் பேசினார்கள்! சரித்திரக் கூற்றெல்லாம் யதார்த்தம் என்றல்லவா ஏமாந்தேன்.

அ:—உன் போல் ஏமாந்த சோணகிரிகள் இருந்தால், இது மட்டுமா எழுதுவார்கள்? அவர்கள் தமமட்டில் எது வானாலும் எழுதிக் கொள்ளட்டும். பணம் பறிக்கும் விபசாரி அயல் வீட்டுக்காரியைப் பழிப்பதுபோல், காஷாய உலகை எப்படியானால் பழிக்கட்டும். இவை எல்லாம் போதாதென்று, தாம் ஏமாந்ததல்லாமல் மூக்கறையன் போல் ஊராரையும் ஏமாற்றுவதற்குப் பார்க்கிறாரே அந்நூலாசிரியர் அவர் ரமணவிஜயம் 15-ஆம் பக்கத்தில் ஒரு "ஜோதி லிங்கத்தையே கண்ணாரக் கண்டது; பகவானுடைய தலை லிங்கம் போன்றது; சுகாசனத்தில் இருந்த கால்கள் ஆவிடை போன்றன. மூன்று மடிப்புகளுடன் உயர்ந்த பொன்னா மேனி லிங்கத்தின் உடல்போன்றது. இக்காட்சி மன மயக்கமல்ல. அப்படியே கண்டது. சற்குருவும், ஜோதிலிங்கமும், ஜோதிமலையும் ஒன்றெனத் தெளிந்தது. இச்சிவபோக மெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்க் கிடக்கிறது, எழுதத தேகம் விழுமுன் புசித்து இன்புறுவதற்கு சேரவாரும ஜெகத்தீரே" என்று ஏமாந்து வாலறுந்த நரி கூறியதுபோல் கூறிப் பொதுமக்களையும் அழைக்கிறார். போதாக் குறைக்கு "இவ்வேலை வெற்றி பெற, நூற்றுக் கணக்கான உண்மைத் துறவிகளும் அம்சினிகளும் (பெண்களும்) வேண்டும்" என்கிறார். இவர் கூறும் இனபத்தை அனுபவிக்கவும், வேலையை வெற்றி பெற நடத்தவும் நம்பெண்கள் அறியாமையால் மயங்கி, ஹம்சினிகளாகி அலைய இடம கொடுக்கலாமா? சரித்திரக் கூற்றெல்லாம் ஊரா சொத்தைக் கொள்ளை அடிப்பதற்குக் கையாளும் தந்திரமே. இது வொருதினுசான போலிச் சந்நியாசி உலகம். ரமண விஜயம் ஒருநூலா? அதை எழுதிய எழுதுகோல்,

ரமணாசிரமத்தில் வேலையை வெற்றிபெற நடத்திய ஸ்திரீகளும் ரிஷியும்

உலகத்தையே கன்னம் வைக்கும் கன்னக்கோல். சுய நலக் கூட்டத்தாரைத் துணை கொண்டு, தம்பிக்கும், மற்ற சொந்தக் காரருக்கும் பணம் சேர்ப்பதற்குச் செய்யும் சூழ்ச்சி. என்ன குற்றம் இருப்பினும் மறைத்து விட்டு ரிஷியைப் பெருமையாய்ப்பேசி சோற்றுக்கு வழியின்றித் தவிக்கும் சோணகிரிக் கூட்டங்களும், பத்திரிகையில் விளம்பரப்படுத்தச் சில தாகர்களும், புத்தகம் எழுதவும் தோத்திரம் பாடவும் சில ஏமாளிகளும் கையாளாக இருக்கின்றனர். அவர்களுக்குள்ளும் சில கெட்டிக்காரர்களுக்குச் சுவாமிகள் சமாசாரத்தில் புளிப்புத் தட்டி விட்டது. காரியம் ஆனவுடனே, சர்வாதிகாரியால் சாமியின் புனித சீடர்கள் சிலர் வெளியேற்றப் பட்டு, வைராக்கியம் என்ற பெயரால் மாவுகரைத்துக் குடிப்பதும், பட்டினி கிடந்து சாவதுமாய் இருக்கின்றனர்.

ஆ:—போ போ! பாமரமக்கள் தாம் ஏமாறுகிறார்கள். பண்டிதர்கள்—காவ்யகண்ட கணபதி போன்ற பெரியோர்கள்... என்ன! சிவப்ரகாசம் பிள்ளை போன்ற B.A.க்களும் M.A. க்களும் என்ன! கவர்னர்களும், ஜட்ஜ்களும், சப்ஜட்ஜ்களும், வக்கீல்களும் என்ன! இன்னும் பால்பிரண்டன் போன்ற வெளி நாட்டறிஞரும், மடாதிபதிகளும் என்ன! இவர்களை எல்லாம் ஒரே அடியாகச் சுவாமிகளை நம்பி ஏமாந்த சோணகிரிகள் என்னலாமா? இயவளவு பேரும் எப்படி ரிஷியின் மாய வலையில் சிக்கக்கூடும்.

அ:—ஆம். அவர்கள் எல்லாம் அறிவாளிகள்தாம். சரியாக ஆராய்ந்து பார்த்தால் அவர்கட்கு உண்மை விளங்காமல் போகாது இவர்களில் பலர், பலவகையான அபிமானத்தால் ரிஷியின் குட்டுத் தெரிந்தும், தெரியாததுபோல் இருக்கலாம். தாட்சணியம், முதலில் வைத்த நம்பிக்கை, சாதி, சொந்தம், சுயநலம், அவகாசமின்மை அலட்சியம், போலிமதிப்புப் போன்ற பல காரணங்கள் உண்மையை மறைத்து, ரிஷியைக் கொண்டாடித் திரியும்படிச் செய்யலாம். இவர்கள் ஏமாந்தவர்களோ இல்லையோ! ரிஷி என்னமோ இவர்களை ஏமாற்றி விட்டார். அவர், தம் கள்ளக்காரியம் பார்ப்பதில் இவர்களைக் காட்டிலும் மஹாமுனி, கைகாரப் பேர்வழி! ஒரே

அடியாக ஒரு சிறு சொல்லில் எல்லாரையும் ஏமாற்றி விட்டார். ஏமாந்து நம்பி உடனிருந்து புகழ்ந்த படிப்பாளிகள் ரிஷியின் போக்கைக்கண்டு வெறுத்து அகன்று விட்டதால், ஆசிரமத்தார் மேலும ரிஷியின் புகழைப் புதுக்கி மினுக்கி மெருகிட வேறு வழி இல்லாமல், விசிட்டர்ஸ் புக் என ஒன்றை வைத்துப் பகட்டு வேலை செய்யத் தொடங்கியுள்ளனர். விடயமறியாத வழிப்போக்கர்களில் பிரபலஸ்தர்கள் வருகையைக் கேட்டு, வலிய அழைத்துச் சென்று தாசிகள் போல் உபசாரம் சொல்லி மயக்கி ரிஷியின், பெருமையை அப்புத்தகத்தில் எழுதுவித்துக் காட்டிப் பணம் பறிக்க வழிகோலுகின்றனர். அப்புத்தகத்தை ஆசிரமத்தில் இருக்கக் கண்ட உலகம் மதிக்கும் சாஸ்திரி ஒருவர் "இவ்வுலக தந்திரப்பாட்டு வேலை ரிஷிகளிடம் கூடவா புகுந்து விட்டது" என்று ரிஷியின் யோக்யதையை வெளிச்சமாக்கி விட்டுச் சென்றதையும் கண்டேன்.

ஆ.—ஆமாம்! மகா ஆராய்ச்சிக்காரன் போல் பேசுகிறாயே! இதற்கெல்லாம் ஆதாரம் என்ன?

அ:—அப்படிக் கேள் அதுதான் அறிவாளிக்கு அழகு. இந்த ரிஷியை நம்பி ஏமாந்த பெருமாள்சாமி என்னும் சீடர் ஒருவர், ரிஷியின் ஏமாற்று வித்தையை வெளியாக்கும் பொருட்டே திருவண்ணமலை டிஸ்ட்ரிக்ட் முனிசிப்கோர்ட்டிலும் வேலூர் ஜில்லாகோர்ட்டிலும் வழக்குகள் தொடுத்தார். அவ்வழக்குகளில் இந்தரிஷி—புளுகாண்டி—சாட்சியாகவும், பிரதிவாதியாகவும் வரநேர்ந்தது. அப்போது அவர் எழுதிக் கொடுத்த பிரமாண வாக்குமூலங்களாலும், விசாரணையில் சொல்லிய வாக்கு மூலங்களாலும் சீக்கிய குருநானக் உதாசி மடத்துச் சொத்தை அபகரிக்கச் சூழ்ச்சி செய்த போது தர்ம பரிபாலன போர்டார் நடத்திய கடிதப் போக்கு வரத்தாலும், சமீபத்தில் தம்பிக்கு எழுதிக்கொடுத்த அதிகாரப் பத்திரத்தாலும், நேரில் சென்று பார்த்து விசாரித்ததாலும் ரிஷியின் நிஜ ஸ்வரூபம் இன்னது என்று தெரிந்து கொண்டேன். அவை, இந்த ரிஷி பசுத்தோல் போர்த்த புலி—கோவணங் கட்டிய கள்வன்—என்பதை வெட்ட வெளிச்ச மாக்கி விட்டன. அவ்வழக்கு விவரம்

ரமண ரிஷியின் நிஜஸ்வரூபம்

சுதேசமித்திரனில் 27-10-36 முதல் தொடர்ந்து வெளியாகி உள்ளதையுங் காணலாம். நான் இப்போது மறுத்தும் தழுவியும் கூறும் விஷயங்கள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட ரிகார்டுகளிலும் ரமணாச்ரமத்தார் திருத்தமாக வெளிப்படுத்திய தமிழ் ஆங்கில சரிதங்களிலும், ரிஷி இயற்றிய நூலிலும் உள்ளவை. மற்றும் பலரிடத்து விசாரித்தும், நேரில் கண்டும் அறிந்து கொண்ட உண்மைகளைப் பின் சொல்லுகிறேன். அவற்றால் விளங்கும் பொய், புனைசுருட்டு, பித்தலாட்டம், தமாஷ், ஏய்ப்பு, மாறாட்டங்களை எல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டு பின் ரமணரிஷிகள் நிஜஸ்வரூபத்தை அறிந்து ஆட்பட்டு அடிமையேனும் செய்; அல்லது எவ்வாறேனும் செய், உன் இஷ்டம். ஆனால் நல்லறிவை நம்பிக்கையால் நாசமாக்காதே.

ஆ:—ரிஷிகள்மேல் வழக்கா ! ஜெயம் யார பக்கம் ?

அ:—வாதி பிரதிவாதி இருவருமே ஜெயித்து விட்டார்கள். பெருமாள்சாமிக்கு முழு வெற்றி; ரிஷிக்குப் பாதி வெற்றி. எப்படி என்றால், பெருமாள்சாமி ரிஷியின் பித்தலாட்டங்களை வெட்ட வெளிச்சமாக்கவே வழக்குகள் தொடுத்தார். அவர் நோக்கம் பூரண வெற்றியோடு நிறைவேறி விட்டது. ரிஷியும் ஊர்ச் சொத்தைத் தமக்குரிமை யாக்கித் தம்பியையும் பிள்ளை குட்டிகளையும் ஆளாக்கிச் சொந்தப் படுத்த நினைந்தார். அவர் நோக்கமும் அரை குறையாக ஒருவாறு நிறைவேறி இருக்கிறது. அவர் "ஆஸ்ரம சொத்தெல்லாம் தமக்கே சொந்தம்; பொதுவான தர்ம சொத்தல்ல" என்று இனிமேல் பயமின்றிச் சிறிது தைரியமாய்ச் சொல்லிக் கொள்ளக் கூடும். தர்ம சீலர்களும் பக்தர்களும் அறிவு பெற்று மனம் வைத்தால் ரிஷியின் ஜெயம் அம்பலமாகும். இல்லாவிட்டால், ரிஷிகளுக்கும், தம்பிக்கும், அவர் சுற்றத்தார்க்கும், சாதி சனத்தார்க்கும் கொண்டாட்டம்; பக்தர்கள், சீடர்கள், அபிமானிகள் எண்ணிய எண்ணத்துக் கெல்லாம் திண்டாட்டம்.

ஆ:—அப்படியா ! எப்படி ஒரே வார்த்தையில் எல்லாரையும் ஏமாற்றிச் சொத்தைத் தன்னுடையது என்கிறார் ? இவர் தான்

சந்நியாசி ஆயிற்றே. பணத்தைக் கையால் தொடுவது இல்லையே; சந்யாசி ஆகும்போது கையிலிருந்த ரூபாய் மூன்றரையையும் எறிந்து விட்டார் என்று சரிதம் கூறுகின்றதே.

அ:—சரிதத்தில் கூறுவதெல்லாம் சரியாக இருக்க வேண்டுமா? பொய் மதிப்பும், புகழும் பெற அல்லவா அவை எழுதப்பட்டன? கபடமற்றுச் சில காசுகள் பிச்சை எடுக்கும் காஷாய உலகை நிந்தித்தது உலகை ஏமாற்றிப் பெரும் பொருள் திரட்டும் மற்றொரு படித்த கெட்டிக்காரப் புளுகாண்டியின் கபடநாடகச் செய்கையே. "ஸர்வசங்க பரித்யாகம் செய்தான். ஆடையைக் கிழித்து ஒரு கோவணம் மட்டும் அணிந்து மீதியை அதில் முடிந்த பணத்துடன் வீசி எறிந்தான். ஜாதிசின்னமான பூணூலையும் அறுத்து வீசினான். மண், மனை, தானியம், பாண்டம், துணைவர், நண்பர், உறவினர், வாகனம், பீடம், பாய், ஆடை, பணம், அபிமானம், புத்தகம், எழுத்து, படிப்பு ஆசை, சிந்தை, ஜாதி, ஆசாரம், ஸமயம், பேசும் அனைத்தையும் பீடை என எள்ளித்தள்ளி, ஓடும் செம்பொன்னும் ஒன்றாகக் கண்டார்; பால சந்யாசி ஆய்விட்டான், நமது பாலஸ்வாமி [illegible] முன்னேயே மோனத் தனிமையை அடைந்தார். ஊராரா கூட்ட முள்ள கோயிலிற் றவம் தொடங்கினார்." (பக் 117) என்று சரிதம் மட்டுமா கூறுகிறது? ஹைகோர்ட் ஜட்ஜ் பதவியும் பட்டமும் பெற்ற அறிஞர் ஒருவர் "சுவாமிகள் உலகப் பொருளில் ஆசை இல்லாத அத்யாத்மிக மகான் என அறிவேன்!" (I understand the Swamigal First defendant-to be a great spiritual personage who has not the desire for material things) என்று சாட்சியம் கூறியுள்ளார். இன்னும் அவரே, ஆங்கில சரித முகவுரையுள் சுவாமிகளின் சந்யாசிச்சிறப்பை வானளாவப் புகழ்ந்துள்ளார். மேலும் அவர் இச்சந்யாச விவேகத்தில் தாம் கொண்ட உறுதியால், 1000 ரூபாய்க்கு மேல் "மகரிஷியின் விவேகத்திற்கேற்ப உபயோகித்துக் கொள்ளுமாறு" (The contributions aforesaid made by me were intended by me as offerings to the swamigal to be utilised by him according

to his discretion—) அள்ளிக்கொடுத்தும் இருக்கிறார். ஆனால் இந்த எண்ணத்திலும் தன் விவேகத்திலும் இடி விழச் செய்து விட்டார் ரிஷிகள். எவ்வாறெனின், இப்படிப் பக்தர்கள் சந்யாசி எனக் கருதிக் கொடுத்த சொத்தை எல்லாம் தன்னிலும் விவேகியாய் தன்னுடன் பிறந்த விவேகமற்ற தம்பி ஒருவர்க்கு அதிகாரப் பத்திர மூலம் எழுதி வைத்து விட்டார். பின்னும் அந்த ஜட்ஜ், ரிஷி உலக விஷயங்களை வெறுத்தவர் என்று நம்பியதற்கு மாறாக, விசாரணையில் "சொத்துக்களை வைத்துக்கொள்வது உலகு சம்பந்தம் என நான் ஒத்துக்கொள்கிறேன். உலக விஷயங்களை நான் வெறுக்கிறதில்லை" என்று ரிஷி திருவாய் மலர்ந்தருளிவிட்டார். இதை விட நம்பிக்கை மோசம் வேறுண்டா? சந்யாசிகளுக்குரிய சட்டத்தின்படி அதாவது "சந்யாசியின் சொத்து சீடர்களுக்குரியது. முன்னைய குடும்பத்தார்க்கு உரியதல்ல" என்பதற்கேற்பச் சொத்து அந்நியர்க்குப் போய்விடுமே என்ற பயம். அதனால் ரிஷி, நான் சந்யாசி அல்லவென்று நாணமின்றிப் பச்சையாகப் புளுகிவிட்டார். "வெட்கம் போனாலும் போகட்டும் தொப்பை நிரம்பினால் போதும்" என்பதுதானே பிழைக்க வழியற்று வெளிக்கிளம்பும் சோம்பேறிக் கூட்டத்தின் மோசமான எண்ணம். இப்போதாவது இந்த ரிஷி, தந்தையற்றுக் கஷ்டப்பட்டு, வீடு வாசல்களைத் தோற்று, அந்நியர் தயவால் மதுரையில் வந்து, சிரமப்பட்டு வயிறு கழுவ வேண்டிய நிர்க்கதியான தரித்திர நிலை தாங்காது சந்யாசப் போர்வையில் புகுந்தவர் என்பது தெரிந்ததா?

ஆ:—ஏது மிகவும் மிஞ்சிப் பேசுகிறாய். அவர் "நான் சந்யாசி அல்ல" என்று எங்கும் கூறவில்லையே. இதற்கு வீரத் துறவு என்னும் அத்யாயம் ஒன்றுமே போதுமே. மேலும், அவரே பாடிய அக்ஷரமணமாலையில் தான் உலக மயலைப் போக்கி மொட்டை அடித்துக் கொண்டதை "மைமயல் நீத்து அருள்மையினால் உனது உண்மை வசம் ஆக்கினை" "மொட்டை அடித்து எனை வெட்ட வெளியில் நீ நட்டம் ஆடினை" என அருணாசலன்மேல் ஏற்றிக் கூறிக் குறிப்பிக்கின்றாரே. மேலும் தனக்கு உலகப் பற்றில்லாதது

பற்றி அருணசல பஞ்சரத்ந பதிகங்களில் "ஆவி உடல் கொண்டாய் எனக்கோர் குறை உண்டோ" எனவும், "யகி(உலகம்) மாயையென் ஆழ்கடல் வீழ்ந்து யான் ஆழ்ந்திடும் முன் இழுத்து உன் பதத்தில் இருத்தினை" எனவும், "இவ்வுலகினைத தலையில் பற்றியான் பெற்றது போதும்" எனவும் கூறுகிருரே. போதாக் குறைக்கு உலகத்தவர்க்கும் "பொருள், நாடு, சுற்றமொடு வருணதி பற்றி, உளம் மருள்நாடல் (மன மயக்க முறல்) அற்று, அருள் நாடி நிற்குமவர்" சுகம் பெறுவர் எனத் தன் அநுபவத்தைக் கூறுகிருரே. இயவளவிருக்க, சந்யாசி அல்ல என்று கூறிவிட்டார் என்று நீ சொன்னுல் உன் வார்த்தையை யார் நம்புவார்கள்?

அ:—ஆம். என் வார்த்தையை நம்பமாட்டார்கள். ஏழைப் பேச்சு அம்பலம் ஏறமா? செட்டிக்காரன் புளுகு பட்டப்பகல் போல் வெளியாகும்போ தல்லவா யாரும் நம்புவார்கள். நான் கூறுவன எழுத்துருவமாக உள்ளவை. ரிஷி சாட்சிக்காரன் காலில் வீழ்ந்து ரூபிப்பவை. ரிஷி எழுதிக் கொடுத்த பிராமண வாக்கு மூலத்தில் இருப்பவை. அவை "பிரதிஞாதியை—ரிஷியை—சந்சாசி ஏன்று வரையறுப்பது சரியல்ல. அவர் குருவும் அல்ல உபதேசியும் அல்ல, அவர்க்கு சீடரோ அநுசரிப்போரோ இல்லை" என்பனவே.

ஆ:—என்ன! இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் இருக்கிறதே! இது உண்மையானல் இது போன்ற திருட்டுச சந்யாசம் எதுவுமே இல்லை.

அ:—அந்தப் புளுகைத் தான் முன் பின் மாறுபாடில்லாமல் பொருந்தப் புளுகினரா? அதுவும் இல்லையே பாவம்! தம்பிக்குக் கொடுத்த அதிகாரப் பததிரத்தில் ரிஷி, தன்னை "ரமண மஹரிஷிகள் என விளங்கும் சாமி அல்லது பிராமண சாமிகள்—கிருகஸ்தர் விஷயத்தில் குறிக்கப்படுவதுபோல் குறிக்கச் சாதியும், மதமும், தொழிலும், பிறவும் இல்லாதவா—" எனக் கூறிக்கொள்ளுகிருர், பின்னும் அதில் தன் தம்பியைச் சிஷ்யன் என்றும் ஏற்றுக் கொள்கிருர்.

ஆ:—ஆம். பூணூலை அறுத்தெறிந்த பின் இவர்க்குச் சாதி ஏது? மரபேது? ஆசாரமேது? உண்மைதானே. ஆனால் ரிஷி "நான் குருவுமல்ல எனக்குச் சிஷ்யனுமில்லை" என்று கூறியது மட்டும் பிசகுதான்.

அ:—சரிசரி! நீ அவர்க்குச் சாதி இல்லை என்று சரிக்கட்டப் பார்த்தால், ரிஷி என்ன சுலபத்தில் விட்டு விடுவாரா? குறுக்கு விசாரணையில் "நான் பிராமண சாதி. எனக்கு உபநயனம் ஆய் விட்டது." என்று சாதி ஆசாரப் பெருமையைப் பாராட்டிக் கொண்டாரையா? சரியான உண்மை விஷயங்கள் எக்காலத்தும் எவ்விடத்தும் எதன் பொருட்டும் மாறா. ஊரை ஏமாற்ற ஒரு பொய் சொல்லி விட்டால், அதை உருப்படுத்த ஒன்பது பொய் சொல்லித் தீரவேண்டும். மட்டுமரியாதை பாராததால் சட்டம் சும்மா விடுமா? ஆனால் ரிஷிகள் சரமாரியாகப் பொய் சொல்லி அதிகாரிகள் தயவால், சூழ்ச்சியால் சட்டத்தையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டார்.

ஆ:—"பிராமணன், பூணூல் போடப்பட்டது" என்று முன்னைய நிலைமையைக் கூறுவது குற்றமா? பின்னர், இவர் "சிகை யக்ஞோப வீதங்களைக் களைந்து முண்டனம் (மொட்டை) கொண்டு ஐயமற்ற அதி வருணாஸ்ரமி யாகிவிட்டார" என்பதாலல்லவா அவர்க்குச் சிறப்பெல்லாம் வந்தது. சீரெல்லாம் பெற்றார். பேரும் பெருகிற்று.

அ:—அதிவர்ணாஸ்ரமியா? அப்படி இன்னொரு தரம் கூறாதே. மஹரிஷி மண்டையை உடைத்து விடுவார். கதையில் கள்வர்க்குங் கருணை! பொறுமை! பொறுமை! சாந்தம் சாந்தம்! என்று சரடு விட்டிருப்பதைக் கண்டு மயங்காதே. சாமிக்குக் கோபம் வந்து அடித்தால் எப்படி இருக்கும் என்பது எச்சம்மாளைக் கேட்டால் தெரியும். அல்லது சீடர் தண்டபாணி சாமியின் முதுகை விசாரித்தால் விளங்கும். தம்பியை வெறுத்துச் சாமியால் அடி வாங்கிய தண்டபாணியும், எச்சம்மாளும் பொய் சொல்ல மாட்டார்கள் என எண்ணுகிறேன். ஆனால் முழுப்பொய் மூர்த்தி—

ரிஷியின் கரப்பரிசத்தால் அவர்களும் அடித்தது ஞாபகம் இல்லே, ஒரு வேளை அடித்திருக்கலாம் என்று அரைப்பொய்யேனும் சொல்லக் கற்றுக் கொண்டிருக்கலாம். யார் கண்டார்? போகட்டும். இன்னொரு தடவை அதிவர்ணாஸ்ரமி என்று நினைத்து அபசாரப்படாதே. எல்லார் நினைவையும் புத்தகம் படிப்பதுபோல் படித்தறிந்து விடுவார் ரிஷி. அவர் ஸர்வந்தர்யாமி. சாபம் கொடுத்தால் சாம்பலாக வேண்டியதுதான். சட்டத்தை ஏமாற்ற, ரிஷி இப்போது ஒரு புது யுக்தி கண்டுபிடித்து விட்டார். அதன்படி, அவரை அத்யாஸ்ரமி என்று சொல்லியாகவேண்டும். இந்த அத்யாஸ்ரமத்தைப்பற்றி ரிஷி சொல்வதைப்பார். நான் இருப்பது அத்யாஸ்ரமம்; அதாவது வாழ்க்கையில் இருக்கும் எதிலும் சேராதது ஆஸ்ரமம். அத்யஸ்ரமம் சாஸ்திரத்தில் இருக்கிறது. இந்த ஆஸ்ரமத்தில் இருப்பவர்கள் எனக்கு யாரும் தெரியாது. அத்யாஸ்ரமம் பற்றி விவரம் ஸுதஸம்ஹிதையில் இருக்கிறது. அதில் அத்யாஸ்ரமத்தினுடைய நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிபந்தனைகள் தான் நான் அனுஷ்டித்துக்கொண்டு வருகிறேன். அத்யாஸ்ரமத்தில் இருக்கிறவர்கள் பிரியமிருந்தால் சொத்து வைத்துக் கொள்ளலாம். எந்த ஆஸ்ரமத்துக்கும் குரு உண்டு. அத்யாஸ்ரமத்துக்கும் குரு உண்டு. ஆனால் என் ஆத்மாவுக்கு என் ஆத்மா தான் குரு. புராணங்களில் அத்யாஸ்ரமம் அனுஷ்டித்தவர், சொத்து வைத்திருந்ததாகப் படித்திருக்கிறேன். ஸுதஸம்ஹிதையில் அதாவது கந்தபுராணத்தில் இந்த விஷயங்கள் தெரிவித்திருக்கிறது. அத்யாஸ்ரமத்தில் என்னுடைய சொத்தென்று ஒருவர் சொல்லிக்கொள்ளலாம். இந்தமாதிரி சொத்துக்களை இதராளுக்கு டிஸ்போஸ் செய்ததாகவும், அத்யாஸ்ரமத்தில் சொல்லி இருக்கிறது. அத்யாஸ்ரமத்தில் இருப்பவர்களுக்கு நித்ய காமாநுஷ்டானங்கள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை."

ஆ:—அட தெய்வமே! நான் ஸுதஸம்ஹிதையைப் பல முறை கரைத்துக் குடித்திருக்கிறேன். அதில் அத்யாஸ்ரமத்தைப்பற்றிப் பின்வரும் வாக்கியங்கள் தான் காணப்படுகின்றன. அவை "அத்

யாஸ்ரமிகளாய் இருக்கிற சாந்தர்களால் பிரமஞானம் சொல்லப்பட வேண்டியது. சாந்த மற்றவனுக்கும், புத்திரனில்லாத வனுக்கும் இதை ஒரு பொழுதும் சொல்லக்கூடாது. அக்னி என்றல் முதலிய மந்திரங்களால் பஸ்மதாளனமும், திரிபுண்டரதாரணமும் அத்யாஸ்ரமமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள் என்பன. இதன் உரையாசிரியர் வித்யாரண்யசாமிகள் சிவமந்திர ஜெபமும், சிவபூசை முதலியவைகளும் அத்யாஸ்ரமம் என்று அங்கீகரிக்கிறார். இவை தவிர ரிஷிகள் சொல்வதுபோல் அத்யாஸ்ரமம் வாழ்க்கையில் சேராதென்றோ, அத்யாஸ்ரமிக்குச் சொத்து, மனைவி உண்டென்றோ கூறப்படவில்லை. ரிஷியோ "அத்யாஸ்ரமிகள் சொத்து வைத்திருந்ததாகப் படித்திருக்கிறேன். பிரியமிருந்தால் அத்யாஸ்ரமி கலியாணம் கூடச் செய்துகொள்ளலாம்" என்று சாதிக்கிறார். சூதஸம்ஹிதையில் கௌதமர் சொத்து வைத்திருந்த செய்தியைக் குறிப்பாக அறியலாம். அதையே ரிஷி குறிப்பிடுகிறார் என்று எண்ணுகிறேன். இவர் பிறந்த திருச்சுழி தலத்தையும். புகுந்த திருவண்ணாமலையையும் கௌதம முனிவர் வழிபட்டவர். அதனால் ரிஷியும் "கௌதமர் போற்றும் கருணைமாமலையே" எனப் பாராட்டிப்பாடியுள்ளார். ஆகவே கௌதமரிடம் இவர்க்கு அபிமானம் உண்டாவதும் இயல்பே. அச்சூதஸம்ஹிதையில் கௌதமர் அத்யாஸ்ரமி என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. அக்கௌதமர் வரலாற்றையுங் கூறுகிறேன் கேள். அந்த ஆபாச கதையைக் கூறவே நாவெழவில்லை. அதன் சுருக்கம் பின்வருவது:—"அந்தஸ்துள்ள பிராமணர் சிலர் பஞ்சகாலத்தில் கௌதமரிடம் சென்றனர். அவர் ஆசிரமம், தவத்தால் சுபகரமாய் இருந்தது. கௌதமர், சென்ற சம்சாரிகளுக்குத் தான்யம், தனம், வஸ்திரம், எள்ளு, எண்ணெய், பசுக்கள் முதலியன கொடுத்தார். திரும்பும்போது அந்நன்றி கெட்ட பிராமணர்கள் அவர்க்கே துரோகம் செய்தார்கள். அதனால் முனிவர் அவர்கட்குச் சாபம் கொடுத்தார். அச்சாபங்களுள் சில கீழ்வருவன:—1. தன் பார்யையிடம் புணர்வதிலும், பரஸ்திரீகளைத் தள்ளுவதிலும் சிரத்தை இல்லாமல் இருக்கவேண்

டும். 2. எப்பொழுதும் பிதா, மாதா, புத்திரன் ப்ராதா, பந்துக்கள், பாரியை—பெண்சாதி முதலியவர்களை விக்ரயம் செய்து கொண்டிருக்கக் கடவீர்கள். 3. தேவதீர்த்த வேதவிக்ரயம் செய்து காலங்கழிக்கக் கடவீர்கள். 4. உங்கள் வம்சத்தில் உண்டாகிறவர்களும் நான் சபித்துச் சொன்ன பிரகாரம் இருக்கட்டும். இன்னும் இப்படிப்பட்ட கொடிய ஆபாசமான சாபங்கள் பல. சொல்ல வாய் கூசுகின்றது.

அ:—அடடா! இந்த வரலாற்றையா தனக்கு ஆதாரமாகக் கொண்டு ரிஷி தம்மைச் சேர்ந்தவர்களையே சந்தி சிரிக்கச் செய்து விட்டார்? நல்லது! நல்லது! ரமணாஸ்ரமத்திலும் இக்கதையின் முற்பாகம் நடந்தேறி விட்டது. பிற்பாகந்தான் பாக்கி. எனக்கென்ன தெரியும் ஏதெல்தாம்? நீ தான் புத்தகப்புழு. போகட்டும் இப்பொழுதாகிலும் சொல். ரிஷிகள் யோக்யதை எப்படி? அவர் கூறியதுபோல் சொத்து சுதந்திரம் முதலிய எல்லாவற்றையும் ஏற்று எண்ணத்தை முடித்துக்கொண்டார். ஆத்யாஸ்ரமி எது செய்தாலும் குற்றமில்லை. அவரைத் தடுப்பவர் யார்? ஆம் அத்யாசிரமி ஏதோ மந்திரம் ஓதவேண்டுமென்றாயே! அது என்னமந்திரம். சுவாமிகள் அம்மந்திரம் அறிவாரா? சரித்திரம் இது பற்றி ஏதேனும் சொல்கிறதா? பூஜை செய்வாரா?

ஆ:—யாருக்குத்தான் மந்திரம தெரியாது? புத்தகத்தைப் புரட்டினால் எல்லாம் தெரிகிறது. அநுபவம் தான் அரிது. ரிஷிக்கும் மந்திரங்கள் இம்மட்டில் தான் தெரியும். அவா ஒன்றும் மந்திரம் தந்திரம் செய்யாமலே எடுத்தவுடனே திடீரென்று ஆத்மஸ்வரூபத்தில் ஆழ்ந்துவிட்டவர் அல்லவா! அவரை யாரேனும் மந்திரத்தைப்பற்றி ஏதேனும் கேட்டால், யுக்தியாக எதையேனும் சொல்வார். இதை ரமணகதை படித்த எல்லோரும் அறிவர். மேலும் அவர் "உருப்போடாவிட்டால் மந்திரத்தால் பயனில்லை" என்னும் அரிய உண்மையை வெளியிட்டுப்பின் "மந்திரம் பெற விருப்பமில்லை" என்றவராயிற்றே. இன்னும் மந்திரம் முதலியவற்றில்

"அவரவர் இயல்பிற்கேற்ப அவரவரை சுயேச்சையாக விடுத்து பின்னர் 'நானார்' என்னும் விசார மார்க்கத்திற்கே திரும்புவது ஸ்வாமிகளின் உபதேசமுறை" என்று ரமணவிஜயமும் கூறும்.

அ;—சரி சரி. மேலும் இவர் " நான் பூஜை எதுவும் செய்வதில்லை. பூஜை செய்வோர் அருகில் இருப்பதுண்டு." என்றும் குறுக்கு விசாரணையில் கூறி இருக்கிறார். இவற்றைக் கொண்டு பார்த்தால் அவர் அத்யாஸ்ரமி அல்லவென்றும் தெரிகிறது. எதுவோ சமயத்திற்கேற்ப மாறிப் பேசும் பலவற்றுள் இதுவும் ஒன்று. ரிஷி பேச்சில் உண்மை ஆராய்வது மணல் சோற்றில் கல்லாராபவது போலும். இவரைப்பற்றி 'நானார்' எனனும் ஆராய்ச்சியிலும் அரிது. எந்த மனடயனும் 'நானே அதிசுலபம் ஆன்மவித்தை' என்று எளிதாய்க் கூறிததிரிபலாம். அவர் வாக்கில் உண்மை காணும்வித்தை அப்பப்பா ! எவர்க்கும் அரிது ! அரிது.

ஆ:—ஆமாம். இந்த வழக்குத் தொடுத்தவர் ஆகுகில சரித்திரத்தில் "பெருமாள்சாமி முதலிய சீடர்கள் தாயைச் சமாதி செய்தனர" (பக். 136) எனக்கூறப்படும் பெருமாள்சாமி தானோ ? அவர் வழக்குத தொடுக்கக் காரணம் என்ன ?

அ:—ஆமாம் ஆமாம ! தாயைச் சமாதி வைத்தது மட்டுமா ? சமாதி வைத்த இடததை (15 அடி சதுரம்) முதல் தன் பேருக்குச் சிக் பாவாஜிக்குச் சமாதானம் சொல்லி எழுதி வாங்கியவர் இப்பெருமாள்சாமி தான். தன் தகப்பனுக்கு மனைவியாய்த் தன்னைப் பெற்ற தாய்க்குக் கிரியை செய்யாத ரேனும் ரிஷியின் தாய்க்கு 10ஆம் நாள் கிரியையைச் சொந்தச் செலவிலேயேபிறருடையபண உதவி இன்றிச் செய்தவர். அழுபாரற்று எடுப்பாரறறுக் கிடந்த தாயின் அழுகல் பிணத்தை மாதுரு பூதேசுவராகும்படி சமாதி கட்டமும் கட்டியவர். தம் கைப்பணத்தோடு பிறரிடமும் பணம் வசூலித்துக் கந்தாசிரமப் (பழய ரமணாசிரமம்) கட்டியவர். ரிஷியின் உருவம் செய்து வணங்க நினைத்தவர். சமயத்தில் ரிஷியால் பலவிதம் புகழப்பட்டவர்—பாராட்டப் பெற்றவர். ரிஷியின் மலமூத்

திரங்களை வியாதிகாலத்தில் (தம்பி, தாய் முதலியோர் அருகிருந்தும் நெருங்காமல் அநாதரவு செய்தபோது) உடனிருந்து வாரி எடுத்து வைத்தியம் பார்த்தவர்' ரிஷியின் விருப்பமறிந்து ரமண ஜெயந்தி உற்சவம் கொண்டாடியவர். ரமணோற்சவ ஊர்வலம் நடத்தி ரிஷிக்குப் புகழும் பொருளும் தேடித்தந்தவர். "சில பண்டாரங்கள் ரிஷியைத் தூக்கிச்செல்லவந்தபோது திருச்சி எத்தர்க்குச் சரியான தஞ்சை எத்தராய், விடாமுண்டர்க்குக் கொடாமுண்டராய் வந்து, ரிஷியை ஆபத்திலிருந்து காப்பாற்றிய திடசாலி." (பக். 187) எதிர்வழக்காடும்போதும் "சுவாமிகள் பொய் சொல்லமாட்டார்"என உறுதியாக நம்பிக்கூறி ஏமாந்தவர். அவை எல்லாம் பலபடக் கூறிப் பயன் என்ன? ரிஷி அவர் செய்கைகள் பலவற்றையும் மறுத்துக் கூறிவிட்டார். ஊர்சனங்கள் எல்லாம் அறிய, சமாதி வைத்ததையே மறக்கும்போது மற்றவை எம்மாத்திரம்? பிணம் கிடந்தபோது எந்தப் பிராமணன் எடுக்க முன்வந்தான்? பெருமாள்சாமி இல்லாவிட்டால் தாயின் சவத்தை நான்தானே தலையில் போட்டுக்கொண்டு தவிக்கவேண்டும்" என்று, தம்பியிடம் அன்று திருவாயால் கூறியது போல், இன்று பக்தர்கள் எல்லாம் சமாதி செய்தனர் பெருமாள் சாமியும் அவர்களோடு இருந்திருக்கலாம்" என்றுவெறுவாய் திறந்து உளறுகிறாரே! சிறிய சமாதிக்குழி, பலர் இருக்க இடம் கொடாதே அச்சிறுகுழியில் இறங்கிப் பிணத்தை வைத்தவர் யார் எனுங் கேள்வி எழுமே என்பதையுங் கூடக் கவனியாமல் பொய்கூறி விட்டாரே. இது சனங்கள் கவனத்திற்குக்கூடவராது என்று நினைத்துக்கொண்டாரா? ரிஷியின் உருவம் செய்ய சென்னை ஆர்டிஸ்ட் உயர்திரு. நாகப்பா அவர்கள், நேரே வந்து திரும்பித் திரும்பிப் போட்டோ எடுக்க அநுமதித்து விட்டு, இப்போது விக்ரகசமாசாரமேஅடியோடு தெரியாது என்கிறார். திருவண்ணாமலை ஈசான்ய மடாதிபதி ஸ்ரீமத் நடேச சாமிகளிடம் தனலக்ஷ்மி ஆர்ட்ஸ் விளம்பரத்தைப் பத்திரிகையிலிருந்து கத்திரித்து எடுத்துக்கொடுத்து இவ்விடம் 'சென்றால் சுருக்கமான செலவில் விக்ரகம் முடியும் எனக்கூறிக் கடிதமும் சென்னையிலிருந்த பெருமாள்சாமிக்கு எழுதச் செய்தார். இப்

போது இவை எல்லாம் இல்லை இல்லை என்கிறார், இந்தச் சீடர் தான் இப்படி ஆனாரே மற்றவர்களில் யாரேனும் உருப்பட்டவர்கள் உண்டா?

ஆ:—ஏன் இல்லை? சூப்ரவைஸர் ராமசாமி அய்யர் நோய் நீங்கவில்லையா? அவ்வரலாற்றை விஜயம் 260 ஆம் பக்கத்தில் கீழ் வருமாறு விரிக்கிறதே. "ஒரு நாள் ரமண ஸந்நிதியில் படுத்திருக்கையில் ஒரு ஒளி ஓட்டம் பகவானிடமிருந்து தம்முள் புகுந்ததாகக் கண்டார். அவருக்கு எப்போதும் அஜீரண நோவு. உறக்கம் வருவதில்லை. பகவானிடம் நோயைச் சொன்னதும், உடல் சுகம் ஏற்பட்டது. அன்று பகவான் விருந்தளித்தும் வயிற்றில் ஒரு நோவும் இல்லை. அயர்ந்து தூங்கினார். எத்தனை மருந்து தின்றும் போகாத நோய் அன்று தீர்ந்தது"

அ:—'தம்பி! என் பசிக்குக் கஞ்சி ஊற்றினால் உனக்குப் பசிக்காத வரம் தருகிறேன்' என்பது போலல்லவா இருக்கிறது இது. பகவான் தன் தலையாட்டத்திற்குக் காரணமான நோயைத் தீர்க்க வழி இன்றித் தவிக்கிறார். அவா காசநோய் நீங்கக் கண்ட மருந்தெல்லாம் தின்றாய்விட்டது. அதனால் வயிற்றுக்கடுப்புக் கண்டு பட்ட அவஸ்தை பகவானுக்கே தெரியும். இந்த அய்யர் மருந்து கொடுத்து ரிஷிக்கு நோயையல்லவா உண்டாக்கினாராம். முதலில் தாய்க்கு உண்டான நோய்தீர மருந்தெல்லாம் கொடுத்து ஆனவரை பார்த்தாய் விட்டதாக ரமணவிஜயம் கூறுமே. இந்த லக்ஷணத்தில் ரிஷி பிறர் நோயைப் போக்குவதெப்படி?

ஆ:—பகவானைப் பற்றிப் பல காட்சிகளைக் கண்ட லக்ஷ்மி அம்மாள் பாக்கியமே பாக்கியம்!

அ:—லக்ஷ்மி அம்மாளா? இந்த அம்மாளை எச்சம்மாள் என்பார்கள். இந்த அம்மாள் இளம்பெண்ணாக இருக்கும்போதே புருடனை இழந்து, துயர் ஆறாது ரமணாஸ்ரமத்தை அடைந்து இன்பம் பெற்ற புனிதவதி என விஜயத்தில் (பக். 261) படித்திருப்பாயே. இந்த அம்மாள் சமாச்சாரந்தான் அபாரம்! இப்புனித

வதி பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பணத்தோடு பகவானிடம் வந்து உணவுத்தொண்டு செய்தவள். அம்மை இப்போது ஆஸ்ரமத்தில் படும் அல்லலெல்லாம் ஆண்டவனே அறிவான். அம்மை கையில் இருந்த காசும் கரைந்தது. விருத்தாப்பியம் மேலிட்டு விட்டது. இனிமேல் இவ்வம்மையால் என்ன பயன் என்று, அம்மையாரிட்ட திண்டியைத் தின்றுகொழுத்த ரமணாஸ்ரமத்தார், இப்போது சமையல் கட்டில் நுழையக்கூடாதெனக் கண்டிப்பாகக்கூறித் தடுத்துக் கஷ்டப்படுத்துகின்றனர். இந்த அம்மாள், தன் இளமைக்காலத்தில் பகவான் கையால் அடியும் உதையும் பட்டவள் செல்லம்மாள் என்னும் இப்பெண் இறந்ததைக் கேட்டுத்தான் "பகவான் விம்மி அழுதாராம்" (பக். 262) என்று ரமண விஜயமும் கூறும். பாவம்! தாய் இறந்த போதும் சந்தோஷம் கொண்டாடியவா, இத்தையல் இறந்தபோது விம்மி விம்மி அழுவானேன்? காரணம் பகவானுக்குத்தான் தெரியும். இப்படியே அலங்காரதம்மாளும், மருமகளும் கணவன் பணிவிடை தவறினும் ரிஷியின் பணிவிடைக்குக் குந்தகம் இல்லாமல் தொண்டு புரிந்து வறுமையுற்று வாடுகிறார்கள்.

ஆ:—மஹரிஷிகள் உருவை ஜோதிமயமாகக் கண்ட சாந்தம்மாள் எப்படி? (பக்· 262)

அ:—இவ்வமமாள் தான் இனிமையாகப பாடியும, சமையல சிறக்கச் செய்து இன்சொல் கூறியும் உணவூட்டுபவள். ரிஷிகளையும் விசேடமாகத் தம்பி சர்வாதிகாரியையும் திருப்திப்பண்ணி சமையல் கட்டிற்கும், இளம்பெண்கள் கூட்டத்திற்கும் தலைவியாய் சர்வாதிகாரிக்குமேல் சர்வாதிகாரியாய் இருப்பவள். பெண்களை வசப்படுத்தி ஆஸ்ரமத்துக்கு மகிழ்வூட்டுபவள். வருமபெண்களுக்கு "பரோபகாரார்த்தம் ஹிதம் சரீரம்" என்னும் ஞானம் கைவரக் கூட்டுபவள். இவ்வம்மையார் இல்லையானால், தம்பி—சர்வாதிகாரி—நிரஞ்சனானந்த சுவாமிகட்குக் கால் பிடிக்கவும், உடம்பழுத்தவும், எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டவும் இளம் பெண்கள் எவரும் தைரியமாய் முன்வரமாட்டார்கள். இவ்வம்மாள் சொற்படி கேட்டிருந்தால் திருமங்கலம் அய்யர் மகளுக்குச் சர்வாதிகாரி

யின் தடபுடலால் கை ஒடிந்திருக்காது. வேலூர் வைத்தியசாலைக்குச் செல்லவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது. சுகமும் ஏற்பட்டிருக்கும் எனக் கேள்வி. இப்பெண்ணின் இசையிலும், அழகிலும் ஈடுபட்டுக் கள்ளத்தனமாக எழுதப்பட்ட காதற் கடிதம் ஆஸ்ரமத்தில் கண்டெடுக்கப்பட்டு கலவரப்பட்டதும் உண்டு. கலவரத்திற்குப் பின்னும் இவ்விளமங்கையின் சம்பந்தத்தை ஆஸ்ரமம் இழக்க வில்லை.

ஆ:—சென்னையில் ஒரு பெரிய உத்யோகஸ்தரின் மனைவியாயிருந்து, விரக்தியால் 1928-ஆம் ஆண்டு மஹரிஷிகள் சந்நிதிக்கு வந்து, காஷாயம் பூண்டு ஸந்யாசினியாய் இருக்கும் சுந்தரம்மாள் என்ற உத்தமியோ (பக். 355)

அ:—இந்த அம்மையாரா? இவ்வம்மைக்கு இருபதாவது வயதிலேயே வைராக்யம் முற்றி விரக்தி ஏற்பட்டுவிட்டது. ரமண பக்தி தலையேறி, தாலியை யறுத்துக் கணவன் தலையில் போட்டு விட்டுத், தாய் தந்தை சுற்றத்தார்க்குப் பழியை நிலைநிறுத்தி விட்டு வெளியேறிய மஹா உத்தமி. இவள் வீட்டை விட்டுத் தொலைந்தும், புருஷனைப் பிடித்த சனியன் தொலைந்த பாடில்லை. இக்கற்பிற்கரசி கணவன் மேலும் வழக்குத் தொடுத்தாள். இ அவமானம் பொறுது இறந்த கணவனை இப்பழிகாரிச் செய்கையும், ரமணன் அருளும் சேர்ந்து பரமபதம் சேர்த்தன. இவ்வுத்தமிகளை ஆங்கில சரிதப்புத்தகத்தில் சேர்க்கட்டட்டுள்ள படத்தில், வேண்டுமானால் தரிசித்து வரமும் பெறலாம். ரிஷியோடு இந்த அம்மாமார்களைச் சேர்த்து எடுக்கப்பட்ட அப்படம் துரதிரஷ்ட வசமாகத தமிழ்ச் சரிதத்தில் இடம் பெறவில்லை. காரணம் யாதோ? ஆங்கில சரிதத்திற்குப் பின் செய்த சுத்தங்களுள் இதுவும் ஒன்றாயிருக்கலாம்.

அ:—சரி. காவ்யகண்ட சாஸ்திரிகள், முகவைக் கண்ண முருகனார், நடேச முதலியார்—நடனானந்த சாமிகள்—சேலம் B. V. நரசிம்ம ஸ்வாமிகள் இவர்களைப்பற்றி என்ன சொல்லுவாய்?

அ:— இவ் வுத்தமர்கள் அனைவரும் தத்தம் அளவில் சிறந்தவர் களே. இவர்களிடம் குறைகூற வேண்டுமானால், அது ரமண சேர்க்கையேயாகும். சாஸ்திரிகள் சிறந்த அறிஞர். ஆலயில் அவர் சுவாமிகளை இல்லாத வகையில் சிறப்பித்துத் தனக்குச் செல் வாக்குத் தேடினார். ரிஷி இவரைச் சிறப்பித்துத் தனக்குப் பொய் மதிப்பைத் தேடினார். 'பண்டிதனும் நாயும் பகவானுக்குச் சமம்,' என்பதெல்லாம் சாஸ்திரிகள் முன்னிலையில் பறந்துவிடும். 'ஸர்வ பூதஸமதயை சலிங்கேன ஞான ரூஹ்யதாம்' எல்லா பூதங்களிலும் பக்ஷபாதமில்லாமல் நடக்கிறதென்கிற அடையாளத்தால் ஞான மிருக்கிறதென்று ஊகிக்கவேண்டும்) என்ற தான் கொண்ட அடை யாளத்தையும் கைவிட்டுத் தன்னை அஞ்ஞானி என்றும் ரிஷி விளம் பரப்படுத்தி விடுவார். எப்படி எனில், எல்லாரும் ரிஷியைத் தரை யில் வீழ்ந்து நமஸ்கரிப்பார்கள். கணபதி சாஸ்திரி நமஸ்கரிக்கும் போது மட்டும், கீழே கம்பளம்போன்ற விரிப்பு ஏதேனும் விரிக்கப் படும். அவ்வளவு படித்தவர்க்கு இந்தச் சிறுமதிப்பை ஏனும் கொடுக்காவிட்டால், ரிஷியின் ஞானமெல்லாம் அம்பலமாக்கி விடு வாரல்லவா? இப்படி எல்லாம் அவர்க்கு மதிப்புக் கொடுத்து வைத்திருந்தும், அவர் அதிகமாகப் பிற்காலத்தில் ஏமாறவில்லை. சர்வாதிகாரியின் கொடுமைக்குக் கும்பிடு போட்டவர்களில் இவரும் ஒருவர்.

முகவைக்கண்ணமுருகனார் மகா சாந்தசீலர். தமிழறிஞர். பகவானுக்கு யாப்பிலக்கணத்தில் சிறிது அறிவுண்டாக்கியவர். இப் போது பணம் சம்பாதிப்பதற்கேதுவாய் இருக்கும் பல உபதேச நூல்கள், பகவான் பேரால் வெளிவரத் தூண்டுகோலாகவும், சகாய மாகவும் இருந்தவர். இவரும் சர்வாதிகாரியின் கொடுங்கோற்கு அஞ்சி வெளியே இருந்து காலந்தள்ளுகிறார். இவர் பாடிய ரமண சந்நிதி முறைக்குச் சர்வாதிகாரித்வம் தம்பிக்குக் கொடுக்காமையால் தாட்சணியமின்றி துரத்தப்பட்டார். வேண்டா வெறுப்போடு பலநாள் ஆஸ்ரமத்தில் கல்லைக் கழுவியும் இவர்தம் வயிறு கழுவிப் பார்த்தார். இனி ஆசிரம வாழ்க்கை அசாத்யமெனக் கண்டு,

"உள்ளதும் போயிற்று நொள்ளைக் கண்ணு" என்று ஊர்க்குள் வந்து பிச்சை எடுத்தும் மாவு கரைத்துக் குடித்தும் வைராக்கி யாதி சாதனங்களோடு கஷ்டப்பட்டு கவுரவமாய்க் காலம் போக்கு கிறார்.

நடேச முதலியார் பகவானிடம் கனவில் உபதேசம் பெற்று நடனானந்த ஸ்வாமிகள் ஆனார். வீடும், வேலையும், நல் அறிவும் விட்டார். சாமியைப் புகழ்ந்து இல்லாத தோத்திரங்களெல்லாம் இனிக்க இனிக்கப் பாடினார். கண்மூடி கடுந்தவம் எல்லாம் செய் தார். பகவானை அடைந்தும் ரிஷியைத் துதித்தும் பயனில்லை. "எல்லாப் பயனும் தம்பிக்குத்தான் உண்டு. என்னைக் குறித்து இல்லாத சொன்ன உனக்கு ஏதும் இல்லை" எனக் கனவில் ரிஷி கை விரித்து விட்டாரோ என்னவோ? நடனாநந்த சுவாமி மீண் டும நடேசமுதலியாராயிற்று. 'பழைய குருடி கதவைத்திறடி' என்று இல்லறத்திற்குத் திரும்பிவிட்டார். நல்லறிவும் பெற்றார். பழைய கறுப்பனை கறுப்பன் என்ற வீட்டோடு போய்ப் பழைய வேலையைத் தொடங்கிச் சுகம் பெற்றுவிட்டார்.

நரசிம்ம ஸ்வாமிகளை (B. V. நரசிம்ம அய்யர் சேலம்)ப் பற்றிச் சொல்லவே வேண்டாம். ரிஷியின் ஆங்கில சரித ஆசிரியர்; அறி வாளி; உண்மையாளர்; பழைய தேசபக்தர். இவர் எழுதிய சரி தமே பண வருவாய்க்குக் காரணமாய் ரிஷியைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டது. இவர் முதல் பதிப்பில் ரிஷியைக் கேட்டு எழுதிய சில உண்மைகள், தம்பி சர்வாதிகாரியின் பிற்கால கௌர வத்திற்குக் குறைவை உண்டாக்கின. பின் பதிப்பில் அவற்றைத் திருத்தவும், இல்லாத பொய்யை மேலும் கூட்டவும், முன் எழுதிய பல உண்மைகளை எடுத்து விடவும் சர்வாதிகாரி கட்டளை இட்டார். அக்கட்டளையைச் சிரமேற் கொள்ள முடியாமையாலும், தான் முத லில் ரிஷியை ஏமாந்து நம்பி எழுதிய பெருமைக்குப் பங்கம் வரு மாறு நடந்துகொண்ட தன் முகத்தில் ரிஷி கரிபூசி விட்டாரே என் னும் மனவருத்தத்தாலும் ஆஸ்ரமத்தை விட்டு வெளிக்கிளம்பி விட்டார்.

இவ்வுத்தம குணசீலர்கள் எல்லாம், "தன் தம்பியைக்கூட மற்றவர்களைக் காட்டிலும் தனிச்சிறப்பொன்றை அடைவதற்குரிய உரிமையைக் கொண்டாட அநுமதிக்காதவர்". (He does not allow even his brother to arrogate to himself any right of superiority over others பக். 219 ஆ. ச.) என்று புகழப்பட்ட சுவாமிகள், திடீரென்றுமாறி விவேகம் இன்றி, விட்டுவருவதற்குச் சொத்து, சுதந்திரம், வீடு, வாசல், மனை, மனைவி இன்றி, ஒரு பிள்ளைக்குச் சோறு போடவும் சக்தி இன்றித் தவிக்க விட்டு, உடல் ஒட்டி எலும்பெழுந்து, கஞ்சிக்குத் தாளம் போட்டுக்கொண்டு, பக்தர்கள் தயவால் அண்ணன் — ரிஷியிடம் வந்து ஆஸ்ரமத்தில் ஒட்டி வயிறு கழுவிய அற்பன் — கர்கண்டு கள்வன் — இரக்கமற்ற வன்னெஞ்சன் — காசை கண்டறியாக் கயவன் — லோபியான தம்பிக்கு ஊர்சொத்தில் உரிமைகொடுத்த விஷயம் சிறிதும் பிடிக்காமல், "ஈனக்கனவு கண்டால் எவரோடு சொல்வதென்று" வெளியேறி விட்டார்கள். உத்தமர்கள் சர்வாதிகாரியின் கொடுமையால் திண்டாடப்படுவதையும், சுபாலக்கூட்டமும், வகை வகையான இளமங்கையரும் சர்வாதிகாரியோடு கூடிக்கொண்டு கொண்டாட்டமிடுவதையும் சுவாமிகளிடம் எவரேனும் எடுத்துச் சொன்னால், தம்பியின் யோக்யதை தெரிந்திருந்தும் தெரியாதவர்போல், ரிஷி "எனக்கென்ன அதிகாரம் இருக்கிறது? ஏதோ கொடுத்ததை உண்டு காலங் கழிப்பவன். நான் யாரையும் வாசசொல்வதுமில்லை போகச் சொல்வதும் இல்லை. அவரவரிஷ்டம்" என்று தம்பியின் குறும்புச் செயலுக்கு எரு விடுகிறார். ஏன் சாமி! விசாரணையில் "என் உத்தரவுமேல் தான் யாரும் ஆசிரமத்துக்கு வருவதும், போவதும், தங்குவதும்" என்று கூறினீர்களே என்று எந்த அறிவாளியேனும் கேட்டுவிட்டால், ரிஷிக்குக் கையாலாகாத அசட்டுக் கோபம் பொங்கி வழியும். "கழுதை, நாய் வந்து ஒரு கும்பிடு போட்டுவிட்டாலும் அவை சொன்னபடி ஆடவேண்டும்" என்று கௌரவம்போல் கண்ணீரும் கம்பலையுங் காட்டிக்கூறிவிடுவர் ரிஷி. இத்தம்பியால் அடிபட்டவர் எத்தனை பேர்? உதைபட்டவர் எத்

தனை பேர்? வசவு வாங்கியவர் எத்தனை பேர்? இத்தம்பியின் கொடுமையை அடக்க ரிஷிபோட்ட கும்பிடுகள் எத்தனை. கொடுமைக்கு அஞ்சிப் பிறர்போடும் கும்பிடுகள எத்தனை. மனவெறுப் போடு வழியற்ற மற்றும் பலர்போடும் கூழைக் கும்பிடுகள் எத்தனை? இரத்தப்பாசத்தால் ரிஷியும் தன் தம்பிக்கு எல்லா விவேகிகளும் அடங்கி ஒடுங்கி வழிபடவேண்டும் என்று கூறுகிறார் உதைத்த காலுக்கு முத்தம் கொடுப்பதுபோல் சர்வாதிகாரிக்கு இச்சகம் பேசி வயிறு வளர்க்கும் வழி அற்றவர்களும், சுயநலக் கூட்டத்தார்களும், வாழ்க்கையில் தோல்வியுற்ற வழிப்போக்கர்களுமே ஆசிரமத்தில் இப்போது பக்தரென்று கூட்டம் போட்டுக்கொண்டு, கொள்ளை கொண்டு வருகிறார்கள். அன்றி, உண்மையான விவேகிக்கோ, சாந்தர்களுக்கோ, துறவிகளுக்கோ ஆசிரமத்தில் சிறிதும் இடமே இல்லை.

ஆ:—பெரும் பொருட்செலவில் செய்துமுடித்த ரிஷியின் உருவச்சிலை எங்கும் ஸ்தாபிதம் செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அதனால் சுவாமிகள் புகழ் குறைந்துவிடுமா?

அ:—புகழ் குறையாது. ஆனால் வரும்படி குறையும் என்று ஆசிரமத்தார் கருதி விட்டார்கள். எப்படி என்றால், ஏமாந்து மூட நம்பிக்கையால் அவ்வுருவம் செய்த பெருமாள்சாமி, அதைப்பலரும் தொட்டு வணங்கும் முறையில் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார். சர்வாதிகாரியும், சாமியும் அது தங்களிடம் கொடுக்கப்பட்டுச் சுயநலக்கூட்டத்தார் ஆதிக்கத்திலேயே இருக்குமென்று எதிர்பார்த்தார்கள். அது முடியாது என்று கண்டவுடன் மாறி ஆடத்தொடங்கினர். விக்ரகத்தை ஆசிரமத்தில் வைக்கக் கூடாதென்று தடுத்தார்கள். பின்னர் பெருமாள்சாமி அதைத் தான் கட்டிய பழைய ரமணாசிரமத்தில் கனம் மந்திரி முனுசாமி நாயுடு வைக்கொண்டு திறந்து வைக்க முயன்றார். அதற்கும் ஆசிரமத்தாரால் தடை ஏற்பட்டது. பின் பெருமாள்சாமி விக்ரகத்தை வடக்கு வீதியில் வைத்து விடலாமென ஓர் இடம் வாங்கினார். அதற்கும் இடையூறுகள் ஏற்பட்டன. கடைசியில் ஆசிரமத்துக்கு

எதிரில் ஓர் இடத்தை வாங்க உத்தேசித்தார். அவ்விடத்தையும் சர்வாதிகாரி வாங்கித் தன் வசப்படுத்திவிட்டார். இந்நிலையில் பெருமாள்சாமி வேறு வழி இன்றிச் செய்த சிலையை எப்படியும் ஸ்தாபிதப்படுத்தவேண்டுமே என்று அதற்காக ஆசிரமத்துக்குச் சேர்ந்தாற் போலுள்ள பாவாஜி மடத்துநிலம் ஒன்றை குத்தகைக்கு வாங்கினார். அதிலும் ரிஷியின் சிலை வைக்கக் கூடாமல் ரமணாசிரமத்தார் தடுத்தனர். அதற்குச் சிலை செய்ய அநுமதித்த ரிஷியும் வெளிப்படையாகத் துணை நின்றார். அதன்மேல் தான் ரிஷியின் பொய்மை வெளியாக்கவும், தம்பிக்குக் கொடுத்த அதிகாரத்தை வெளியாக்கிக் கண்டிக்கவும் பெருமாள்சாமி வழக்குத் தொடுக்க நேர்ந்தது.

ஆ:—எப்படி இருந்தாலும் தன்னை ஆட்கொண்ட குருவை வழக்குக்கிழுக்கலாமா? நீ என்ன சொன்னாலும் சரி. இது ஒழுங்கே அல்ல.

அ:—அடடா! குரு அநியாயக்காரர்களோடு கூடி ஒழுங்கீனங்களைச் செய்தால், அதற்கு உடன்பட்டு இருந்து அவரை மேலும் குற்றத்திற் காளாக்கிக் கெடுக்க வேண்டுமென்பது உன் வாதமா? அநீதிக்காரர்களோடு கூடிய குரு துரோணரை சீடன் அருச்சுனன் எதிர்க்கவில்லையா? அதைக் கண்ணனும் அநுமதித்திருக்கிறாரே. அதனால் எழுந்த நூலல்லவா பலரும் போற்றும் கீதை. மேலும் 'தர்மத்தில் மாறுபடாததே குரு பணிவிடை' (அறத்தில் திரியாப் படாச்சி வழிபாடே)என்று நூலும் கூறுகிறதே. ஆத்ம புராணம் 'கிரமந் தவறிய குருவைத் திருத்த சீடனுக்கு உரிமை உண்டு' என முழங்குகிறதே. நீ தான் படித்தவன் என்ற தலைகிறுக்கா? கொழுப்பா? நானும் கொஞ்சம் கேட்டிருக்கிறேன் ஐயா. இதெல்லாம் குரு சீடன் என்ற முறைவரும்போது. ஆனால் ரிஷி "தான் குருவுமல்ல எனக்குச் சீடரும் இல்லை" என்னும் போது அடியோடு அடிபட்டுப்போகும். அந்த வீண்வாதமெல்லாம் நமக்கெதற்கு? ரிஷியின் மோசக் கருத்துக்களை வெளிக்குக் கொண்டுவந்த அந்த வழக்கை நாம் மனமார வாயார வாழ்த்தி வரங்

கொடுக்க வேண்டும். எவன் எப்படிப்போனால் நமக்கென்ன? "எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்." என்றிருக்கும் மோசக் காரர் வலையில் வீழாமல் ஜாக்ரதையாக இருக்க வேண்டுவதல்லவா நம் கடமை?

ஆ:—என்ன பிரமாதமாக மோசம் செய்து விட்டார். ரிஷி யைக் கேட்டாலல்லவா தன் நியாயத்தை எடுத்துக் கூறுவார்?

அ:—கேட்பதா? ரிஷி அறிவாளிகளைக் கண்டால் பேசாமல் மௌனம் சாதித்துத் தன் ஞானத்தை நிலை நிறுத்திக் கொள்வார். அப்போது அவர் மௌனத்திற்குப் பலப்பல விந்தையான வியாக் யானங்கள் கூறப்படும். படித்து ஏமாந்த கூட்டங்களிடந்தான் சாமிக்குப் பேச்சு கிளம்பும். பெண்களுக்கு உபதேசம் செய்வதாய் இருந்தாலும் ரிஷிக்குப் பெருமகிழ்ச்சி. அவரிடம் உண்மை அறி வாளி ஒருதரம் சென்றால் மறுமுறை செல்வதற்கே மனம் எழாது. பின் செல்வதெப்படி? சென்று கேட்டாலும் பதில் பெறுவதெப்படி. போனதும் ரிஷி ஒளியாய்த் தோன்றினார். தட்சிணாமூர்த்தமாய்த்தோன்றினார். இது மனமயக்கமல்ல. உண்மை, என்று புளுகியோ, மயங்கியோ கூறும் பித்தரிடமும் ஏமாந்து பணம் கொடுக்கும் பைத்தியங்களிடமுந்தான் அவர்க்குப் பேச்சும் மூச்சும். பிறரிடம் கப்சிப். இந்த லட்சணத்தில் ரிஷியைக் கேட்பதாம். கேட் கவேண்டுமானால் துணியைக் கிழித்துப் பால் பிரண்டனைப்போல் கண்ணில் கட்டிக்கொண்டு இதோ இருக்கிறார் ரிஷி அதோ இருக் கிறார் பகவான், ஆஹா! ஊஊ ஹீ! தெரிகிறது! தெரிகிறது! என்று பிதற்றிக்கொண்டு போகவேண்டும். அல்லது பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு போகவேண்டும். இந்நிலையில் அவர் வாக்கு மூலத்தைக் கொண்டே எல்லா நியாயத்தையும் அறியவேண்டி இருக்கிறது. இது நிற்க, தாயைச் சமாதிவைத்த நிலம் இருக்கிறதே அது ரிஷியைப் பிடித்த ஒரு சனியன். அதன் விந்தையைக் கூறு கிறேன் கேள். அந்த நிலம் சிக்கிய குரு நானக் படா அகாடா உதாசி மடத்தார் ஆதீனத்தில் இருக்கிறது. அந்த இடத்தில் சமாதிவைத்த 15 அடி சதுரம் மாத்திரம் பாவாஜி இடமிருந்து வர்த்தமானக்

கடிதம்மூலம் பெருமாள் சாமி தன்பேருக்கு சமுத்திரம் மணியக் காரர், ஆற்காடு சம்பந்த முதலியார், ரத்ன முதலியார் அறியப் பெற் றுக்கொண்டும் வந்திருக்கின்றனர். நாளடைவில் ரமணாசிரமத்தார் அவ்விடத்தை மேன்மேல் ஆக்ரமித்தபோது உதாசிமடத்தார், தடுத்து, 15 அடிக்குமேல் பிரவேசிக்கக்கூடாதெனவும் கூறிப்போ யிருக்கின்றனர். பிறர்க்குரிய தர்மசொத்து என்பதை அப்போதே அறிந்துவைத்தும், ஆசிரமத்தார் அதனை எப்படியேனும் அபகரித்து விடவேதெனத்துணிந்தனர். அதன்பொருட்டுக் குயுக்திக்காரர் சொல் லுக்கு உட்பட்டு சொந்தக்கார பாவாஜி ஊரிலில்லாமல் ஹரித்வார மேளாவுக்குச் சென்றிருந்தபோது, மடத்துசொத்துக்கள் சென்னை தர்மபரிபாலன போர்டார் வசம் வரும்படியாகச் சூழ்ச்சிகள் செய் யப்பட்டன. அதன்படி சொத்தும் போர்டின் வசப்பட்டுவிட்டன. போர்ட் தலைவர் ஆசிரமத்துக்கு வேண்டியவர். அவர் சகாயத்தால் சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பது ஆசிரமத்தார் உள் எண் ணம். இவ்வெண்ணத்தால் ஆசிரமக் காரியதரிசி சமாதி வைக்கப் பட்ட இடம் முழுதும் கிரயத்துக்குத் தருமபடி போர்டுக்கு விண் ணப்பமும் செய்துகொண்டார். இதற்குள் ஹரித்வாரம் சென் றிருந்த சிக்பாவாஜி, வந்துவிட்டார். பாவம்! வந்ததும் போர்டார் தலையிட்டதை ஆட்சேபித்து மனுப்போட்டார். அதன்மேல் ஆசிர மத்தார் மோசடிக்குச் சகாயமாகத் தெரிந்தோ, தெரியாமலோ போர்டார் ரமணாசிரமத்தைச் சேர்ந்த இடம் தவிர மற்ற சொத்துக் களை சிக்பாவாஜியிடம் ஒப்பித்து விடும்படி கமிஷனருக்கு உத்தர விட்டனர். பாவாஜி சொத்துக்களை ஒப்புக்கொள்ள திருவண்ணா மலை வந்தபோது, ஆனரரி அஸிஸ்டண்ட் கமிஷனர், ரமணாசிரமத் துக்கு இடத்தை எழுதிக்கொடுத்த பின்னர்தான், மற்ற சொத்துக் களை ஒப்புக்கொடுப்பேன் என்றார். இது கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையார்க்கு உடைப்பதுபோல் இருக்கிறது. எங்கள் தர்ம சொத்தை அப்படி எழுதிக்கொடுக்கமாட்டேன் என்று சிக்பாவாஜி கூறிவிட்டார். போர்டுக்கும் கமிஷனர்க்கும் சமாசாரப் போக்கு வரவால்தாமதம் ஏற்பட்ட இடைக்காலத்தில், போலீஸ் அதிகாரிகள்

ரமணாசிரமத்தார் தூண்டுதலின்மேல் பாவாஜியுடன் வந்த சாதுக்களில் சிலரைப்பிடித்துப் போலீஸ்டேஷன் பந்தோபஸ்தில் அடைத்துத் துன்புறுத்திப் பயங்காட்டினர். ஊரறிய நாடறியஇத்துரோகம்—ரமணாசிரமத்தார் பேராசை—ரிஷியின் வஞ்சக எண்ணம்—வெளிப்பட்டுச் சந்திசிரித்து அபதிற்கிடமான நிலையில் வந்தபின், சொத்து பூராவும் பாவாஜியிடம் ஒப்புக்கொடுக்கும்படி உத்தரவு வந்தது. அவ்வாறே பாவாஜிக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அந்நிய தர்மஸ்சாக்ஷை அநீதியாக இவ்வளவு துன்பங்கட்குட்படுத்தி அபகரிக்கவிடத் துணிந்த ஆசிரமத்தார் சமயத்தில கொலைக்குத்தான் அஞ்சுவார்களா? யோசித்துப்பார். அனால் பாவாஜி தயாவிஷயமாகப் பொதுவில் சந்யாசி என்னும் கௌரவத்தை உத்தேசித்து, கட்டிவிட்ட சமாதி மேடாக மற்ற இடங்களில் உத்தரவில்லாமல் கட்டடங்களோ மற்ற காரியங்களோ செய்யக்கூடாதென ரோடீஸ் கொடுத்திருக்கிறார். இதுவன்றோ சந்யாசத்துக்கு அழகு! இவ்வளவு நடந்த பின்னும் விட்டாரா ரிஷி? அந்த இடம் எப்படி ஆதியில் சீக்பாவாஜிக்குக் கிடைத்ததென்று ஆராயத்தொடங்கினர். பூர்வோத்திரத்தை அறியப் பழைய ரிகார்டுகளையும், சட்டங்களையும் புரட்டினர். அவ்வாராய்ச்சியில் உலகவிஷயமே அறியாத ரிஷிக்கு அந்த இடம் இந்து சாதனை பாவாஜி மடத்தைச் சேர்ந்ததெனத் தெரிந்தது. இதனால் சீக்பாவாஜியின் பாத்யதையை மறந்து, சந்ததியற்றுப்போன பூர்வீக இந்து பாவாஜியின் பாத்யதையை எடுத்துக்கூறி, அநுபவ பாத்யதையால் சமாதி வைத்த இடத்தை அபகரித்து விடுவது முடியுமானால் மடத்து சொத்துக்கள் முழுமையும் கைப்பற்றி விடுவது என்று பகல் கனவு கண்டு கொண்டிருந்தார் ரிஷி. எப்படி இக்கருத்தை நிறைவேற்றுவதெனச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தபோதுதான் அந்த இடத்தைக் குத்தகைக்கு வாங்கிய பெருமாள் சாமியால் வழக்கும் ஆரம்பிக்கப் பட்டுவிட்டது. இதுதான் சமயம் என்று ரிஷியும் தன் நிஜஸ்வரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார். இதற்குத் துணையாகத் தம்பியையும் சேர்த்துக்கொண்டார். ரிஷியும்தம்பியும் தங்கள் ரிட்டன்

ஸ்டேட்மெண்டில் சீக்பாவாஜியின் பாத்யதையை மறுத்துக் கீழ்வரு மாறு கூறி இருக்கின்றனர். "நாங்கள் (ரிஷியும் தம்பியும்) பெருமாள் சாமியோ, பாவாஜியோ பாவாஜிமடமோ வழக்கில் கூறப்படும்சொத் துக்குப் பாத்யம் உடையவர்கள் என்பதை மறுக்கிறோம். அவர் கட்கு எக்காலத்திலும் எவ்விதமான உரிமையும் இருந்ததில்லை. வழக்கில் கூறப்படும் நிலம் சுபதர்ம பாவாஜிமடம் எனப்பட்ட இந்து ஸநாதன மடத்தைச் சேர்ந்தது. (சீக்பாவாஜி மடத்தைச் சேர்ந்த தல்ல) அவ் இந்து மடம் சந்ததி அற்றுப்போய்விட்டது. ஆகவே நிலத்தின் உரிமை கேள்வியற்றிருக்கிறது. 1922-நவம்பர் முதல் நிலம் எங்கள் அனுபவத்தில் இருப்பதை அறிந்தும் சீக் பாவாஜி மடத்தார் பாத்யம் கொண்டாடியதில்லை. இதில் சீக் பாவாஜியின் பாத்யம் அறிந்தும் அறியாதவர்போல் மனமறிய ரிஷி பொய் சொல் வதைப் பார்த்தாயா ? ஊர் சொத்தைக் கொள்ளை அடிக்க எவ் வளவு பேராசை. இப்பேராசைப் பேய்கள் தாம்—பொய்யே உரு வெடுத்த பித்தலாட்ட ஜன்மங்கள்தான், ரிஷி என்றும் பகவான் என்றும், பரமஹம்சன் என்றும், சாமி என்றும் பெயர் வைத்துக் கொண்டு குடும்பஸ்தர்களைக் காட்டிலும் கேவலமாகக் கேசுகளை ஜோடனை செய்து கொண்டு மானம் மரியாதை இன்றி உடல் சுமந்து திரிகின்றனை. அவ்வழக்குத் தீர்ப்பில் முனிசிப் ரமணா சிரமத்தார் பொய்யைக் கன்னத்தில் அடித்ததுபோல் கீழ் வருமாறு கூறி மறுத்துவிட்டார். "மேற்கண்ட அத்தாட்சிகளாலும், சீக் மடத்து சொத்து தர்மபரிபாலன போர்டார் வசம் இருந்தபோது ரமணாசிரமத்தாரே விலை பேசி வாங்கத் தலையிட்டிருப்பதாலும் வழக்கில் சம்பந்தப்பட்ட நிலத்தின் பாத்தியம் சீக் பாவாஜி மடத் தைச் சேர்ந்ததென்பது தெளிவாகிறது. அப்போது ஆசிரமம் சார் பாக விலை பேசத் தொடங்கிய கோபால்ராவ் அதிகாரத்தை இப் போது ரமணாசிரமத்தார் மறுத்தபோதும் நான் அவர் அதிகாரத் தில் சந்தேகம் கொள்ளவில்லை." (It is thus clear from the above evidence that title to the suit property rests with the mut at one stage in 1927 when the Ashram people were prepared to

negotiate for the purchase of the suit property from the Religious Endowment Board which was in temporary possession of the Mutt's properties. Even though the Ashram people may now deny the authority of Gopala Rao to send a letter like Exhibit L. I have no doubt that it is a genuine letter. It being a clear acknowledgment of the title of the 2nd plaintiff there can be no question of adverse possession of defndants 1 to 3 in respect of the suit properties.) மேலும் அம்முனிசிப்பே பெருமாள்சாமியைப்பற்றி "முதல்வாதி—பெருமாள்சாமி கெட்டவர் என்று எனக்குப் படவில்லை. அவரே, முதல் பிரதிவாதி—ரிஷியின் பெருமை உயர்வதற்குக் காரணமாயிருந்தவர் எனத் தோன்றுகிறது. (The first plaintiff by himself did not strike me as a bad man It appears that he was responsible for the rise to fame of the first defendant) எனக்கூறி பெருமாள் சாமியின் உயர்நிலையைப் புலப்படுத்தியும் இருக்கிறார்.

பின்னர் இனி தங்கள் ஜம்பம் பலிக்காதெனக் கண்ட ஆசிரமத்தார் பாவாஜியைச் சொல்லச்சகாத பல இழிந்த முறைகளால் வசப்படுத்தி, ஜட்ஜ் கிருஷ்ணமாச்சாரியாரை முன்னிட்டுச் சமாதானம் செய்துகொண்டு, ரிகார்டு பலமாய் இருந்தும், பொய் சாட்சிகளால் வழக்குத் தள்ளுபடியாகும்படி செய்தனர். இந்த நில விஷயமாக இவர்கள் கையாண்ட ஆபாசமுறைகள் அப்பப்ப! சொல்லத்தரமல்ல. கை எழுத்தில்லாமல் அதிகாரப் பத்திரம் எழுதிக்கொண்டு மோசமான முறையில் ரிஜிஸ்டர் செய்துகொண்ட இந்த யோக்யர்கள், குத்தகை பத்திரத்தின் ரிஜிஸ்ட்ரேஷன் மோசகரமானதென்று கூறவும் நாணமின்றி முன்வந்து விட்டனர். அவ்வழக்கு இன்னும் ஐகோர்ட் அப்பீலில் இருக்கிறது.

ஆ:—அடடா! இவ்வளவு மோசமா! பொய்யா! பித்தலாட்டமா! வேறொரு சந்யாசிக்குரிய தர்மசொத்தை இப்படியா அப

கரிக்கத் துணிந்தனர்! அதன்பொருட்டுச் சாதுக்களைப் போலீஸ் காவலில் வைத்துத் துன்புறுத்தக் காரணமாயிருந்தனர்! இந்தப் பாவம் பொல்லாது. சும்மாவிடாது. ரிஷியாயிருந்தாலும் முனியா யிருந்தாலும் ஒரு ஆட்டு ஆட்டிவிட்டுத்தான் போகும்.

அ:—போ! போ! இவ எதிர்ப்பெல்லாம், 'பாறையில் அடிக்கும் மா முளைக்குச் சமம்' என்றல்லவா ரிஷி தலை நிமிர்ந்து கூறித்திரிகிறாராம். பொறுத்துப் பார்ப்போம். இரும்புப்பாறைக்கு நெக்குவிடாத கருங்கற் பெரும்பாறைகள் எல்லாம் சிறு செடியின் வேருக்கு நெக்குவிட்டுப்பிளந்து வாயைத்திறந்துகொள்வதில்லையா? இம்மமதை எல்லாம் அடங்கிச சோற்றுக்கு ஏங்கும் காலம் தூரத்தில் இல்லை. ரிஷி துணிவாகச்செய்த அக்ரமம் இது மட்டுமா? அரசாங்கத்தை விட்டாரகளா? முனிசிபாலிட்டியை விட்டார்களா? கவர்னர்களை விட்டார்களா? எல்லார் தலையிலும் கை வைத்துவிட்டார்கள். நெடுநாம மிட்டார்கள். ஒரு அந்நியன் நிலவிஷயத்தில் இப்படி என்றால், ஓர் அரசாங்க நிலத்தை எப்படி ஏமாற்றி அநுபவிக்கின்றனர் பார். ஓர் அரசாங்க புறம்போக்கு நிலத்தின்பொருட்டு ரமணாசிரமத்தார் தற்காஸ்து விண்ணப்பம் போட்டனர். அதில் "கோயிலுக்கும், ஆசிரமத்துச் சீடர்களுக்கும் பிறருக்கும், ரிஷியைக் காணவரும் ஜனங்களின் உபயோகத்திற்கும் சௌகரியமாயிருக்க நிலத்தை அடமானம் செய்யவேண்டும்" எனக் குறிப்பிட்டுக் கேட்டுக்கொண்டனர். அவ்விண்ணப்பத்தின் மேல் கர்ணம், மணியம் ஆகியவர்கள் "தற்காலம் ஆசிரமம் டிரஸ்டி நிரஞ்சனானந்தசாமி பேரில் அடமானம் செய்யலாம். வெகு ஜனங்களுடைய திரவியங்களைக் கொண்டு மேல்படி வேலை செய்திருப்பதால் நிலத்தை விற்க வாங்க விண்ணப்பதாருக்குக் கண்டிஷன் பேரில் பட்டா செய்யலாம்" என எழுதி மேலுக்கு அனுப்பினர். அதை அநுமதித்து, "மேல்படி 3 நிலங்களையும் திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்துக்காக ஆஸ்ரமக் காரியதரிசி நிரஞ்சனானந்த சாமி பேரில் அடமானம் செய்யப்பட்டிருக்கிறது," என்ற தாசில்தார் உத்தரவின்படி நிலம் அடமானம் செய்யப்பட்டுள்ளது. இதைப்

பார்த்த உடனே எவரும் பொதுஜன தர்மசொத்து என்றும், நிரஞ்சனனந்தசாமி டிரஸ்டி—காரியதரிசிபேரில் அடமானம் செய்யப்பட்டது என்றும் சந்தேகமின்றிக் கூறிவிடுவான். ஆனல் மகரிஷிகளோ "பொது சொத்து என்று சட்டப்படி கருதக்கூடுமாயினும், அது தனக்கே உரிய தனிச்சொத்து என்றும், அது தன்னுடைய சொந்தத்திற்கு அடமானம் செய்யப்பட்டது என்றும் கூறுவதோடல்லாமல், "ரமணுசிரமம் என்பது என்பேர். அச்சொல் தனிப்பட்ட என்னைக் குறிக்கும்" என வழக்கில் வாதாடுகிருர். ஆசிரமம்-சங்கம் போன்ற சொல் ஒரு தனி மனிதனைக் குறிக்கும் என்னும் விந்தையை, எங்கேயாவது கேட்டிருக்கிருயா? ரமணுசிரம அற்புதங்களுள் இதுவும் ஒன்று. தற்காஸ்து விண்ணப்பத்திலும் பாவாஜி இடத்தை மோசம் செய்வதற்காக அவ்விடத்தின் ஒரு பாகத்தையும் புறம்போக்கோடு சேர்த்து 5 ஏக்கர் எனக் கணக்குக் காட்டி அவ்வைந்து ஏக்கர் நிலத்தை அடமானம் செய்யவேண்டுமென்று கோரினர். அதிர்ஷ்டவசமாக கவர்மெண்டார் ஏமாருமல் பாவாஜி நிலத்தை நீக்கி $3\frac{1}{2}$ ஏக்கர் நிலம் மட்டும் அடமானம் செய்தனர். இந்த மோசம் எப்படி? இப்படியே முனிசிபாலிட்டியையும் ஏமாற்றி விட்டனர். எப்படி என்ருல் ரமணுசிரமம் பொது சொத்து ஆகையால் அதற்கு முனிசிபாலிட்டியார் வரி வாங்குவது இல்லை. இதை நன்கு அறிந்தும் ரிஷி "இந்த ரமணுசிரமத்துக்கு முனிசிபல் வரி போட்டிருக்கிருர்களோ என்னமோ தெரியாது. கணக்குப் புத்தகத்தில் வரி கொடுத்த தொகை குறிப்பிடப்பட்டிருக்கக் கண்டதில்லை. 2வது பிரதிவாதி—தம்பி—வரி விதிக்கப்படவில்லை என்று என்னிடம் ஒருவேளை சொல்லி இருக்கக்கூடும்" என்று குறுக்கு விசாரணையில் முன்னுக்குப்பின் புரட்டிப்பேசினர். அதன் பயனுய், பொது சொத்தென்று வரியைத் தள்ளிய முனிசிபாலிடியைக் குறித்துத் தீர்ப்பில் கூறி இருப்பதாவது—"முனிசிபாலிடியார் வரி தள்ளியதற்குக் காரணம் யாதெனத் தெரிவிக்கப்படவில்லை. சத்திரம் போன்றதென்று ஒப்புக்கொண்டாலும், ரமணுசிரமம் தர்ம சொத்தா அல்லவா என்னும் விஷயத்தில் முனிசி

பாலிடி கொள்ளும் அபிப்ராயம், முதல் பிரதிவாதியை—ரிஷியை கட்டுப்படுத்தாது." "No point again can be made of the non-levy of the Municipal tax, though item 2 is within Municipal area. The opinion of the Municipality cannot bind 1st defendant on the ground whether it is a religious or charitable trust or not and even if it is accepted as anologous to a choultry." பொதுஜனங்களின் சார்பான முனிசிபல் சபையின் அபிப்ராயத்திற்கு இப்படி அலட்சியம் ஏற்படும்படி புரட்டிப் பேசிய இவர்கள் பொதுவான நீர்க்குழாயைத் தங்கள் ஆசிரமத்துக்குக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு அநுபவிப்பதற்குக் காரணம் என்ன கூறினர்? இப்போது என்ன கூறுவர்? ரமணாச்ரமம் பொது இடம் என்பதல்லவா? குழாயை அநுமதித்ததால் முனிசிபாலிடியும் ஆசிரமத்தைப் பொது இடம் எனக் கருதிற்று—நம்பிற்று என்பது வெளிப்படவில்லையா? அவர்கள் எதுவாயினும் புளுகட்டும். நம்பிக்கையைக்கெடுத்த ஆசிரமத்துக்கு முனிசிபாலிடி என்ன பதில் சொல்லப்போகிறதோ? யாது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமோ? தெரியவில்லை. தன்னைப்பற்றி ரமணாச்ரமத்தார் கருதும் அலட்சியத்தை மேலும் ஸ்திரப்படுத்துமா? அன்றி பொது ஜனங்கட்குரிய நீரை மேலும் துர்வினியோகப் படுத்துமா? நிறுத்துமா? அல்லது ரிஷியின் செயலைக் கண்டிக்கத்தக்க வேறு நடவடிக்கைகளை எடுக்குமா? பொறுத்துப் பார்ப்போம். இப்படி ஆசிரமத்தார் முனிசிபாலிடிக்குச் செய்த மோசத்தைப் பொதுஜனங்களும் அறியாமல் கண்மூடி இருக்கின்றனர். மேலும் பழைய ரமணாச்ரமம் சம்பந்தமாக யோசிப்பதற்கு 29—12—31ல் திருவாளர்கள் M. B. ரங்கசாமி செட்டியார் M.L.C., M. ஷண்முக முதலியார் முனிசிபல் சேர்மென், V. K. சேதுராமஅய்யர் வக்கீல், N. அண்ணாமலைப்பிள்ளை முனிசிபல் கௌன்சிலர் & M. L. A., T. S. ராமநாத சாஸ்திரி, V. V. S. கதிர்வேலுப்பிள்ளை பாங்கர் & மு. கௌன்சிலர், ரா. அருணகிரி முதலியார், T. S. முத்துக்குமாரசாமி முதலியார் பாங்கர் & சேர்மன், K. கோபால்சாமி முதலியார் B.A. B.L. வக்கீல்

முதலிய ஊர்ப்பிரமுகர்கள் கை எழுத்திட்டு ஓர் கூட்டம் கூட்டிய தேன்? ரிஷி இப்போது கூறுவதுபோல் அது தனிச்சொத்தானல் ஏன் அப்போது தக்க நடவடிக்கை எடுக்கவில்லை? அது ரமணு சிரமத்துக்குத் தெரியாதென்று கூறுவார்களோ? ஆம் உலகையே மறந்தவரல்லவா ரிஷி.ஆசிரமம் பொது சொத்து அல்லவானல், ரம ணுசிரமக் கணக்குகளை திரு. ராவ்சாகிப் சேஷாசல ஐயர் போன்ற வர்களால் ஆடிட் செய்து பொது மக்கட்கு அறிவிப்பானேன். சீடர் உரிமையில் மண்போடத்தான்—ரிஷி, சந்யாசி அல்ல என்று கூறி அத்யாஸ்ரமி ஆய்விட்டார். இதற்கெல்லாம் என் செய்வார் பாவம்!

இன்னென்று கேள். ரமணுசிரமத்தார், ரிஷி சிவில் கோர்ட் டில் ஆஜராகாமல் இருப்பதற்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்று முதலில் மாட்சிமை தங்கிய கவர்னரை வேண்டினர்கள். அப்போ திருந்த கவர்னர் 27—6—35ல “சிவில் கோர்ட்டில் நேராக ஆஜ ராவதை விலக்கக் கூடாமைபற்றி கவர்மெண்ட் வருந்துகிறது” எனக்கூறி ரிஷிக்கு அநுமதி தரவில்லை. ஆனல் அக்கவர்னர் மாறி மற்றொரு ஆக்டிங் கவர்னர் வந்தபோது பலவகையாகச் சூழ்ச்சி செய்து முந்திய கவர்னர் பெருமான் அநுமதிக்க முடியாதென்று கூறி ஒரு வருஷம் கழியும் முன்னரே 10—6—36ல பிந்திய கவர் னர் பெருமானல், ரிஷி சிவில் கோர்ட்டில் ஆஜர் ஆகாமல் இருக்க அநுமதி பெற்றுவிட்டனர். பிந்திய கவர்னர் முன்னைய கவர்னர் உத்தரவைப் பார்த்துக் கவனித்துச் சரியான உத்தரவு பிறப்பிக்க முடியாதபடி சூழ்ச்சிகளும் கையாளப்பட்டனபோலும். இதிலிருந்து ரமணுசிரமத்தாருக்கு வேண்டிய கையாட்கள் எங்கெங்கு எவ்வெவ் விதமாய்த் திறம்படத் தங்கள் சுயநலப்புரட்டு வேலையை முடிக் கின்றனர் என்பது விளங்கவில்லையா? வெளிநாட்டு ஆங்கில கவர்னரும் கூட உண்மையான மஹானைக் கோர்ட்டுக்கு இழுக்க வேண்டிய அவசியம் ஏற்படாதென்றும், அப்படி ஏற்பட்டால் அது அம்மஹானுக்குக் கேவலம் என்றும் அபிப்பிராயப்படுகிறர். ஆனல் நமது ரிஷிகளோ, அந்த அறிவுகூட இல்லாமல், பல வம்பு தும்பு வழக்குகளுக்கு இடம் கொடுத்துக்கொண்டு வருகிறர்.

ஸ்வாமிகள் வீட்டைவிட்டு வரும்போது ஓர் கடிதம் எழுதி வைத்துவிட்டு வந்தார். அக்கடிதத்தின் முடிவில் எந்தக் காரணத் தாலோ கையெழுத்துப் போடாமல் கடைசியில் கோடு இழுத்திருக் கிறார். அதுபற்றி ரமணகதை எழுதியவர்கள் சரடு திரித்துப் புகழ்ந்திருக்கிறார்கள். கதைக்காரர் ஸ்வாமிகளுக்கு எல்லா அபி மானமும் கரைந்து விட்டதால், அவர், தன்னை முதலில் நான் என்றும், பின் இது என்றும் குறித்தவர், கடைசியில் ஒன்றுமில் லாத கோடுகளால் குறிப்பித்திருக்கிறார் என்பது உண்மை என்றே வைத்துக்கொள்வோம். எல்லா ஆசையும் கரைந்த ஸ்வாமிக்கு இப்போது சுற்றத்தில் ஆசை, சொத்தில் ஆசை, ஜாதியில் ஆசை, தம்பியிடம் ஆசை, எல்லாம் ஏற்பட்டு, தம்பிக்கு அதிகாரப்பத்திரம் கொடுக்கும்போது ஆட்சேபமற்ற முறையில் ஏன் தன் கையெழுத் தைப் போடக்கூடாது என்று கேட்கிறோம். ஸ்வாமிகளோ, அத் தியாஸ்ரமி சொத்துக்களை வைத்திருப்பதும், விற்பதும் குற்றமில்லை என்கிறார். கையெழுத்துப் போடுவதால் மட்டும் வரும் குற்றம் என்ன? இறுத்தாற்போல் குடிப்பது என்பது இதுதானே? இன்னுமா இப்படிப்பட்ட அர்த்தமற்ற காரியங்களால் உலகை ஏமாற்ற எண்ணம்? முன், தன்னை நான் என்றும் பின் இது என்றும் கடைசியில் ஒன்றுமற்ற கோடென்றும் காட்டிக்கொண்டது போய், சத்தியமாம் பரப்ரஹ்ம ஸ்வரூபமே நான் என்று வறட்டுத் தவளைபோல் வாயளவில் விஷயம் அறியாது தலைகொழுத்துக் கத்தித் திரிந்ததுபோய், இப்போது எனக்குப்பேர் ரமணாஸ்ரமம் என்றும், என் கை எழுத்துச் சீல்தான்என்றும் பிதற்றி, என்னை சந்நியாசி என்று உலகம் நினைத்தது முட்டாள்தனம் என்று கூறித் தான் பொய்யன் என்பதையும் வெளிப்படுத்தி விட்டார்.

ரிஷி கை எழுத்துப் போடாததற்குக் காரணம் தெரியா தென்றும், வீட்டைவிட்டு வந்தபின் எதிலும் தன் பெயரைப் போட்டதில்லை என்றும் கூறுகிறார். இதையாவது முன் பின் யோசித்துக்கூறவேண்டாமா? ரமணவிஜயம் 136ஆம் பக்கத்தில் ஸ்வாமிகள் "வேங்கடராமன் திருச்சுழி" என்று எழுதிக்காட்டித்

தான் யார் என்பதைத் தெரிவித்தார் எனக்கூறியிருக்கிறதே. இவற்றுள் உண்மை எது? பித்தலாட்டம் எது? இன்னும் இப்படி இவர் கதையில் வரும் பித்தலாட்டங்கள் எத்தனை? மாறுபாடுகள் எத்தனை?

ஆ:—போதும், போதும். ரிஷிகள் மோசம் இப்படியா? சீ! சீ! இப்புத்தகத்தைப் பிய்த்தெறிகிறேன்.

அ:—வேண்டாம்! வேண்டாம்! பின்னும் கூறுவதையும் கவனித்துவிட்டுப் பிறகு வேண்டுமானால் பிய்த்தேனும் போடு, நெருப்பு வைத்தேனும் கொளுத்து. ரமண விஜயத்தில் பல பக்கங்களில் வரும் சில விஷயங்களைக் குறித்து வரிசையாகச் சொல்லுகிறேன் கவனித்துக்கொண்டு வா.

1. ஞானம் வருவதற்குமுன் இப்படி யாரேனும் கேலி செய்திருந்தால் ரிஷியின் உரத்த கரங்கள் வலுத்த விடை யளித்திருக்கும். இப்போதோ அந்த முரட்டுத்தனம் சென்று சக்தியிருப்பினும் சாந்தம் மேற்கொண்டது (பக். 60.)

ரிஷி தன் தம்பிசெய்த குற்றத்தின் பொருட்டு ஒருசமயம் அவன் காலில்விழுந்து வணங்குகிறாராம். அதனால் ரிஷியின் சீடர் தண்டபாணி ஸ்வாமிகள் தம்பியைக் கோபித்துக் கொண்டபோது அச்சாமியின் முதுகில் பூசைகொடுத்து ரிஷியின் உரத்த கரங்கள் வலுத்த விடையளித்ததாம். சாந்தம், சாந்தம், மஹா சாந்தம். இது முரட்டுத்தனமே அல்ல.

2. புத்தர் அநித்தியத்தை எண்ணி நித்தியத்தைத் தேடப் புறப்பட்டார். ஆனால் பகவானின் ஞானோதயம் அதிசயமானது. அது எடுத்ததும் நித்தியப்பொருளிலேயேஅவரை ஊன்றிவிட்டது. உலகம் அநித்தியம் என்ற உணர்வு அப்போது அவருக்கு இல்லை. (பக். 88)

உலகம் அநித்தியம் என்ற அறிவால் வீட்டைவிட்டுப் புறப்பட்டிருந்தால் இப்போது குருட்டு அதிர்ஷ்டமாக வந்து சேர்ந்த

அநித்தியப் பொருளில் ஆசைவைத்து அடிமையாகமாட்டார். உண்மை உண்மை; முக்காலும் உண்மை.

3. "என் மூட்டை தவறிவிட்டது, ஊர்செல்லப் பணமில்லை' என்று ரிஷிகள் ஒருசமயம் பொய் சொன்னாராம். அதை நன்மை பயக்கும் உண்மை என்கிறார் கதைக்காரர். (பக். 98)

இப்போது "சந்நியாசி அல்ல" என்று கூறும் ரிஷியின் பொய்யெல்லாம் தம்பிக்கு நன்மை பயக்கும் உண்மையென்பாரோ?

4. ரிஷியின் சன்னிதியில் பிள்ளைபேற்றிற்காகச் சிலர் அருள் வேண்டுவர். (பக். 135)

மெய். மெய். இவ்வருள் இப்போது சென்றால் கட்டாயம் கிடைக்கும்.

5. "வானம் துளங்கிலென் மண்கம்பமாகிலென்" "வட கோடு உயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கு?" ஆத்மஸ்வரூப நிஸ்சல சமாதிஸ்தன் எதையும் கருதான் எதையும் எண்ணான். என்பதே ரிஷியின் நிலை. (பக். 140).

இது புளியம்பழத்தை முரடர்கள் களவாடியபோது ரிஷி இருந்த நிலை. அப்படி இருந்திராவிட்டால் உதை கிடைத்திருக்கும். இப்போது சிலர் தப்பு பாத்தியதை கொண்டாடுவதால் அந்நிலை தவறி ஊர்சொத்தைத் தம்பிக்கு ஒப்பித்து அதிகாரம் கொடுத்திருக்கிறேன் என்கிறார் ரிஷி.

6. ரிஷிக்கு அன்னையில்லை, அப்பனில்லை, யாதுறவும் இல்லையே. (பக். 144).

பகவான் மனத்தில் தாய், தம்பி, சுற்றம் என்ற உணர்வு சிறிதும் உண்டோ. பற்றற்றவாழ்வின் பண்பை ரிஷி தமது உதாரணத்தாலேயே காட்டினார். (பக். 307). கற்கண்டு பொட்டலத்தைக் கூடத் தம்பி எடுக்கமுடியாமல் செய்தார். நமது கிராமசைப்பெரு

மான் உறவினரின் பாச அபிமானம் சூழாது சிதைத்தார். (பக். 308).

இப்பொழுது தம்பி உண்டு, தங்கை உண்டு, தம்பி மகன், மருமகள் பேரப்பிள்ளைகள் முதலிய எல்லா உறவினரும் ஆசிரமத்தில் உண்டு. பற்றற்ற வாழ்வுக்கு அதிகாரப் பத்திரம் ஒன்றே போதுமே. வேறு உதாரணம் வேண்டுமா? இப்போது தம்மைச் சூழ்ந்து பாதுகாதத பக்தாகள் அபிமானத்தைச் சிதைத்தார் ரிஷி

7. ரிஷி அருணாசலனையே ஞானசிரியனாகப் பெற்று அவன் மயமாக விளங்குகிறார். (பக். 146).

இது சரித்திரத்தில விளங்கும முறை. குறுக்கு விசாரணையிலோ தனக்குத்தானே குருவாய்த் தன் ஆத்மாவுக்குத் தன் ஆத்மாவே குருவாய் விளங்குகிறார். இதில் உண்மை யறிவது உன் கடன்.

8. ரிஷியின் பெயரைச் சொல்லி உண்டியல் வசூலித்தல் பொருந்தாத் தொழிலன்றோ. (பக். 163).

பிறர் செய்தால் அப்படி. தம்பி—சர்வாதிகாரி செய்தால் எல்லாம் பொருந்தும். எதுவும் தகும்.

9. எது வரினும் அனைவர்க்கும் பகிர்ந்துண்ணும் நெறியை எப்போதும் கடைப்பிடிக்கும் ஸ்வாமிகள் உடனிருப்பவர்க்கும் இப்போது ஊட்டவேண்டியிருந்தது. (பக். 164).

எப்போதுமா? இல்லை இல்லை, பிச்சை எடுக்கும்போதுதான் அந்த ஞானம். பொய் சொல்லி ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் இப்போது அது செல்லாது. பசிக்குச் சோறுகேட்டால் உதையும் குத்தும். ராமனாத பிரம்மச்சாரி இதை நன்றாய் அறிவார். வண்ணாரப்பேட்டை ராமய்யா ஆசிரமத்தில் சோறுகேட்ட தோஷத்திற்காகக் கால் கையைக் கட்டிக் கசையடி தந்தார்கள்.

10. மகரிஷியிடம் பெரிய உத்தியோகஸ்தரும் செல்வரும் வந்து அடியார் ஆவதைக் கண்டு சிலர் பொறாமைப்பட்டார்கள். (பக். 166).

இப்பொறாமை ரிஷிக்குக் கிடையவே கிடையாது. தனக்குச் சோறுபோட்ட எச்சம்மாள் பாகவத சாமிக்கும் சோறுபோடத் தொடங்கியபோது உண்டான கோபமும, த்வேஷமும், பொறாமை யும் அந்த அம்மாளுக்கும் ரிஷிக்கும்தான் தெரியும். தன்னைப்போல் கோவணம் கட்டிய ஈஸ்வர சுவாமியை அப்புறப்படுத்தியதற்குக் காரணம் பொறாமையல்ல என்று, வாசுதேவ சாஸ்திரி சொல்லுகிறார்.

11 தடபுடல் ஸ்வாமி ஊரைவிட்டுக் கிளப்பவேண்டுமென பிரசாரம் செய்கிறார். ரிஷிகள் காடு சென்று தவம் கிடக்க எண்ணினர். பிறரும் இவர் ஞானியா காஷாயியா என்று தாக்கத் தொடங்கினர். இந்நிலையில் யோகானந்த ஸ்வாமி என்றோர் உண்மைத் துறவி அங்கு தோன்றினார். எல்லார்க்கும் அவரிடம். வணக்கம் உண்டு. அவர் வந்தபின் ரிஷிக்குத் தொல்லையில்லா திருந்தது. காட்டிற்கு ஓடும் எண்ணமும் இல்லை. (பக். 181).

ரிஷியை மலையில் நிலைக்கவைத்த இந்த யோகானந்தர் தான் பெருமாள் சாமியை இந்த ரிஷியிடம் அனுப்பி ஆதரிக்கும்படி ஒப்ப வித்தார். ரிஷி நன்றி விஸ்வாசத்தை நன்றாகக் காட்டிவிட்டார். ஒப்புவித்த சீடனைக் கோர்ட்டும் கையுமாய் அலைய வைத்தார்.

12. துறவறம் பூண்டும் அறியாது அடாது செய்தது புரி தாபமே! (பக். 183).

தம்பிக்கு அதிகாரம் கொடுத்த ரிஷி இப்போது செய்வதெல் லாம் அடுப்பதே.

13. பகவானைத் தமது பகைமையால் பக்தி செய்ததால் தட புடல் சாமி அதிர்ஷ்டசாலியே. (பக். 183).

அப்படி ஆனால் நாமும் அதிர்ஷ்டசாலிதான். அப்பாடா! தொல்லை தொலைந்தது! மகான் கோபம் என்ன செய்யுமோ என்று

பயந்து கிடந்தேன். இனிமேல் "கெடுவார்கள் என் கடைமயிர் தான்" என்று பயமின்றிப் பாடலாம் ஆடலாம்.

14. மற்றொரு திராவக மந்திரச் சாமியார் ரிஷியைப்பார்த்து, 'ஏதோ குருட்டதிர்ஷ்டம ஜனங்கள் வந்து குவிகின்றனர். அவர்களிடம் பணம் வசூலித்து ஒரு காரியம் செய்யத் திறமை இல்லை' என்று செருக்கிச் சொன்னார். (பக். 184).

நம் ரிஷிக்கா பணம் சம்பாதிக்கத் திறமை இல்லை. இந்தச் சாமியார் இப்போது வந்து பார்த்தால் ரிஷியின் பணம் சேர்க்கும் முழுத்திறமையையும அறிந்து மூக்கில் விரல் வைத்து வியப்பார்.

15 மஹரிஷிகள் பக்தி, ஞான, கர்ம, யோகங்களில் ஒரு சாதனமும் செய்யவில்லையே. அவர் எதனால் இந்நிலை அடைந்தார். என்பதற்கு ரிஷி திருவாக்கிலிருந்தே விடை கூறுவோம். (பக். 194).

திரு ரிஷி இப்போது திருவிசாரணையில் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கிலிருந்தும் திரு ஸ்டேட்மெண்டிலிருந்தும் திரு விடை கூறினால் நன்றாயிருக்கும். ரமணவிஜயம் ஆசிரியர் அது செய்வாரா?

16. உறவினர் நெருங்கினால் ரிஷி ஒருவேளை இடர் என்று வேறெங்கேனும் சென்று விடுவாரென்றும் சிலர் அஞ்சினர். (பக். 311).

அந்த அச்சம் ஒரு சிறிதும் இப்போது வேண்டாம். கழுத்தைப் பிடித்து நெட்டினாலும் வெளிகிளம்பமாட்டார். வீணாக அஞ்சிய முட்டாள்களைப் போன்றவரா நமது ரிஷி? ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருந்த கொக்கல்லவா?

17. எந்த உறவினரும் அல்லிபோன்று மிதக்கலாமே ஒழிய உப்புப்போன்று கரைய முடியாதென்பதை யாரும் அறிந்திலர். (பக். 311). இப்போது எந்த பக்தரும் அல்லிபோன்று மிதக்கலாம். ஆனால் ரிஷியோடு ஒன்றுபட்டு வித்யாசமின்றி உப்புபோல் கரைய உடன்பிறந்த தம்பியும் சுற்றமும் இருக்கின்றன என்று எல்லாரும் அறிவர்.

18. தம்பி நாகசுந்தரமும் ஆசிரமத்தில் சேர்ந்து துறவறந் தரித்து நிரஞ்சனனந்த சாமிகள் என்னும் தீக்ஷாநாமம் பூண்டான். (பக். 312). யார்கொடுத்த தீக்ஷையோ? ரிஷிதான், தீக்ஷைகொடுப்ப தில்லையே. பெருமாள் சாமி நனைத்துவைத்திருந்த காவி ஆடைக்குத் தான் அது தெரியும். தவிர, தாய்க்குக் காவி கொடுத்தது யார் என் பதை ரிஷிகளே அறிவார். பெருமாள் சாமிதானே என்று சந் தேகப் படவேண்டாம்.

19. ஆடம்பரம் என்ற பேச்சே ரமணாசிரமத்தில் இல்லை. (பக். 322) போய்ப் பார்த்தால் அதன் ஆடம்பரமற்ற அழகும் பவி ஷுமும் நன்றாய்த் தெரியும்.

20. திருடர் வந்தபோது ரிஷி "இவர்கள் அறியாதவர்கள். இன்னது செய்கிறோம் என்று தெரியாதவர்கள். நாம் தர்மம் இன் னதென்றறிந்து அதையே கடைப்பிடிப்போம்" என்று தர்மோப தேசம் செய்தார்(பக். 327). இப்படிப் பிறர்க்கு உபதேசம் செய்யத் தான் ரிஷிக்குத்தெரியமே தவிர தான் நடக்கத்தெரியாதுபோலும். தெரிந்திருந்தால் இத்தனை வம்பு வழக்குக்கு இடம் உண்டாகுமா?

21. பகவானுக்குப் பணிவிடைசெய்த கீரைப்பாட்டி இறந்த பின்னும் பசுமாடாகப்பிறந்து ரிஷியை அன்புசெய்கிறாள் என்பதே அன்பர் நம்பிக்கை (பக். 333) இப்படி நம்பும் அன்பர்கள் இறந்தால், ரிஷியின் சந்நிதி விசேடத்தால் எருமையாகவேனும் பிறப்பார்கள்; பயமே இல்லை.

22. நாய், குரங்கு முதலியவை இறந்தால் சிவக்கோலத் துடன் சமாதிவைத்து மேலே கல்லையும் நடுவார் ரிஷி. (பக். 337-338). ஆமாம். அதுபோலவே தன் தாய்க்கும் கல் நடச் செய்தார். ஆனால் நம்மாழ்வாரிடம் மதுரகவியாழ்வார் வைத்த அன்பையே ரிஷியிடம் வைத்து, கண்ணைக்காக்கின்ற இமைபோல் காத்தவரும், உயிருக்கு உடல்போல் இருந்தவருமான பழநி ஸ்வாமிக்கோ? ஒன் றுமே இல்லை. நாய்க்கும் தாய்க்கும் கிடைத்த கல் இந்த மலையாள சூத்ரசாமிக்குக் கிடைக்கவில்லையா?

மஹரிஷி, ரிஷியின் தம்பி தாசில்தார், டிப்டிகலக்டர், சப்மாஜிஸ்டிரேட், சர்க்கில் இன்ஸ்பெக்டர்,

23. பகவான் சமையல் வேலைகளில் துணைசெய்வார். அறுசுவை உணவு பகவான் கையால் ஆக்கப்பட்டால் அதில் ஏழாவது இனிய சிவானந்தச்சுவை ஒன்று சூட்சுமமாகத்தோன்றும். (பக். 344). இப்போதும் பகவான் கோர்ட் விவகாரங்களில் துணைசெய்வார். இவர்க்குத் துணைபுரியும் சட்ட நிபுணர்க்குக்கூடச் சட்டநுட்பம் ஒன்றும்புரியாதபடி சூட்சுமங்களைச் செய்துவிடுவார். ரிஷிகைகாரப் பேர்வழி. பாருமே! இவா விடயத்தில் எந்தசட்டம் பொருந்தும் என்று புரியாதடடி திகைக்கிறார் ஒரு பிரபல முனிசீப். அவர் தம்தீர்ப்பில் கூறும் பின்வரும் வாக்யங்களைப் பார்த்தால் அது புரியும்.

"It follows therefore that the rule of succession prescribed for Sanyasins may not apply to him that is to say, the rule of succession in regard to Sanyasins or Madathipathis prescribed under the Hindu Law, that his natural family is different from his spiritual family into which he enters or becomes a Sanyasin and that the 'chela or the accepted Shisya should succeed him to his properties and not his relations of the original family, may not apply to him as he is not a regular Sanyasin and does not initiate anybody into any order and has no chelas or Shisyas. It may be a shrewd question of law what rule of succession applies to such persons as 1st defendant describing themselves as Atyasramites, what is to become of the properties after his death unless he executes a will is not known. It may be that, since he does not fall under the classification of Sanyasins, the ordinary law of succession applies in this case *i. e.*, the natural heir in the family succeed him 2nd defendant is the heir in the natural family and according to this view, he may become his next heir in the natural family unless 1st defendant executes a will with reference to his properties. However 1st defendant now describes

himself to be, the question is how the worshippers regard him. I do not think it may be said that any baktha regarded him otherwise than as a Sanyasin or akin to a Sanyasin.

சந்யாசி அல்ல என்று ஏமாற்றும் உலகறிந்த ஒரு சந்யாசிக்கு, குடும்பஸ்தர்கள் சட்டம் பொருந்துமா? சந்யாசிகள் சட்டம் பொருந்துமா? என்று கனம் முனிசீப் திகைப்பது தெரியவில்லையா? நமக்குத் தெளிவாய்த்தெரிகிறது சந்யாசிகள் சட்டந்தான்பொருந்தும் என்று. வன் கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ? ஆனால் இது ரிஷிகள் சம்பந்தப்பட்ட வழக்கல்லவா? ரிஷி சூட்சமத்தால் முனிசிப்புக்கும் சட்டத்தில் திகைப்பை உண்டாக்கி, கடைசியில் குடும்பஸ்தர்க்குரிய சட்டந்தான் பொருந்தும் எனக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்துத் தெளியுமாறு செய்து, "அண்ணன் சொத்து தம்பிக்குச் சேரலாம்" என்று இப்படியுமின்றி, அப்படியுமின்றி நடுநிலையாக (நியாயாதிபதி அல்லவா?) க்கூறும்படி செய்திருக்கிறார். எப்படி? மையலில் தோன்றும் ரிஷியின் கைச்சூட்சமமெல்லாம் சட்டத்திலும் தோன்றும்படி செய்து விட்டாரா! இல்லையா?

இம்மட்டோ! இம்முனிசீப் முன்னிலையில் ரிஷிகள் கொடுத்த வக்காலத்து, அதிகாரப்பத்திரம் பெற்ற நிரஞ்சனானந்தசுவாமி பேரால் கொடுக்கப்பட்டது. அது ஒத்துக்கொள்ள முடியாதென மறுக்கப்பட்டபொழுது, ரமணாசிரமம் சீல், ரிஷிகளுடைய சீல், அவரது கோடுகள், அதற்கு சாட்சிகள் முதலியன கூடியவக்காலத்து ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதுவும் ரிஷியால் கையெழுத்திடப்படாதிருந்த காரணத்தால் ஒத்துக்கொள்ள முடியாதெனத் தள்ளப்பட்டது. அதுபற்றி அம்முனிசீப் கொண்டகருத்து பின்வருவது:—

"In this case, there is no question of inability to write the name by first defendant (the sami) or illiteracy, blindness or deafness or dumbness. I am therefore of opinion

that the second Vakalat does not constitute a valid power of appointment"

இவவாறிருந்தும் கையெழுத்தில்லாது, சீலும், கோடும் மட்டும் பதிக்கப்பட்ட அதிகாரப்பத்திரம் மட்டும் எப்படிச் செல்லுமென ஐயப்பாடு நிகழலாம். சப்ரிஜிஸ்திரார் ஒருசீலை உயிருள்ள மனிதனுக் கொப்பாக எண்ணி இந்த அதிகாரப்பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்திருக்கிறார். இது விஷயத்தை ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர் ஜெனராலுக்கு அறிவித்தபொழுது, அச் செய்கை தண்டிக்கத்தக்கதல்ல வென்று கூறினாராம். அது ஒப்புக் கொள்ளப் படத்தக்கதா வென்பது பற்றி ஒன்றும் தகவல் கிடையாது. இதுவும் ரிஷிகளின் சூட்சுமச்செய்கையின் பெருமையே தவிர வேறென்ன?

கை எழுத்தில்லாத வக்காலத்தை ஒத்துக்கொள்ள முடியாதென தீர்ப்புக்கூறிய முனிசீப்பே, ரிஷிகளின் கை எழுத்திடப் படாத வாக்குப் பிரமாணங்களைக்கொண்டும், அதிகாரப்பத்திரம் பெற்ற ஏஜண்டின் (முதலில் தள்ளப்பட்ட) வக்காலத்தின் ஆதாரத்தைக் கொண்டும் கேசை நடத்தி முடிவான தீர்ப்பும் கூறும்படி நேர்ந்ததென்றால் இவர் தம் பெருமை தான் என்னே. முனிசீப் அவர்கள் ரிஷிகளின் கை எழுத்திடப்படாத பிரமாணங்களைப்பற்றி கடைசியில் ஏதோ கூறுவதாகச் சொன்னாராம். ஆனால் அது விஷயமாகவும் ஏதும் நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இவை எல்லாம் எவ்வாறு சூழ்ச்சியால் செய்யப் பட்டன என்று நான் முன்பேகூறினேனல்லவா. ஆகவே அரசாங்கத்தின் சட்டங்களெல்லாம் ரிஷிகள் விஷயத்தில் பொருந்தவே பொருந்தாது. முனிசீப் கருதுகிறபடி அத்யாஸ்ரமிகளுக்கு கை எழுத்திடாமல் கேசுகள் நடத்துவதற்கு வேண்டியபடி சட்டங்கள் திருத்தி அமைத்தல் அவசியம் என்பதை நீ அறியவும். அரசாங்கம் கவனிக்குமா?

24. ஆனால் எப்படியோ ரிஷியை அண்டிவந்த அன்டர் துயரம் ஆடி மேகம் போலப்பறக்கிறது! (பக் 346) அப்படியா? எல்லாம்

தெரிந்த நூல் ஆசிரியர்க்கு இது புரியவில்லையா? கம்பீரம் சேஷய்யர் ஆசிரமச் சேர்க்கையால் அல்லலுக்குள்ளாகி மூல வியாதியால் கஷ்டப்பட்டபோது, அவரைத் தாட்சணியமின்றிக் கிளப்பி விட்டார்களே, அப்போது கேட்டால் அவர் புரியும்படி சொல்லி இருப்பார். பாவம் அவர் இறந்து விட்டார். ஆயினும் நாராயண ரெட்டியும் பெருமாள் சாமியும இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டாலும் ரிஷியை அண்டிய தங்கள் துயரம் எப்படிப்பறக்கிறது என்பதைப் புரிய வைப்பார்கள்.

25. ஸஹஜஸ்திதியில் உடலை மறந்த பகவான் அதிக தூரம் வெளிச் செல்லாதிருப்பதே அன்பர்களின் கோரிக்கையாகும். (பக் 350) உண்மை அன்பர்கள் ஆனால், அவர் மனம் கோர்ட் விவகாரங்களில் நெடுந்தூரம் செல்லா திருக்குமாறு கோரலாம். ஆனால் கூட இருந்து குளிர்காய்வோர்க்கு—பொறுக்கித் தின்று வயிறு வளர்ப்போர்க்கு—வழக்கும் வம்பும் இருந்தால்தானே கொண்டாட்டம்.

26. நரசிம்மஸ்வாமிகள் ரமண சங்கத்திற்கு வாடா நறுமலர் மாலையாகவிளங்குகிறா. (பக் 356) இவர் நிலையாக இப்போது இருக்கும் இடமும், விலாசமும்தெரியவில்லை. நல்லவர்க்கு ரமணாசிரமத்தில் இடம் ஏது? இவர் "சாதுக்களாவார் சகவாசம் நண்ணினல், ஏதுக்கா மிர்சியமெல்லாமு—மேதக்க, தன் தென்றல் மாருதந்தான் வீசவே விஜிறி கொண்டென்னகாரியம் நீ கூறு" (இது விம்மி விம்மி அழுவதற்குக காரணமாயிருந்த ஸ்ரீமதி செல்லம்மாள் என்னும் இள மங்கையின் பொருட்டு ரிஷி பாடியபாட்டு) என்னும் பகவான் ஏமாற்றுப் பாட்டை லட்சியம் செய்யாமல் "தீயார்குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ டிணங்கி இருப்பதுவுந் தீது" என்று ஆசிரமத்தை விட்டுப் போய்விட்டார்.

27. ரமண சங்கத்தின் வேலை வெற்றிபெற நூற்றுக்கணக்கான துறவிகளும், ஸந்நியாஸினிகளும் (பெண்துறவி) வேண்டும். இவர்களே ரமணசங்கமாக ஒன்று படவேண்டும். (பக். 368)

ஒன்றுபடுவது மனத்தாலா? உடம்பாலா? ஒன்றுபடும் இதுவே, ரமண விஜயத்தின் முடிந்த முடிபாதலால் தெளிவாகத் தெரிய வேண்டும். பின்னது கூடியவரை வெற்றிகரமாக இப்போதே நடந்தேறிவருகிறது என்று கேள்வி.

சனி	செவ்		சந் கே
குரு	இராசி		மாந்தி
ர ரா	சுக் புத	ல	

28. இது பகவான் பிறந்தபோது ராசி நிலையை விளக்கும் சக்கரம். இதைக் கண்டவுடனேயே ஒரு மஹான் பிறந்ததை யாரும் சொல்வார். (பக் 40) ஆனால் அம்மகான் செய்கையை அதிகாரப் பத்திரமும் வாக்குமூலமும் நன்றாகச் சொல்லும். இதன் மாதுர்ப் பாவத்தைப் பார்த்தால் தாயின் கற்பும் விளங்கும். அதைப் பார்த்துக் "கணவன் கையால் உலக்கை அடிவாங்கும் யோகம் பொருந்தியவள்' என்று விடயமறிந்த மற்றொரு ஜோசியர் கூறுகிறார்.

29. அழகம்மை. இவளே பகவானை ஈன்ற பாக்கியவதி. அண்டிய விருந்தினர்க்கன்புடன் ஊட்டுபவள். வசிட்டர்க்கு அருந்ததி போல் வாய்த்தவள். குடும்பநிலை இவளைத்துயர் என்னும் தீயில் உருக்கி மனத்தைத் துறவென்னும் மாற்றேற்றியது. அழகம்மாளுக்கு வேறுகதி இல்லை. திருவண்ணாமலைக்கே வந்துசேர்ந்தாள். ஆசிரமத்திற்குவந்த பக்தர்களை முகமலர்ந்து அம்மை அறுசுவை விருந்தால் உபசரிப்பாள். அம்மையார் அன்று மூட்டிய அடுப்பு இன்னும் ரமணாசிரமத்தில் வேதவேள்வித் தீபோல்வளர்ந்து வைஸ்வாநரயஜ்ஞமும் செய்து வருகிறது. (பக் 312) இவ்வம்மையார்தான் கத்திரிக்காய் போன்ற அற்ப வஸ்துக்களையும் கம்பீரம் சேஷய்யர்

கிருஷ்ணய்யர் போன்ற உத்தம பக்தர்கட்குக் கூடக்கொடுக்காமல், லோபகுணத்தால் பலமுறை ஆசிரமத்தில் கலவரம் விளைத்தஉத்தமி. "அக்காலத்தில் குடும்பத்தில் புருஷனிடம் வாங்கிய உலக்கை அடியாலும் திருந்தாத உன் லோபகுணத்தை இந்த மகனிடம் வந்தும் விடாமல் மானத்தை வாங்குகிறாயே" என்று ரிஷி வாக்காலேயே பலர் அறியப் பாராட்டப்பெற்ற மாதரு பூதேஸ்வரி

ஆ:—போதும், போதும். விஷயம் விளங்கிவிட்டன ரிஷி எப்படி இருந்தால் என்ன ? அவர் உபதேசந்தானே நமக்குத்தேவை. உபதேசங்களில் குறை கூறமுடியுமா ? அவரிடம் விளங்கும் அற்புதக் காட்சிகளில் தான் குறைவுண்டா?

அ:—குறைவே இல்லை. அற்புதக்காட்சிகள் ஒன்ற இரண்டா ! பலப்பல. அவை

1. ரிஷியின் நெற்றியை ஒரு நக்ஷத்ரம் வந்து ஆறு தடவை தொட்டுச்சென்றது. (பக் 239)

2. சித்தர்கள் ஆகாயத்தில உலவுவதுபோல் ரிஷி, ஓரிரவில் ஆகாயமார்க்கமாகச்சென்று திருவொற்றியூரில் இருந்த முனிவர்க்கு பிரத்யட்சமாய்த் தோன்றி உபதேசித்தது. (பக் 240)

3. தான் பாராத திருவொற்றியூரை உள்ளபடியேவர்ணித்து சீடர்க்குச் சொன்னது. (பக் 241)

4. மூன்று கேள்விகள் கேட்கவந்த ஒருவர்க்கு ரிஷி அவர் கேட்குமுன் பதில்கூறித் தன் வடிவை ஜோதிமயமான தட்சிணாமூர்த்தமாகத் தோன்றச் செய்தது. (பக் 264)

5. ஒரு ஆங்கிலேயர்க்குக் கனவில் காட்சிகொடுத்துத் தன்னிடம் வருவித்தது. (பக் 276)

6. பிறர் மனத்தைப் புத்தகம் படிப்பதுபோல் படித்தறிவது (பக் 280)

7. சித்தஸம்வித் என்ற யோகசக்தி பகவானிடம் அமைந்திருக்கிறது என்பதை விளக்க ரமணவிஜய நூலாசிரியரே பல உதாரணங்களைக் கண்டது. (பக் 347)

8. இன்னும் விஷம் எருமை பாம்புபணிந்து செல்லல் முத லியவும், பிரண்டன் போன்றோர் சொல்லக்கேட்டு எழுதிய பலவும், நேரில் மயங்கிக்கண்டோ, மதிப்பிற்கோ கூறிய சிலவும், பிறவும்.

இவை எல்லாம் உண்மையா பொய்யா என்னும் ஆராய்ச்சிக்கு நான் வேறொன்றும் விசேடமாகக் கூறப்போவதில்லை. இதுபோன் றதோர் அற்புதந்தான், தண்ணீரில்லாது கஷ்டப்பட்டபோது ரிஷி கண்டுபிடித்த வற்றாத ஊற்று. (பக் 317) அதை இப்போது நேரில் சென்றுபார். அது பாதாளம் வரையில் பதித்ததோர் பாறையாலான பாத்திரம்போல் வறண்டு ஈரமற்றுக் காட்சி கொடுப் பதைக் காண்பாய். அதன் நிலையோடு விஜயத்தில் கூறப்பட்ட பொய் வர்ணனைகளை ஒப்பிட்டு நோக்கு. அதனால் உனக்கு விளங்கும் உண்மை எவ்வளவோ அவ்வளவு உண்மை பொருந்தியவைதாம் மேலே எட்டுவகைப்பட வகுத்துக் காட்டிய அற்புதங்களும் பிற வும். இதில் சந்தேகமே வேண்டாம். எட்டுவகையும் குட்டிச்சுவரே. அவை எல்லாம் மதிமயக்கர்களும், கஞ்சாக்குடியர்களும், கிறுக் கர்களும், சுயநல அசத்திய அரத்துக்களும், அசடுகளும் அளந்து கொட்டும் முழுப் பொய். முற்றும் பொய். முக்காலும் பொய்.

ஆ :—ரிஷியின் உபதேசங்களும் அப்படித்தானே?

அ :—அதற்கென்ன சந்தேகம். அவர் உபதேசங்களின் நிலை மையை அறிந்தோ அறியாமலோ, "நானும் அறியேன் அவளும் பொய் சொல்லாள்" என்பதுபோல் விஜயம் ஆசிரியரே பின்வரு மாறு விளக்குகிறார். "பகவானின் உபதேசங்களைப் போன்று, தெளிவும், சுவையும், இனிமையுமுள்ள ஒரு பாலூற்றுப் பொசிந்து பொங்கியது." (பக் 317.) இப்பாலூற்றின் இன்றைய தெளிவும், சுவையும் இனிமையும் எல்லார்க்கும் தெரியும். நீயும் சென்றால் அதன் வறட்டுக்காட்சியைப் பார்ப்பாய். அதுபோல்தான் ரிஷியின் உபதேச ஊற்றின் தெளிவும், சுவையும், இனிமையும் இருக்கின்றன. இவ்வுபதேசங்களின் உண்மையைப்பற்றி மற்றொருசமயம் விவாதிக் கலாம். இப்போது "இரண்டு குளம் வெட்டினேன் ஒன்று பாழ்

மற்றொன்றில் ஜலமே இல்லை" என்பதற்கிலக்காக, ரமணவிஜயம் ஒப்பிட்டுக் கூறும் பாழூற்றுக்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று ரமண ரிஷி கண்டுபிடித்த ரமண தீர்த்தம். மற்றொன்று, ரிஷி கண்டுகூறும் உபதேசம். ரமண தீர்த்தம் இப்போது எப்படிப் பாழ்பட்டுக் கிடக்கிற தென்பதை ஆரம்பத்திலேயே கூறினேன். அதை எட்டிப்பார்த் தால் அமெரிக்காவைக் காணலாமே ஒழிய ஜலத்தைச் சிறிதும் கா ணவே முடியாது (மழைநீர் தேங்கினால் அன்றி). அதுபோல் அவர் உபதேசமும் பாழ்,—பெரும் பாழ்—மிகப்பெரும் பாழ்,—என்று அந்தத்திலும் உறுதியாகச் சத்தியமிட்டுக் கூறி முடிக்கிறேன்.

ஆ:—ரமண விஜயத்தின் ஆசிரியர் வேறு துறைகளில் மதிப் பிற் குரியவராயிற்றே. அவர் விடயங்களை இப்படித் திரித்துக் கூறுவாரா?

அ:—ஆம் இவரை நாமும் நன்கறிவோம். ஒருவனை எல்லா விஷ யத்திலும்யோக்யன் என்று பூரணமாய் நம்பமுடியாது. சேரமாதேவி குருகுல போராட்டத்தின் உண்மையையும் ஞாபகப்படுத்திக்கொள். ஆசிரியர் மற்றத் துறையில் எப்படி ஆயினும், இதில் சொல்வார் பேச்சைநம்பி அறியாமலே பலமோசங்களை வெளி இட்டிருக்கிறார். மேலும் பொருள் கொடுத்தால் "போற்றினும் போற்றுவர்" என் பதைக் கேட்டதில்லையா? அவர் நாணமுடையவர்; ஆனால் இது விஷயமாய் "பொருள் கொடாவிடில் தூற்றினும் தூற்றுவர்" என் பதைக் கடைப்பிடித்துத் தன் உண்மை நிலையையும், ரிஷியின் தற் காலப் போக்கையும் விளக்கி ஒரு அறிக்கை வெளியிடவேண்டும். "சொன்ன சொற்களை மாற்றுவதற்குப்" பின்னிடக்கூடாது. அது புலவர்க்கு இயல்பே, ரிஷியும் இதற்கு வழிகாட்டி இருக்கி றார். பயம்வேண்டாம். இப்படி இவ்வாசிரியர் செய்யவில்லை யானால் அவர் "கூற்றினும் கொடியவர்" ஆவார். அன்றி "அரச மரத்துச் சனியன் பிள்ளையாரையும் பிடித்தது" போல் இந்நூலால் இவர்க்கு ஏற்பட்டுள்ள இழிவு, மற்ற நூல்களின் மதிப்பையும் கெடுத் துச் குட்டிச்சுவராக்கிவிடும்.

ஆ:—ரமணன் அல்லும் பகலும் அறிவாகி நின்றான். சித்தம் தெளிந்து சிவமானான். பாசஜாலங்களை ஞானவாளால் அறுத்தான். மனக் கற்பூரத்தைக் கரைத்து ஞானவிளக்கேற்றினான். (பக். 118) ஞான சூரியன் ஆனான். அகண்டமின்சாரமான ரமண தீபத்திலிருந்து பல்லாயிரம் மின்விளக்குகள் ஏற்றப்பட்டு, ஞான சம்பந்தக் கம்பிகளால் இணைப்புண்டு ஆங்காங்கு உலகெங்கும் இருளொழிய விளங்கவேண்டும். (பக் 368) என்று புகழப்பட்ட ரமண தீபம் இப்படியா சக்தியற்று, ஞானமற்று, ஒளியற்று மங்கிக் கிடக்கிறது! ஆஹா! நான் ஏமாந்த சோண கிரியாய் இப் பொய்ப் புத்தகங்களையும் ரமண உபதேசங்களையும் மெய்யெனக் கட்டி அழுது புத்தகப்புழுவாய்க் காலத்தை வீணாகக் கழித்து விட்டேனே!

" எல்லா உலகும் துரும்பாயினும் மறைகள்
எல்லாமே கைக்குள் இருந்தாலும்—பொல்லாப்
புகழ்ச்சியாம் வேசிவசம் புக்கார் அடிமை
அகலவிடல் அம்மா அரிது"

என்று பாடிய ரிஷி, தாமே பொய்ப்புகழுக்கு இவ்வாறு அடிமையாகிக் கெட்டாரா! உன் உபதேசத்தால் உண்மை உணர்ந்தேன், உய்ந்தேன். என்ன கைம்மாறு செய்வேன்.

அ:—மஹான் தூஷணம்—பெரியவாள் அபராதம்—பாவம்—தோஷம்—என்று மகா பக்தனைப்போல் கூறி ஏமாறாமல், என் வார்த்தைகளைச் செவியேற்றுக் கவனித்து உண்மை அறிந்ததே போதும்.

" எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"
" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

இவ்வறிவு கைவரப்பெற்ற நீயே மஹான், பக்தன், இன்னும் இப்படியே பல சோம்பேறிக் கூட்டங்கள், கோவணம்கட்டிகள், கோவணம் அற்ற மட்டிகள் எல்லாம் மஹான், பெரியவாள், துறவி,

சந்யாசி, ரிஷி, முனி என்று பேர்வைத்துக்கொண்டு ரமண மஹரிஷிகளைப்போலவே உலகை ஏய்த்துக் கெடுக்கின்றன. அந்த மயக்கில் நீ வசப்படாதே. ஒவ்வொன்றின் நிஜஸ்வரூபத்தையும் ஆராய்ந்து பார். உண்மையை ஆய்ந்து அறிந்து பின் ஏதேனும் செய். மூட நம்பிக்கையால் பகுத்தறிவைப் பாழாக்காதே. கடைசியாக ஒன்று சொல்லுகிறேன். அதை நன்றாக ஞாபகத்தில் பதியவை, மறவாதே. "மின்னுவதெல்லாம் பொன்னாகாது."

ரமண மஹரிஷியின் வாக்குமூலம்

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (திருவள்ளுவர்.)

இது, ஸ்ரீ ரமணரிஷிகளே நேரில் கமிஷனர் முன்னிலையில் கொடுத்த பிரமாண வாக்குமூலமும், குறுக்கு விசாரணையில் அளித்த பதிலும் ஆகும். இதனைக் கொண்டு ரிஷிகளின் நிஜஸ்வரூபத்தை உலகம் கண்டு உய்க.

Before the Commissioner in O. S. 30/36 on the file of the District Munsif, Tiruvannamalai.

Deposition of the 1st defendant. Name :—Ramanarishi.

[Solemnly] affirmed under the Provision of Act x of 1873 this 15th day of November 1936.

நான் திருவண்ணாமலைக்கு 1896ல் வந்தேன். இந்த ஊருக்கு வந்தபிறகு அநேக இடங்களில் வாசம் செய்திருக்கிறேன். 1914ல் வாதி பெருமாள் சாமியாரைச் சந்தித்தேன். அப்பொழுது நான் விருபாட்க்ஷ குகையில் வாசம். அப்பொழுது எனக்கு பெருமாள் சாமியும், அய்யாசாமியும் சிஸ்ருஷை செய்துக் கொண்டு வந்தார்கள். பெருமாள் சாமியார் சில நாள் வெளியில் யாத்திரை போவதுண்டு. என்னிடமும் இருப்பதுண்டு. 1916-ம் வருஷத்தில் விருபாட்க்ஷ - ஆஸ்ரமத்தைவிட்டு ஸ்கந்தாஸ்ரமத்திற்கு வாசம் போனேன். அந்த கந்தாஸ்ரமம் ஒரு கட்டடம். ஒரு ஜொனை, ஒரு தோட்டம் இருந்தது. அந்த ஆஸ்ரமத்திற்குப் போவதற்கு மலையடி ஓரத்திலிருந்து படிகள் போட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அநேகம்பேர் பணம் கொடுத்திருக்கிறார். இந்தப் பணத்தை அநேகபேர் இவ்விடம் இருக்கிறவரிடம் கொடுத்திருக்கிறார்கள். அதில் பெருமாள்சாமியாரும், ஓவர்சியர், இன்னும் ஒரு கந்தசாமியும்

மேல் கண்ட ஓவர்சியர் சேஷய்யர் இப்பொழுது காலம் ஆய்விட்டார். இந்த பணங்களை என்னை உத்தேசித்துத்தான் கொடுத்தார்கள். ஸ்கந்தாஸ்ரமத்தில் அக்டோபர் 1922 வரையில் வாசம் செய்தேன். நான் பெருமாள் சாமியாருக்கு சந்யாஸ்ரமம் கொடுக்கவில்லை. நான் யாரிடமும் சன்யாஸ்ரமம் வாங்கவில்லை. நான் ஸ்கந்தாஸ்ரமத்தில் இருக்கும்பொழுது என் தாயார் 1922ல் காலம் ஆய்விட்டது. பிணத்தை 4, 5 பேர் மலைமேல் இருந்து அடிவாரம் சமாதி செய்ய கொண்டு வந்தார்கள். இந்த ரமணாஸ்ரமத்தில் அந்தப்ரேதத்தை அடக்கம் செய்யப்பட்டது. அநேகபேர் அதை அடக்கம் செய்தார்கள். அநேக ஜனங்கள் கற்பூரம் கொண்டு வந்து கொளுத்தினர். அந்தம்மாளுக்கு வேறே உத்திரக் கிரியைகள் யாதும் செய்யவில்லை. அடக்கம் செய்ததினமே சமாதி கட்டி ஆய்விட்டது. அது முதல் பூஜை செய்யப்பட்டது. தினம் பூஜை D 2 சின்ன சாமி செய்து வந்தார். 16-ம்நாள் அபிஷேகம் செய்யப்பட்டது. அது செய்ததை நான் சொல்லமுடியாது. நாராயணசாமி அய்யர் வகையறு செய்திருக்கலாம். பிரியாதில் கண்டிருக்கும்படி நான் வாதியை என் தாயாருக்குக் கிரியைகளைச் செய்யச்சொல்லவில்லை. வாதியே கிரியைகளைச் செய்யவில்லை. அப்படிச்செய்யச் சொல்லி நான் சொல்லவும் இல்லை. பத்தாவது நாள் வாதி பணத்தை வசூல் செய்து பத்து பேருக்கு சாப்பாடு போட்டார். எனக்கும் சாப்பாடு போட்டார். சமாதி கட்டினது எனக்கு நேரில் தெரியாது. 1922ல் நவம்பருக்குப் பிறபாடு ஸ்கந்தாஸ்ரமத்தை விட்டு இந்த ஆஸ்ரமத்திற்கு வந்துவிட்டேன். அது முதல் நான் இந்த ஆஸ்ரமத்தை விட வேறே எ..விடமும் போகவில்லை. 1922க்குப் பிறகு இந்த ஆஸ்ரமத்தில் அநேகபேர் கொடுத்த பணத்தினுல் அநேக கட்டடங்கள் கட்டப்பட்டன. குளத்தை மறுமத்து செய்து தோட்டம் வைக்கப்பட்டது. இதற்கெல்லாம் பணம் பக்தாள்தான் கொடுத்தார். இந்தப்பணமெல்லாம் என்னைப்பொருத்துதான் கொடுத்தார். ஆஸ்ரமத்தில் தினந்தோறும் செலவுகள் ஆய்க்கொண்டு வருகிறது. வரவு செலவுகள் நான் கவனிப்பதில்லை. வாத சிவாான்,

கோபால ராவ் சிலநாள், தண்டபாணி பார்த்து நடத்திவந்தார். ராமசாமியும் பார்த்துவந்தார். 1922 முதல் இந்தக் காரியங்களை வாதி கவனித்ததே கிடையாது. மேல்கண்ட வாசு முதலானவர்கள் வாதி உத்தரவு மேல் காரியங்களை நடத்தி வரவில்லை. இவர்கள் வாதியினுடைய மேல்பார்வை கீழ் நடக்கவில்லை. இவர்கள் யாரும் என்னிடம் அவரவர் செய்துக்கொண்டுவந்த வேலைகளைப்பற்றி சொல்லுவதில்லை. வாதி திருவண்ணாமலை டவுனில் பிரதி வருஷமும் முதலிலிருந்து ஜயந்தி செய்துகொண்டுவந்தார். அதுவும் நான் செய்யச் சொல்லவில்லை. இந்த ஆஸ்ரமத்திலும் ஜயந்தி பிரதி வருஷமும் 1922 லிருந்து நடந்துக்கொண்டு வருகிறது. இந்த ஆஸ்ரமத்தில் நடந்து வந்த ஜயந்தி வகையரா வேலைகளுக்கும் வாதி ஊரில் செய்து வந்த வேலைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. 1922 பிறகு இந்த ஆஸ்ரமத்திற்கு நான் வந்த பிறகு வாதி இவ்விட கட்டடங்கள் கட்டும் விஷயங்களாவது மற்ற ஆஸ்ரமத்திற்கு சம்மந்தப்பட்ட வேலைகளையும் பார்த்ததே கிடையாது. வாதி என்னுடைய ரூபத்தை விக்கிரஹம் ஒன்று செய்திருக்கிறார். இதற்காக வாதி என்னிடம் மதராஸிலிருந்து போடோ எடுக்க ஒரு போடோக்ராப்பரை கொண்டுவந்தார். அவருக்கு நான் சிட்டிங்க்ஸ் கொடுத்தேன். அவர் என்னை பாக்வீவ், சைட்வீவ், ப்ரண்ட்வீவ் எடுத்துக்கொண்டார். ஆர்டிஸ்ட் பின்னால் படங்களை என்னிடம் கரெக்ஷனுக்காகக் கொண்டுவந்தார். என்னைப் போடோ எடுக்க அநேகபேர் கேட்டிருக்கிறார். நான் யாருக்கும் மறுத்தது கிடையாது. என் விக்கிரஹம் செய்யச் சொல்லி நான் வாதிக்கு உத்தரவு கொடுக்கவில்லை. இதற்காகப்பணம் வசூல் செய்யச்சொல்லி வாதிக்கு சொல்லவில்லை. வசூல் செய்தவரை நான் தடுக்கவும் இல்லை. இந்த விக்கிரகத்தை இவ்விடம் வைக்க நான் வாதிக்குச் சொல்லவில்லை. அவர் என் விக்கிரகத்தை இவ்விடம் வைக்கக்கூடாதென்று தடுத்து இருக்கிறேன். எக்ஸிபிட் Bல் என்னுடைய கரெக்ஷன்ஸ், ரைடிங்கில் ஒன்றும் இல்லை. Exhibit B 1லும் என்னுடைய எழுத்து ஒன்றும் இல்லை. வாதி ரமணாஸ்ரமம் போ

உபயோகப்படுத்தி ஊரில் ஜயந்தி முதலான விசேஷங்களை நடத்துவதுண்டு. வாதி சொல்லும் ரமணாஸ்ரமத்திற்கும், இந்த ரமணாஸ்ரமத்திற்கும் யாதொரு சம்பந்தம் கிடையாது. Exhibit VII ல் சீல்களை நான்தான் வைத்தது. Exhibit K என்னுடைய கை எழுத்து. Exhibit K 1ம் என்னுடைய கை எழுத்து. எனக்கு English, Tamil, இன்னும் இதர பாஷைகள் எழுதப் படிக்கத் தெரியும். 1896 முதல் அதாவது இந்த ஊருக்கு வந்தது முதல் நான் எந்தக் கடிதத்திலும் பேர் போட்டது கிடையாது. எனக்கு எப்பொழுதும் நான் வைத்துக்கொண்ட பெயர் இல்லை. நான் எப்பொழுதும் சிஷ்யாளை வைத்துக்கொண்டு அவர்களுக்கு தீட்சையாவது உபதேசமாவது செய்வதில்லை. என்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு நான் யாதொரு நியமங்களை நியமித்தது கிடையாது. நான் யாரையும் இவ்விடம் வரச்சொல்வதாவது, இவ்விடம் இருக்கச் சொல்வதாவது கிடையாது. நான் இவ்விடம் அதாவது இந்த ஆஸ்ரமத்திற்கு வந்த பிறகு வாதி வசூல் செய்யும் பணத்திற்காவது, அவர் செய்துவரும் ஜயந்தி விசேஷங்களுக்கும் சம்பந்தமில்லை. வாதி நடத்திக் கொண்டுவந்த ரமணாஸ்ரமத்தைப்பற்றி பின்னால் நான் கேள்விப்பட்டு அவரை இந்தமாதிரி செய்யலாமா என்று கேட்டேன். அவரை அவருடைய ஆஸ்ரமத்திற்கு ஏன் மந்திரம் என்று பேர் வைக்கக்கூடாது என்று கேட்டேன். நான் ஸ்கந்தாஸ்ரமத்தை விட்ட பிறகு பலபேர் அதில் இருந்து வந்தார். இப்பொழுது அதில் விருதாசல குருக்கள் என் உத்தரவு கேட்டுக்கொண்டு அதில் இருந்து வருகிறார். என்னிடம் இருந்து தான் சாவியும் கதவும் இவ்விடமிருந்து எடுத்துக்கொண்டு போனார். நான் எப்பொழுதும் வாதியிடம் விருதாசல குருக்களைப் பற்றிச் சொன்னதே கிடையாது. (Pw 2) சொல்லியபடி கோபால ராவ் என்னை இவ்விடம் கட்டியிருக்கும் 2 ரூம் டிசைனைப்பற்றி கேட்டதும் கிடையாது. அவரை நான் வாதியை கேழ்க்கச் சொன்னதும் கிடையாது. 1925 வருஷத்தில் சிவபிரகாசம் முதலியார் பிள்ளை என்னை இவ்விடம் ஜீவஸமாதி? ...ருமான் வைப்பதற்கு உத்தரவு கேட்டது கிடையாது. அவரை

லாதியை கேழ்க்கும்படி நான் சொல்லவில்லை. பாதாம் செடியை வைக்க உத்திரவு யாரும் கேழ்க்கவும் இல்லை. இந்த இடத்திற்கு ரமணாஸ்ரமம் என்று வாதி பேர் கொடுக்கவில்லை. இவவிடம் பக்தாள் கொடுத்த பணத்தை எனக்கெனறும் பக்தாளுக்கு என்றம் சொல்லிக்கொடுத்தது கிடையாது.

Cross examination by the plaintiffs Vakil :—

நான் பிராம்ஹணப் பிறப்பு. நான இவவிடம் வந்தபொழுது எனக்கு 17 வயசு. நான் இவவிடம் வருகிறதற்கு முந்தியே எனக்கு உபநயனம் ஆய்விட்டது நான் இவவிடம் வருமபோது கிரஹஸ்தாஸ்ரமத்தில் இருந்துதான் வந்தேன். இந்த ஊருக்கு வந்த ஒரு மணி நேரத்திறகுள் யக்யோபவிதம், வேஷ்டி முதலானது கழட்டி எறிந்து விட்டேன். தலையும மொட்டை செய்துக் கொண்டேன். நான் இவவிடம வந்த பொழுது என்னிடம் சுமார மூன்று ரூபாய் இருந்தது. அந்தப்பணமும எறிநதுவிட்டேன். அது முதல் நான் பணததைக் கையில் தொடுவதில்லை. சாபபிடுகிற தினுசுகள் கையால் தொட்டு வாஙகுவ துண்டு.பணம் வாஙகாததற்குக் காரணம் என்ன வென்றால் அதை நான் என்ன செய்வது. அது எனக்குத் தேவை இல்லாததினால் தான் வாஙகுவதில்லை. நான் இவவிடம் முதல் வந்த பொழுது, முதல் தடவை ஒரு சாது சாப்பாடு கொடுத்தார். பிறகு பிரம்ஹணா 2, 3 மாதம் சாப்பாடு கொடுத்தார். அதன் பிறகு யார் கொடுததாலும் சாப்பிடுகிறதுண்டு. வாண வித்தியாசம் வைத்துக்கொள்ளவில்லை. இவவிடம யாராவது வந்து யாதாவது கேட்டால் அதற்குப் பதில் சொல்லுவதுணடு. உபதேசம் என்று ஒன்றும் கொடுப்பது கிடையாது. நான் குரு உபதேசம் செய்வது இல்லை. சந்தேகங்களைப்பற்றி கேட்டால் பதில் சொல்வதுண்டு. முதல் 7, 8 வருஷம் மவுனமாய் இருந்தேன். மவுனமாய் இருக்கும் காலத்தில் கேள்விகளுக்கு பதில் சிலருக்கு எழுத்து மூலமாய் தெரி[illegible] இந்த ஆஸ்ரமத்தில் தங்குகிறவர்கள் அவர்களுடைய [illegible] தங்குகிறார். நான் அவர்களை இருக்கச்சொல்லு

தும் இல்லை. போகச்சொல்வதும் கிடையாது. என்வரையிலும் இந்த ஆஸ்ரமத்திற்கு யார் வந்தாலும் ஆட்சேபனை கிடையாது. எவ்வளவு காலம் தங்கினாலும் எனக்கு ஆக்ஷேபனை கிடையாது. 1907 முதல் என்னை ரமணரிஷி என்று கூப்பிடுகிறார்கள். நான் இருப்பது அத்யாஸ்ரமம். அதாவது வாழ்க்கையில் இருக்கும் எதிலும் சேராதது. அத்யாஸ்ரமம்-அத்யாஸ்ரமம் சாஸ்திரத்தில் இருக்கிறது. இந்த ஆஸ்ரமத்தில் இருப்பவாள் எனக்கு யாரும் தெரியாது. என்னுடன் இருப்பவர்களை நான் என் போல் நினைப்பதே தவிர சிஷ்யாள் என்றாவது பக்தாள் என்றாவது நான் சொல்வதில்லை. The Self realisation என்ற புஸ்தகம் Exhibit A இந்த ஆஸ்ரமத்தில் பப்லிஷ் செய்யப்பட்டது. நான் அதை பூராவாசித்துப் பார்த்தேன். இதனுடைய Proof நான் கரெக்ஷன் செய்ததோ இல்லையோ கவனமில்லை. இதில் எழுதியிருக்கும் சங்கதிகள் அநேகமாய் சரியாய் இருக்கும்

Q:- Exhibit Aல் 136 பக்கத்தில் disciples of Maharishi என்று எழுதி இருக்கிறது. உங்களுக்கு disciples உண்டா?

A:- Exhibit A foot noteல் (page 46ல்) disciples என்றால் explanation கொடுத்திருக்கிறது.

இந்த explanation Exhibit னுடைய author அவரேஎழுதினார். என்னைக் கேட்டு எழுதவில்லை.

Disciple referred to in Exhibit VII carries the same meaning as is given in foot note in page 46 in the same Exhibit. I Know the Tamil equivalent of the words disciple and devotee

Exhibit VII நான் அனுமதி கொடுத்து தான் எழுதினது. என்னுடைய written Statement ல் 5-வது பாராவில் கண்டிருக்கும் படி இந்த ஆஸ்ரமத்தை பார்த்துக் கொண்டவர்களுடைய நபர்கள் பேர் ஆஸ்ரம ரிகார்டுகளில் இருக்குமோ என்னமோ தெரி

யாது. ஆஸ்ரமாதிகார்கள் நான் பார்க்கிறது கிடையாது. காட்டினால் பார்ப்பது உண்டு. அவைகளைக் காட்டா விட்டால் கொண்டு வரச் சொல்லி பார்க்கிறது கிடையாது. நாலு பேருடன் வாதியும் ஊரி லிருந்து பிச்சை கொண்டு வந்து எனக்கும் இதராளுக்கும் சாப் பாடு போடுவதுண்டு. கந்தாஸ்ரமத்தில் இருக்கும் பொழுதே சமயல ஆரம்பம் செய்யப்பட்டது. அதற்கு முந்தி சமயல் கிடை யாது. என்னுடைய தாயார் என்னுடன் 1915ல் ஸ்திரமாய் சேர்ந் தாள். பச்சயம்மாள் கோவிலில இருக்கும் வரையில் சமயல் உண்டு. பச்சயம்மாள் கே விலுக, மலைமேல் இருக்கிற வரையில் ஆஸ்ர மத்தில் இருப்பவரும், தரிசனத்திற்கு வருபவரும் சமயல் செய்வ துண்டு. பச்சம்மாள் கோவிலில் இருக்கிற வரையில் கந்தாஸ்ர மத்தில் இருக்கிற வரையிலும எத்தனை பேர பிராம்மணா என்னு டன் இருந்தாரென்று சொல்லமுடியாது. இந்த ஊருக்குவருவதற்கு முந்தி என் ஊரில் எனக்கு சொத்து உண்டு. அவைகளைவேண்டா மென்று விட்டுவிட்டு வந்தேன், அந்த பூர்வீகமான சொத்துக்களைப் பற்றி எவ்விதமான ஹக்கையம் நான் பாராட்டவில்லை. தகப்பனார் தாயார் என்னும் பாதயதை பற்றி சொல்லிக் கொள்வதில்லை. நான் கையெழுத்துப் போடாததற்குக் காரணம் சொல்ல முடியாது. In Exhibit Aல் page 28ல் the author has given the explanation for not signing my name. In para 13 of my writen Statement I have stated that I do not worry my self with management etcl and this is correct. எனக்குத் தேவையானதைப்பற்றி இதராளுக்கு நான் சொல்வதில்லை. இந்த ஆஸ்ரமத்திலிருந்து போகும் தபால்களையும் ஆஸ்ரமத்திற்கு வரும் தபால்களையும் நான் பார்க்கிறதுண்டு. சில பதில்கள் நான் சொல்லி எழுதுகிறதுண்டு. அவைகளை எழுதிக் கொண்டு வந்து காட்டுவ துண்டு. எனக்குத் தெரியாமல் ஆஸ்ரமத்து சார்பாக ஒரு தபாலும் போவதில்லை. ஆஸ்ரமத்தில் இருக்கும் அக்கவுண்டு புஸ்தகங்களை நான் சில சமயங்களில் பார்ப்பதுண்டு. நான் பார்க்காததினால் விவ ரங்களும், மொத்தம் இவ்வளவு என்று எனக்குத் தெரியாது, ஆஸ்ர

மத்தில் என்ன என்ன கணக்கு புஸ்தகங்கள் இருக்கிற தென்று சொல்ல முடியாது. வரவு செலவு கணக்கு புஸ்தகங்கள் வைத்திருப்பது எனக்குத் தெரியும். I have no desire to acquire properties but properties Come, and I accept them. சொத்துக்களை வைத்துக்கொள்வது உலகு சம்பந்தம் என்பது நான் ஒத்துக்கொள்கிறேன். உலக விஷயங்களை நான் வெறுக்கிறதில்லை. நான் கந்தாஸ்ரமத்திற்கு வந்த பிற்பாடு என் கூட இருந்தவர்கள் பழக்கம் செய்தபடியால் யாராவது கொடுத்தது வாங்குவதுண்டு, நானு யாரையும் கேட்பதில்லை. I know some of the details regarding the contributions made after I come to Kandasram. I remember only the names of some who made contributions. Contributions கொடுத்தவர்களுடைய கணக்குகள் இருக்குதோ என்னமோ எனக்கு தெரியாது. ஒருகந்தஸ்வாமி என்றவர் நான் இருப்பதற்காக ஒரு இடம் ஏற்படுத்தவேணுமென்று 1905, 1906ல் சொல்லி இருக்கிறார். கட்ட வேண்டியது அவசியம் என்று நான் சொன்னேன். அப்பொழுது ஆஸ்ரமத்திற்குப் பணம் கிடையாது. கந்தசாமி யாதொரு முதலுமில்லாமல் கட்டடம் ஆரம்பித்தார். பின்னால் பணம் வரப்போறவர்கள் கொடுக்க ஆரம்பித்தார். கட்டடம் வேலையில் 7, 8 வருஷம் அவர் இருந்தார். பிறகு வாதி வந்து சேர்ந்தார். கந்தசாமி காயலாவாய் போய்விட்டார். கந்தசாமி அதை விட்டுப் போவதற்கு ஒரு வருஷம் முந்தி வாதி அவ்விடம் சேர்ந்தார். கந்தசாமி வேலூர் நாராயணசாமி ரெட்டியாரிடம் பணத்தைக்கொடுத்து விட்டுப் போனார். பணம் 40, 50 ரூபாய் தான் இருக்கலாம். எனக்கு நேரில் தெரியாது. நாராயண ரெட்டியாரிடமிருந்து வாதியே போய் இந்த பணத்தை வாங்கிக் கொண்டு வந்தார். நானு சொல்லவில்லை கந்தசாமி பிறகு வரவில்லை. மேல் கண்ட பணத்தை வைத்துக்கொண்டு பின்னால் வந்த பணத்தையும் வைத்துக்கொண்டு வாதியும் ஓவர்சியர்களும் இன்னும் இதரர்களும் கட்டடத்தை பலமாக்கினார். இதற்காக ஈசான்ய மூல ஸ்வாமிகள் மூலமாக பணம் வருவல் ஆச்சது. இதற்காக வாதி வெளியில் போகவில்லை. உள்ளூரில் செட்டிமாரிடம்

வசூல் செய்தது—வாதிதான். வசூல் செய்த பணத்தை வாதி ஒரு பஞ்சாட்சர செட்டியிடம் deposit செய்து அப்பொழுது அப்பொழுது வாங்கிக்கொண்டு செலவு செய்ததுண்டு. அந்த கட்டடம் சம்பந்தமான கணக்குகள் சிலது வாதி வைத்திருந்தார். சில கணக்கு அவர் எனக்குக் காட்டி இருக்கலாம். I do not remember having seen Exhibit E. கந்தாஸ்ரமம் கணக்குகளை யாரும் audit செய்யவில்லை. வாதி வந்த பிறகு கந்தாஸ்ரமத்து வேலைகள் சுமார் ஆயிரம் வரையில் நடந்திருக்கலாம். கந்தாஸ்ரமத்தில் நான் இருந்த ஆறு வருஷத்தில் வாதி 2, 3 வருஷம் இருந்திருப்பார். நடுவில் நடுவில் வெளியே போய்விட்டார். வாதி இல்லாத சமயத்திலும் அவர் இருக்கும் சமயத்தில் வாசுதேவ சாஸ்திரி பழநிசாமி முதலானவா அவ்விடம் இருந்திருக்கிறார். கந்தாஸ்ரமத்தில் இராத்திரி பகலும் என்னுடன் வாதி அவ்விடம் இருக்கும்பொழுது அவர் என்னுடன் இருந்திருக்கிறார். சிலகாலம் பெருமாள் சாமியும், சிலகாலம் பழநிசாமியும் என்னுடன் தனியாகவும் இருந்திருக்கிறார். கந்தாஸ்ரமத்தில் இருக்கும் காலத்தில் ஆஸ்ரமத்து ரொக்க இருப்பை யார் யார் அதை பார்த்துக்கொண்டு வந்தார்களோ அவர்கள் தான் வைத்துக் கொண்டு இருந்தார். இன்னார் தான் என்று க்ஷேமனே கிடையாது அந்தக் காலத்தில் தின வரவு செலவு கணக்குகள் வைத்திருக்கலாம். நான் பார்த்தது கிடையாது. கந்தாஸ்ரமம் கட்டும் காலத்தில் அந்த ஸ்தானம் தேவஸ்தானத்திற்குச் சேர்ந்தது. நான் சொல்லி தேவஸ்தான தர்மகர்த்தாக்களை ஆஸ்ரமம் கட்ட பர்மிஷன் கேழ்க்கச் சொல்லவில்லை. தேவஸ்தானத்திற்குச் சம்பந்தப்பட்ட மலையில் எவ்விதமாய் ஆஸ்ரமம் கட்டடம் கட்டினார்கள் என்றால் நான் எவ்விதம் அவ்விடம் வந்து இருந்தேனோ அந்த விதமாய்தான் கட்டினார்கள். மலையில் நான் வந்து இருந்த காரணம் எனக்கே தெரியாது.

கந்தாஸ்ரமம் Encroachment என்று B Memo notice வந்தது என்று கேழ்விப்பட்டிருக்கிறேன். யாருக்கு இந்த நோட்டீஸ் வந்ததோ தெரியாது. ஆட்க்ஷேபனை யில்லை என்று கவர்ன்மெண்

டிக்கு ஏதாவது மனுவு போட்டிருக்கிறாரோ என்னமோ தெரியாது. அந்த B Memo notice வாதி பேருக்கு வந்ததோ என்னமோ எனக்குத் தெரியாது. கந்தாஸ்ரமத்திற்கு உள்பட்ட Encroachment க்காக பணம் கட்டுகிறார்களோ என்னமோ எனக்குத் தெரியாது.

As it is now 5-20 P. M. the examination of the witness is adjourned to 22 11-36.

(Sd) V. KRISHNA REEDI
Commissioner. 15-11-36.

Commission adjourned to 5-12-36 on the motion of the Vakil for plaintiff

(Sd) V. KRISHNA REDDI
Commissioner. 22-11-36.

5-12-36 Cross-examination of the witness (D 1) Continued

Solemnly affirmed. அத்யாஸ்ரமம் பற்றி விவரம் சூத சம்ஹிதத்தில் இருக்கிறது. அதில் அத்யாஸ்ரமத்தினுடைய நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிபந்தனைகள் தான் நான் அனுஷ்டித்துக்கொண்டு வருகிறேன். அத்யாஸ்ரமத்தில் இருக்கிறவாள் உலகத்தில் சொத்து வேண்டியதாய் இருந்தால் வைத்துக் கொள்ளலாம். எந்த ஆஸ்ரமத்திற்கும் ஒரு குருவு தேவை. அத்யாஸ்ரமம் அனுஷ்டிப்பவர்களுக்கும் ஒரு குருவு வேண்டும். ஆனால் எனக்கு ஆத்மாவே குருவு. என் ஆத்மா என் ஆத்மாவுக்குத்தான் குருவு. புராணங்களில் அத்யாஸ்ரமம் அனுஷ்டித்தவர் சொத்து வைத்திருந்ததாகப் படித்திருக்கிறேன். சூத சம்ஹிதத்தில் அதாவது ஸ்கந்த புராணத்தில் இந்தப் விஷயங்கள் தெரிவித்திருக்கிறது. அத்யாஸ்ரமத்தில் என்னிட சொத்தென்று ஒருத்தர் சொல்லிக் கொள்ளலாம். இந்தமாதிரி சொத்துக்களை இதராளுக்கு dispose செய்ததாகவும் அத்யாஸ்ரமத்தில் சொல்லி இருக்கிறது. க்ரஹஸ்

தாஸ்யமம் அத்யாஸ்ரமம் ஒன்றேதானு இல்லையா என்பது பார்க்கிறவருடைய View. அத்யாஸ்ரமத்தில் இருப்பவர்களுக்கு நித்ய கர்மங்கள் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. In. Ex. A. in page 126, what is stated in the sentence, "That the swami was above relationship and that claims to property based on blood ties were distasteful to the Swami were the valuable lessons then threw" —is true

In. Ex. A. in page 152 what is stated in the Sentences,—"Money was never touched by Maharishi since he threw away his three Rupees and a half when he arrived at Tiruvannamalai. One would suppose that Maharishi at any rate had successfully dealt with problems of wealth and poverty, even in the midst of his dependents and visitors at the Asram But nothing on earth is perfect; —and the general success of poverty at the asram had its exceptions, which may be illustrated by follows." —is true.

In. Ex. A in page 153, what is stated in the sentence— "There again money was freely raised.........
...............among his dependents ever since" is true. In. Ex. A in page 219 what is stated in paragraph beginning with the words "wise, just and frequently......
......" and ending with the words "places himself lower than the lowest" —is true.

Ex. K. (2) has been written in my hand. The ideas there—in have been suggested by the plaintiff who get the same from two others. Let it be that I have accepted those views. How can it be said that I have accepted them. One may describe a tree as Subramanyar.

He does so. How can I help it. what is stated in Ex. K. 2 reffers to me. The Tamil book Called Ramana Vijayam is not an exactly true translation of Ex. A. In or about 1904 some persons offered sugar-Candy and placed it before me and when my brother the second defendant took it away, I took him to taste saying that he had no right to take it. In ஸ்கந்தாஸ்ரமம் இரண்டு ரூம்களும், ஒரு பெரிய ரூமும் இருக்கின்றன. அவைகள் என்னுடைய சவுக்யத்திற்காகக் கட்டினதுதான். அந்த ஆஸ்ரமத்தில் வந்து தங்குகின்றவாகள் அதில் இருப்பவாகளுடைய அனுமதியின்பேரில்தான் தங்கிக்கொண்டு இருந்தாகள். அவ்விடம் தங்குகிறவர்கள் என்னுடைய அனுமதி யில்லாமல் எப்படி தஙகுவாாகள். வருவாரை வேண்டாம் என்றும போவாரை வாரும் என்றும் சொல்லுவதில்லை. ஸ்கந்தாஸ்ரமத்தை கட்டும்பொழுது போட்ட பிளானை எல்லாருடன் நானும் பார்தது அனுமதிதது இருக்கின்றேன், ஸ்கந்தாஸ்ரமம் திருவண்ணாமலை முனிசிபல் லிமிட்டுக்குள் அடங்கியது. ஸ்கந்தாஸ்ரமத்திற்கு முனிசிபல் வரி போடவில்லை. அது தேவஸ்தானத்திற்குச் சேர்ந்ததென்று வரி போடவில்லை. இப்பொழுது ஸ்கந்தாஸ்ரமததிற்கு முனிசிபல் வரி உண்டோ என்னமோ எனக்கு தெரியாது. இப்பொழுது ஸ்கந்தாஸ்ரமததில் இருப்பவர்களிடம் ரெண்ட் டீட் அல்லது லீஸ் டீட் நான் வாஙகவில்லை. ஸ்கந்தாஸ்ரமம் விட்டு இவ்விடம் அதாவது ரமணாஸ்ரமத்தில் தங்குவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை. ரமணாஸ்ரமம் என்பது என் பேரையும், இந்த இடத்துப் பேர் இரண்டையும் குறித்தது. நான் இருக்கக்கூடிய இடம் எதா யிருந்தாலும் ரமணாஸ்ரமம் என்பது. இந்த ரமணாஸ்ரமத்தினுடைய இடத்திற்கு assignment ஜாரி செய்ய மனுவு போட்டது எனக்குத் தெரியும். நானும் எல்லோரும் கலந்துதான் மனுவு போட்டேது. நாலைந்துபேர் கலந்துதான் மனுவு போட்டது. அவாள் யாரென்று ஞாபகம் இல்லை. அந்த மனுவில் second defendant கையெழுத்து சின்னஸ்வாமி போட்டிருப்பார். நான்

அதைப பார்த்திருக்கிறேன். Extent எவ்வளவு என்று கவனம் இல்லை. Assignment மனுவு போட்டது, என்னுடைய சவுக்கியத்திற்காகவும், கோவில், தோட்டம் முதலானது உண்டாக்கவும் போட்டது. Assignment மனுவு மேல் சர்க்கார் உத்திரவு நான் பார்த்தேன். அதைப் பார்த்தால்தான் assignment எந்த காரணத்தினால் கொடுத்ததாக எழுதியிருப்பது சொல்ல முடியும். எனக்கு இப்பொழுது கவனம் இல்லை. சர்க்காரில் assignment பண்ணும காலத்தில் என்னுடைய சொந்தத்திற்கு assignment செய்திருக்கிறது. இந்த ரமணாஸ்ரமத்திற்கு சேர்ந்த நிலம பாவாஜிமட் நிலமும் சர்க்கார் நிலமும் சேர்ந்திருக்கிறது. மேல் கண்ட Assignment ஆவதற்கு முந்தியே பாவாஜி நிலத்தில் கட்டடஙகள் ஆய்க்கொண்டிருந்தது. கட்டடங்கள் கட்ட பாவாஜி சொன்னதின் மேல்தான் கட்டப்பட்டன. பாவாஜி என்பவர் இப்பொழுது காஞ்சிவரத்தில் இருக்கும் பாவாஜி அவர் போ கவனம் இல்லை.

Question:—பாவாஜியை போயிருந்து கேட்டு நீங்கள்தான் வாங்கினதா,— The Vakil for the defendants objected to this question. Then the Plaintif's Vakil put the Question whether Schedule-2-in the plaint comprises both Bavaji land and Government land.

Answer:—2nd Schedule Comprises only Government land,—

Assignment ஆகுவதற்கு முந்தி கவர்மெண்டு நிலத்தில் கட்டடங்கள் கட்டி இருக்கிறதோ இல்லையோ கவனமில்லை. What is stated in Ex. J. that is, the reasons stated therein for asking for assignment are correct. இந்த ரமணாஸ்ரமத்தில் எத்தனை ரூம்கள் கட்டி இருக்கிறதோ எண்ணிப் பார்த்தால்தான் தெரியும். நான் எண்ணிப் பார்த்ததில்லை. அதில் அநேக ரூம்களுக்குள் நான் போய்ப் பார்த்ததில்லை.

Most of these rooms are not intended for your personal Convenience ?

A—என்னுடைய personal Convenience க்காக இல்லை. இந்த ஆஸ்ரமத்தில் some Europeans are staying. அவர்கள் தங்களுடைய வசதிக்காக அவர்கள் சிலவில் சில ரூம்கள் கட்டி இருக்கிறார்கள். அதுவும் ஆஸ்ரமத்திற்குச் சேர்ந்த ஜாகாத்தான். அவாள் என்னுடைய உத்திரவின் பேரில்தான் கட்டினது. இவ்விடம் இருக்கும் Europeans களில் ஒருத்தர்தான் ஒரு வருஷத்திற்கு முந்தி ஒரு ரூம்கட்டியிருக்கிறார். நெல்லூர் ரெட்டிகள் இரண்டு ரூம்கள் அடுத்தாப்போல் கட்டியிருக்கிறார்கள். இது தவிர ஆஸ்ரமத்திற்கு வருகிற visitors தங்குவதற்கு சில ரூம்கள் இருக்கின்றன. ஆஸ்ரமத்தில் Store room, dining hall, cooking room எல்லாம் இருக்கிறது. ஒரு cow shedம், பத்துப் பதினைந்து பசு மாடுகளும் இருக்கின்றன. இந்தக் கட்டடங்கள் எல்லாம் Assignment ஆன நிலத்தில்தான் இருக்கின்றன. இந்த ரமணாஸ்ரமத்திற்கு Municipal property tax போட்டிருக்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. Second defendant might have told me that property tax has been levied for this asram I have never seen in the Ashram account books any entry noting down any payment by way of tax for Ashram. இந்த ஆஸ்ரமத்தில் பிரதி வருஷமும் ஜயந்தி நடந்து வருகிறது. இந்த ஆஸ்ரமத்தில் என்னுடைய தாயாருடைய Annual ceremonyயும் நடந்து வருகிறது.

இந்த இரண்டு celebrationsம் இந்த ஆஸ்ரமத்தில் இருப்பவர்களே செய்து வருகிறார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இன்னாருக்கு Invitations அனுப்புகிறதென்று list ஒன்று இருக்கிறது Most of the persons to whom invitations are sent and others also may contribute on these occasions. என்ன contributions எந்த சந்தர்ப்பங்களில் வருகிறதென்று எனக்குத்

தெரியாது. ஜயந்தி சந்தர்ப்பத்தில் வருஷா வருஷம் என்ன செலவாகிறதென்று எனக்குத் தெரியாது. என் தாயார் annual ceremoneyக்கும் எவ்வளவு செலவாகிறதென்று எனக்குத் தெரியாது. என் mothers annual ceremoney செய்யும்போது நான் ஒன்றும் பூஜை செய்வதில்லை. இவ்விடம் இருப்பவர் செய்வார். நான் தினப்படி பூஜை செய்கிறேன். ரமணாச்ரமத்தின் seal அனுஷ்டானத்தில் எத்தனை வருஷமாய் இருக்கிறது என்று நான் எப்படிச் சொல்லுவேன். இப்பொழுது உபயோகத்தில் இருக்கும் sealல் Sree Ramanasram, Tiruvannamalai என்று இருக்கிறது. இந்த seal நான் எப்பொழுதாவது உபயோகிப்பேன். மற்றப்படிக்கு ஆஸ்ரமத்தில் எப்போதிற்கும் உபயோகிக்கிறார்கள் Personal seal and Asram seal is the same. இந்த seal is in the custody of the second defendant. ஆஸ்ரமத்திலிருந்து second defendant அனுப்பும் Correspondenceல் ஆஸ்ரம சீலை அவர் உபயோகிக்கிறார். In every book that Is sold from the Ashram Book depot, the Ashram seal is used. இந்த seal நான் Ex VII அதாவது power of Attorneyயில் தவிர வேறு எந்தக் காகிதத்திலும் உபயோகித்தது கிடையாது. நான் சில புஸ்தகங்களில் வைக்கிறதுண்டு. Ex. VII தவிர வேறு எந்த தஸ்தாவேஜையும் நான் Execute செய்தது கிடையாது. இந்தகேசில் plaint படித்துப் பார்த்தேன். இந்த கேசில் வக்காலத்தில் seal வைத்திருக்கிறேன். இந்த கேசில் written statement என் உத்தரவுமேல்தான் போட்டது. அதை நான் படித்துப் பார்த்ததாக வைத்துக்கொள்ளும். அதில் contents நான் எல்லாம் பார்த்திருக்கிறேன். பவர் இல்லாதவர்கள் எல்லாம் பவர் இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்து, ஆஸ்ரமத்திற்கு விருத்தமாய் நடக்க ஆரம்பித்ததினால் Ex VII Power of Attorney எழுத வேண்டியதாய் நேரிட்டது. பெருமாள்சாமியார் ஒருத்தர்தான் பவர் இல்லாமலே பவர் இருக்கிறதென்றுச் சொல்லிக் கொண்டிருந்தார். பெருமாள் சாமியார்தான் ரமணாஸ்ரமம் சர்வாதிகாரி என்று பத்திரிகைகளில் போட்டுக் கொண்டு தபால்களை தன்னுடைய உத்தரவு

இல்லாமல் ரமணாஸ்ரமத்தில் கொடுக்கக்கூடாதென்று 1933வது வருஷத்தில் அவர் தடை செய்தார.

(Sd) V. KRISHNA REDDI
Commissioner, 5-12-36.

The Commission is adjourned to 8-12-36

(Sd) V. KRISHNA REDDI
Commissioner, 5-12-36

8-12-36

Enquiry commenced at 5-30 P. M. Neither the plaintiff nor his pleader has turned up in spite of the written intimation given to the pleader for plaintiff that enquiry will be commenced at 4-30 P. M. to day.

As none of them is present I declare that the cross examination of the witness is closed

The advocate for the 1st defendant wants to re-examine the witness. Hence the witness is solemnly affirmed.

Re-examination :— என்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் இருப்பவர்களை இந்த ஆஸ்ரமத்தில் சேர்க்கிறதில்லை. ஆஸ்ரமம் அலுவல்களை அப்போதைக்கப்போது பார்த்துக்கொண்டு வந்தவர்கள் என்னுடைய இஷ்டத்தின்மேல்தான் பார்த்துக்கொண்டு வந்தார். In Ex. A in page 153 the sentence beginning with "There again money was freely raised.........."and ending with "his dependents ever since" the incidents referred to are not those relating to claims to property, but only to the personal differences among those who Stayed in the ashram. ஸ்கந்தாஸ்ரமத்தில் தங்கிக்கொண்டு வந்தவர்கள் என்னுடைய அனுமதிமேலும் என்னுடைய அனுமதி பெற்றவர்களுடைய உத்திரவு மேலும் இவ்விடம் தங்கிக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது ஸ்கந்தாஸ்ரமத்தில் தங்கி இருப்பவர்கள் என்னுடைய உத்திரவுமேல்தான் அவ்விடம் இருந்துவருகிறார், I have not studied Law, I do not know legal expressions. இந்த ஆஸ்ரமத்தில் Europeans கட்டியிருக்கும் rooms அவர்கள் என்னுடைய உத்திரவுமேல் அதற்காக அவர்களை பணம் கொடுத்து

கட்டினது. நான் எப்பொழுதும் பூஜை செய்தது கிடையாது. பூஜை செய்பவர் பக்கத்தில் இருப்பதுண்டு. ஜயந்தி உத்ஸவத்தை அனுசரித்து பக்தாள் சில கைங்கரியங்கள் கொடுப்பதுண்டு. இவ்விடம் இருப்பவர்கள் அந்த ஜயந்தி கொண்டாடுவதுண்டு. அம்மா பூஜையும் அந்த மாதிரிதான். Plaintiff செய்த தடைகளினால் Ex VII எழுதவேண்டிய தென்று சொல்லி இருப்பது இந்த ஆஸ்ரமத்தில் இருந்து தடை செய்ததல்ல. Plaintiff 1922லேயே விட்டுப் போய்விட்டார்.

(Sd) Not clear }
Ad for D. 18-12-36 }

Mark affixed by the witness in his own hand in my presence. Taken down by me, read over to the defendent and found to be correct by him.

(Sd) V KRISHNA REDDI
Commissioner 8-12-36

திருவண்ணாமலை டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் O. S. 3[illegible], 36 கேசில் 15-11-36 யன்று கமிஷனர் முன்னிலையில் முதல் வாதி ரமண ரிஷி கொடுத்த வாக்குப் பிரமாணம்.—

வாதியின் வக்கீல் நடத்திய குறுக்கு விசாரணை

கேள்வி:—எக்ஸிபிட் Aல் 136 பக்கத்தில் Disciple of Maharishi (மகரிஷியின் சீடர்கள்) என்று எழுதி யிருக்கிறது. உங்களுக்கு சிஷ்யர்கள் உண்டா?

பதில்:—எக்ஸிபிட் Aல் கீழ்க் குறிப்பில் (பக்கம் 46ல்) disciples (சிஷ்யர்கள்) விபரம் கொடுத்திருக்கிறது.

இந்த விவரம எக்ஸிபிட்டினுடைய ஆசிரியரே எழுதினார். என்னைக் கேட்டு எழுதவில்லை. எக்ஸிபிட்டில் 46ம் பக்கத்தின் கீழ்க்குறிப்பில் சீடர் என்னும் வார்த்தைக்கு என்ன அர்த்தம் கொடுத்திருக்கிறதோ அதே அர்த்தம் தான் எக்ஸிபிட் VII ல் உள்ள (Disciple) சீடர் என்பதற்கும் ஆதாரம். (Disciples) சீடர்கள் பக்தர்கள் devotees என்ற வார்த்தைகளுக்குச் சரியான தமிழ்ப் பதங்கள் எனக்குத் தெரியும். எக்ஸிபிட் Aல் பக்கம் 28ல் அதன் ஆசிரியரே என்னுடைய பெயரைக் கையெழுத்திடாமைக்குக் கார

ணம் காட்டியிருக்கிறார். எனது எழுத்துப் பிரமாண அறிக்கையின் 13-வது பாராவில் நான் மானேஜ்மெண்ட் முதலிய விவகாரங்களைப்பற்றி கவலை எடுத்துக் கொள்வதில்லை என்று கூறியிருக்கிறேன். அது சரியே.

எனக்கு சொத்துக்கள் சேர்ப்பதில் ஆசை கிடையாது. ஆனால் சொத்துக்கள் வருகின்றன, நான் அவற்றை ஏற்றுக் கொள்கிறேன்.

நான் கந்தாஸ்ரமத்திற்கு வந்த பிறகு, கொடுக்கப்பட்ட பொருள்களைப் பற்றிய விவரங்களில் சில எனக்குத் தெரியும். அவ்வாறு பொருள்கள் கொடுத்தவர்களின் சிலருடைய பெயர்கள் மட்டும் நினைப்பிலிருக்கின்றன. பொருள்கள் கொடுத்தவர்களுடைய கணக்குகள் இருக்கிறதோ என்னமோ எனக்குத் தெரியாது.

எக்ஸிபிட் Eயை பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை.

கந்தாஸ்ரமம் என்க்ரோச்மெண்ட் என்று பி. மிமோ நோட்டில் வந்தது.

இப்பொழுது மாலை 5-20 ஆகிவிட்டதால், சாட்சி விசாரணை 22-11-36 தேதிக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

(கை) வி. கிருஷ்ண ரெட்டி
கமிஷனர் 15-11-36

வாதியின் வக்கீல் விருப்பப்படி 5-12-36க்கு ஒத்திப் போடப்பட்டது.

(கை) வி கிருஷ்ண ரெட்டி
கமிஷனர் 22-11-36

5-12-36ல் சாட்சி (D) குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எக்ஸிபிட் Aல் 126ம் பக்கத்தில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது, உண்மையானதே. "சுவாமி பக்தத்துவத்திற்கு மேலானவர் என்றும், இரத்தபாசத்தின் மூலம் சொத்துக்கு உரிமை பாராட்டுவது சுவாமிக்கு வெறுப்பானவை என்பதுமான முக்கிய நீதிகளைக் காட்டினார்.'

எக்ஸிபிட் Aல் 152 ம் பக்கத்தில் கூறியுள்ள வாக்கியங்களும் உண்மையானவையே:-

திருவண்ணமலை வந்து சேர்ந்தவுடன் தன்னிடமிருந்த மூன்றரை ரூபாய்களை எறிந்துவிட்ட பிறகு மஹரிஷி பணத்தைக் கையால் தொடவில்லை. மஹரிஷி எப்படியோ செல்வம் உறவுமை ஆகிய விஷயங்களை சாதுர்யத்தோடு வெற்றிகரமாக தம்மைச்சார்ந்திருந்தவர்கள் மத்தியிலும் வந்து போவோரிடமும் கையாண்டு

வந்தார் என்று நினைக்கலாம். ஆனால் உலகத்தில் எந்தப் பொருளும் பூரணமாக இல்லை. ஆசிரமத்திலும் . றுமையின் வெற்றி பொதுவாக சில விஷயங்களில் இருந்து வந்தன."

எக்ஸிபிட் Al 153-ம் பக்கத்தில் கூறியுள்ள "அங்கும் மறுபடியும் பணம் தாராளமாய் வசூலிக்கப்பட்டது." என்பதும்,

எக்ஸிபிட் Al 219-ம் பக்கத்தில் கூறியுள்ள புத்திசாலித்தனமானது, நியாயமானது" என்று ஆரம்பிக்கும் வாக்கியமும் உண்மை

எக்ஸிபிட் K. (2) என்னுடைய கையால் எழுதப் பட்டது. அதிலுள்ள கருத்துக்கள் வாதியால் கூறப்பட்டவையே. அவற்றை வாதி வேறு இரண்டு பேரிடமிருந்து கேட்டு வந்தார். நான் அந்தக் கருத்துக்களை ஒத்துக் கொண்டதாகவே இருக்கட்டும். நான் அவற்றை ஒத்துக்கொண்டதாக எ வாறு சொல்லக்கூடும். ஒருவன் ஒரு மரத்தை சுப்ரமண்யர் என்று வணங்கலாம். அவன் செய்கிறான், அதை நான் எப்படித் தடுக்க முடியும்.

எக்ஸிபிட் Al என்ன கூறியிருக்கிறதோ அது என்னைக் குறிக்கிறது ரமண விஜயம் என்னும தமிழ்ப் புத்தகம் எக்ஸிபிட் Al மொழி பெயர்ப்பு அல்ல. சுமார் 1904 சிலர் கற்கண்டு கொண்டு வந்து கொடுத்தார்கள். என் முன்னே வைத்தாாகள். அப்பொழுது இரண்டாம் பிரதிவாதியான என்னுடைய தம்பி எடுத்துக்கொண்டு விட்டான். அதற்காக நான் எடுக்க ஒருவருக்கும் உரிமை கிடையாது என்று சொல்லிக் கண்டித்தேன். ஸ்கந்தாஸ்ரமத்தில்,

இந்தக் கேள்விக்கு பிரதிவாதிகளின் வக்கீல் ஆக்ஷேபித்தார். பிறகு வாதியின் வக்கீல் "ஷெட்யூல் இரண்டில் உள்ளது பாவாஜி நிலமும் கவர்மெண்ட் நிலமும் சேர்ந்ததா" என்னும் கேள்வியைக் கேட்டார்.

பதில் :—2வது ஷெட்யூல் கவர்ன்மெண்ட் நிலத்தை மட்டும் கொண்டுள்ளது.

அடமானம் ஆவதற்கு முந்தி கவர்ன்மெண்ட் நிலத்தில் கட்டடங்கள் கட்டியிருக்கிறதோ இல்லையோ, கவனமில்லை. எக்ஸிபிட் J1 அடமானம் செய்யக் கேட்டுக்கொண்டதற்காக கூறியுள்ள காரணங்கள் சரியானவைகளே.

கேள்வி:—இங்குள்ள ரூம்களில் பல உம்முடைய சொந்த செளகர்யங்களுக்காக இல்லையே.

விடை:—என்னுடைய சொந்த சௌகர்யத்துக்காக இல்லை; இந்த ஆஸ்ரமத்தில் சில ஐரோப்பியர்கள் தங்கி வருகிறார்கள்.

இது தவிர, ஆஸ்ரமத்திற்கு வருகிற விசிடர்கள் தங்குவதற்கு சில ரூம்கள் இருக்கின்றன. ஆசிரமத்தில் ஸ்டோர் ரூம், சாப்பாட்டு ஹால், சமையல் அறை எல்லாம் இருக்கிறது. ஒரு பசு மடமும், பத்து பதினைந்து பசு மாடுகளும் இருக்கின்றன. இந்த கட்டடங்கள் எல்லாம் அடமானம் ஆன நிலத்தில் தான் இருக்கின்றன. இந்த ரமணாஸ்ரமத்திற்கு முனிசிபல் சொத்து வரி போட்டிருக்கிறார்களா இல்லையா, எனக்கு தெரியாது. இந்த ஆஸ்ரமத்துக்கு சொத்து வரி விதிக்கப்பட்டிருக்கிறதென 2ம் பிரதிவாதி எனக்கு சொல்லி யிருக்கலாம். ஆசிரமத்துக்காக வரி ஏதும் கட்டியிருப்பதாகக் குறித்திருப்பதை ஆசிரமக் கணக்குப் புத்தகங்களில் நான் ஒரு போதும் பார்த்தது கிடையாது. இந்த ஆஸ்ரமத்தில் பிரதி வருஷமும் ஜயந்தி நடந்து வருகிறது. இந்த ஆஸ்ரமத்தில் என்னுடைய தாயாருடைய வருடாந்திர சடங்கும் நடந்து வருகிறது. இந்த இரண்டு கொண்டாட்டங்களும் இந்த ஆஸ்ரமத்தில் இருப்பவர்களே செய்து வருகிறார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இன்னாருக்கு அழைப்புத் தாள்கள் அனுப்புகிறதென்று லிஸ்ட் ஒன்று இருக்கிறது. அழைப்பு அனுப்பப்படுபவர்களில் பலரும் இன்னும் மற்றவர்களும இந்த சந்தர்ப்பஙகளிலும் பொருள் கொடுப்பார்கள். என்ன நன்கொடைகள் இந்த சந்தர்ப்பங்களில் வருகிறதென்று எனக்குத்தெரியாது. ஜயந்திசந்தர்ப்பத்தில் வருஷா வருஷம் என்ன செலவாகு கிறதென்று எனக்கு தெரியாது. என் தாயாருடைய வருடாந்திர சடங்குக்கும் எவ்வளவு செலவாகிற தென்று எனக்கு தெரியாது. என் தாயாருடைய வருடாந்திர சடஙகு செய்யும்போது நான் ஒன்றும் பூஜை செய்வதில்லை. இவவிடம் இருப்பவர் செய்வார். நான் தினப்படி பூஜை செய்கிறேன். ரமணாஸ்ரமத்தின் சீல் முத்திரை அனுஷ்டானத்தில் எத்தனை வருடமாய் இருக்கிறது என்று நான் எப்படி சொல்லுவேன். இப்பொழுது உபயோகத்தில் இருக்கும் சீலில் ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை என்று இருக்கிறது. இந்த சீல் நான் எப்பொழுதாவது உபயோகிப்பேன்.

மற்றப்படிக்கு ஆஸ்ரமத்தில் எப்போதிற்கும் உபயோகிக்கிறார்கள். சொந்த சீலும், ஆஸ்ரமம் சீலும் ஒன்றே. இந்த சீல் இரண்டாவது பிரதிவாதியின் வசமே இருக்கிறது. ஆஸ்ரமத்திலிருந்து இரண்டாம் பிரதிவாதி அனுப்பும் போக்கு வரத்துக்களில் ஆஸ்ரமம் சீலை அவர் உபயோகிக்கிறார். ஆஸ்ரம புத்தக சாலையில் விற்கப்படும்

ஒவ்வொரு புத்தகத்திலும் இந்த ஆசிரமம் சீல உபயோகிக்கப்படு கிறது. இந்த சீல் நான் எக்ஸிபிட் VII அதாவது அதிகாரப் பத்திரத்தில் தவிர வேறே எந்தக் காகிதத்திலும் உபயோகித்தது கிடையாது. நான் சில புத்தகங்களில் வைக்கிறதுண்டு. எக்ஸிபிட் VII தவிர வேறே எந்த தஸ்தா வேஜையும் நான் எக்ஸிகியூட் செய்தது கிடையாது. இந்த கேசில் ப்ளெயிண்டைப் படித்துப் பார்த்தேன். இந்த கேசில் வக்காலத்தில் சீல் வைத்திருக்கிறேன். இந்த கேசில் எழுத்துப் பிரமாணம் என் உத்திரவு மேல் தான் போட்டது. அதை நான் படித்துப் பார்த்ததாக வைத்துக்கொள்ளலாம். அதில் கண்டிருந்தவைகள் யாவும் நான் பார்த்திருக்கிறேன். பவர் இல்லாதவர்கள் எல்லாம் பவர் இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்து ஆஸ்ரமத்திற்கு விரோதமாய் நடக்க ஆரம்பித்ததினால் எக்ஸிபிட் VII ஆகிய அதிகாரப் பத்திரம் எழுத வேண்டியதாய் நேரிட்டது. பெருமாள் சாமியார் ஒருத்தர் தான் பவர் இல்லாமலே பவர் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டிருந்தார். பெருமாள் சாமியார் தான் ஆஸ்ரமம் சர்வாதிகாரி என்று பத்திரிகைகளில் போட்டுக்கொண்டு தடால்களை என்னுடைய உத்திரவு இல்லாமல் ஆஸ்ரமத்தில் கொடுக்கக் கூடாதென்று 1933வது வருஷத்தில் நோட்டீஸ் போட்டார்.

(ஒப்பம்) [illegible]

கமிஷனர் 5-12-36

கமிஷன் 8-12-36க்கு ஒத்திப்போடப்பட்டது.

(ஒப்பம்) [illegible]

கமிஷனர் 5-12-36

8-12-36 விசாரணை மாலை 5-30 மணிக்கு ஆரம்பித்தது. வாதியின் வக்கீல் இன்று மாலை 4.30 மணிக்கு விசாரணை ஆரம்பிக்கப்படும் என்று எழுத்து மூலம் அறிவித்திருந்தும் வாதியாவது அவருடைய வக்கீலாவது வரவில்லை. அவர்கள் யாரும் வராததால் சாட்சியின் குறுக்கு விசாரணை முடிந்துவிட்டது என்று நான் தீர்மானிக்கிறேன். முதல் பிரதிவாதியின் வக்கீல் சாட்சியை மறு விசாரணை செய்யவேண்டுமென்றார்.

ஆசுவே சாட்சி மறு விசாரணை

என்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் இருப்பவர்களை இந்த ஆஸ்ரமத்தில் சேர்க்கிறதில்லை. ஆஸ்ரமம் அலுவல்களை அப்போதைக் கப்போது பார்த்துக்கொண்டு வந்தவர்கள் என்னுடைய இஷ்டத்தின் மேல் தான் பார்த்துக்கொண்டு வந்தார். எக்ஸிபிட் A 153 பக்கத்தில் உள்ள "மறுபடியும் பணம் தாராளமாய் வசூலிக்கப் பட்டது" என்று ஆரம்பித்து "அவரிடமிருந்து வந்தவர்கள்" என்று முடியும் வாக்கியத்தில் குறித்துள்ள விஷயங்கள் சொந்துரிமையைப் பற்றினவை அல்ல. ஆனால் அவைகள் ஆஸ்ரமத்தில் தங்கி யிருந்தவர்களிடையே ஏற்பட்ட மனோ வித்தியாசங்களைப் பற்றியவைகளே. ஸ்கந்தாஸ்ரமத்தில் தங்கிக்கொண்டு வந்தவர்கள் என்னுடைய அனுமதி மேலும் என்னுடைய அனுமதி பெற்றவர்களுடைய உத்திரவு மேலும் இவ் விடம் தங்கிக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது ஸ்கந்தாஸ்ரமத்தில் தங்கி இருப்பவர்கள் என்னுடைய உத்திரவு மேல் தான் அவ்விடம் இருந்து வருகிறார். நான் சட்டங்களை (லா) படித்தது கிடையாது. சட்ட விஷயமான வார்த்தைகள் எனக்குத் தெரியாது. இந்த ஆஸ்ரமத்தில் ஐரோப்பியர்கள் கட்டியிருக்கும் அறைகள் அவாள் என்னுடைய உத்திரவு மேல் அதற்காக அவர்களே பணம் கொடுத்து கட்டினது. நான் எப்பொழுதும் பூஜை செய்தது கிடையாது. பூஜை செய்பவர் பக்கத்தில் இருப்பதுண்டு. ஜயந்தி உத்ஸவத்தை அனுசரித்து பக்தாள் சில கைங்கரியங்கள் கொடுப்பதுண்டு. இவ்விடம இருப்பவர்கள் அந்த ஜயந்தி கொண்டாடுவதுண்டு. அமமா பூஜையும அந்த மாதிரிதான். வாதி செய்த தடைகளினால் எக்ஸிபிட் VII எழுத வேண்டியதென்று சொல்லி இருப்பது இந்த ஆஸ்ரமத்தில் இருந்து தடை செய்ததல்ல. வாதி 1922 லேயே விட்டுப் போய் விட்டார்.

இந்தக் குறி சாட்சி தனது சொந்த கையினாலே என் முன்னிலையில் போடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(கை) வி. கிருஷ்ண செட்டி
கமிஷனர் 8-12-36

வாசகர்களுக்கு

இந்த வாக்குப் பிரமாணத்தில் தமது திருவுருவத்தைத் தாம் செய்யச் சொல்லவில்லை என்றும், அது செய்தது தமக்குத் தெரியா தென்றும் ரமணமஹரிஷி கூறியுள்ளார். ஆனால், கீழே பிரசுரிக் கப்பட்டுள்ள கடிதங்கள் இவர் கூறியது எவ்வளவு பச்சைப்பொய் என்பதை வெளிப்படுத்துமென நம்புகிறோம். இந்தக் கடிதங்கள் அப்போது சென்னைக்குச் சென்றிருந்த பெருமாள் சாமியாருக்கு திருவண்ணாமலை ஈசான்ய மடத்துச் சுவாமிகள் எழுதிய கடிதங்க ளாகும்.

உ

திருவண்ணாமலை சிவமயம் மதராஸ்.
ஈசானியமடம்

விபவஹு ஆவணிமீ 31உ

ஸ்ரீமத் சுவாமிகளுக்கு நமஸ்காரம். 13-9-28ல் எழுதிய கடித மும் பத்திரிகையும் 14.9.28ல் எழுதிய கார்டும் வந்தன.

பத்திரிகை புருப்பைப் பார்த்து இத்துடன் வருகிறது. இத் துடன் வரும் "தனலக்ஷ்மி ஆர்ட்ஸ்" என்னும் விளம்பரத்தில் கண்டபடி விக்ரஹ விஷயத்தைப் பற்றி நாகப்பா அவர்களுக்குத் தெரியாமல் செலவாகிற துகை விஷயத்தை விசாரித்துத் தெரிந்து சொள்ளலாமென்று ஸ்ரீ பகவான் சொல்லியபடி சுவாமிகளும் செய்யலாமென்று தோன்றுகிறது.

*   *   *

வேண்டும் ஸ்ரீ சற்குருநாதன் துணை

(ஒப்பம்) நடேச சுவாமி

உ

திருவண்ணாமலை சிவமயம் மதராஸ்
ஈசானியமடம்

விபவஹு புரட்டாசிமீ 1உ

ஸ்ரீலஸ்ரீ பெருமாள் சுவாமி அவர்களுக்கு

நேற்றைய தினம் தங்களுக்கு எழுதிய லெட்டரில் கண்ட அடக்கம் விளம்பரம் ஒன்று இத்துடன் அனுப்பி யிருக்கிறேன்.

*   *   *

ரமணரிஷி தமது வாக்கு மூலத்தில் தமது தாயாருடைய 10-ம் நாள் சடங்குக்குப் பெருமாள்சாமியார் 10 பேருக்கு சாப்பாடு போட்டதாகவும், அதில் தமக்கும் கொஞ்சம் உணவு கொடுத்ததாகவும் கூறியுள்ளார். ஆனால் அந்தச் சடங்குக்காக அன்று செலவான தொகை மொத்தம் ரூபா 606-3-9 என்பதற்கு திருவண்ணாமலை அ. சு. பொன்னுசாமி செட்டியார் கம்பெனியினுடைய புள்ளியும் இருக்கிறது. இவ்வளவு ரூபாய் செலவான ஒரு சடங்கில் 10 பேருக்கு மட்டுமா சாப்பாடு போடப்பட்டிருக்கும் என்பதைப் பொது மக்களே ஊகித்துக் கொள்ள வேண்டியது மன்றி ரமண மஹரிஷிகளது வாக்குமூலத்தின் யோக்கியதையையும் தெரிந்து கொள்வார்களாக.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
15	11	விசினான்	வீசினான்
16	4	விவேகியாய்	விவேகியென நினைத்த
17	15	பிராமண	பிரமாண
11	16	சந்சாசி	சந்யாசி
19	11	சோராதது	சோராத
,,	12	ஆத்தியாஸ்ரமம்	அத்தியாஸ்ரமம்
21	12	ஈதெல்தாம்	ஈதெல்லாம்
,,	15	ஆத்யாஸ்ரமி	அத்யாஸ்ரமி
24	10	விருந்தளித்தும்	விருந்தளித்ததும்
25	9	செல்லம்மாள் என்னும் இப்பெண்	இந்தம்மாள் வளர்த்த செல்லம்மாள் என்னும் பெண்
,,	17	மஹஷிகள்	மஹரிஷிகள்
26	27	அ:—	ஆ:—